# ஓர் ஸத்தான! மாணவனுக்கு, ஸ்ரீஸத்குரு! சொல்லும் உபதேசம்!

## மலர் - 1



பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா

ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை!

# ஓர் ஸத்தான! மாணவனுக்கு, ஸ்ரீஸத்குரு! சொல்லும் உபதேசம்!

## மலர் - I

துளி பாபா

# பொருளடக்கம்


| வ. எண். | | பக்கம் |
|---|---|---|
| 1. | இயேசுவின் அமுத மொழிகள் | 1 |
| 2. | பைத்தியத்தின் பைத்தியம் | 1 |
| 3. | குருக்ஷேத்ரமும்; குருபிரவாஹமும்! | 2 |
| 4. | கதம்பம் | 3 |
| 5. | மஹாமௌனம் | 12 |
| 6. | எளிமை பக்தி | 14 |
| 7. | பிரவர்த்தியும் நிவர்த்தியும் | 15 |
| 8. | முடிவு | 16 |
| 9. | கலிதோஷ பிரவர்த்தியும், ஸ்ரீஹரி பகவானின் நிவர்த்தியும் | 20 |
| 10. | சித்ரா பௌர்ணமி அன்று நடந்த ஸத்ஸங்கம் | 22 |
| 11. | வாழ்ந்தாலும் தூற்றும், தாழ்ந்தாலும் தூற்றும் | 25 |
| 12. | பல மணிகள் | 27 |
| 13. | சாதனையை விடுவதே சாதனையாகும் | 30 |
| 14. | விபத்து, ஆபத்து | 34 |
| 15. | ஸத்குரு தர்ஸனம் | 34 |
| 16. | குருவின் தெளிநிலை | 36 |
| 17. | ஆடி அமாவாசை அன்று நடந்த ஓர் ஸத்ஸங்கம் | 40 |
| 18. | அன்னையின் அருளாசி | 40 |
| 19. | பரசொரூபமும், ஸ்ரீபகவானும் | 42 |
| 20. | மனதின் திறமையும் - அறிவின் கூர்மையும் | 46 |
| 21. | கருணை | 49 |
| 22. | புண்ணிய பாபமும் - ஸத்திய தர்மமும் | 50 |
| 23. | பிரார்த்தனை | 51 |
| 24. | அபிராமி | 52 |
| 25. | மஹான்களின் பாதச்சுவடுகள் | 54 |

1. “பேரானந்தம் தனியாக” அனுபவிக்கலாம்! “பிரம்மானந்தம் தாம் தாமாக” இருக்கலாம்!!

இயேசுவின் அமுத மொழிகள் - 20

2. ஸ்ரீமஹான்கள் தூலங்களும் மற்றும் அனைவரின் தூலங்களும் மண்ணும், தண்ணீரும் சேர்ந்தே ஆனது. மண்ணும், தண்ணீரும் சேர்ந்ததாலே மண்மய வாஸனை அவஸ்யம் பற்றும். ஆகவே இந்த ஸ்ரீமஹான்கள் நடக்கும் போது “மண்வொட்டாமல் பாதுகையை விடாமல் அணிகிறார்கள்”. “ஜலம் பட்டால் உடனே அதை துடைக்கவேண்டும்”. அவரே அதை துடைக்க வேண்டும் அல்லது சிஷ்யர்களுக்காக சேவையின் நிமித்தமும் திருவடியை துடைக்கக் கொடுக்கலாம்.

இயேசுவின் அமுத மொழிகள் - 23, 24

3. **ராதா தாம் உணர்ந்ததை கண்ணனிடம் உரைப்பதாவது:-**

1. அறியாமையின் ஜீவர்களை போகங்களை கொடுத்து மேய்க்கின்றாய்.
2. உன்னை அறிந்த ஜீவர்களை உலக இனிமையை தடுத்து ஆளுகின்றாய்.
3. உன்னையும் தம்மையும் ஒன்றாக உணர்ந்து “அது” ஆனவர்களுடன் கலந்து மயமாகின்றாய்! இது தானே உண்மை எம் ஸ்யாம்?

அதற்கு பகவான் ஸ்ரீகண்ணன் எம் அன்னையாகிய நைஷ்டிக பிரம்மச்சாரினியே! உன் பத்ம பாதங்களுக்கு

இவ்வேழையேனின் கோடான கோடி நமஸ்காரங்கள். உன் மொழி ஸத்யமே என்றான்.

வைத்தியத்தின் வைத்தியம் - 16

௪. ராதா தாரா ஆனாள்! தாரா, குரு ஆனாள்! மயமானாள், இல்லையென ஆகி விட்டாள். எம் வைத்தியக்கார குழந்தைகளே! **நீங்களே ராதா, யாமே கண்ணனாகிய கீதாச்சாரியன்.** நீங்கள் தாரா என்ற உருக்கம் பெறுங்கள், அங்கு குருவுக்கும் குரு ஆகலாம். ஆச்சர்யமாக இருக்கிறதா? சீக்கிரம் ஆக்கி விடுவோம். **(குரு ஆக அல்ல அதுவாக)!!**

வைத்தியத்தின் வைத்தியம் - 18

5. ஞான அமுதம் (பால்) கொடுத்த பசு கண்ணனாகும்; அப்பசுவின் மடு நான்கும் நான்கு வேதங்களாகும்; அப்பசுவின் கன்று காண்டீபனாகும்; அப்பசுவின் பால் ஞான அமுதமாகியும் (கர்மா, பக்தி, யோகம், ஞானம்) இக்கலியுகத்திற்கு உகந்ததாயும் அமைந்த கீதாச்சாரமாகும்!!!

குருக்ஷேத்ரமும்; குருபிரவாஹமும்! - I

6. ஓர் ஸ்ரீஸத்குரு தாம் தம் சிஷ்யனுக்கு உபதேசிக்க ஓர் பர்ணக சாலையையோ; அல்லது ஓர் விருட்சத்தையோ; அல்லது ஓர் பாறையையோ; அல்லது ஓர் குகையையோ நாடவில்லை.

**ஆனால்?**

அது **தற்காலிகமாக ஓர் ரண பூமியே!** "அதையே ஓர் க்ஷேத்ரமாக்கி அதற்கே **குருக்ஷேத்ரம்** என நாமகரணமும்

இட்டான்" அது தர்மத்தின் காரணாமாக அதாவது அதர்மத்தையும், அக்ரமங்களையும், அநீதிகளையும் **"குணவடிவில்"**, அங்கு குழுமச்செய்து அந்தந்த குணங்களையே தாம் ஏற்று முள்ளை முள்ளால் எடுப்பது போல் அழித்த தன்மையினால் அதற்கு **தர்மக்ஷேத்ரம்** என பெயரிட்டான்.

குருக்ஷேத்ரமும்; குருபிரவாஹமும்! - 6

7. விபரம் தெரிந்தாலும் மௌனமாய் விவரிக்காமல் இருப்பது தான் **ஞான சாதனையாகும்.**

குருக்ஷேத்ரமும்; குருபிரவாஹமும்! - 18

8. மனதினால் அடங்கி இருந்து ஆத்ம ஞானம் பெறுவீர்களாக! அது நாவினால் அடங்கி இருந்து எந்த வினாடியும் இறைவுணர்வோடு இருந்தால் மனம் அடங்கும்.

கதம்பம் - 1

9. **உறவு சுற்றங்களில் பிடிப்பில்லாமல்** அது சந்தை கூட்டமே என்ற உணர்வுடன் கூடி முதலில் சற்று விலகி இருந்து பழக வேண்டும்.

கதம்பம் - 3

10. **ஓர் உண்மை மாணவனுக்கு ஸ்ரீஸத்குருதேவர் மஹா வாக்கிய ஞானம்** காதில் ஓதமாட்டார், **வாக்கியார்த்த விளக்கத்திலேயே புகுத்திவிடுவார்.** காதில் ஓதுவது பல சக்திகளை கொடுக்கும்; வாக்கியார்த்த விளக்கம் அவனிடமுள்ள சக்திகளை எடுக்கும்; உலக நுகர்ச்சிகளை

கெடுக்கும்; அணு அணுவாக ஆனந்தம் நிலை பெறச் செய்யும்!

கதம்பம் - 5

11. **ஓர் உண்மை மாணவன் ஓர் ஸ்ரீஸத்குருவிடம் விளக்கம் பெற்றுவிட்டால்** அக ஒழுக்கமும், புற ஒழுக்கமும் நிறைந்திருக்கும். ஆனால் **வர, வர புறச்சின்னம் மறையும்;** புறக்காட்சிக்கும் மனம் ஏங்காது; புற ஒலியும், புற நிகழ்ச்சிகளும் அவனைப் பாதிக்காது! அக உணர்வு ஓங்கும்!

கதம்பம் - 5

12. ஓர் உண்மை மாணவன் குருகுல பயிற்சி பெற்றுவிட்டால் **நிறைநிலை பெறும் பரியந்தம் பெண்கள் வகையில் பேசுவதோ, கொடுப்பதோ, வாங்குவதோ சர்வ ஜாக்ரதையாக இருக்க வேண்டும்.** காரணம் பெண் பஞ்சு; ஆண் பொறி, இரண்டும் மோதினால் பஞ்சு சாம்பலாகும் நெருப்பு பொறி சாம்பலாக்கும். ஆனால் அதன் தோஷம் அக்கினி பொறியை தாக்கும் அதாவது செயல் இழுக்கச் செய்துவிடும்!.

கதம்பம் - 6

13. ஓர் உண்மையான மாணவனுக்கு இறை நிலையை "உணர்ந்த பக்தியும்" இறை நிலையை உயர்த்தி தம்மையும் உயர்த்திய "உயர்ந்த பக்தியும்" இருந்தால் அதனால் உலகை இல்லை இல்லையெனத் தள்ளும் வைராக்யம் ஏற்படும், முடிவில் உலகமும் அதன் இறைவனும்

தாமாகிவிட்ட தன்மையினால்தான் அத்வைத ஞானம் சித்திக்கும்!

கதம்பம் - 7

14. **ஓர் உண்மை மாணவனுக்கு ஆத்ம ஞானப் பயிற்சி** பெறும் போதுதான் **சோதனையும், வேதனையும் தோன்றும்.** அதை தம் சாதனையால் தான் வெல்ல வேண்டும். அது பற்றி வெளியே **சக மாணவர்களிடம் புலம்பக்கூடாது.** இவனுக்கு பயிற்சியெல்லாம் பொறுமை, சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுத்து விலகுதல், குற்றங்களை மறத்தல் மன்னித்தல், இனிய வார்த்தை, இதமான வார்த்தை, சுருக்கமான வார்த்தை, மேலும் பேசாது நாவை காத்தல் இவற்றையே தம் சாதனையாக கொள்ள வேண்டும்!.

கதம்பம் - 7

15. ஓர் உண்மையான மாணவன் ஸ்ரீ ஸத்குருதேவர் அருளிய படி அகம் பிரம்மம் ; ஜகம் பிரம்மம்; அகமே அனைத்தும் என்றும். கற்பனையான உலகமோ, ஜீவர்களோ, ஈஸ்வராதிகளோ முக்காலங்களிலும் இல்லை என்றும், காலாதீத வஸ்துவான அந்த ஒன்றே ஸத்யம் அது நாமே என ஆனந்தமாக இருக்க வேண்டும்!

கதம்பம் - 8

16. ஓர் உண்மையான மாணவன் தன்னை எந்த நிலையிலும் எவரும் எப்படி குற்றம் குறைபடுத்தி பேசினாலும் அதன் அர்த்த பாவனைகளை நலமாகவும், இதமாகவும், பக்குவமாகவும், அமைந்து ஆனந்திக்க வேண்டும். உடனே

மாற்ற முடியவில்லையானாலும் பொறுமையுடன் காத்திருந்து மாற்றிப் பழகலாம். இங்கு அவஸ்யம் திருவும், குருவும் உபகாரம் புரியும். இது அனுபவம்!

கதம்பம் - 8

17. கிருஸ்தவன் என்றால் ஓர் இனம்; முகம்மதியன் என்றால் ஓர் இனம்; இந்து என்றால் இனமும் இல்லை தனி மனிதனும் இல்லை. இந்து என்றால் "ஓர்மை" எனப் பொருள்.

கதம்பம் - 11

18. **கோவிந்தன்:-** பசுக்களை மேய்ப்பவனின் சரணத்தை அடை. ஸ்ரீஆதிசங்கரர் சொல்வதும் மந்திரங்களில் எளிமை இனிமை **காயத்ரி** என்றும்; புனித தீர்த்தத்தில் **கங்கை** என்றும்; எளிமையான இனிமையான சுகம் தரும் நாமா **கோவிந்தா** என்றும் குறிப்பிடுவார். இந்த கோவிந்தாவுக்கு இன்னொன்றும் முக்கியமாகச் சொல்வார்கள். அதாவது இந்த ஜீவனின் பசுத் (ஜீவத்) தன்மையையும் அதனால் விளைந்த பாச (பந்தம் பற்றுத்) தன்மையையும் நீக்கி தன் திவ்ய சரணார விந்தங்களில் சேர்த்துக்கொள்பவன் எனப் பொருள்.

கதம்பம் - 14

19. **கோபாலன்:-** பசுக்களை மேய்க்கும் பாலன்; அதாவது ஜீவர்களாகிய நாம் பசு, நம்மை ஒழுங்காக மேய்ப்பவன் எனப் பொருள்!

கதம்பம் - 14

௨0. "உலகம் அதன் பொருள், அதன் உரிமை, அதன் இயக்கம் இவை அனைத்தும் திட்டமிட்டு நடைபெறும் காரியங்கள்." அவை அனைத்தும் இயற்கையின் (இறைவனின்) நியதிப்படி எந்த குற்றம் குறை தோஷ உணர்வுகள் அனைத்துமின்றி பாரபக்ஷ தோஷம் இல்லாமல் பிராரப்தத்தின் (விதியின்)படி ஒழுங்காக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கதம்பம் - 16

௨1. **அகம் பிரம்மம்; ஜகம் பிரம்மம்; அகமே எல்லாம்:-** நாம் அந்த ஒன்றே; அந்த ஒன்றே நாம்; உலகமும் அதன் பொருள்களும், அனைத்து ஜீவகோடி சரீரங்களும், அனைத்து ஜீவாத்மாக்களும், கோடானகோடி அண்ட, ரண்ட, பிரம்மாண்டங்களும் அனைத்தும் நாமே எனப் பொருள்.

கதம்பம் - ௨1

௨௨. **உண்மை** என்றால்:- மறப்பது, மன்னிப்பது, விட்டுக்கொடுப்பது, பிணம் போல் திரிவது.

கதம்பம் - ௨௪

௨௩. **உலகம்** என்றால்:- பலம் கொண்ட மட்டும் மோதுவது, முரண் சாதிப்பது, எண்ணி எண்ணி மனம் புண்பட்டு **விகாரம் அடைவது.** உனக்கு உண்மையா? உலகமா?? இந்த முடிவு உன் மனதிடம்தான் இருக்கிறது! இது உலகத்திடமோ, உலக பொருள்களிடமோ, உன் எதிரில் உள்ள ஜீவர்களிடமோ இல்லவே இல்லை!

கதம்பம் - ௨௪

௨௪. கர்மாவை முழுமையான, தீர்க்கமான, முடிவான மனதுடன் நான் அல்ல, **எல்லாம் நீயே** என்றும்; என்னால் அல்ல **எல்லாம் உன்னால்** என்றும்; அனைத்தும் என்னுடையதல்ல அனைத்தும் உன்னுடையதே என்றும் விட்டால் ஆகாமிய (வியாதி) கர்மா தொலையும். மேலே சொன்னது ஆரம்ப சாதனை. **“நீ மாயையை விட்ட நிலையிலும், யாம் அவித்தையை விட்ட நிலையிலும் நீயும் யாமும் ஒன்றே”.**

கதம்பம் - ௨௪

25. தோன்றும், தோற்றும், பலவற்றை இரண்டாக்கி அந்த இரண்டையும் ஒன்றாக்குதலே அனுபவ ஞானம்! தோன்றும் = தான் தானாய் தோன்றும்! தோற்றும் = மற்றொன்றை தோற்றுவிக்கும்!!

கதம்பம் - 37 & 38

26. “உலக நாம, ரூபம் சிற்றின்பத்திற்கு!” **“தெய்வ” “பதம்”;** தெய்வ நாம, ரூபம் பேரின்பத்திற்கு!!” பிரம்ம (பரமார்த்தீக) பதத்திற்கு நாம, ரூபம் இல்லை!. அது தேவையுமில்லை!! ஆனால் அது பிரம்மானந்தமே!!!

கதம்பம் - 39

27. “உலகம் கயிற்றில் வந்த சர்ப்பமாகும்”. “தெய்வீகம் கயிறு ஆகும்”. “பரமார்த்தீகம் இந்த இரண்டும் இல்லை”!!!

1. உலகம் = சர்ப்பம்? விசாரிக்கின் இல்லை!!
2. தெய்வீகம் = கயிறு? சர்ப்பம் தோன்றியதின் மூலம்!! விசாரிக்கின் தெய்வீகத்தையும் அதன் உலகத்தையும்

தற்காலிக உண்மையாக்கி அந்த காலாதீத ஒன்று விளையாடிய விளையாட்டாகும்!!!

3. பரமார்த்தீகம் = வாக்கியத்திற்காக சுட்டிக் காட்டிய காலாதீத ஒன்று இல்லை! ஆனால் உண்டு!! ஆனால் சொல்வதற்கில்லை!!!

கதம்பம் - 50

28. ஓர் உண்மை தனித்து நிற்காது! அது நிற்க அதை தாங்க ஓர் பொய் வேண்டும்!! எப்படி என்றால் அக்கினிக்கு அது தோன்ற விறகு வேண்டும்! மின்சாரத்திற்கு அது தோன்ற ஒயர், பல்பு, விசிறி (Fan) என ஓர் பொருள் வேண்டும். அதைப்போலவே இந்த பரமாத்மாவும் தாம் தோன்றுவதற்காக தெய்வீகத்தையும் அதனால் உண்டாகிய உலகத்தையும் தாமே ஏற்படுத்திக்கொண்டது!

கதம்பம் - 50

29. ஓர் ஜீவன் பூர்வ புண்ணியத்தினாலும், இந்த ஜன்மாவின், ஞான சாதனையினாலும் நிஷ்காமிய கர்மா, உள் ஆழ்ந்த பக்தி, கடும் வைராக்யம், **"ஸ்வய அனுபவ ஞானம்"** இவைகளை முறையாக தெய்வ பலத்தினாலும், குரு கிருபையினாலும் பெற்று **"ஜீவன் முக்தி"** அடைகிறான்.

கதம்பம் - 50

30. **ஒரு ஜீவன் பரம்பொருள் ஆகும் நிலை!:-**

1. ஒரு ஜீவன் பற்பல குணங்களால் பின்னல் பட்டு மனிதன் (மனீசன்) என ஆனான். அதாவது **நீசன் ஆனான்!**

௨. அனைத்து குணங்களையும் விட்ட தன்மையினால் நீசன் இறைவனாகிய **"ஈசன்"** என ஆனான்!

௩. இந்த ஈசன் தன் தெய்வீக பந்தத்தையும் விட்ட தன்மையினால் **பரம்பொருள்** ஆனான். இதுவே உண்மை!

கதம்பம் - ௫0

௩1. (ஜீவ) ஆத்மா பரமாத்மாவோடு கலந்து மயமானது என சொல்ல முடியாது! அது அதுவாகவே எக்காலத்தும் எங்கும் ஊசி குத்த இடம் இல்லாமல் **நீக்கமற நிறைந்து** பரிபூரணமாக இருக்கிறது. "இதுவே ஸத்தியத்திற்கும் ஸத்தியம்"!!

கதம்பம் - ௫1

௩௨. காலாதீத ஒன்றை வந்ததாகவும் (ஜீவனாக) இருந்து விளையாடியதாகவும் (உலகத்தோடு) பின் பரமாத்மாவோடு கலந்ததாகவும் (ஜீவாத்மா பரமாத்மா ஐக்கியம்) சொல்வது கதையாகும்!!! இக்கதை சொல்லாவிட்டால் பந்தப்பட்ட ஜீவன் கடைத்தேறுவது எப்படி? கடைத்தேறுவதற்கு கதை வேண்டும்! கடைத்தேறிவிட்டால் அங்கு கதை தேவையில்லை. கடைத்தேறிய பின் இங்கு கதை சொல்பவர் யார்? அதை ஸ்வாரஸ்யமுடன் கேட்பவர் யார்?? விளக்கத்தின் கதையே தவிர; விமலத்தின் கதையல்ல !!

கதம்பம் - ௫1

33. ஓர் சாதனையாளனுக்கு உடல், உலக எந்த விபரமும் என்று மறக்கடிக்கப்படுகிறதோ அப்போதே அவன் ஜீவன் முக்திக்கு உரியவனாகிறான்!

கதம்பம் - 43

34. "நீயே அவன்; அவனே நீ!" அவனும் நீயும் ஒன்றான பின் "நீயே அது; அதுவே நீ!" என்ற நிலையில் "நீயே யாம்; யாமே நீ; நாம் இரண்டும் ஒன்றானால்; தேனின் சுவையது போல் திகட்டாய் பராபரமே" என்ற நிலைபெற்று விடலாம்.

கதம்பம் - 48

35. 1. **தனிப்பது** = உடல், உலக, போகங்களை விட்டு தனிப்பது!

2. **தவிப்பது** = உடல், உலக, இனிமை மறைந்து திக்கு திசை தெரியாமல் தவிக்கும்போது இறை உணர்வையும், குரு உறவையும் காட்டி அந்த இதய தாபத்தை பெருக்குவதாகும்!

3. **இயலாத்தன்மையென்பது** = ஜகத், ஜீவ, ஈஸ்வராதிகளை விட்டு தனிக்கச்செய்து, தவிக்கச் செய்து, ஒன்றும் இயலாத் தன்மையை கொடுத்து, அனைத்தும் நாமே ஆகி, நாமே அனைத்தும் ஆகி பிரம்மானந்த நிலை கொடுப்பதாகும்! ஆக இந்த மூன்றும் ஓர் ஜீவனுக்கு அத்யாவஸ்யத் தேவையாகிறது!

கதம்பம் - 48

36. ஆத்மாவிற்கும் வடிவமோ ஒளியோ அவஸ்யம் கிடையாது! பரமாத்மாவிற்கும் வடிவமோ ஒளியோ அவஸ்யம் கிடையாது!!

பராபரம் எனச் சொல்லிய அந்த பரத்திற்கும் வடிவமோ ஒளியோ இல்லவே இல்லை!!!

கதம்பம் - 48

37. 1. அடங்கி இருப்பதனால் ஆத்ம சுகம் பெறுவீர்களாக!
2. வாக்கு மௌனமானால் மனோ நலம் பெறுவீர்களாக!
3. உறவை மறந்தீர்களானால் உண்மையை அடைவீர்களாக!
4. குணங்களை! விட்டால் பரிபூரணத்துவம் பெறுவீர்களாக!
5. சத்வ குணம் பெருகினால் தெய்வ நிலை பெறுவீர்களாக!
6. நிர்க்குணமானால் அகண்டாகார விருத்தி பெறுவீர்களாக!
7. அனைத்தும் நீங்களானால் அகண்டானந்தம் பெறுவீர்களாக!
8. நீங்களே அதுவானால் பிரம்மானந்த சமுத்திரமாவீர்களாக! "அதுவும் இல்லை; இதுவும் இல்லை; எதுவும் இல்லை" இல்லையென்பதே இல்லை, ஆனால் ஒன்றுண்டு. அது **மஹாமௌனம்!!!** அது **மஹாரஹஸ்யம்!**

மஹாமௌனம் - 1

38. உயர்வாக கருதும் மனம் தாழாது! தாழ்வாக கருதும் மனம் உயராது!! சலனமுற்றால் சஞ்சலம் உண்டு! **சலன மற்றால் ஆனந்தம் உண்டு!!**

மஹாமௌனம் - 4

39. "ஸத்யத்தை நோக்கிப் போகப்பட்டவனுக்கு குல, குடும்ப கோத்திர சம்பிரதாயம் **தடை செய்யாது"!!!** "இங்கு இந்த சாதகனுக்கு தம் சாதனையில் உறுதியான நம்பிக்கை வேண்டும்"!!! "இவன் நம்பிக்கையே துணைவன், இவன் வைராக்யமே ஆயுதம்"!!!

மஹாமௌனம் - 5

40. குற்றங்களாக கண்டு, கண்டு களித்த கண்களும்! குறைகளாக கேட்டு, கேட்டு ரமித்த காதுகளும்! அவைகளை அப்படியே ஏற்று விரிவடைந்த மனமும்!, உண்மை உணர்வாக மாறினாலொழிய பேத உணர்வு நீங்காது, **பேத உணர்வு நீங்கி அபேத திருஷ்டி பெற்றாலொழிய ஞானம் சாத்தியமாகாது!**

மஹாமௌனம் - 25

41. ஸ்வய அனுபவ போதனைகளை கேட்பவரல்ல, "உள்ளே உணர்பவர்கள்" எவராயினும் அவர்களுக்கு பரிபூரணத்வம் உண்டு. அதாவது ஜீவன் முக்தி உண்டு என பிரமாணமாகச் சொல்கிறோம். ஆகவேதான் பலர் என குறிப்பிட்டோம். இப்பலரும் "குரு ஆக மாட்டார்கள்". "அது ஆவர்". "இது உறுதி".

மஹாமௌனம் - 45

௪௨. 1. "சிஷ்யர்கள் என்றால் பாடம் கேட்பவர்கள்"!

௨. அன்பர்கள் என்றால் அனுபூதிமான்கள்!!

மஹாமௌனம் - ௪6

௪௩. 1. பக்தாளும், பாகவதாளும், நாயன்மார்களும், ஆழ்வாராதிகளும், ஸ்ரீபகவான் பார்த்துக் கொள்வான் என்ற முழு நம்பிக்கையில் உடல், உறவு, உலகத் தொழிலை மறந்தனர்! **"ஆனால் அவனை மறக்கவில்லை"!!**

௨. இங்கு அவனை மறக்கக் கூடிய அளவுக்கு உடல் உலகம் இந்த பக்தனை நெருக்கி கசக்கி பிழியும்! "ஆனாலும் அயரமாட்டார்கள், கலங்க மாட்டார்கள்","ஆனால் அவனைக் காணாமல் சோர்வார்கள், கலங்குவார்கள்".

எளிமை, பக்தி - ௨

௪௪. **"உண்மையை காணத் துடிக்கும் மனம் பொய்யை உதற வேண்டும்".** இங்கு அவன் பார்த்துக் கொள்வான் என்ற நம்பிக்கையிலும் "அவன் நாமாவை பற்றுவர்". இதனால் உடல் உலக சிரமமும் நீங்குவர். அவன் இருப்பை சிலர் உள் உணர்வால் உணர்வர்! சிலர் வெளிக் காட்சியும் பெறுவர்! சிலருக்கு ஏக காலத்தில் இவ்விரு நிலைகளையும் பெறுவர்!! "இது அவரவர் மனோ பக்குவம்"!!!

எளிமை, பக்தி - ௨

45. **தண்டம் சமர்ப்பித்தல்** என்றால்:-

1. தண்டம் என்றால் ஸாஸ்டாங்க நமஸ்காரம்.

2. தண்டம் என்றால் ஓர் கம்பு எப்படி "எந்த விசாரணையும் இன்றி" "எந்த தடங்கலும் இன்றி", எந்தவித கேள்வியும், பதிலுமின்றி; "எந்த முயற்சியும் இன்றி"; எவ்வித சலனமும் இன்றி, "எப்படி தடால்" என விழுகின்றதோ; அதே நிலையில் "சர்வார்ப்பணமாக" "தண்டம் சமர்ப்பித்தலாகும்"!

3. தம் மாணவன் அவ்வாறு "சரண்டர்" ஆவதற்கு, தான் வழிகாட்டியாக இருக்க வேண்டும். சரணாகதி, சரணாகதி என தன் வாக்கால் சொன்னால் மட்டும் போதாது. தான் அவ்வாறு "வாழ்ந்து காட்ட வேண்டும்".

பிரவர்த்தியும் நிவர்த்தியும் - 10

46. **தண்டம் சமர்ப்பித்தலின் ரகஸ்யம்** என்னவென்றால்:-

1. "இங்கு சந்தேகமும்" "அதனால் கேள்விகளும்" அவஸ்யம் இருக்காது, இருக்கலாகாது.

2. எதிலும் "விட்டுக்கொடுக்கும்" நிலையும் வர வேண்டும். "விட்டுக் கொடுத்தால் விக்னங்கள்" மறையும்! இங்கு? "**மன்னிப்பு கேட்பவன் மனிதன்** ஆகிறான்"! "**மன்னிப்பு கொடுப்பவன் மஹான்** ஆகிறான்"!! ஆகவே விட்டுக் கொடுப்பதனாலே "**சரணாகதி**யும்" அடங்கி விடுகிறது.

பிரவர்த்தியும் நிவர்த்தியும் - 11

௪7. "**தண்டம் என்றும்**", "பணிவு என்றும்", "சரணாகதி என்றும்"; விட்டுக் கொடுக்கிறோம் என்றும்; "வாய் ஞானம் பேசிப் பயனில்லை"! அது அனுபவ ஞானம் ஆக வேண்டுமானால் இந்த **"தண்டம்"** என்பதை வழி நடத்துபவர் வாழ்ந்து காட்ட வேண்டும், அதை வாய் ஞானமாக போதிக்கலாகாது.

பிரவர்த்தியும் நிவர்த்தியும் - 12

௪8. மாயா கார்யத்தின் நாயகனே "விதிக்கடவுள்" என்றும், விதி நாயகன் என்றும்; இயற்கை என்றும், இறைவன் என்றும் பற்பல நாமாக்களில் பேசப்படும். இவை அனைத்தும் காலத்திற்கு உட்பட்டு நடைபெறுவதால் இதை **"காலதேவன்"** என்றும் சொல்லலாம்.

பிரவர்த்தியும் நிவர்த்தியும் - 2/௪

௪9. **"மனதின் செயல் எண்ணம்"**. அத்தோடு மனம் சரி! **"மாயையின் செயல் இயக்கமாகும்!"**. இந்த இரண்டும் "ஒரே காலத்தில் இயங்குவதால்", எது மனம், எது மாயையென உனக்கு உணர முடியவில்லை.

1. உன் மனமானது **"இறைவுணர்வோடு"** இயல்பாக எண்ணினால், அது கர்மா முடியும் தன்மையாகும்!
2. உன் மனம் **"கற்பனை வசப்பட்டு"**, அதாவது தேவை இல்லாத பயம், கலக்கம், சந்தேக உணர்வோடு அக்கர்மாவை தொடரும் போது, அக்கர்மா "மேலும் தொடரும் நிலை" உண்டாகும்.

முடிவு - 6

50. "எண்ணம் மனதின் செயல்; செயல் மாயையின் செயல்". அனைத்து கர்மாக்களையும் மாயையே நடத்த வேண்டும். "இதுவே விதி". மனம் அதற்கு "அனுகூலமாக" இருக்க வேண்டும். அங்கு "பிரதிகூலமாக" (எதிர்மறையாக) இருக்கக் கூடாது.

முடிவு - 6

51. உன் மனமானது உன் கர்மா ஆசையை விரிவடையச் செய்து, பற்பல குணதோஷங்களால் விபரீத, விநோத, விரோத, விசித்திர, விகார, விவகார "பெரிய பெரிய பேராசையால்" பீடிக்கப்பட்டு, "எண்ணியதை" முடிக்கவில்லையே என்றும், முடியவில்லையே என்றும், எதிரும் புதிருமாயுள்ள "நாம ரூபங்களில்", ஆத்திரத்தில் விசிறி அடிக்கும்போது, காரியமும் சிதறுகிறது, கர்மாவும் அப்படி "சிதறுவதால்" **கர்மாவும்** பெருகுகிறது. இதனால் "ஜனன மரணமும்" தொடர்கிறது!.

முடிவு - 7

52. கர்மாவின்படி வரும் மன எண்ணம், கற்பனையால் "விகல்பமாகி" (குற்ற உணர்வால் உந்தப்பட்டு) தடுமாறி சிதறி, "ஆகாமிய வினையை" தேடி, பிறப்பிறப்பை நாடுகிறது!. **"நடப்பது நலமே"** என்ற இறை சிந்தனை ஒன்றுபட்டால் நடைபெறும் கர்மா நலமாகவே தோற்றும். மனமும் சாந்தியுறும்.

முடிவு - 7

53. "லோக மாயாவின் மகனே மனம்"!!! அந்த மனமானது லோக மாயாவின் காரியங்களை, அதாவது "தூல

வினைகளை" **நான், என்னால்; என்னுடையது** என **கர்த்துருத்வத்துடன்** ஏற்றுக் கொண்டதாலேயே **வினை பெருக்கமும், ஜனன மரணமும் தொடர்கிறது!**. அந்த கர்த்துருத்வத்தை விட்டுவிட்டால், லோக மாயா தம் காரியங்களை இயல்பாகவே தம் மனதால் செய்து முடித்துவிடும். "ஜனன, மரணமும் தொடராது". இது பிரமாண உண்மை!

முடிவு - 9

54. இந்த மனமானது "ஒரே எண்ணமாக" இருந்தால், கற்பனை தொடராது. தம் கற்பனையினால் "சந்தேக பயத்துடன்" அனேக தேவையற்ற எண்ணங்களை எண்ணுவதால், நாம் எண்ணியதை முடிக்கவில்லையே என்றும், மேலும் எண்ண தீவிரத்தினால் அனேக "குறுக்கு வழிகளையும்" கையாண்டு, மேலும், மேலும் மனம் புண்பட்டதேயன்றி, சுகமடைய மார்க்கமில்லை. **இவை நிவர்த்தி அடைய வேண்டுமாயின் "பொறுமையும்", "நிதானமும்"! அவஸ்யம் வேண்டும்!**

முடிவு - 9

55. **பொறுமை:-** எதையும் அமைதியாக ஏற்றுக் கொள்ளுதல். பிறரை எக்காரணம் கொண்டும் "பழிபாபத்திற்கு" ஆளாக்காமல் தான் ஏற்றுக் கொள்ளலாகும்!.

முடிவு - 9

56. **நிதானம்:-** உன் எண்ணம், சொல், செயல் இவைகளில் "**இறை, குரு நாமா**" அவஸ்யம் கலந்திருக்க

வேண்டும். முழுமையான "சர்வார்ப்பண நிலையில்" உன் உடல், பொருள், ஆவி இவைகள் இயங்கி, எந்த குணதோஷங்களும் இன்றி சாந்தி சமாதானத்துடன், **"போதும்"** என்ற "நிறைவுடன்" இருக்க வேண்டும்!.

முடிவு - 10

57. **முற்கவன சக்தி** என்பது:- பிறரை அவர்கள் சாதனையையோ, அவர்கள் குற்றம் குறைகளையோ அவஸ்யம் காணாமல், இது அவரவர் வினை சம்பந்தம் பரிமாற்றம் பண்ணப்படுகிறதென அமைதி காத்தலாகும்.

முடிவு - 21

58. **தற்காப்பு சக்தி**யென்பது:- எண்ணம் சொல், செயலால் "ஸ்ரீபகவானை முழுமையாக" நம்பாமல், நான், என்னால், என்னுடையது என்ற அஹங்கார, அதிகார, அபிமானங்களில் முழுமையாக மூழ்கி விடுவது தற்காப்பு சக்தியாகும்.

முடிவு - 21

59. **தற்கவன சக்தி**யென்பது:-

1. முழுமையாக ஸ்ரீபகவானை சரணடைந்து, நான், என்னால், என்னுடையதை நீக்கியும்.,
2. சர்வார்ப்பண நிலையில் தம்மை இறைவன் குழந்தை என்ற பாவனையும், பின் அனுபவ நிலையில் இறைவன் அம்ஸ ஸ்வரூபமாக உணர்ந்தும்.,
3. "கோர குணதோஷங்களுக்கு"! ஆளாகாமல், ஸத்வகுணம் ஒன்றை மட்டும் தாங்கிக் கொண்டும்

4. நம் இறைவனையும், நம்மையும் இணைத்து, அந்த காலாதீத ஒன்றே என உணர்ந்து குணாதீத நிலையில் ("நிர்க்குண நிலையில்") ஸ்வயமாக இருந்து கொண்டு, **"நாம் அது, அதுவே நாம்"!** என்ற பரவுணர்வோடு "தைலதாரை"! போல், நம்மீதே கவனமாக இருப்பது தற்கவன சக்தியாகும்!

இப்படி "தற்கவன சக்தியோடு" இருப்பதுவே பழவினைக் கணக்குகளை முடிப்பதாகும்.

முடிவு - 21, 22

60. தற்காப்பு சக்தியும், முற்கவன சக்தியும் கொண்டிருப்பதால், அது "புதிய வினை"! தொடரும் நிலையாகும்!

முடிவு - 22

61. கண்களையும், காதுகளையும், வாக்கையும் ("**நாவையும்**") **அடக்கி** நலமாகவே பார்க்கவும், நலமாகவே கேட்கவும், நலமாகவே பேசவும் கற்றுக் கொள்வதுவே சாதனையாகும்!

கலிதோஷ பிரவர்த்தியும், ஸ்ரீஹரி பகவானின் நிவர்த்தியும் - 1

62. "அன்பின்" உள்ளமே "ஆனந்த" சொரூபமாகும்! **அன்பு இறை சொரூபமாகும்! ஆனந்தம் குரு சொரூபமாகும்!!** இவ்விரண்டும் இணைந்தால் "பிறவா நிலையாகிய" ஜீவன் முக்தியாகும்!

கலிதோஷ பிரவர்த்தியும், ஸ்ரீஹரி பகவானின் நிவர்த்தியும் - 1

63. **கலிபுருஷனின் எண் குணங்கள்:**
1. வஞ்சகம், 2. சூழ்ச்சி, 3. பொறாமை, 4. பேராசை, 5. கள்ளம், 6. கபடம், 7. விரோதம், 8. குரோதம் ஆகிய எட்டு குணங்களாகும்.

கலிதோஷ பிரவர்த்தியும் ஸ்ரீஹரி பகவானின் நிவர்த்தியும் - 4

64. இக்கலியுக மனிதன் அனைத்தையும் தாமே "அடக்கி ஆள" நினைப்பான், ஆனால்? இவன் எதை எதையெல்லாம் அடக்க எண்ணினானோ அவையெல்லாம், இவனை "அடக்கி அழித்துவிடும்". இவன் வாக்கே இவனுக்கு வாழ்வாக இருப்பதால், பணம் இல்லை; தொழில் இல்லை; பிள்ளை இல்லை; மனைவி சரியில்லை; உடல் சரியில்லை என்று இல்லை இல்லையென்று சொல்லியே இவன்" "இல்லாது போவான்"!!!

கலிதோஷ பிரவர்த்தியும், ஸ்ரீஹரி பகவானின் நிவர்த்தியும் - 23, 24

65. இக்கலியுக மனிதன் பண கஷ்டம்; உடல் கஷ்டம்; தொழில் கஷ்டம்; மனைவியால் கஷ்டம்; பிள்ளைகளால் கஷ்டம்; என கஷ்டம்; கஷ்டம்; என தன் வாக்கால் சொல்லிச் சொல்லி, தான் **"இஷ்டப்பட்டு" "கஷ்டங்களை"!** இவனே வாங்கிக் கொள்கிறான்.

கலிதோஷ பிரவர்த்தியும் ஸ்ரீஹரி பகவானின் நிவர்த்தியும் - 24

66. இக்கலியுக மனிதன் பணக்கவலை; உடலால் கவலை; மனைவியால் கவலை; பிள்ளைகளால் கவலை; தொழிலால் கவலை; கவலை, கவலை என தன் வாக்கால் சொல்லிச்

சொல்லி "பாச வலையில்" தாமே அகப்பட்டுக் கொண்டு **"க(பாச)வலையில்"** மாட்டிக் கொள்வர்! என கலி புருஷனின் வாக்கியமாகும்.

கலிதோஷ பிரவர்த்தியும் ஸ்ரீஹரி பகவானின் நிவர்த்தியும் - ௨௪

67. **கலிபுருஷனின் "நற்குணங்களான"!** 1. மது, ௨. மாது, ௩. வஞ்சகம், ௪. சூழ்ச்சி, 5. பொறாமை, 6. பேராசை, 7. கொலை, 8. கொள்ளை, 9. களவு, 10. கெடுத்தல் போன்ற **"தஸாம்ஸ" குணம்** பொருந்தியவர்களாகும்.

கலிதோஷ பிரவர்த்தியும் ஸ்ரீஹரி பகவானின் நிவர்த்தியும் - ௨7

68. வேதாந்தத்தின் உட்பொருளாகவும்; "கலப்பு" எதுவும் இல்லாததாயும், "சுத்த அத்வைதமாயும்!" அமைந்த நூல்கள் இரண்டு என ஸ்ரீமஹான்களின் அனுபவமாகும்! ஒன்று **ஸ்ரீமத் "ரிபு கீதை!"** மற்றொன்று **"அஷ்டவக்ர கீதை"!** என ஸ்ரீமஹான்கள் சொல்லுவார்கள், இதை குரு மூலமாக உணர்ந்து, **"அது நாம்". "நாமே அது"!** என ஆகிவிட்டால், அதுவே ஜீவன் முக்தியாகும். வேறு எதை கற்றாலும், பெற்றாலும் ஜனன மரணம் உண்டு.

சித்ரா பௌர்ணமி அன்று நடந்த ஸத்ஸங்கம் - 19

69. 1. சிவன் என்றால் **அது கைலாசபதி!**

௨. சிவம் என்றால் **அது பரசொரூபம்!**

௩. நாராயணன் என்றால் **அது வைகுண்டபதி!**

௪. நாராயணம் என்றால் **அது பரசொரூபம்!**

5. பிரம்மன் என்றால் **அது பிரம்ம லோகாதிபதி!**

6. பிரம்மம் என்றால் **அது பர சொரூபம்!** என ஸ்ரீமஹான்களின் அனுபவ வாசகமாகும். இங்கு ஸ்ரீமத் ரிபுகீதை சுத்த அத்வைத பரசொரூப நூலாக இருப்பதால், **சிவன்** என்பதை **சிவம்** என்றும், **பரசிவம்** என்றும் மாற்றினோம்.

சித்ரா பௌர்ணமி அன்று நடந்த ஸத்ஸங்கம் - 26

70. **"சாதனை!"** என்பதே **ஓர் "பாரமே!".**

1. சாதனை பல செய்து மேலும், மேலும் பாரங்களை ஏற்றுக் கொண்டால் அப் பாரத்தை, தூக்கி போட்டு நாசம் செய்வது எப்போது?

2. இதற்கு ஒரே வழி, நாம ரூபமுள்ள ஓர் **இறைவனிடம் "தியாகத்தால்" சர்வார்ப்பணம்** செய்து விட்டு, காண்பதிலும், கேட்பதிலும், பேசுவதிலும் வெகு ஜாக்ரதையாக இருந்து கொண்டும்.,

3. அனைத்தும் அவன் பொருளே! அனைத்தும் அவன் செயலே! அவனன்றி அணுவும் அசையாது என்ற திட உணர்வோடு, மனதை அலைபாயவிடாமலும்.,

4. கண் இருந்தும் குருடாய், காது இருந்தும் செவிடாய், வாய் இருந்தும் ஊமையாய், **"பிறரை அடக்காமல்"!** நம் மட்டில் "நாம் மட்டும் அடங்கி"! சும்மா சுகமாக **"சாட்சி"! பாவனையில் ஆனந்த பரனாய் இருப்பதுவே, சாதனையற்ற நிலை** ஆகும்.

சித்ரா பௌர்ணமி அன்று நடந்த ஸத்ஸங்கம் - 47, 48

௭௧. இக்கலிதோஷமானது பெயர் வேண்டும்! புகழ் வேண்டும்! அதற்கு "பணம்", "பட்டம்", "பதவி"! வேண்டும் என "மோஹ"! வலையில் சிக்கிக் கொண்டதால் எவராலும் முடியவில்லையென்றே சொல்வோம்! மேலே கூறியவைகளை வேண்டாம் என "நிர்த்தாக்ஷிண்யமாக"! எவன் தள்ளுகிறானோ அவன் பக்தனோ, யோகியோ, ஞானியோ, அவனிடம் விசார ஞானமும் அவஸ்யம் உண்டு. **அவனே ஜீவன் முக்தனும் ஆவான். இது ஸத்தியம்.**

சித்ரா பௌர்ணமி அன்று நடந்த ஸத்ஸங்கம் - ௪௮

௭௨. ௧. "ஆகாரம்" "மிக மிக மிக மிக மிக முக்கியமாகும். "இறை குரு நாமாவில்"! முழு நம்பிக்கையும், வைராக்கியமும் வரும் வரை ஆகாரம் ஏற்பதில் சர்வ ஜாக்ரதையாக இருங்கள்.

௨. ஆகாரத்தில் ஒரு பகுதி, "மனமாக" செயல்படுவதால், "தகாததை தள்ளவும்"!.

௩. இறை, குரு நாமாவில் திட உணர்வும் பெற்றுவிட்டால் என்ன ஆகுமோ? ஏது ஆகுமோ? என்ன செய்யுமோ? இதனால் தான் இப்படி ஆகிவிட்டதோ? என்ற சந்தேகம், கலக்கம், பயம் நீங்கிவிட்டால், எதை எப்படி உண்டாலும், பெரு நெருப்பில் விழும் சருகு போல், சாம்பல் என அனைத்தும் பஸ்பமாகிவிடும்.

௪. அதாவது மண்ணால் ஆன ஆகாரம், மண்ணாலான உடலோடு மண் ஆகிவிடும். சூட்மமான வாஸனையின்

குணங்கள், சூட்க்ஷமான ஸ்ரீபகவானிடம் கலந்து மயமாகிவிடும். நீ அதுவாகவே இருப்பாய்!.

சித்ரா பௌர்ணமி அன்று நடந்த ஸத்ஸங்கம் - 54

73. பர சிவத்தை **"பர கருணை"**யாகவும், பரமசிவம் **"இறை கருணை"**யாகவும் கொள்ள வேண்டும் என்பது கருத்தாகும். **பர கருணை மனதிற்கு** என்றும், **இறை கருணை தூலத்திற்கு** என்றும் பொருள் கொள்ள வேண்டும்.

சித்ரா பௌர்ணமி அன்று நடந்த ஸத்ஸங்கம் - 55

74. 1. "பக்தன்"! என்றால் நாம ரூபமுள்ள ஸ்ரீபகவானின் சரணாலயத்தில், தம்மை ("உடல்"! "பொருள்"! "ஆவி"!) முழுமையாக சர்வார்ப்பணம் செய்ய வேண்டும்.

2. ஜீவன் முக்தன் நிலைக்கு, அதாவது "ஞான"! நிலைக்கு சாதனை செய்பவன், தம்முடைய ஸ்ரீஸத்குரு தேவரிடம்; மேலே கூறியபடி உடல், பொருள், ஆவி ஆகிய இம்மூன்றையும் முழுமையாக, சர்வார்ப்பணம் செய்ய வேண்டும்.

3. இதில் ஓர் ரகஸ்யம்! "ஸ்ரீபகவான்"! திருவடியைக் காட்டுவான்! "ஸ்ரீஸத்குரு"! திருவடியைத் தருவார்!!

சித்ரா பௌர்ணமி அன்று நடந்த ஸத்ஸங்கம் - 57

75. A. **சஞ்சிதம்** என சொல்லும் மொத்த மூட்டைகள் அனைத்தும், ஸ்ரீஸத்குரு சந்நிதியில் செய்து வரும் விசார ஞானத்தீயால் பஸ்பமாகிவிடும்!.

B. **பிராரப்தம்** என சொல்லும் தூல சரீரமானது, வினைகளை அனுபவித்து தீர்த்தால் அவ்வினையும் முடிந்து விடும்!

C. **ஆகாமியம்** என சொல்லும் கடும் "ஆசை"! வசத்தால் உடைமையும், உரிமையும், அதிகாரமும் செலுத்தி, முடியும் வினையை தொடர் வினையாக்கிக் கொள்கிறோம் என உணரவும்.

வாழ்ந்தாலும் தூற்றும், தாழ்ந்தாலும் தூற்றும் - 10

76. சரணாகதியாகிய **"தியாக உணர்வு"!** இல்லாமல் வேறு **எந்த கர்மாவாலும் ஆத்ம ஞானம் பெற முடியாது,** இதுவே பிரமாண உண்மையாகும்.

வாழ்ந்தாலும் தூற்றும், தாழ்ந்தாலும் தூற்றும் - 17

77. நீங்கள் உங்கள் மனதால், இது கால பரியந்தம் செய்து வந்த "சாதனைகள்"! அனைத்தையும், உங்கள் சாதனை **மனதால் எல்லாம் ஒன்றே! எல்லாம் நீயே!** என **"நிர் மூலமாக"! எந்த வினாடி விடுகிறீர்களோ, அந்த "வினாடியே"! நீங்கள் ஜீவன் முக்தர்களே!**

வாழ்ந்தாலும் தூற்றும், தாழ்ந்தாலும் தூற்றும் - 39

78. மனதை மனதால் தான் விட முடியுமேயன்றி, வேறு எந்த கர்மாவினாலோ, வேறு எந்த சாதனைகளினாலோ விட முடியாது. அதாவது **"எண்ணத்தை; எண்ணத்தால்"! விடுவாயாக, எல்லாம் ஒன்றே! எல்லாம் நீயே!** என

**நிர்மூலமாக விடுவதே ஸ்வய ஞானானுபவம்** ஆகும்! அதுவே நாம்! நாமே அது! இது ஸத்தியம்.

வாழ்ந்தாலும் தூற்றும், தாழ்ந்தாலும் தூற்றும் - 39

79. பொருளை வேண்டாம் என விடுவது துறவாகாது. அது வெறும் ஜடமே. அப்பொருள் வருவதோ, இருப்பதோ, விலகுவதோ இல்லவே இல்லை. அப்பொருளை உடைமையாக்குவதும், உரிமை கொண்டாடுவதும், எதிர்பார்ப்பதும் மனதின் பிணைப்பாகும். ஆகவே **பொருளை விடுவது துறவு ஆகாது. அப்பொருளின் பற்றை, மனதால் நாமும் அல்ல, நம்முடையதும் அல்லவென்று இறைவனிடம் சர்வார்ப்பணமாக விடுவதே துறவு ஆகும்!.**

பல மணிகள் - 4

80. **மோகம்** என்றால் விலக்க முடியாத ஆசை. அப்படியான ஆசையின் கடின வெறி என சொல்லலாம்.

**போகம்** என்றால் அதை என்னுடையது என உரிமை கொண்டாடி, மனதால், தனதாக பாவனை செய்வது போகம் ஆகும்.

பல மணிகள் - 5

81. இச்ஜீவர்கள் தமக்குத்தாமே விதி என்ற ஏட்டை (தலை விதியை) எழுதிக் கொள்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். ஆனால் பிரமாணமான உண்மை என்னவென்றால்? விதியும் இல்லை! விதிக்கும் இறைவனும் இல்லை! அப்படி ஓர் எழுத்தும் இல்லை!

இவனே இறைவனாக இருப்பதால், **இவன் விதியை இவனே எழுதிக் கொள்கிறான்.**

பல மணிகள் - 9

82. 1. மனம் வசப்பட்ட *தன்மையினால் தான்* **நீ** *மனிதன்* ஆனாய்! *அதே மனதை*, உன் வசம் ஆக்கி **நீ** *அதை* (*மனதை*) ஆண்டாயானால் **நீ** *மனிதன் அல்ல*; **நீயே** தெய்வமாவாய்.

2. மனதை நீ ஆள்வது என்பது நான், என்னால், என்னுடையது மூன்றையும் விட்ட நிலையில், எல்லாம் நீயே என்றும், எல்லாம் உன்னால் என்றும், எல்லாம் உன்னுடையதே என்றும் மாற்றிப்பிடித்தால், மனதின் ஆகாமிய வினைக்கோ, பிராப்த அனுபவ அழுத்த பாரமான கஷ்டம், கவலை, பயம் இவைகளுக்கோ இடம் இல்லாமல் போய்விடும்.

பல மணிகள் - 10, 11

83. இவ்வுலகம் உன்னுடையதே, இவ்வுலகம் உன் தேவைக்காக (விளையாட்டிற்காக) உண்டாக்கப்பட்டதே! ஆகவே எம் இறைவன் விதியை எழுதவும் இல்லை, அது உன் தலை எழுத்தும் இல்லை. அதை மாற்ற முடியாது என்பதும், இல்லவே இல்லை.

பல மணிகள் - 10, 11

84. 1. **நனவில்** பொருள்களை தேடி, ஓடி, நாடி, அடைவதைப் போல் அடைகிறாய்.

2. **கனவில்** பொருள்கள் உன்னை நாடி வருவதைப் போல் காண்கிறாய்.

3. **ஆழ்ந்த உறக்கத்தில்** நீ போகவும் இல்லை; அது வரவும் இல்லை.

4. **நனவு, கனவு** இவ்விரண்டிலும் கற்பனையில் இருக்கிறாய். ஆழ்ந்த உறக்கத்தில் கற்பனை செய்யும் மனம், உன் ஆன்மாவில் லயித்து இருக்கிறது. ஆகவே சுகமாக தூங்கினேன் என்கிறாய்.

5. ஆகவே குழந்தாய்! இந்த "லயத்திலே" இத்தனை சுகம் இருக்குமானால், அதே மனதை உன் ஆத்மாவிலேயே "மயமாக்கினால்" நீ என்ன ஆவாய்??? **அதுவே நீயாய்; நீயே அதுவாய்; பிரம்மானந்த மயமாவாய்.**

பல மணிகள் - 25

85. 1. ஸ்ரீபகவான் பிரசாதம், இச்ஜீவர்களின் **"வினைகளை" பக்குவப்படுத்தும்.**

2. ஸ்ரீமஹான்களின் பிரசாதம், இச்ஜீவர்களின் **"அறியாமையை"! விலக்கி, காலக்கிரமத்தில் அவைகளை அழிக்கும்.**

3. இதில் ஸ்ரீபகவானின் நிலை ஜீவ ரக்ஷிப்பு, ஸ்ரீமஹான்களின் நிலை ஜீவ அழிப்பு (ஜீவத்வத்தை நீக்குதல்).

பல மணிகள் - 27

86. ஸ்ரீபகவான் பிரசாதத்தை விட, ஸ்ரீமஹான்கள் பிரசாதமே **"மஹா பிரசாதம்"** என ஆகும் என தன்னை உணர்ந்த ஸ்ரீமஹான்களின் அனுபவம் ஆகும்.

பல மணிகள் - 29

87. **கேள்வி 1:** சும்மா சுகமாக இருந்தால், அது சோம்பல் என ஆகிவிடாதா, என கேள்வி வரலாம்?

**பதில் 1:** இறை உணர்வோடும், குரு உணர்வோடும்; இருப்பது சோம்பலும் ஆகாது; சாதனையும் ஆகாது!!

**கேள்வி 2:** சோம்பலாகாது என்பதை வேண்டுமானால், ஏற்றுக் கொள்ளலாம்; ஆனால் அது சாதனை ஆகாது என்பதை ஏற்றுக் கொள்ள முடியவில்லையென கேட்கத் தோணுதா?

**பதில் 2:** இறையையோ, குருவையோ இது வேண்டும் என ஏதாவது ஓர் எதிர்பார்ப்புடன், எதைச் செய்தாலும் அது சாதனைதான். எந்த எதிர்பார்ப்பும், சந்தேகமான கேள்விகளும் இல்லாமல், "எல்லாம் நீயே!!!" என முழுமையாக சார்ந்திருப்பது சாதனையாகாது. அது உன்னுடைய சாக்ஷாத்காரம் ஆகும். சாக்ஷாத்காரம் என்பது உன்னுடைய யதார்த்த சொரூபம்!!!" ஆகும். உன்னோடு நீயே, அன்னியமில்லாமல் ஒன்றாகி கலந்திருப்பது சாதனையாகாது.

**கேள்வி 3:** அதுவும் மன எண்ணம் தானே? அப்படி மன எண்ணமும் சாதனைதானே, என கேட்க தோணுதா?

**பதில் 3:** "நாம ரூபமாக"! ஜகத், ஜீவ, ஈஸ்வராதிகளை, கற்பனை பண்ணுவது மன எண்ணம் ஆகும். அவைகளை முழுமையாக மறந்த நிலையில் எல்லாம் நீயே என

முழுமையாக, ஆனந்தமாக இருப்பது மன எண்ணமல்ல; அது **“அறிவு”** **நிலை**யாகும்.

சாதனையை விடுவதே சாதனையாகும் - 2

88. **மன எண்ணங்களுக்கும், அறிவுக்கும் என்ன வித்தியாசம்?**

1. **மன எண்ணம்** என்பது:- கலக்கம், பயம், சந்தேகம் இவைகளுடன் கூடியிருந்தால் அது **மன எண்ணமாகும்.**

2. **அறிவு என்பது:-** அமைதி, திருப்தி, ஸாந்தி, ஆனந்தமுடன் இருந்தால் அது அறிவு ஆகும்.

சாதனையை விடுவதே சாதனையாகும் - 3

89. “கலியுக”! கோர குணங்கள் அழிந்து மனம் மஹத்தாக வேண்டுமானால், தியானம், யோகம் இவைகளை விட **“தியாகமே”!!! மனம் அழியும் மார்க்கமாகும்!**

சாதனையை விடுவதே சாதனையாகும் - 6

90. **யோகத்திற்கும், தியாகத்திற்கும்** உள்ள **வித்தியாசம் என்ன? தியாகத்தினால் மனம் அழியும்** என **தாங்கள் சொல்லும் கருத்து என்ன?**

1. **யோகம்** என்றால் கட்டுதல்! கட்டுதல் என்றால் மனக் கட்டுப்பாடுடன் கூடிய சாதனையாகும்.

2. **தியாகம்** என்றால் விடுதல்! ஆகவே “மனக் கட்டுப்பாட்டுடன்”! செய்யும் சாதனையை விட, அம்மனதை இயல்பாக விடுவதே, இக்கலியுக கோர

குணங்களை ஜயித்து மனதை மஹத்தாக்க முடியும். யோகம், ஜப, தபம் என இன்னும் பல வழிகளில் உன் மனதை "கட்டுப்படுத்தாமல்"! "எல்லாம் நீயே" என சர்வார்ப்பணமாக விடுவதே தியாகமாகும்.

சாதனையை விடுவதே சாதனையாகும் - 6, 7

௯௧. **"சாதனை" விடுவதே "சாதனை"** என்பது:-

௧. சுவாசப் பயிற்சியினால் (யோகத்தினால்) மனம் அடங்கும்! இயலாத்தன்மையால் திரும்ப எழும்.

௨. தியாக உணர்வினால் ஸ்ரீபகவானிடம் எல்லாம் நீயே என்ற சர்வார்ப்பணத்தால், "அவன் கருணை"! எல்லாம் அவன் பொருள் என்றும், எல்லாம் அவன் செயல் என்றும், "அவனிடம் விட்ட தன்மையில்"! அனைத்து ஆசைகளும் அழியும்.

௩. மனதின் பிடிப்பு ஆசையே! ஆசை அழிந்தால், மனம் இருக்க இடம் ஏது???

௪. மனம் அடங்க வேண்டுமானால் "யோகம்" பண்ணலாம்.

5. மனம் அழிய வேண்டுமானால் "தியாகம்" செய்யலாம். இதுவே "சாதனையை" விடுவதே "சாதனை"! ஆகும்.

சாதனையை விடுவதே சாதனையாகும் - ௨௨, ௨௩

௯௨. எல்லாம் இறைவன் பொருளே; எல்லாம் இறைவன் செயலே; நாம் இறைவன் குழந்தையே; நாம் ஆத்மா என்ற பர சொரூபமே என்ற, "மெய் உணர்வு"! குன்றாமல் இருந்தால் வினை உடல் பழையன மட்டும் அனுபவிக்கும்.

மனமும் சாந்தியுறும். வாக்கும் நம்முள் அடங்கும், மூற்கவன சக்தி தோன்றாது மறையும். அங்கு **வினைப் பெருகா தன்மையினால் நாம் ஜீவன் முக்தனே!**

சாதனையை விடுவதே சாதனையாகும் - 24

93. ஸ்ரீஸத்குருவானவர் "ஜகத், ஜீவ, ஈஸ்வராதி"களின் "நாம, ரூப, குண"! **தோஷங்கள்** அனைத்தும் உன் மனோமய கற்பனையேயன்றி, உண்மையில் எவையும் இல்லையென உணர்த்தி, **ஒன்றைப் பார்த்தால் ஒன்றில்லை** என்னும் **உண்மையை, அறிவு பூர்வமாக உணர்த்தி** (பரமாக பார்த்தால் பார் முதல் பூதம் இல்லை, பார் முதல் பூதமாக பார்த்தால் பரம் இல்லையென்ற) சுத்த அத்வைதத்தை வாய்ஞானம் இல்லாமல் "அனுபவ ஞானத்தை" ஸ்தாபித்து "அதுவே நீ!" "நீயே அது!" என்ற பரிபூரணத்தை உணர்ந்துவிட்டால் நாம் ஜீவன் முக்தனே!

சாதனையை விடுவதே சாதனையாகும் - 25

94. **எல்லாம் நன்மைக்கே** என்பது:- உன் விளையாட்டு மைதானத்தில் வினை சம்பந்த பொருள்களும், வினையைத் தீர்க்க வந்த "ஜீவர்களும்"! (உறவு, சுற்றங்களும்) பிராரப்தத்தின்படி கொடுத்தால் எடு. எடுத்தால் விடு. அங்கு மனதால் கணக்கு பார்க்காதே. எவரிடமும் கணக்கு கேட்காதே. எல்லாம் "நன்மைக்கே"! என்ற ஓர் எண்ணத்தை மட்டும் வைத்துக் கொண்டு, மற்றும் அனைத்து எண்ணங்களையும் விட்டுவிடு. "நன்மை"! என்ற இந்த ஓர் எண்ணமே, முதலில்

லௌகீகத்தை துடைக்கும், தெய்வீகத்தோடு பிணைக்கும். பின் இறை குரு கருணையினால், தெய்வீகத்தையும் பரமார்த்தீகமாக்கிவிடும். அதுவே ஜீவன் முக்தி!

சாதனையை விடுவதே சாதனையாகும் - ௩௭

௯௫. 1. அஹங்கார அபிமான எண்ணத்தால், வினைகளை பெருக்கிக்கொள்ளும் மாயா மனமே காரணமாக இருக்கிறது.

2. மன எண்ணத்தால் வினை பெருக்கமும், மன எண்ணமற்றால், வினை நீக்கமும் இயல்பாக நடைபெறும்!

விபத்து, ஆபத்து - 5

௯௬. விபத்தோ, ஆபத்தோ வினையிருந்தால் மனதின் மூலமாக விதிதேவன் நடத்தி வைப்பான் என்பதே ஸத்தியமாகும்!.

விபத்து, ஆபத்து - 5

௯௭. **விதிக்கும் விதி**யென்பது: வினையினால் விதிக்கப்பட்ட விதியானது, விதிதேவனால் (கால தேவனால்) நடந்தே தீரும். ஆனால் இச்ஜீவன் அந்த இறைவனின் கருணையைப் பெற்றுவிட்டால் அங்கு அவ்விதி சற்று மாற்றி அமைக்கப்படும்! மாற்றி அமைக்கலாமே தவிர விலக்க முடியவே முடியாது.

விபத்து, ஆபத்து - 6

௯௮. உலகின் நிலையில் **"பயத்தை"!** ஒழித்து, தெய்வீக நிலையில் **"மயக்கத்தை"!** அத்வைத அனுபவ போதனையால் அகற்றி, **தாம் தாமாக இருக்க**

**அருள்பவர் ஸ்ரீஸத்குரு.** தெய்வீகத்தை காட்டுபவர் சாமான்ய குரு. **தெய்வமாகவே ஆக்குபவர் ஸ்ரீஸத்குரு.**

*ஸத்குரு தர்ஸனம் - 1*

99. 1. குரு சொரூபம் "நாம ரூபமாக"!!!! தூளி பாபா என்றோ; சாய் பாபா என்றோ; சாயிராம் என்றோ; சிருடி பாபா என்றோ; ரமண குருவே என்றோ; வேறு எந்த "குரு சொருபத்தையும்"! சார்ந்ததல்ல! (சார வேண்டாம்).

2. மேலும் அப்படி குரு சொருபத்தை சார்ந்து நிற்குமாயின், அது தோன்றி இருந்து மாறி மறையக் கூடியதே, அது ஸாஸ்வதமுமல்ல! அது ஸத்தியமுமல்ல!

3. யாம் முன்பு கூறியபடி, **"குரு"**! என்றால் **"ஒலி"**, **"ஒளி"** ஆகும். **அது** பர **ஒலி** ஆகும். **அது ஆத்ம ஒளியாகும்.** அது "அனுபவ ஞானத்தை"! வாக்கியார்த்த நிலையில் ஒலியாக கொடுத்து, லக்ஷியார்த்த நிலையில் "ஒளி"யாக ஸ்வயமாக ஆக்கும் நிலையாகும்.

*ஸத்குரு தர்ஸனம் - 28, 29*

100. எந்த ஸ்ரீமஹான்களின் "நாமாவை"யும் ஸ்மரிக்காமல், எந்த வினாடியும் **"குருதேவா"** என்றோ, **"குருநாதா"** என்றோ, இப்படி "குரு நாமஸ்மரணையுடன்"! அழைத்தால், அது முந்தைய யுக அனைத்து ஸ்ரீமஹான்களையும், இன்றைய ஸ்ரீமஹான்களையும் அழைப்பதும், போற்றுவதும் ஆகிவிடுமே! உனக்கும் அமைதியும், சாந்தியும் தாமே

பெருகும். உண்மையை உணரும் ஓர்மித்த அறிவும் பிரகாசிக்கும்.

ஸத்குரு தர்ஸனம் - 35

101. ஸ்ரீஸத்குரு சொரூபம் "ஒன்று" மட்டும் "பர சொரூபமாக"! விளங்குவதால் அங்கு எந்த நாம, ரூபமும் பெற முடியாது! பெறக் கூடாது! அப்படி நாம, ரூபம் தாங்கிய **ஓர் ஸ்ரீஸத்குருவை வாழ்த்தினாலும், புகழ்ந்தாலும் அது அபச்சாரம்** ஆகும்! ஆனால் "சாமான்ய" "குருமார்களை"! வாழ்த்தினாலும், புகழ்ந்தாலும், அது பொருந்தும், அது அபச்சாரம் ஆகாது.

ஸத்குரு தர்ஸனம் - 36

102. ஓர் ஸ்ரீஸத்குரு தேவரிடம், எந்த மந்திரமும், தீட்சைகளும், இருக்கவும் முடியாது! இருக்கவும் கூடாது!! இருந்தால் அது ஸ்ரீஸத்குரு ஸ்தானத்திற்குப் பொருந்தாது.

குருவின் தெளிநிலை - 8

103. ஓர் ஸ்ரீஸத்குருதேவர் வேத, சாஸ்திர அனுபவம் உடையவராக இருக்கமாட்டார். ஆனால் மேலே கூறிய ஒழுக்கம், கட்டுப்பாடு இவைகளை, போதிப்பவராக இருக்கமாட்டார். **தன்னுடைய "சாதனையால்"! உணர்த்துபவராக இருப்பார்.**

குருவின் தெளிநிலை - 8

104. ஓர் ஸ்ரீஸத்குருதேவர், நான்கு "மஹா வாக்கிய"த்தை விளக்குபவராக இருக்கமாட்டார். "விளங்கியவராக"! இருப்பார். நான்கு மஹா வாக்கியமும் அவரிடம் இராது.

நான்கு மஹா வாக்கியமும் "அவராகவே"! இருப்பார். இதற்கு உதாரணமாக **"குற்றம், குறை"! "விருப்பு, வெறுப்பு"! "பேதம்"!** இவைகள் **இல்லாதவனே, நான்கு மஹா வாக்கிய ரகஸ்யமாகும்.**

குருவின் தெளிநிலை - 8, 9

105\. 1. இம் மனிதன் யாம் ஜீவனல்ல என்ற உறுதி நிச்சயம் தம் மனதால் செய்து, அதே மனதால் **ஆரம்ப நிலை**யென்றால், நாம் **இறைவனின் "குழந்தை"**! என்றும்.

2\. **முடிந்த** பக்குவம் ஆன **நிலை**யென்றால் **நாம் "இறைவனே"** என்றும், களங்கம் கலக்கம், பயம் அற்ற நிலையில், "மனம்" தெளிவடைந்தால், நாம, ரூப, ஜக, ஜீவ சொரூபங்கள் தோன்றாது மறைந்து விடும்!.

3\. அங்கு அனைத்தும், **"இறைவனாக"! தோற்றலாம்!** அல்லது அனுபவ முதிர்ச்சியினால்; அனைத்தும் "நாமாக"! தோற்றலாம்! இந்நிலை கிட்டும் போது, குரு கிருபையினால் (அவர் வாக்கிய சிரத்தையினால்) "அகண்ட பாவனை!" வெகு எளிதாக கிடைக்கும்! இதுவே சர்வசாட்சித் தன்மையாகும்! இதுவே ஜீவன் முக்தி ஆகும்.

4\. **இறை நிலை**யென்ற **சாட்சி தன்மை பெறாமல், அகண்ட** பாவனையாகிய **சர்வசாட்சித் தன்மை பெற முடியாது.** ஆகவே அகண்ட பாவனையே ஜீவன் முக்தனின் லட்சணம் ஆகும்.

குருவின் தெளிநிலை - 27, 28

106. மனம் எந்த வினாடி இறை சொரூபமாகிய ஏக குணம் என்ற **"ஸத்வ குணத்தில்"!** நின்றுவிட்டால், மனம் மனமாக இராது, **மனம் அறிவாக இருக்கும்.** மனம் மேலும் மேலும் மேல் நோக்கிச் சென்றால், **"நிர்க்குணம்"!** என்ற நிலையில் "மஹத்தாகி"! "அகண்ட பர பாவனையாகிய"! சர்வ சாட்சி தன்மையில், கரைந்து மயமாகிவிடும்! அங்கு "மனமும்", அது தோன்றிய "மாயையும்" இல்லை, **"நாம் நாமாக" இருப்போம் "நாம் அதுவாக" இருப்போம்.**

குருவின் தெளிநிலை - 32

107. ஸ்ரீபகவானிடமும், ஸ்ரீகுருதேவரிடமும் எந்த எதிர்பார்ப்பும் இருக்கக் கூடாது.

குருவின் தெளிநிலை - 42

108. காலத்திற்குரியதை ஸ்ரீபகவான் சிரத்தையுடன் செய்கிறான் என்ற நம்பிக்கை வேண்டும்.

குருவின் தெளிநிலை - 42

109. ஸ்ரீகுருதேவரோ, மனமற்ற அவர், மனமுற்ற நம் மனதை அந்தர்யாமியாக இருந்து எடுத்து, எடுத்து, துடைத்து, துடைத்து., மனதை அறிவாக்கி (இறை நிலை தந்து) அறிவை மஹத்தாக்கியும், (பர நிலை தந்து) ஜீவாத்மாவாக இருந்த எம்மை பரமாத்மாவாக ஆக்கி அவர் பூரண நிலையாகிய, பர சொரூபத்துடன் இரண்டற கலக்கச் செய்து, சொல்லவொண்ணா, விளக்கவொண்ணா நிலை தந்தவரை எப்படி போற்றுவது? எப்படி புகழ்வது? அது

உபசார வசனமே! என ஆழ்ந்த அமைதி சாந்தியுடன் சும்மா, சுகமாக இருப்போம்.

குருவின் தெளிநிலை - 42

110. 1. "நான்" இறந்தால் **"நாம்"** ஆகலாம்!

2. "நாம்" மறைந்தால் **"அது" ஆகி நிறையலாம்.**

3. "நாம் அது" ஆகி நிறைந்தால், **பிரம்மானந்த சுவையென ஆகலாம்.**

4. "பிரம்மானந்தம்"! நாம் என ஆகிவிட்டால், அதை சொல்லவோ, விளக்கவோ, வாக்கும் இல்லை! வரி வடிவமும் இல்லை!

குருவின் தெளிநிலை - 50

111. 1. "மாயை" என்றால் மருட்சி! அதாவது ஒன்று பலவாகுதல்!.

2. "மனம்" என்றால் அவற்றில் மயங்கி கலங்கி வீழ்தல்!! (வீழ்தல் என்றால் ஜனன, மரணத்தில் வீழ்வதாகும்).

குருவின் தெளிநிலை - 50

112. மனம் தோன்றிய இடமே மாயையாகும். ஆகவே மனதை மாயையிடம் விட்டுவிட்டால், அங்கு "மருட்சியும்" இல்லை (மருட்சி பயம்), "மயக்கமும்" இல்லையென்றாகிவிடும்.

அப்படி விடும் நிலை **"எல்லாம் நீயே"! "எல்லாம் உன்னால்"! "எல்லாம் உன்னுடையதே"!!!** என நிர்மூலமாக விட்டுவிடு. அங்கு நீ "பூரணமாகவே"

(காலாதீத பர சொரூபமாகவே) இருப்பாய். இது ஸத்தியம்.

குருவின் தெளிநிலை - 50

113. **சாதிப்பது** என்றால் :- "அதுவாகவே" இருப்பது! **போதிப்பது** என்றால் :- பிறருக்கு "உணர்த்துவது"!!

ஆடி அமாவாசை அன்று நடந்த ஓர் ஸத்ஸங்கம் - 20

114. **பிரவர்த்தியின் மஹாமந்திரம்!**

ஆஸ்ரமம்; ஸ்தாபனம், மடம், மடாலயம் மற்றும் அனேக "பிரவர்த்தியின்" நிமித்தம் பிரபல்யமாக வேண்டுமானால், "மஹா மந்திரமாகவும்"! மூல மந்திரமாகவும் விளங்கும் **"ஓம் ஸ்ரீராம்; ஜெயராம் ஜெய ஜெயராம்"** என்ற மந்திரத்தை "போதனை" பண்ணு!

ஆடி அமாவாசை அன்று நடந்த ஓர் ஸத்ஸங்கம் - 20, 21

115. **நிவர்த்தியின் மஹா வாக்கியம்!**

"நிவர்த்தியின்" மார்க்கமாக இருந்தால் வேதாந்த நான்கு மஹா வாக்கியங்களுக்கிணையான, மஹா வாக்கிய ஸ்லோகமான **"ஸ்ரீராம்; ஜெயராம்; ஜெய ஜெய ராம் ஓம்!"** என்ற "மஹா வாக்கியமாக" இருக்க வேண்டும்!

ஆடி அமாவாசை அன்று நடந்த ஓர் ஸத்ஸங்கம் - 20, 21

116. 1. "பணிவு" என்பது! இயலாத்தன்மையல்ல!
 2. பணிவு என்பது சோம்பலல்ல!
 3. பணிவு என்பது உதவாத, உதவ முடியாததோர் "கழி நிலையல்ல"! (பொறுமையின் அம்சமே பணிவு).

4. "பணிவு" என்பது அதிகாரம், ஆணவம், ஆதிக்கம், ஆத்திரம், ஆவேசம், அவசரம், படபடப்பு எவையும் இல்லாத "ஓர் கனிந்த கருணையின் தர்மமாகும்"! இது "இறை நிலையின்"! பரிபூரண அம்ஸம் பெற்றதாகும். இது ஞானத் திறவுகோல் ஆகும்.

அன்னையின் அருளாசி - 9

117. 1. உடல், உலக (மண், பொன், பெண்) நாம, ரூப, ஜகத்தை, மூலத்தோடு அடியோடு கெடுத்தாலன்றி, "அவன்"! (இறைவன்) ஆக முடியாது.

2. அவனே நாம் ஆகி, நாமே அவனாகி, அவன் மாயாவை ஜயித்தாலன்றி, "அது" (பர சொரூபம்) **நாம் அது, அதுவே நாம்!**, என ஆக முடியாது!

3. அதன் அம்ஸமாகவே (தோற்றத்திலல்ல) (அனுபவத்தில்) ஆனாலன்றி, அதன் நிலையிலுள்ள ரிபு **கீதையை பாராயணம் செய்ய முடியாது தான்!!!** அந்நிலையில் **பாராயணம் செய்தால்தான்**, நீ மேலே கூறிய **அனைவரும் சுவைக்க மாட்டார்கள், "சுவையாக"! இருப்பார்கள்!**

அது அந்த "ஒன்றுக்கே"! பொருந்துமே அல்லாது தேவர் மூவருக்கும் பொருந்தாது!

அன்னையின் அருளாசி - 10, 11

118. 1. சிரத்தையே ருது! அகம் பிரம்மாஸ்மி என்ற ஸ்ரீஸத்குரு வாக்கிய பரிபாலனமே, நித்திய "பாராயணமே"! ஸ்ரீஸத்குரு பிந்துஸ்தானமே ஞானமாகிய கர்ப்பமாகும்!

2. உன் கர்ப்பத்தில் உள்ள "ஆனந்தம்" என்ற "சிசுவை" நீ தான் பெற்றெடுக்க முடியும். வேறு எவரும் பெற முடியாது! உன் கர்ப்பத்தை நீதான் (எந்த கஷ்டப்பட்டாலும்) பெற்றெடுக்க வேண்டும். (உனக்காக வேறொருவர் பிள்ளையை பெற முடியாது!) (தரவும் முடியாது).

3. அகம் பிரம்ம பாவனையாகிய நித்திய பாராயணம் அவஸ்யம் தேவை! **யாம் பாராயணம்** செய்வது **ஊசி மருந்து, நீங்கள் பாராயணம்** செய்வது **வெளி மருந்து,** இவ்விரண்டு மருந்துகளும் இணைந்தால்தான் பூரணமாகிய ஜீவன் முக்தி பெறமுடியும்.

அன்னையின் அருளாசி - 20

119. இத்தூலத்தை, வினையின்படி இயங்க வைப்பது, மாயா மனமாகும். இங்கு **எண்ணம் உண்டானால், மனம் உண்டு! எண்ணம் இல்லையானால் மனம் இல்லை!** இந்த மனம் தோன்றிய இடம் ஸ்ரீபகவானின் "மாயையாகும்"! ஆகவே மாயையின் மைந்தனே மனம், எனக் கொள்ள வேண்டும்.

பரசொரூபமும், ஸ்ரீபகவானும் - 2

120. "விதி" என யாம் சொல்வதை இரண்டாக பிரிக்கலாம். எப்படியென்றால், விதியென்றாலே இறைவன் தான். இங்கு இறைவன், இரு நிலைகளில் செயல்படுகிறான். ஒருவன் **"காலதேவன்"!** இங்கு மற்றொருவன் **"கருணா மூர்த்தியாகிய" ஸ்ரீபகவான்** எனப்படும்; அவரவர் உபாசனா மூர்த்தியாகும்!

பரசொரூபமும், ஸ்ரீபகவானும் - 2, 3

121. 1. "மனம்" இல்லாமல் "வினை" உண்டாகாது! வினை இல்லாமல் "மனம்" செயல்படாது!! இவ்விரண்டும், ஒன்றில்லையானால் ஒன்றில்லையென்பதே உண்மை.

2. இவ்விரண்டில் **எது முதலில் உண்டானது** என்று கேட்டால், **மனம்தான் முதலில் உண்டானது.**

3. இங்கு இன்னொரு உண்மையையும், நம் கருத்தில் கொண்டு வர வேண்டும். அது என்னவென்றால், ஸ்வயமான ஆன்மாவானது பந்தப்பட்டத் தன்மையினால், அது ஜீவன் என ஆனது.

பரசொரூபமும், ஸ்ரீபகவானும் - 6

122. **மனோபாரம்** என்றால்:-

"ஜக வாசனையின்" "பழக்க வழக்கங்களால்"! (வார்த்தை, செய்கைகளால்) படிப்படியாக, உலக வாசனை ஏறுவதையே "வியாதி!" எனச் சொல்லலாம். இவ்வியாதியே, மனோ வளர்ச்சியெனச் சொல்லும் **மனோபாரம்** ஆகும்! இதன் மூலமாகவே, ஆகாமிய வினையெனச் சொல்லும் முதலில் கூறிய "பிறவி வினை"! தோன்றுகிறதென உணரவும்.

பரசொரூபமும், ஸ்ரீபகவானும் - 7

123. 1. மனம் இல்லையானால், மண்ணின் ஜடத்துக்கு வேலையில்லை.

2. மனம் இல்லையானால் விளையாட்டின் வினைக்கு வேலையில்லை.

௩. மனம் இல்லையானால் மாயையின் மயக்கத்திற்கு வேலையில்லை.

௪. மனம் இல்லையானால் விதியென்ற இறைவனுக்கும் வேலையில்லை.

## ஆகவே ???

மனமே ஜகம்! மனமே வினை! மனமே மாயை! மனமே விதிக்கும் விதி! மனமே உறவு நட்பு! மனமே சொந்த பந்தம்! ஆக **“எல்லாம் மனமே”!**

பரசொரூபமும், ஸ்ரீபகவானும் - 1௨, 1௩

1௨௪. 1. நாம, ரூப, குண, சம்பந்த “*துர்க் குணத்தை*”! விட்டாலன்றி; ஸ்ரீபகவத் சொரூப “*ஸத்வகுணமாகிய*”! ஏக குணத்தை பெற முடியாது.

௨. துர்க்குணம் பிரவர்த்தியாகும்! ஸத்வகுணம் (துர்க்குண) நிவர்த்தியாகும்! ஸத்வகுணம் பிரசித்தமாகிவிட்டால் “நிர்க்குணம்”! இயல்பாகிவிடும்!

௩. **ஸத்வகுணம் பெறுவதுவே நம் சாதனையாகும்!** பின் அனைத்து சாதனைகளையும் விட்டாலன்றி, நிர்க்குணம் ஆக முடியாது.

பரசொரூபமும், ஸ்ரீபகவானும் - ௩௪

125. **ஸத்வகுணம் சாட்சி நிலையாகும்!. நிர்க்குணம் அகண்ட பாவனையாகிய சர்வ சாட்சியாகும்.** சர்வ சாட்சியில், அது நிர்க்குணமானாலும் அங்கு “குணமற்ற” ஸ்வயமான அறிவு அவஸ்யம் உண்டு. இங்கு எந்த ஆசையும்,

அசைவும் இராது. "அதுவே நாம்" என்ற பேரறிவோடு கூடிய உணர்வு ஒன்றே உண்டு.

பரசொரூபமும், ஸ்ரீபகவானும் - 34

126. 1. "அது" என்றும்; நாம் என்றும்; இரண்டு பட்ட தன்மை ஆகும். இந்த இரண்டு பட்ட சுத்தம் என்ற நிலையானது "சுவையும்!" "பழமும்!" போன்றதாகும்.

2. சுவையும், பழத்தையும் எப்படி பிரிக்க முடியாதோ? பழம் என தோற்றம் மட்டும் தோற்றி, சுவை என்ற உணர்வு எப்படி உள் அடங்கி இருக்குமோ? சுவைத்துவிட்டால் பழம் எப்படி தோற்றாதோ? அந்நிலையே, அதுவே நாம், நாமே அது என்ற நிலையாகும். இங்கு **பழம் நாம்! சுவை அது** ஆகும்!

பரசொரூபமும், ஸ்ரீபகவானும் - 73

127. **துரியம்** என்பது:- பலவித உதாரணங்களை காட்டி, அதுவே நாம்; நாமே அது! என்ற உணர்வை கொடுப்பது **துரியம்** எனவும் சொல்லலாம்.

பரசொரூபமும், ஸ்ரீபகவானும் - 73

128. **துரியாதீதம்** என்பது:- சுவையின் நிலையை நாம் பெற்றுவிட்டால், எப்படி அதை "விளக்க முடியாதோ" அது **துரியாதீதம்** எனவும் சொல்லலாம்.

பரசொரூபமும், ஸ்ரீபகவானும் - 73

129. 1. நனவு நிலை: காட்சி நிலையில் கலக்க பயமும்

2. கனவு நிலை: மனோ மருட்சியும்

3. சுழுப்தி நிலையில் (உறக்கத்தில்) தெய்வீக மயக்கமும்

5. சுத்தம் என்ற துரியாதீதம் என்ற அகண்ட பாவனையில் அது நாம்! நாமே அது! என்ற தற்போதம் ஒன்றே ஸ்வயமாக.

பரசொரூபமும்; ஸ்ரீபகவானும் - 73

130. **விஷயானந்தம்:-** நாம, ரூப, குண, விஷேசங்களால் பெறும் தோஷ ஆனந்தமாகும் (இது இன்ப துன்பமே)

**பேரானந்தம்:-** ஸ்ரீபகவன் நாம ஸ்மரணையினால், பெயரளவில் (நாமாவில்) உண்டாகும் ஆனந்தமாகும்.

**பிரம்மானந்தம்:-**ஸத் ஸித் ஆனந்தத்தின், நிலைத்த ஆனந்தமாகும்.

மனதின் திறமையும் - அறிவின் கூர்மையும் - 15

131. **"மனம்" ஜீவ நிலையாகும்! "அறிவு" இறை நிலையாகும்!!** அறிவே தாமாகி, லௌகீகமும், தெய்வீகமும் தமக்குள்ளேயே மறைந்த "**தற்போதம்** என்பது **"அது நாம்"** என்ற **பர நிலை**யாகும்"!

மனதின் திறமையும் - அறிவின் கூர்மையும் - 16

132. **மனம் என்றால்:-** மனதின் வடிவம் வாசனையே! அதாவது நாம, ரூப குணதோஷ எண்ணங்களே! அவை கற்பனையே தவிர, உண்மை இல்லை!

மனதின் திறமையும் - அறிவின் கூர்மையும் - 28

133. இந்த நாம, ரூப, ஜகமோ தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவோடு கூடியதாகும். இவை நான்கும் சதமுமல்ல, சாஸ்வதமுமல்ல. இந்த மனம் எண்ணினால் உண்டு. இந்த மனம் மறந்தால் இல்லை!

மனதின் திறமையும் - அறிவின் கூர்மையும் - 28

134. இந்த நாம, ரூப, ஜக, வஸ்துக்களின் மேல், இந்த மனமானது, உடைமை, உரிமை, ஆதிக்கம், அதிகாரம், செலுத்துவதனால்தான் உலகம் இருப்புடையதாக தோற்றுகிறது, மேலே கூறியவைகளை செலுத்தாமல் விட்டு விட்டால், அனைத்தும் "ஜடமே"! அவை அனைத்தும் "மண்ணே"! ஆகவே இங்கு, உலக இருப்புக்கு இந்த "மனமே" காரணமாக இருக்கிறதேயன்றி, இதற்கு வேறு எவரும் பொறுப்பாக மாட்டார்கள்.

மனதின் திறமையும் - அறிவின் கூர்மையும் - 29

135. "உன் மனதால்" **எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையதே!** என "சர்வார்ப்பணமாக" விட்ட மறுக்ஷணம், வினையுமில்லை! வினை சம்பந்த நாம, ரூபமுமில்லை! "விட்ட நிலையில்"! சந்தேகமும் அதனால் தோன்றும் கலக்கமும், அதனால் தோன்றும் பயமும் வர முடியாது! வர இயலாது! வரக்கூடாது!! அப்படி வருமாயின் "நீ மனதை ஜயிக்கவில்லை", மனதை ஜயிக்காதவன் பிறந்தும் வீணே!

மனதின் திறமையும் - அறிவின் கூர்மையும் - 29

136. "வினையின்" தன்மையால், ஒருவருக்கொருவர் பரிமாற்றும் பண்ண வந்தவர்களேயன்றி, உறவு கொண்டாடி கூடிக்குலாவி, பிறவி எடுக்க வந்தவர்கள் இல்லையென, இந்த மனதாலேயே உணர்ந்து, "அம் **மனதை!**" "இறை குரு"! உணர்வில் செலுத்தினால், அந்த சொந்த, பந்த

பாசத்தில் சிக்கிய மனமானது, பாச உணர்ச்சிகளை விட்டு விட்டு "அறிவாக"! அவஸ்யம் பிரகாசிக்கும்.

௧. அந்த மெய் உணர்வான அறிவே, **இறை சொரூபமாகும்!**

௨. அந்த மெய் உணர்வான அறிவே, உன் **உபாசனா மூர்த்தியாகிய "ஸ்ரீபகவான்"** ஆகும்!

௩. அந்த மெய் உணர்வான அறிவே, உன் உள் இருந்து இயங்கி உன்னை, வழி நடத்திச் செல்லும், **ஸ்ரீஸத்குருதேவராகும்!!!**

மனதின் திறமையும் - அறிவின் கூர்மையும் - ௩௧

## ௧௩௭. மனம் அறிவாகும் நிலை:-

௧. "ஆவரண"! நாம ரூப மயக்கம் உள்ள மட்டும், பொன்னே, ஆவரணமாக உள்ளது என்று தெரிந்தாலும் தெளிந்தாலும் பொன் என்று உரைக்காமல் (சொல்லாமல்), அதை ஆவரணமே என வாக்கு புலம்பும் மட்டும்; ஆவரணமே ஸத்தியமாய் தோன்றும், பொன் மறை பொருளாய் இருக்கும்.

௨. எந்த அளவுக்கு பொன் தோற்றவில்லையோ, அந்த அளவுக்கு, **"மனமே"** பிரகாசிக்கும்!.

௩. ஆவரணம் மறைந்து, பொன் தோற்றிவிட்டால், மனம் இயல்பாகவே மறைந்து, அங்கு **"அறிவு"** பிரகாசிக்கும்.

௪. இந்த உவமானத்தினால், நாம் ஜீவனல்ல, நாம் இறைவனே என உண்மையாகவே உணர்ந்துவிட்டால்

"நாம ரூப" ஜகம் இருந்தாலும், அங்கு இறைவனைத்தான் நாம் உணர முடியும். இந்நிலை பெறுவதே அறிவு சொரூபமாகும்.

5. அந்த பொன் (இறைவன்) அது தோன்றியதாகிய, மண்ணுக்கு (பரசொரூபத்திற்கு) அன்னியமில்லை என **அறிவால் உணர்ந்த நிலை, அகண்டபாவனையாகும்!.**

மனதின் திறமையும் - அறிவின் கூர்மையும் - 34

138. உன் மனமடமையான, "**நான்**"! என்ற அஹங்காரத்தையும், "என்னுடையது"! என்ற அபிமானத்தையும், எந்த வினாடி நிர்மூலமாக விடுகிறாயோ, "அந்த வினாடியே"! **"நீ ஜீவன் முக்தனே"!!!**

கருணை - 33

139. "**நம்பிக்கை**"! என்றால்:-

1. நம்புவது உன் பணியாகும்! கைகொடுப்பது ஸ்ரீஸத்குரு கடமையாகும். **ஸ்ரீபகவானை "நம்பினால் கருணை" பெறலாம்!, ஸ்ரீஸத்குருவை நம்பினால் அபயகரம் பெறலாம்!.**

2. ஸ்ரீபகவான் வேறு; ஸ்ரீஸத்குரு வேறல்ல! இரண்டும் ஒன்றே! ஆகவே தான் "நம்பினால்" கருணையும் பெறலாம், அபய கரமும் பெறலாம், இது உறுதி.

3. நம்பிக்கை கடவுளாகும்! சந்தேகம் காலனாகும்!! எல்லாம் ஒன்றே! அது நலமே! அது யாமே! அது

நீயே! இது ஸத்தியம்! இது ஸத்தியம்!! இது ஸத்தியம்!!!

கருணை - 33

140. 1. புண்ணிய பாபம் உடல் என்றும், அது லௌகீகம் என்றும்.

2. ஸத்திய தர்மம் ஸத்துவ குணம் என்றும்; அது தெய்வீகம் என்றும்; முதலில் உணர வேண்டும்.

3. "பரம்" என்றால் நிர்க்குணம்! "தெய்வீகம்" என்றால் ஸத்வகுணம்!

4. "உடல் உலகம்" என்றால் அது "லௌகீகம்" என்றும், அது துர்க்குணம் என்றும் அறிய வேண்டும்.

புண்ணிய பாபமும் - ஸத்திய தர்மமும் - 23

141. **வினை உடல்:-** மனம் படைத்த மனிதனுக்கு, "மண்ணும் ஜலமும்!" பிசைந்து வார்த்தெடுத்த ஓர் புண்ணிய, பாப சம்பந்தம் கொண்ட ஓர் வினை உடல்.

புண்ணிய பாபமும் - ஸத்திய தர்மமும் - 34

142. **ஒளி உடல்:-** வினை உடலை ஒழுங்காக பாரபக்ஷ தோஷமில்லாமல், இயக்கும் ஶ்ரீபகவானுக்கு "ஒளி உடல்"! அதாவது ஜோதி வடிவான "அக்கினி" சரீரமாகும்!

புண்ணிய பாபமும் - ஸத்திய தர்மமும் - 34

143. **வாயு உடல்:-** வாயுவை ஸ்தாபனம் பண்ணி அதை மேலே எழுப்பி "சகஸ்ராரம்" வரை கொண்டு சென்று, மேலும் அவ்வாயுவை தலை மேலுள்ள ஒவ்வொரு ரோம

துவாரங்களிலும் உள்ள "ஓட்டைகள்" வழியாக, மேலே 18 அங்குலம் சென்று "பர வாசுதேவன்"! என்ற நிலைப் பெற்று "வாயுவையும்"! "ஆகாயத்தோடு"! கலந்து விட்ட மஹா யோக புருஷர்களின் சரீரம் வாயு ஆகும்!

புண்ணிய பாபமும் - ஸத்திய தர்மமும் - 35

144. **ஆகாய உடல்:-** ஆகாயம் ஞானிகளின் சரீரமென்று, அனுபவ ஞானிகள் கூறுவர். இது "யோகமாயா"! சம்பந்தம் கொண்டதாகும். ஆத்மஞானிகள் ஜீவன் முக்தி பெற்றவர்களே!

புண்ணிய பாபமும் - ஸத்திய தர்மமும் - 41

145. 1. ஒருவனுக்கோ அவன் குடும்பத்திற்கோ, கேடு விளைவதெல்லாம், அவரவர் "**வாக்கே**"! காரணமாக அமைகிறது. இதற்கு எண்ணமே முதலிடம் பெறுகிறது.

2. இந்த எண்ணம், தூய்மை ஆக வேண்டுமானால், இறை குரு உணர்வு வேண்டும். இறை குரு உணர்வு இருந்தால், பிராரப்த வினை சம்பந்த எண்ணமும் வாக்கு மட்டும் வருமேயன்றி, வேறு எண்ணமும் வராது, அதைச் சார்ந்த வாக்கும் வராது.

புண்ணிய பாபமும் - ஸத்திய தர்மமும் - 56

146. **சிரேயஸ், பிரேயஸ்** என்பது:-

பரமார்த்தீக அனுபவத்தில், சிரேயஸ் என்றும்; பிரேயஸ் என்றும் இரு நிலைகளை சொல்லுவார்கள்.

1. **சிரேயஸ்** என்றால், **"சுகமான ஆனந்தம்"!** என்றும்,

2. **பிரேயஸ்;** என்றால் **"இன்பமயமான துக்கம்"** என்றும் பொருள் கொள்ள வேண்டும்!

பிரார்த்தனை - 8

147. 1. **"புத்தி" பிரகாசத்தால்** "நாம ரூப" ஜகம்! தோன்றும் என்றும்,

2. அப்புத்தியே தீக்ஷண்யமாகி **"அறிவு"** எனப் பிரகாசிப்பதால், நாம ரூப ஜகம் மறைந்து **ஸ்ரீபகவான் பிரகாசிப்பான்** என்றும்,

3. அதே அறிவு ஸ்ரீபகவானே தாமாகி, தாமே ஸ்ரீபகவானாகி, தம் **"மாயா கார்யமான"!** ரூபலாவண்யத்தையும்!, மஹிமை பிரபாவத்தையும்! விட்டு விட்ட நிலையில், அறிவின் ஸ்ரீபகவத் சொரூபம், தம் இருப்பை விட்ட நிலையில், **"அதுவே ஆன்மா"!** என பூரணத்வம் பெற்று விடுகிறது.

4. ஆகவே அறிவே அனைத்துமாய் இருக்கிறது என **ஸ்ரீமஹான்கள் தம் அனுபவத்தில் சொல்வதுண்டு.**

பிரார்த்தனை - 15, 16

148. **அறிவின் ஆரம்ப சாதனையானது:-**

ஓர் நாம ரூப ஸ்ரீபகவானை, கற்பனா சொரூபமாக ஏற்படுத்திக் கொண்டு, அவனிடம் எல்லாம் நீயே, எல்லாம் உன்னால், எல்லாம் உன்னுடையதே என **சர்வார்ப்பணமாக விட்ட நிலையில்** "நாம ரூப, ஜகத், ஜீவர்கள்"! அனைத்தும் இல்லாதொழியும்.

அபிராமி - 6

149. "குணதோஷங்கள்"! அனைத்தும் மறைந்த தன்மையினால் **(ஏக குணமுள்ள)** "ஸத்வகுணமுள்ள" ஸ்ரீபகவானே நாம் ஆகிவிடுவோம். நாம் ஸ்ரீபகவானான நிலையில் முத்தொழில் சம்பந்த, ரூப லாவண்யமும் மஹிமைப்பிரபாவமும் (லோக மாயாவை) விட்ட நிலையில் **"அதுவே நாம், நாமே அது"! என நாம் நாமாயிருப்போம்.**

அபிராமி - 6

150. அறிவுக்கு நன்மையை தவிர, தீமை இல்லவே இல்லை! ஆனால் மனதிற்கு தீமையை தவிர, நன்மை இல்லவே இல்லை!

அபிராமி - 7

151. **"அவனை"** (ஸ்ரீபகவானை) உங்களுக்குள் ஆக்கிக் கொண்டு, **"உங்களை"** அவனுக்குள் ஆக்கிக்கொண்டு அவனையும், உங்களையும், அதுவாகிய **"பரமாக்கி"** கொண்டாலல்லவோ ஜீவன் முக்தி பெற முடியும்? **அவனை தனியே அனுபவித்தால் பத முக்திதானே சித்திக்கும்?** அவனே நாம்! நாமே அவன்! அவனும் நாமும் அதுவே என்ற நிலை பெறுக.

அபிராமி - 55

152. 1. "சிரார்த்த கால உணவை" சிறிதளவு "ஓர் கவளம்" "உண்ணுபவனும்"!!!!!

2. "சிறு தெய்வம்!" எனச் சொல்லும் காவல் தெய்வ"வழிபாடு" செய்பவனும் அவ்வழிபாட்டின்

"பிரசாதத்தை"! ஓர் கவளம் ஏற்பவனும், தம்முடைய ஆத்ம சாதனயின் பலனை இழக்க நேரிடும் என ஸ்ரீமஹான்களின் அனுபவ வாசகம் இருக்கிறது!.

3. ஆனால் இவைகளில் அனுபவம் முதிர்ச்சியானவர்களின் நிலை, காடாக்கினியில் விழும் பச்சை மரங்களும் எரிந்து சாம்பலாகும் என சொல்லுவார்கள்! அவர்களுக்கு மேலே கூறிய எந்த தோஷமும் இல்லவே இல்லை! இது ஸத்தியம்!

அபிராமி - 69

153. "உன் நம்பிக்கையே துணைவன்
உன் வைராக்கியமே ஆயுதம்"!!!

மஹான்களின் பாதச்சுவடுகள் - 18

154. மிலேச்சன் என்றால் பாபத் தொழிலையே தம் உயிராகக் கொண்டவன். நீசன் என்றால் பஞ்சமா பாதகங்களை விளையாட்டார்த்தமாக செய்பவன்.

மஹான்களின் பாதச்சுவடுகள் - 23

155. இதய தாபமும் ஏக்கமும் விவேகமாகும்! ஆத்திரமும் அவசரமும் வேகமாகும்! ஆகவே யாம் சொன்னோம் "வேகம் வேண்டாம்; விவேகம் வேண்டும்!!

மஹான்களின் பாதச்சுவடுகள் - 63

156. "ஆத்மானந்த!!!" "குழந்தைகளே!" ஸ்ரீபகவானும்; ஸ்ரீஸத்குருதேவரும்; **"ஒன்றே"** என உணர்வீர்! எந்நிலையிலும், நமக்கு அயலாக, எதுவும்; எவரும்;

இல்லை, இல்லையென, **"மெய் உணர்வோடு"** சந்தேகம், கலக்க பயம் தவிர்ப்பீர்! ஸ்ரீபகவானுக்கும், ஸ்ரீஸத்குருவுக்கும் **"நீயே"** ஆத்மா! **"அவர்களே"** உனக்கும் ஆத்மா! இது ஸத்தியம்! ஸத்தியம்!! ஸத்தியம்!!!.

முக்தியின் விளக்கம் - 1

157. ஸ்ரீபகவத் சொரூபமும், உன் **"எண்ண"** வடிவமே தவிர உண்மையல்ல! அவனே உன்னுள், நீயாக இருக்கும் போது, அவனை தேடி அலைவது, ஓர் புனுகுப் பூனையானது! தன் மலத்துவாரத்திலிருக்கும், **"புனுகுவை"** தன்னிடமே, இருப்பதாக உணராமல்; காடு முழுவதும், அலைந்து திரியும், வீண் கதையாய் முடியும்!.

முக்தியின் விளக்கம் - 20

158. **உருப்படமாட்டாய்** என்றால்:- இனி "நாம, ரூப" உருவம் பெறமாட்டாய்; என; பொருள்படும்!

முக்தியின் விளக்கம் - 33

159. **உருப்பட்டுப்போவாய்** என்றால்:- "நாம, ரூப" உருவம் பெற்று, திரும்பவும் வருவாய், எனப் பொருள்படும்!

முக்தியின் விளக்கம் - 33

160. **தூலவிருத்தி** என்பது:- மனம் படைத்த, இந்த மனிதன், மனம் வசம், அகப்பட்ட தன்மையினால் **"கோர குணங்களுக்கு"** ஆட்பட்டு, புண்ணிய பாவ வினைகளைத் தேடி, நான் ஒரு ஜீவன் என, இருப்பது, தூல விருத்தியாகும்! **"ஜனன மரணமே"** இவன் சம்பாத்தியம்.

முக்தியின் விளக்கம் - 39

161. **சாட்சி விருத்தி** என்பது:- மனம் "**அறிவு**" ஆன நிலை. இங்கு எக்கோர குணங்களும், இல்லாமல் "**ஏக குணமாகிய**" ஸத்வ குணம் ஒன்றே, உள்ள நிலை! இது "**ஸ்ரீபகவான்**" நிலையாகும்! இதில் "**மனித**" இனத்தை மட்டும், ஜாதி, மதம், மொழி, நாடு, தேசம் என எவ்வித பேதமும் இல்லாமல், எல்லாம், "**மனிதர்களே**" எல்லாம் ஒரே இனம், என்ற நிலையில், குற்றம் குறை! பேதம்! விருப்பு வெறுப்பு இல்லாமல்! கண்டிப்பு தண்டிப்பு இல்லாமல் அமைதியின், ஆனந்தமாக, உணர்வது சாட்சி விருத்தி!

முக்தியின் விளக்கம் - 39

162. **அகண்டவிருத்தி**யென்பது:- அறிவு "**பேரறிவு**" ஆன நிலை! இங்கு ஸத்வகுணமும், இருக்க முடியாது! இது "**நிர்க்குண நிலை!**" இது ஓர் ஞானியின் இருப்பு நிலையும்; "**அனுபவமும்**" ஆகும் இடமாகும்! இதில் ஜட, கட, படாதிகளும்! மனித இனத்தையும் சேர்த்து, நடப்பன, பறப்பன, நீந்துவன, ஊர்வன, கிருமி கீடகம் அனைத்தும், இணைந்த "**84 லக்ஷம்**" **ஜீவ கோடிகளையும்;** எந்த பேதமும் இல்லாமல், குற்றம் குறை, விருப்பு வெறுப்பு, பார்க்காமல், "**எல்லாம் அந்த ஒன்றே!**" என்ற "**சர்வாத்ம**" பாவனையாக உணர்வது, அகண்ட விருத்தியாகும்! இதை "**சர்வ சாட்சி**" பாவனையென்றும் சொல்லலாம்.

முக்தியின் விளக்கம் - 39, 40

163. **அகண்டைக ரஸம்:-** இது எந்த விருத்தியும் எந்த பாவனையும், இல்லாமல், நிர்க்குணமும், இங்கு **"மௌனமான"** நிலையாகும்; இதை வரி வடிவிலோ, வாக்கு வடிவிலோ, வேறு எந்த நிலையிலும், விளக்கம் கொடுக்க முடியாத, ஒன்றாகும். இதை **"உண்டு"** எனச் சொல்லவும் முடியாது! இதை **"இல்லை"** எனச் சொல்லவும் முடியாது! உண்டு என்றால் உண்டு! இல்லையென்றால் இல்லைதான்! இது நாம, ரூப, குணம், குறி, காலம், தேசம், வியாபாரம், மனம், வாக்கு, காயம் ஆகிய இந்த பத்தும் இல்லாததாகும். பிரம்மானந்த சமுத்திரம் என உபசாரமாகவும்; உவமானமாகவும் சொல்லலாம்!

முக்தியின் விளக்கம் - 40

164. **நாம, ரூப, ஜகத், ஜீவ,** சொந்த, பந்த, நட்பு உறவுகளை, **விட, விட, விட** ஆனந்தமே! மேலே கூறியவைகளை **தொட, தொட, தொட** துன்பமே!

**தொடும் நிலை:- நான்! எனது** என்ற அஹங்கார அபிமானமாகும்!

**விடும் நிலை:-** எல்லாம் நீயே! எல்லாம் உனதே! என்ற சர்வார்ப்பணமாகும்!

முக்தியின் விளக்கம் - 55

165. நாம, ரூப ஜகத்தை நான்; எனதை விட்டால், மறு க்ஷணம், குற்றம் குறை; பேதம்; விருப்பு வெறுப்பு; நாசமாகும்.

உள் உணர்வு - 1

166. நாம, ரூப, ஜகமும், உடல், உறவு, உடைமைகளும், நாமும் அல்ல! நம்முடையதும் அல்ல! ஆனால் அவை அனைத்தும், நாம, ரூபமாக இல்லாமல் **அதுவாக** இருக்கிறது என்றும்; அதுவே நாம்! நாமே அது! என உணர்க!

உள் உணர்வு - 1

167. "**நினைத்தது நடக்க**" வில்லையே என்றும்; "**கேட்டது**" "**கிடைக்க**" வில்லையே என்றும்; உன் மனம் "**சஞ்சலம்**" அடைய வேண்டாம்! "**நடப்பதையும்!**" "**கிடைப்பதையும்!**" இதுவே நாம், எண்ணியது என்றும்; இதுவே நாம் கேட்டது என்றும்; சாந்தி சமாதானம், செய்து கொண்டால், "**வினைப்**" பெருக்கம், இல்லாதொழியும்!

உள் உணர்வு - 10

168. இக்கலியுகத்தில், தெய்வம் "**மனித வடிவில்**" தான் வரும்! வர வேண்டும்! இதுவே நியதி! ஆகவே "**எல்லாம் அவனே**" என்று, எண்ணினால்; உன் "**சாதனையை**" அனுசரித்து, உன் தெய்வத்தை, நீ நேரில் காணலாம்! கண்டே ஆக வேண்டும்! அப்படி அது வரவில்லையானால், "**தெய்வம்**" இல்லையென்றாகிவிடும்!

உள் உணர்வு - 11

169. "**அளவற்ற**" தேவையும்! தேவைக்கு மேல் ஆசையும்! இல்லாமல், இது ஸ்ரீபகவான் கிருபையென, அடங்கி,

பொறுமையுடன், போதும் என, **"நிறைவோடு"** இருந்தால், **"நீயே ஸ்ரீபகவான்!"** ஆகும்.

உள் உணர்வு - 12

170. **தற்பதம் வேண்டாம்! தற்போதம் வேண்டும்:-**

1. **தற்பதம்** என்றால் **ஈசன்** நிலையென்றும்; **பரமாத்ம** நிலையென்றும் சொல்லலாம்!
2. **தற்போதம்** என்றால்:- **பர** சொரூப **அனுபவ** நிலையென்றும், பொருள் கொள்ள வேண்டும்!

உள் உணர்வு - 21

171. **"மனோ"** மய எண்ணமாகிய, கற்பனை இல்லாமல், **"நாம்"** அதுவே! அதுவே **நாம்** என, ஒரு எண்ணத்தை மட்டும், வைத்துக்கொண்டால் ஆனந்தமே!

உள் உணர்வு - 34

172. காணும் **"ஆத்மாவாக"** இரு! காணப்படும், **"நாம, ரூப"** ஜகத்தாக இராதே! அதனால், ஜனன மரணம் இல்லை! ஜீவன் முக்தனாகவே இருப்பாய்!

உள் உணர்வு - 34

173. **"கங்கு கரையற்ற!"** "மறைவற்ற! குறைவற்ற!" பிரம்மம் ஒன்றே, ஸத்தியம்! அப்பிரம்மத்தில் தோன்றிய, அனைத்து **நாம, ரூபமும்,** அஸத்தியமாகும்! (பொய்யாகும்).

உள் உணர்வு - 38

174. **"தமக்கன்னியம்"** இல்லாதவனே, **"திடஞானி".** அவன் தரிசனத்தால் தர்மம் படிப்படியாக மேலோங்கும்! அறம் படிப்படியாக அழியும்!.

உள் உணர்வு - 39

175. **லௌகீக பந்தம், தெய்வீக பந்தம்:-**

1. நாம, ரூப, ஜகத் ஜீவ, எண்ணங்கள், "**லௌகீக**" பந்தமாகும்!
௨. நாம, ரூப தெய்வீக எண்ணங்கள், "**தெய்வீக**" பந்தமாகும். இவ்விரண்டும், இல்லாதிருந்தலே, "**ஜீவன் முக்தி!**".

உள் உணர்வு - ௫1

176. *தூல விருத்தி* "**ஜீவ நிலை!**" *சாட்சி விருத்தி* "**ஈச நிலை!**" *அகண்ட விருத்தி ஓர்* "**ஞானியின்**" *அனுபவ நிலையென, ஆழ்ந்து, அகண்டவிருத்தியில், கரைந்து விடுவாயாக!.*

உள் உணர்வு - ௫௫

177. *அனைத்து* "**நாம ரூபங்களும்**" *அந்த காலாதீத,* "**பரமே**" *ஆகும். உன்* "**நன்மைக்காகவே**", எம் "**ஸ்ரீஸத்குரு**" வாக்காக சொல்கிறோம். இது பிரமாண உண்மையாகும்! முழுமையாக நம்புவாயாக!

உள் உணர்வு - 61

178. பூர்வ புண்ணியமும்; ஸ்ரீபகவான் கருணையும்; ஸ்ரீஸத்குரு பரிபூரண கிருபையும்; ஸ்ரீமஹான்களின் ஆசியும்; முழுமையாகப் பெற்றவர்களின்; "**கரங்களில்**" கிடைத்த, இந்த ஸ்ரீமத் ரிபு கீதை என்ற; "**ஸ்வய ஞானானுபவ**" *நூலானது அவஸ்யம், ஜீவன் முக்தி ஆக்கிவிடும்! இது ஸத்தியம்! இது ஸத்தியம்!! இது ஸத்தியம்!!!*

உள் உணர்வு - 67

179. 1. இவ்வுலகம், பற்று வரவு தீர்க்கும், ஓர் கர்மா பூமியாகும்.

2. நம்பிக்கையே பக்தீயாகும்!

3. வைராக்கியமே ஞானம் ஆகும்!

4. விருப்பும், வெறுப்பும், ஜனன மரணமாகும்!

5. போதும் என்ற நிறைவே, மோக்ஷத்தின், திறவு கோலாகும்!

6. பேதமே ஜகத் தோற்ற, நாம ரூபமாகும்!

7. எல்லாம் மண்ணே என்ற, அபேதமே, மோக்ஷத்தின் வாசலாகும்!

8. குற்றம் குறைகளே விகாரமும், விவகாரமும், (பிரச்சனைகளும்) ஆகும்.

சும்மா சுகமாக இரு - 1/35

180. எல்லாம் இயக்க நிலையில், **அவனுக்கு** (ஸ்ரீபகவானுக்கு) அன்னியமில்லை என்றும்; இயக்கம் அற்ற நிலையில், **அந்த ஒன்றுக்கு** (பரசொரூபத்திற்கு) அன்னியமில்லை என்றும்; உணர்வதே ஞானம் ஆகும்!.

சும்மா சுகமாக இரு - 1/35

181. **பக்தீ** என்றால், நாம, ரூபம் உள்ள, ஓர் ஸ்ரீபகவானிடம், **எல்லாம் நீயே** என்றும்; **எல்லாம் உன்னுடையதே** என்றும்; விட்டுவிடு!

சும்மா சுகமாக இரு - 1/35

182. **ஞானம்** என்றால், எல்லாம் ஒன்றே என்றும்; அது ஆனந்தமே என்றும்; **அது நாமே! நாமே அது!** என்றும்; பரிபூரண நிறைவோடு, இருப்பதே ஆத்ம ஞானம் ஆகும்!

சும்மா சுகமாக இரு - 1/35

183. எல்லாம் நலமே! எல்லாம் நலமே! என நாம் அடங்கி, பிறரை அடக்காமல், இருப்பது **மனோ ஜயமாகும்!**

சும்மா சுகமாக இரு - 1/66

184. இருப்பதில்! கிடைப்பதில்! நடப்பதில்! இது ஸ்ரீபகவான் கருணையே என, பூரண திருப்தி, அடைவது **மனோ ஜயமாகும்!**

சும்மா சுகமாக இரு - 1/66

185. உறவு, சுற்றம், நட்பு, ஆண், பெண் என்ற நிலையில், விருப்பு வெறுப்பு கொள்ளாமல்! எல்லாம் நம்மவர்களே! (ஸ்ரீபகவானின் குழந்தைகளே) என உணர்வது **மனோ ஜயமாகும்!**

சும்மா சுகமாக இரு - 1/66

186. எதைக் கண்டாலும்! எதைக் கேட்டாலும்! அங்கு **எக்குற்ற உணர்வும்** இல்லாமல்; மாயாவின் கார்யம், ஒழுங்காக நடைபெறுகிறதென ஆனந்தமாக ஏற்றல், **மனோ ஜயமாகும்!**

சும்மா சுகமாக இரு - 1/66

187. மண், பொன், பெண், மயக்கத்திலே இருந்து; கண் கெட்ட மாடு போல், கலங்கினோம் பூரணமே! என்ற ஸத்திய வாக்குப்படி, அம்மூன்றிலும் மயக்க கலக்க பயம்,

இல்லாமல், எல்லாம் **மண்ணே!** என மயக்கம், அற்று இருப்பது **மனோ ஜயமாகும்!**

சும்மா சுகமாக இரு - 1/66

188. திட்டமிட்ட காரியங்கள், திட்டமிட்டபடி, ஒழுங்காக நடைபெறுகிறதென, உணர்ந்து, நடப்பதையும், வருவதையும், நலமாக ஏற்பது **மனோ ஜயமாகும்!**

சும்மா சுகமாக இரு - 1/66

189. பேரிடி விழுந்து, உடலே சிதைந்தாலும், உலகமே நிர் மூலமானாலும், கலங்காத மனதுடனே, எல்லாம் நலமே என சுகமாக ஏற்பதுவே, **மனோ ஜயமாகும்!**

சும்மா சுகமாக இரு - 1/66

190. முற்கவன சக்தியுடன், பிறரை கவனிக்காமலும்; தன்னை பாதுகாக்க வேணுமென்ற, தற்காப்பு சக்தி இல்லாமலும்; எல்லாம் அவன் பொருளே! எல்லாம் அவன் செயலே! அவனன்றி அணுவும் அசையாதென்றும்! நாம் அவனே என்று தற்கவன சக்தியுடன், இருப்பது **மனோ ஜயமாகும்!**

சும்மா சுகமாக இரு - 1/66

191. நடந்ததை எண்ணாமலும்; நடக்கப் போவதை கற்பனை பண்ணாமலும்; நடப்பதை இது ஸ்ரீபகவான் கருணையே! இது நன்மையே என, அடங்கி இருப்பது **மனோ ஜயமாகும்!**

சும்மா சுகமாக இரு - 1/67

192. ஆத்திரம், அவசரம், வேகம், படபடப்பு, கோபாவேசம், மோஹாவேசம், விரோத குரோத தாபம், எந்த வினாடியும்,

கலக்க பயம், ஆகிய இந்த எட்டும் இல்லாமல், அமைதியின் ஆனந்தமாக ஏற்று இருப்பது **மனோ ஜயமாகும்!**

சும்மா சுகமாக இரு - 1/67

193. "**கருங்கல்**" என்றால்:- ஆசையென்ற, கடும் காற்றுக்கும்; வேகம் என்ற ஜலப் பிரவாகத்திற்கும்; அசையாத்தன்மையாயும்! அது நாம்! நாமே அது! என்ற உறுதியினால் கர்ம வினை தூலம், பொடிப்பொடியாய் ஜீவ அணுவாகி! ஆத்மாவாகி! பரமாத்மாவாகி! பரப்பிரம்மமாகி! அந்த ஒன்றிலேயே கலந்து மயமாகிவிடும்!

சும்மா சுகமாக இரு - 1/77

194. "**பட்டமரம்**" என்றால்,:- சொந்த, பந்த, பாச, உறவு, நட்பு என்ற பற்று வரவினால், "**தளிர்**" விடாது! காலக்கதியினால் தகிக்கப்பட்டாலும் தூலம் பொடிப்பொடியாகி! ஜீவ அணுவாகி! ஆத்மாவாகி! பரமாத்மாவாகி! பரப்பிரம்மமாகி! அந்த ஒன்றிலேயே கலந்து மயமாகிவிடும்!

சும்மா சுகமாக இரு - 1/77

195. ஆத்ம ஞான சாதனை செய்து, ஸ்ரீஸத்குரு கிருபையால், பக்குவப்பட்டுக் கொண்டிருக்கும், ஒருவனுக்கு அவன் வினையின்படி, அதாவது பிராரப்தத்தின்படி, பஞ்ச மஹா பாபங்கள் ஏதேனும் விதிக்கப்பட்டிருந்தால் செய்ய வேண்டிய கர்மா இருந்தால் அவை நடைபெறாமல்

இருக்கும் நிமித்தம், ஞானிகளுக்கென, ஸ்ரீபகவானால், நிர்மாணிக்கப்பட்டவர்களான **"அஷ்டதிக்கு"** பாலகர்களும் அவைகளை **"தடுத்து"** நிறுத்தவும் முடியும்! **"அழிக்கவும்"** முடியும்!

சும்மா சுகமாக இரு - 1/79

196. **பக்குவம் எனச் சொல்வது:-**

1. மற்ற அனைத்தையும் தள்ளி ஜீவன் முக்தியின் ஏக்கம்!
2. குற்றம் குறைகளை நாசம் செய்து எல்லாம் ஸ்ரீபகவான் செயலே, என்ற பூரண நிறைவு!
3. காலம் விரயமாகிறதே என்ற உள்ள உருக்கம்!
4. ஸ்ரீபகவானுக்காகவும்; அந்த காலாதீத ஒன்றுக்காகவும்; கண்ணீர் பெருக்கம்!
5. கர்மா தொலையும் நிமித்தம், எப்பலனும் கருதாத, சேவை!
6. **"நாவு"** அடக்கம்! அதாவது இதமாகவும், மிதமாகவும், இறை குரு உணர்வோடும் பேசுதல்! இந்த ஆறும் இருந்தால், ஓர் ஞானியின் விழிபட! அனைத்தும் சாம்பலாகும்! ஜீவன் முக்தி லபிதமாகும்!

சும்மா சுகமாக இரு - 1/82

197. இக்கலியில், வேத வேதாந்த சாஸ்திரங்களை, **"படித்தாலும்"** பிரயோஜனம் இல்லை! **"படிக்காமலும்"** இருக்கவும் முடியவில்லை!

1. படித்தால், நிறைய விளக்கம் கொடுக்க வேண்டியுள்ளது!

௨. படித்தால், பேசிப் பேசியே, காலம் விரயமாகிறது!

௩. படித்தால், பேச்சாளி ஆகலாம்! அனுபவம் பெற முடியாது!

௪. படித்தால், வார்த்தை அடர்ந்த காடு! உள்ளே போனால் திரும்ப முடியாது!

௫. படித்தால், பேர், புகழ், பட்டம், பதவி, பெறலாம்! உன்னை இழந்து விடுவாய்!

சும்மா சுகமாக இரு - ௨/13

## 198. பலரிடம் பாடம் கேட்டால்:-

1. பலரிடம் பாடம் கேட்டால், "**குழப்பமே**" மிஞ்சும்!

௨. பலரிடம் பாடம் கேட்டால், தர்க்க குதர்க்க வாதம் பண்ணலாம்! குற்றம் குறை தோற்றும்!

௩. பலரிடம் பாடம் கேட்டால், பல கிணறு தோண்டுவதால், ஜலம் காண முடியாது! வறட்சியே பலன்!

௪. பலரிடம் பாடம் கேட்டால், ஜீவன் முக்திக்கு, விளக்கம் கொடுக்கலாம்! ஜீவன் முக்தி பெற முடியாது!

௫. பலரிடம் பாடம் கேட்டால், குரு ஆகலாம்! குரு ஆக்கலாம்! ஜீவன் முக்தியென, சொல்லலாம் பெற முடியாது!

சும்மா சுகமாக இரு - ௨/13

## 199. பற்பல அர்த்தம் காண்பதால்:-

1. பற்பல அர்த்தம் காண்பதால், "**சந்தேகம்**" தொலையாது!

௨. பற்பல அர்த்தம் காண்பதால், வாதத்தில் (பிறரை) வெல்லலாம்! ஆனால் தன்னை (அஹந்தையை) வெல்ல முடியாது!

௩. பற்பல அர்த்தம் காண்பதால், **வினை** பெருகும்! **மனம்** விரியும்!

௪. பற்பல அர்த்தம் காண்பதால், பற்பல குருவை சந்திக்கலாம்! ஸ்ரீஸத்குருவை இழக்க வேண்டும்!

௫. பற்பல அர்த்தம் காண்பதால், பொறுமை! அமைதி! ஸாந்தி! ஆனந்தம்! பெற முடியாது! அஹங்காரம்! ஆதிக்கம்! அதிகாரம்! போட்டி, பொறாமையால் மனோ ஆவேசம் உண்டாகும்!

சும்மா சுகமாக இரு - 2/13

200. "**ஞானோபதேசம்**" செய்யவோ நீ வரவில்லை! "**ஞானமாகவே**" ஆக வந்தவனே நீ!! பேர், புகழ், பட்டம், பதவி ஆகியவைகள் கர்மாவை பெருக்கும்! ஜனன மரணத்தை கொடுக்கும்! அஹந்தையை வளர்க்கும்! ஆகவேதான், வாதகமான நூலை ஏற்காதே படிக்காதே! போதிக்காதே! என்றார்கள்!

சும்மா சுகமாக இரு - 2/15, 16

201. "**வாதகமான நூல்**":- தர்க்க குதர்க்க சாஸ்திரங்கள்! வாதனையும்; வேதனையும்; சோதனையையும்; பேர், புகழ், பட்டம், பதவி, தரும் நூல்களையும், ஏற்காதே என்றார்கள்! **அனுபவ ஞானிகளால், அனுபவ முறையோடு அவர்கள்**

**சாதனையால், பெறும், ஞானானுபவ நூலை மட்டும் உணர்க!**

சும்மா சுகமாக இரு - 2/16

202. **பதிதர்மம்:-** கலியுக தர்ம நூலிலும், மற்றும் அனேக மடல்களிலும், "**சதி; பதி!**" மனைவி & கணவன்! எப்படி குடும்பத்துடன் இணைந்து வாழ வேண்டும் என்பதாகும். இதில் குறிப்பாக, ஒருவரை ஒருவர், "**அடக்கி**" ஆளக்கூடாது என்பதே முக்கியம். ஒருவருள் ஒருவர் "**அடங்கி**" வாழ வேண்டுமென்பது, "**லக்ஷியமாகும்!**".

சும்மா சுகமாக இரு - 2/53

203. **பாகவத தர்மம்:-** இதில் "**மெய்**" அன்பர்களை மட்டும்; பஜனை, பூஜை, பாத சேவை, அன்ன பானாதி தந்து உபசரித்து, அவர்கள் "**ஆசி**" பெறுவதாகும்! குறிப்பு:- உறவு, சுற்றம், நட்பு என்ற சொந்த பந்த பாச விருந்தோம்பல் அல்ல!

சும்மா சுகமாக இரு - 2/53

204. **தான தர்மம்:-** பொன், பொருள், ஆடை, உணவு, நிலம், பசு, ஆக இந்த ஆறும், ஒருவருக்கு தானம் செய்யும் போது, "**எப்பலனும்**" கருதாமலும்; வியாபாரம், விளம்பரம், ஆடம்பரம் இல்லாமல்; ஸ்ரீபகவானே! ஸ்ரீபகவான் பொருளை! ஸ்ரீபகவானுக்கு! கொடுக்கிறான் என்ற சர்வார்ப்பண நிலையில் "**தர்மம்**" செய்வதாகும்! "**தானம்**" செய்வதல்ல! குறிப்பு:- **பலன் கருதாது,**

**செய்வது தர்மம் ஆகும்! பலன் கருதி செய்வது, தானம் ஆகும்!!**

சும்மா சுகமாக இரு - 2/54

205. **தேவ தெய்வ தர்மம்:-** ஆலயங்களுக்கும், தர்ம ஸ்தாபனங்களுக்கும், பொன் பொருள்; உணவு, நிலம், வஸ்திரம், இவைகளை தர்மம் செய்யும் போது அம் **"மூர்த்தி"**யையும் அவன் **"நாமா"**வையும்; மூலதனமாகக் கொண்டு எப்பலனும் கருதாமல், அம்மூர்த்தியே! அம்மூர்த்தியின் பொருளே! அம்மூர்த்திக்கே! கொடுக்கிறான் என்று நிஷ்காமியமாக செய்வதாகும்.

சும்மா சுகமாக இரு - 2/54

206. **நல்லற தர்மம்:- "பரநிலைக்கு"** எந்த தர்மமும் இல்லை! **"நாம,ரூப;குணம்;குறி"** அற்ற நிலையில்! **"கொடுப்பதும்!"** வாங்குவதும்! எல்லாம் நீயே! என்றும்; எல்லாம் உன்னால்! என்றும்; எல்லாம் உன்னுடையது! என்றும், நடைபெறும் போது; **"தெய்வீகமாக"** மாறி! பின், தெய்வீகத்தையும் கடந்த, **"பரநிலையில்"** முடிவு பெற்று, அழிந்துவிடும்! இதுவே நல்லற தர்மமாகும்! இந்நிலையில், அனுபவ முதிர்ச்சியினால், அதுவே நாமாகி சும்மாவே சுகமாக இருக்கலாமே!

சும்மா சுகமாக இரு - 2/54

207. 1. மனித இனமாக பிறந்தாலே முக்தி உண்டு என்றும், மற்றும் எந்த வடிவங்களுக்கும் முக்தி இல்லையென்றும் பிரமாணமாக ஸ்ரீமஹான்கள் சொல்லுவார்கள்!

2. இந்த மனித இனம் மட்டும் மனதின் "பிடியில்" சிக்கிய தன்மையால், **இந்த மனதின் பிடியில் இருந்து விடுபட்டாலன்றி, முக்தி இல்லவே இல்லை!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 25

208. 1. இந்த மனமானது, இந்த ஆத்மாவை ஓர் "திரை" போட்டு மூடிக் கொண்டதாலே, இந்த ஆத்மாவை ஜீவன் என சொல்ல முடிகிறது.

2. அந்த திரையென்பது, **"நான்"! "என்னால்"! "என்னுடையது"!** என்ற "தற்காப்பு" சக்தியுடன் கூடிய அஹங்கார அபிமானம் என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 25

209. 1. நாம, ரூப, ஜகத், ஜீவ, சொரூபங்கள் அனைத்துமே "மனதின் கற்பனா" விளையாட்டேயன்றி, மற்றனுவும் இல்லையென நிச்சயிப்பாயாக!

2. கற்பனை விளையாட்டினாலேயே குண தோஷ சம்பந்த எண்ணம் விருத்தியாவதனால், ஜனன, மரண துன்பத்திற்கு ஆளாக வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது.

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 31

210. ஜீவ களை, களைவதனால் "இறை குரு"! உணர்வும், அளவு கடந்த "பொறுமையும்"!, எந்நிலையிலும் "போதும் என்ற நிறைவும், இனி ஜன்மா இல்லவே இல்லையென்ற "வைராக்கியமும்!" இருந்தால்தான், ஜீவத்வமும் நசிக்கும்!

பிறவா நிலையாகிய "ஜீவன் முக்தியும்"! அவஸ்யம் பெற முடியும் என உறுதி கூறுகிறோம்! **(ஜீவத்வம் = நான் ஜீவன் என்ற எண்ணம்).**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 31

211. சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என சொல்லப்படும் "நாம ரூபம்" அனைத்தும்; அவைகளை செயல்படுத்தும் கர்த்தாக்களாகிய, பிரம்மா! விஷ்ணு! சிவன்! ஆகிய மூவரும், அந்த ஒன்றுக்கு அன்னியமில்லையென்றும், **அங்கு "நாமும்" அந்த ஒன்றுக்கு அன்னியமில்லை என்று உணர்வதே ஜீவன்முக்தி ஆகும்!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 43

212. அந்த காலாதீத ஒன்றுக்கு, அந்தமும் இல்லை! ஆதியும் இல்லை! சொந்தமும் இல்லை! பந்தமும் இல்லை! தோற்றமுமில்லை! இருப்பின் காலமும் இல்லை! பந்த பிணைப்பும் இல்லை! விடுதலையின் மோக்ஷமும் இல்லை! **"அது அது"வாகவே இருக்கிறது! "நாமும் அது"வாகவே இருக்கிறோம்! என்பதே ஸத்தியம்! அதுவே ஜீவன் முக்தி!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 43, 44

213. மனம், புத்தி, சித்தத்தினால் தோற்றும் "நாம ரூப"! துவைத தோற்றம் எந்த வினாடி மறைகிறதோ, அங்கு சலிப்பில்லாமல் நாம் அதுவாக இருப்போம்! **அதுவே ஜீவன் முக்தி!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 44

214. மனதின் "கற்பனை" எண்ணங்களே! ஜகத் ஜீவ ஈஸ்வராதிகளும், அதன் பய துக்கமும் ஆகும்!

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 44

215. மனதின், **"கற்பனை" எண்ணங்கள் அழிந்தால்,** அதுவே நிஷ்டை, ஞானம், மோக்ஷம் என மாறி "நாம்" ஆத்மா ஆகிவிடுவோம்! **அதுவே ஜீவன் முக்தி!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 45

216. காணும் நாம, ரூப கற்பனா சொரூபம் மறைந்து, **காணும் நாம ரூபம் அனைத்தும், "நாமே" என ஆகிவிட்டால், அதுவே ஜீவன் முக்தி!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 45

217. அனுப்பிரமாணமாவது, "**நமக்கு**" அன்னியமில்லாமல் "நாமாக" இருந்த போதும், நமக்கு அன்னியமாய் நாம, ரூபம் தோற்றி பய துக்கத்தை கொடுப்பதன் காரணம், "ஸ்ரீபகவத்"! கிருபையை பெறாமையேயாகும்!. அதாவது **மாயாவில் தோன்றிய மனதை அந்த மாயாவிடமே, (ஸ்ரீபகவானிடமே) சர்வார்ப்பணமாக விடாததே காரணம்** ஆகும்! மனதை மாயாவிடம் விட்டுவிட்டால் அங்கு மனம் மஹத்தான தன்மையினால், **அதுவே ஜீவன் முக்தி!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 45

218. ஸித்சொரூபமே, சித்தமாய் வடிவெடுப்பதால்தான், நாம, ரூப, ஜக ஜீவ சொரூபங்கள் தோற்றுகின்றன! **சித்தம்**

**இல்லை, எல்லாம் ஸித்தே என உறுதி செய்தால்,** நாம, ரூப, ஜகத், ஜீவ சொரூபம் மறையும். **அதுவே ஜீவன் முக்தி!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்"- 45

219. மித்தையென்னும் பொருளும் இல்லை! பொய் என்னும் ஜகத்தும், ஜீவனும் இல்லை! மூழு "மூடர்கள்" என்னும் ஜனங்களும் இல்லை! மேலே கூறியுள்ள "நாம ரூபங்கள்" **அனைத்தும் அந்த ஒன்றே என்றும், அதுவே நாம் என்றும் உணர்வதே ஜீவன் முக்தியாகும்.**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 46

220. நமக்கு அன்னியமாய் காணும் அனைத்தும் "பிரம்ம சொரூபமாகும்". ஆனால் இங்கு, சொல்லும் யாம்! அதைக் கேட்கும் நீ! நம் இருவருக்கும், இடையில் தோற்றும் "உலகம்!" ஆகிய இப்பிரிவினையெல்லாம், உன் மனதின் "பேதமாகிய" எண்ணமே அவ்வாறு தோற்றுகிறது! **எல்லாம் அதுவே! அதுவே நாம்! என ஓர்மையாவதே ஜீவன் முக்தியாகும்!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 47

221. "நாம ரூபம்" அனைத்தும் பிரம்மமே என எந்த "வினாடியும்" பாவனை செய்து, **மாயா மனதை வென்று, சும்மா சுகமாக இருப்பதுவே ஜீவன் முக்தியாகும்!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 47

222. வாய்ஞானம் இல்லாமல் "வாக்கை" குறைத்தால் "அனுபவ"! ஞானம் பெருகும்! குறைவு, நிறைவு இல்லாமல்,

“போதும்” என்ற திருப்தி கொண்டால், மனம் மஹறத்தாகும். **மனம் மஹறத்தாகும் நிலையே ஜீவன் முக்தி!**

“பரம்பொருள்” & “பத அர்த்தம்” - 57

223. ஊசி நாட்ட இடம் இல்லாமல், அந்த ஒன்றே நிறைந்திருக்கிறது என்ற “நிறைவைப்” பெற்று, **தூங்காமல் தூங்கும் நிலை பெறுவதுவே “ஹரிதுயில்”! ஆகும். அதுவே ஜீவன் முக்தியாகும்!**

“பரம்பொருள்” & “பத அர்த்தம்”- 58

224. எந்த வினாடியும் “திடமான” “மனதினால்” அனைத்து நாம, ரூப, ஜகம் எல்லாம் பிரம்மமே! அப்பிரம்மம் நாமே என்று **“அகண்ட” பர பாவனை செய்தால், மாயாமனம் மஹறத்தாகும். அதுவே ஜீவன் முக்தியாகும்.**

“பரம்பொருள்” & “பத அர்த்தம்”- 58

225. நாம, ரூப, ஜகத்தை இந்த மாயாமனமே “எண்ணம், சொல், செயல்” களால் காரசாரமாக விளையாடிக் கொண்டிருக்கிறதென மெய் அறிவால் உணர்ந்து, மனதில் ஆழ்ந்து போகாமல், எல்லாம் ஸித் சொரூபமாகிய ஆன்மாவே! **அதுவே நாம்! நாமே அது! என அசைவற்றிருப்பதுவே, ஜீவன் முக்தியாகும்!**

“பரம்பொருள்” & “பத அர்த்தம்” - 58

226. கனவில், இந்த மன எண்ணத்தினால் நம்மை, நாம, ரூபம் தேடி வருகிறது. நனவில், இந்த மன எண்ணத்தினால் நாமே நாம, ரூபங்களை “தேடிச்” செல்கிறோம் ஆக இவ்விரண்டும் மனதின் விளையாட்டே என்றுணர்ந்து நாம்

**அதுவே என சும்மா சுகமாக இருப்பதுவே ஜீவன் முக்தியாகும்.**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 49

227. மனம் "மஹத்தாகும்" பரியந்தம் மனோ வியாபாரமாகிய அகங்கார, அதிகார, ஆதிக்க, அபிமான, உடைமை, உரிமை ஆகியவைகளை விடுத்து **நாம் அடங்கி, இருந்து கொண்டு பிறரை அடக்காமல் இருந்தால், அதுவே ஜீவன் முக்தி.**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 49

228. சஞ்சலமனம் நாம் அல்ல! ஸ்வயம் ஜோதியான பரப்பிரம்மமே "நாம்" என திட உணர்வினால் உணர்ந்து, கலக்கம், களங்கம், பயதுக்கம் இவைகளை நீக்கி, **நாம ரூப ஜகத்தில் கண் இருந்தும் குருடாய்! காது இருந்தும் செவிடாய் வாய் இருந்தும் ஊமையாய்! சும்மாவே சுகமாக இருப்பதுவே ஜீவன் முக்தியாகும்!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 49

229. மனம் அசைந்தால், அதாவது கற்பனை விரிந்தால், ஜகத், ஜீவ, நாம, ரூபங்கள் விகாரம் அடையும்! மனம் அசையாமல் விகாரம் அடையாமல் இருந்தால் அதாவது, **கற்பனை பண்ணாமலிருந்தால் காலாதீத பரமாகவே தோற்றும். அதுவே ஜீவன் முக்தியாகும்!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 50

230. மனம் "கற்பனையை" ஒழித்தால் மனம் மஹத்தாகும்! அதுவே சுபத்திற்கும் சுபமாகும்! வெகு வெகு வெகு

சுலபமாகும்! **அதுவே ஜனன, மரணமில்லாத ஜீவன் முக்தியாகும்.**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 50

231. கனவிலும், நனவிலும் "நாம ரூபம்" அனைத்தும், நமக்கு அன்னியமாய் இல்லை! அந்த நாம, ரூபம் பொய்யாகும்! **அதுவே நாம்! நாமே அது! என அசைவற்றிருப்பதே ஜீவன் முக்தியாகும்!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 50

232. கஷ்டம், கவலை, பயம், துக்கம், சலனம், சஞ்சலம் இல்லவே இல்லை! இவை ஜக வாச, தோஷ பழக்க, வழக்கத்தால், வந்ததாகும்! எல்லாம் ஒன்றே! எல்லாம் நலமே! எல்லாம் அதுவாகிய அவனே! என எண்ணிய மனம் ஸாந்தியானால் "அது"வாகிய "அவன்" கருணையினால் நலமே முடிவுறும், **அதுவே ஜீவன் முக்தியாகும்!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 50

233. கலியின் பேர், புகழ், பட்டம், பதவி, பணம், இவற்றின் படிப்பு வேண்டாம்! இவைகள் கலியின் பிரவர்த்தியாகும். சர்வார்ப்பண நிலையில் எல்லாம் ஒன்றே! எல்லாம் நலமே! அது நாமே என்ற "கல்வி" வேண்டும்! கல்வியே மரண பயம், துக்கம் அனைத்தையும் போக்கும்! **அதுவே ஜீவன் முக்தியாகும்!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 51

234. கறையற்ற! மறைவற்ற! குறைவற்ற! பிரம்மம் ஒன்றே, ஸத்தியம்! காண்பதோ! கேட்பதோ! அது பற்றி பேசுவதோ!

நினைப்பதோ! ஒரு சுத்தப் பொய்யே. அது ஒரு காலமும் இல்லவே இல்லை! **அந்த பரமே நாம் என, அசைவற்றிருப்பதே ஜீவன் முக்தியாகும்!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 51

235. நாம, ரூப, ஜகமாகவோ, சரீரங்களாகவோ அவைகளின் இயக்கங்களாகவோ, இன்ப, துன்ப, புண்ணிய பாபங்களாகவோ "கற்பனை" செய்யாதே! இவை அனைத்தும் மனதின் விளையாட்டு. அவை நாமும் அல்ல. நம்முடையதும் அல்ல. **நாம் பிரம்ம சொரூபமே என அசைவற்றிருப்பதே ஜீவன் முக்தியாகும்!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 51

236. மனம் சலனமும், அதனால் சலிப்பும் அடைவதனாலேயே, நாம, ரூப, ஜகத், ஜீவ சொரூபங்கள் தோற்றுகிறது. இங்கு மனம் சலிக்காமல் இருக்க வேண்டுமானால், "அகம் பிரம்மம்"! "ஜகம் பிரம்மம்"! "அகமே எல்லாம்"! என்ற பிரம்மான்ம பாவனையை இடைவிடாமல் செய்தால், **சலிக்கும் மனமானது உன் பாவனையை அனுசரித்து, மெள்ள மெள்ள அசையாமல் நிற்கும், அதுவே ஜீவன் முக்தியாகும்!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 52

237. அகம் பிரம்ம பாவனையில் மனம் அசைவற்று நின்றுவிட்டால், "பேதம்"! "குற்றம் குறை"! "விருப்பு வெறுப்புகள்"! தாமே மறைந்துவிடும். **அதுவே ஜீவன் முக்தியாகும்!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 52

238. ஆத்மஞானம் பெறுவதற்கு கீழான பிறவிகளோ, பாபமான செய்கைகளோ "தடையாக" இருக்கக்கூடாது! இருக்கவும் முடியாது! கர்மா கர்மம்! தர்மா தர்மம்! இவைகள் ஜகத் ஜீவ ஈஸ்வராதிகளுக்கு உண்டு. ஜீவன் முக்திக்கு எந்த தடைகளும் இல்லவே இல்லை! **பிரம்மான்ம பாவனையில் மனம் நிலைத்து நின்று, சந்தேகம் கலக்க பயம் நீக்கினாலே, அது ஜீவன் முக்தியே!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 52

239. மாயை, அவித்தை, அஹங்காரம், மனம், புத்தி, சித்தம், கருவி கரணங்கள், அனைத்து ஜீவ கோடிகளும் இயக்கங்களும், "ஸித்தாகிய" (ஆத்மாவாகிய) "சித்தத்தின்"! கூறுபாடுகளாகும்! அதைபோலவே அது இயக்கம் இல்லாத தன்மையினால், இயங்குவதற்காகவே, "ஈஸ்வராதிகளாக" தன்னை தானே தோற்று வித்துக்கொண்டது. ஆகவே **அனைத்தும் ஒன்றே என்ற திட உணர்வோடு இருந்தால், அதுவே ஜீவன் முக்தி.**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்"- 53

240. **"நமக்கு" அன்னியம் எதுவும் இல்லை என்ற திட உணர்வு பெற்றவனே ஜீவன் முக்தன்.** ஆகவே திரிலோகத்தில் ஒரு ஞானியென ஸ்வய அனுபவ ஞானிகள் கூறுவர்!

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 53

241. ஞானிக்கு சமாதி நிஷ்டா சாதனம்! எதுவும் இல்லை! அவன் எந்த வினாடியும் அதுவாகவே இருப்பான்,

அவனிடம் ஆவரண மயக்கமும்! விக்ஷேப கலக்கமும் இராது!

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 53

௨௪௨. ஞானியின் நிலை பட்டமரம் போலும்; குத்துக்கல்லைப் போலும், "மனமற்ற" நிலையில் லௌகீக தெய்வீக நிலையில், எந்த "பிரவர்த்தியும்" இல்லாதிருப்பான்.

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 54

௨௪௩. எண்ணங்களில் "குற்றம்குறை" தவிர்த்தால், "பேத" பாவனை ஒழியும்! இதைத்தவிர, எளிய மார்க்கம் எதுவும் இல்லை. **அதுவே ஜீவன் முக்தியாகும்!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 55

௨௪௪. வார்த்தைகளை குறை! வீண் கற்பனையை குறை! எதைக் கண்டாலும்; எதைக் கேட்டாலும்; எந்த நிகழ்ச்சிகளிலும்; **இது "நலமே"! இது "நலமே"! என எண்ணு! நலமே காண்பாய். நலமே உணர்வாய். அதுவே ஜீவன் முக்தி!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 55

௨௪5 நாம, ரூப, சரீரங்கள் நாம் அல்ல என்றும், நாம ரூப, ஜகத் சொரூபங்களும் நம்முடையதும் அல்ல! நாமும் அல்ல! என்ற நிலையில் **ஏக பரபாவனையாகிய, "சர்வான்ம" பாவனையை இடைவிடாமல் செய்தால், மோஹம் ஒழியும்! அந்த மோஹம் அற்ற நிலையே ஜீவன் முக்தியாகும்!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 55

உ௪௬. பிரம்மான்ம பாவனையை இடைவிடாமல் செய்து வந்தால், விறகு தீர்ந்தவுடன், அக்கினி தானே அணைவது போல், கர்மா முடிந்தவுடன் வேறு கர்மாவும் இல்லை! வேறு ஜன்மாவும் இல்லை, **அதுவே ஜீவன் முக்தி!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 57

உ௪௭. பிரம்மான்ம பாவனையில் அனுபவம் முதிர்ச்சி ஆகும்போது தர்மா தர்மங்கள் தானே நிற்கும். **அங்கு பட்ட மரம் போலும்! குத்துக்கல்லைப் போலும்! அசைவற்றிருப்பதே ஜீவன் முக்தி ஆகும்!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 57

உ௪௮. ஆச்சாரம், அனுஷ்டானம், விதிமுறை, மடி, கட்டுப்பாடு என்னும் அங்க சுத்தியானது, எல்லாம் நலமே! எல்லாம் ஒன்றே! என்ற சித்த சுத்தியில் பூர்த்தியாகும்! **பின் எந்த தர்மா தர்மங்களும் கடைப்பிடிக்க முடியாமல் போகும். அதுவே ஜீவன் முக்தி.**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 57

உ௪௯. மனோமய "கற்பனை" இல்லாதிருந்தால், காணும் காட்சி இல்லை! கேட்கும் வார்த்தையில்லை! பேசும் வாக்கும் குறைந்து மறைந்துவிடும். **அங்கு நமக்கு அன்னியமாய் எதுவும் இல்லாத தன்மையால், அதுவே ஜீவன் முக்தியாகும்!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 57

250. **"பதம்பதமாக"** சொர்க்கம்! கைலாயம்! வைகுண்டம்! பிரம்மலோகம்! மணிக்ரீவம்! எனச் சொல்லப்படும் "பதமுக்திகள்"! இல்லவே இல்லை!

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 60

251. **"பதார்த்தமாக"** இக்கலியின் தோஷத்தால் உண்ணும் உணவையே, "பதார்த்தமாக"! பேசப்படுகிறது! உண்மையில் பதார்த்தம் இல்லவே இல்லை.

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 60

252. **"பத அர்த்தம்"** என உண்டு! அப்பத அர்த்தமாவது மூன்றாக ஸ்ரீமஹான்கள் சொல்லுவார்கள்! அவைகள் **தொம்பதம்! தற்பதம்! அஸிபதம்!** என மூன்றாகும்!

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 60

253. **த்வம்பதத்தை ஜீவாத்மா என்றும், தற்பதத்தை பரமாத்மா என்றும், அஸிபதத்தை பரம்பொருள் என்றும் பொருள் கொள்ள வேண்டும்!** இவை மூன்றையும் இணைத்தே **"தத், த்வம், அஸி"** என அதை மஹா வாக்கியங்களில் ஒன்றான உபதேச வாக்கியமாக கொண்டார்கள் நம் ஸ்ரீமஹான்கள்!

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 60

254. 1. அனைத்து சரீரங்களையும் அதன் இயக்கங்களையும் **"மனக் கண்கள்" கொண்டு நோக்கினால் அது "துவைத" விருத்தி ஆகும்!**
2. அனைத்து சரீரங்களையும் அதன் இயக்கங்களையும் "பேதம்" இல்லாமல் **"அறிவுக்கண்"! கொண்டு நோக்கினால் அது "சாட்சி" விருத்தியாகும்.**

௩. அனைத்து சரீரங்களையும் அதன் இயக்கங்களையும்! எந்த அசைவும் இல்லாமல் **அனைத்தும் "நாமே" என உணர்ந்தால் (இங்கு காண்பதல்ல) "அகண்ட" விருத்தி ஆகும்!**

௪. துவைத விருத்தியையும்! சாட்சி விருத்தியையும்! நீக்கி விட்டு, அகண்ட விருத்தியாகிய "அகண்ட பாவனையில்"! இருப்பதே ஜீவன் முக்தி!

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - ௬௪

௨௫௫. "முக்தி" வேண்டுமாயின் பதமுக்தி வேண்டாம்! பரமுக்திக்கு முயற்சி செய்! **"பக்தி" செய்வாயாயின் ஸ்ரீபகவத் காட்சியில் நின்றுவிடாதே! ஸ்ரீபகவானை உன்னுள் உணர்ந்து, அவனே நீ! நீயே அவன்! என ஆகுவாயாக.** "துவைத" நாம, ரூப, ஜகத்தை அடியோடு மறந்துவிட்டு; "அத்வைதத்தில்"! நிலைபெற்று **அதுவே நாம் என ஆவதே ஜீவன் முக்தி!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 66

௨௫௬. ஸ்ரீஸத்குரு வாயிலாக கேட்ட அனுபவ பாடத்தை, சக சாதகர்கள் வாயிலாக "ஸத்ஸங்கம்" செய்யலாம்! அந்த ஸத்ஸங்கமே நித்ஸங்கம்! நித்ஸங்கமே நிர்மோஹத்வம்! நிர்மோஹத்வமே! நிச்சலதத்வம்! நிச்சலதத்வமே ஜீவன்முக்தி! இதுவே பிரமாண உண்மையாகும்! **ஸத்ஸங்க மூலமாக அடங்கு! அடக்காதே! அதுவே ஜீவன் முக்தி!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 6௯

257. "ஸித்!" சொரூபமே, "சித்தமாக!" மாறி செயல்படுவதால் அச்சித்தமே "நாம, ரூப, ஜகத், ஜீவ" ஸ்வரூபங்களை கற்பனை பண்ணி, **சித்தமாகிய மாயா மனதால்** அஹங்கார, அதிகார அபிமானங்களால் விளையாடிக் கொண்டிருக்கிறது! அவை அனைத்தும் நாமும் அல்ல! நம்முடையதும் அல்ல! **நாம் அதுவே! அதுவே நாம்! என தைலதாரை போல் "சிந்தித்து" "சிந்தித்து" சுத்த சிவமாவதே சாதனை! அதுவே ஜீவன் முக்தியாகும்!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 70

258. பிரம்மான்ம பாவனையை சற்று "சப்தமாக" சொல்வதனால், வினை சம்பந்த எண்ணம்! சொல்! செயல்! ஆகிய மூன்றும் குறைந்து, குறைந்து, குறைந்து, மறைந்து அழிந்துவிடும். **அதுவே ஜீவன் முக்தியாகும்!**

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 71

259. அதுவே (பரமே) ஜகத், ஜீவ, ஈஸ்வர வடிவங்களாகவும், பஞ்சபூதங்களாகவும், அனைத்து நாம ரூபங்களாகவும் தோற்றுகிறதென உணரவும்!, சமுத்திரத்தில் உப்பு உண்டு! உப்பு என்ற நாம ரூபத்தில், சமுத்திரம் இல்லையென்பது போல், அந்த ஒன்றில் மேலே கூறிய அனைத்தும் உண்டு! ஆனால் அனைத்து நாம ரூபங்களிலும் அந்த ஒன்று இல்லையென்பதே ஸத்தியமாகும்! இப்படி உணர்ந்து உன்னை கரைத்துக் கொள்வதே ஜீவன்முக்தி!

"பரம்பொருள்" & "பத அர்த்தம்" - 71

260. **ஸ்ரீமத்பகவத் கீதையில் ஸ்ரீபகவான் வாசகமாவது:-** "**யாம்**" இந்த ஜீவர்களுக்கு, எந்த "**கர்மாவும்**" கொடுக்கவில்லை! இயற்கையே (பிரக்ருதியே) அதாவது மாயாவே, "***தம் காரியத்தை***" தாமே இயல்பாக திட்டமிட்டபடி, திட்டமிட்ட காரியங்களை ஒழுங்காக செய்து முடிக்கிறது. அவை தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவு ஆகும்!

கீதாச்சாரம் - 18

261. ஒரு முறை, "**மெய் உணர்வு**" ஆகிய, ஆத்ம உணர்வு, வந்து விட்டால் அதாவது அது பிரகாசித்து விட்டால், திரும்ப, எக்காலத்தும், எந்நிலையிலும், எவ்விடத்தும், எவ்விதத்தும், மாறாது! மறையாது! தேயாது! குறையாது! இது ஸத்தியம். ***ஆனால்???*** பொய்யான, உடல், உலக, உணர்ச்சிகள் இருக்கும் வரை, மெய்யுணர்வு, பிரகாசிக்காது என்பதும்; ஸத்தியமே! **கண்ணன்!**

கீதாச்சாரம் - 50

262. ஜக, ஜீவ பொருள்களின் "**நாம ரூபம் மண்ணே**" என உணராமல், அதற்கு இருப்பும், இயக்கமும், அதனால் இனிமையும் தோற்றும் வரை மெய் உணர்வு தோற்றாது என்பதே ஸத்தியம்!

கீதாச்சாரம் - 52

263. "**தெய்வம்**" என்றால் "**கருணை!**" என்றும்; "**கருணை**" என்றால் "**தெய்வம்**" என்றும்; அதே தெய்வம், கருணைப் பிரவாகம் என்றும்; கருணா சமுத்திரம் என்றும்;

குறிப்பிட்டிருந்தோம். **கண்டிப்பும்; தண்டிப்பும்;** பாரபக்ஷமும்; **இருந்தால்; அது தெய்வமல்ல. இது ஸத்தியம்!**

கீதாச்சாரம் - ௫௮

௨௬௪. மனோ அறிவினால் மனம் அடங்கி, அடங்கி, அழிந்து மயமானால், அதுவே அறிவு. ஸ்ரீபகவான் நேரில் பிரத்தியக்ஷமாவான்.

ஸ்வய அனுபவம் - ௧/௧௨

௨௬௫. ஓர் விளையாட்டின் நிமித்தம் மாயாமனதை வைத்துக்கொண்டு **"பந்த ஜீவன்"** என ஆகி நடித்தோம்! நடிப்பின் நிலையில்தான், நாம் ஜீவன்! உண்மையில் நாம், ஸ்ரீபகவானே! இதன் உட்கருத்து:- **பந்த ஜீவனாக,** வேஷம் போட்டு நடித்தாலும், அப்பந்த ஜீவன் வேஷத்தை **"களைந்தால்"** மட்டுமே, ஸ்ரீபகவான் ஆக முடியும்! இதுவே பிரமாண உண்மை!

ஸ்வய அனுபவம் - ௧/௧௩

௨௬௬. **பணிவிடை:-** நீ முதலில் பணியக்கற்றுக் கொள்! அதன் விடையானது, உன்னை தேடி வரும்!

ஸ்வய அனுபவம் - ௧/௫௩

௨௬௭. அமைதி! ஸாந்தி! அதன் ஆனந்தம் வேண்டுமா? வார்த்தையை குறை!

ஸ்வய அனுபவம் - ௧/௫௪

௨௬௮. குற்றம் என்பது, **செயலில்** தோற்றும்! குறை என்பது, **வாக்கில்** தோற்றும்! எல்லாம் நலமே என ஏற்றால்; இவ்விரண்டும், தாமே மறையும்!

ஸ்வய அனுபவம் - ௧/௫௫

269. **தனது மனமுயற்சி** என்பது, எந்த சாதனையும் அல்ல! வினையால் வரும் சோதனையையும், வேதனையையும், பொறுமையுடன், ஏற்றுக் கொண்டு **எல்லாம் நலமே** என, நாம் அடங்கி இருப்பது தனது மன முயற்சியாகும்!

ஸ்வய அனுபவம் - 1/45

270. **மண்ணாலான உடல், ஸ்ரீபகவானுக்கு** என்றும்; **ஸ்ரீஸத்குரு உபதேசம், மனதுக்கு** என்றும்; வைத்தால்தான் ஸ்ரீபகவானுக்கு வினை உடல் என்றும்; ஸ்ரீஸத்குருதேவருக்கு, மனம் என்றும்; பிரித்து கொடுத்த நிலையில், நாம் அதுவாக இருப்போம்! இருக்கிறோம்!

ஸ்வய அனுபவம் - 1/51

271. **கற்பனையே உலகம்** என்றும்; **கற்பனை விடுதலே மோக்ஷம்** என்றும் ஸ்ரீமஹான்களின், ஸத்திய வாசகம், இருப்பதால்; **"எல்லாம் நீயே!"** என்றால், லௌகீக எண்ணம் ஒழிந்து நாசம் ஆகும் என்றும்; **"எல்லாம் ஒன்றே"** என்றால், தெய்வீக எண்ணம், ஒழிந்து நாசம் ஆகும் என்றும்; பொருள் கொள்ள வேண்டும்! மேலே கூறிய அவ்விரண்டையும்; **"அது நாமே! நாமே அது!"** என, மௌன ஸ்திதியில், சும்மாவே, சுகமாக இருக்கும் நிலையாகும்!

ஸ்வய அனுபவம் - 1/71

272. **"தூல"** விருத்தி என்ற, தூலபாவனை, (ஜீவத்தன்மை) மட்டும், கூடவே கூடாது என்றும்; ஆனால் **"சாட்சி"** விருத்தி என்ற, ஸ்ரீபகவன் பாவனையில் **"வந்து வந்து"**

போகலாம் என்றும்; சாதனையாளன், நிரந்தரமாய், இங்கு இருக்கக் கூடாது என்றும், அனுபவ ஸ்ரீமஹான்கள், சொல்லக் கேள்விப்படுகிறோம்.

ஸ்வய அனுபவம் - 2/80

273. ஓர் ஆத்ம ஞானியின் அனுபவமானது, **"நிர்க்குணமாக"** இருக்கலாமே தவிர **"ஏககுணமாகிய"** ஸத்வகுணமும் சகுண உபாசனையும், இருக்கலாகாது, என்றும் கூறுவர்! ஸ்ரீபகவானின் ஸத்வ குணமும்; **"கிரியா"** நிமித்தமாகவே! அதாவது பிரவர்த்தியின் நிமித்தமாக இருப்பதால், அதுவும் கூடாது! ஓர் ஆத்ம சாதகன், **"வரி"** வடிவிலும்! **"வாக்கு"** வடிவிலும்! ஆத்ம ஞான, அனுபவ பாட நிமித்தம் **ஸ்ரீபகவான் நிலையில் வந்து விளக்கம் தந்து விட்டு, உடனே அகண்டபாவனைக்கு சென்று விட வேண்டும்.**

ஸ்வய அனுபவம் - 2/81

274. **ஆத்ம சாக்ஷாத்காரம் பெற்றவனுக்கு:-** குற்றம் குறை! விருப்பு வெறுப்பு! பேதாபேதம்! இம்மூன்றும், அவஸ்யம் தோற்றாது! அப்படி தோற்றாத நிலையில், சிரவண, மனனம், என்னும் **"நித்திய பாராயணம்"** தேவை இல்லை என்கிறார் ஸ்ரீகுருதேவர்.

ஸ்வய அனுபவம் - 2/96

275. **"அகண்டமான"** பரப்பிரம்மமானது, அறிவும்! பேரறிவும்! உடைய, பக்குவ ஆன்மாவுக்கு, **"பரசொரூபமாக"** தோற்றும்! பக்குவம் இல்லாத, அவிவேகிக்கு, "நாம, ரூப, ஜக, ஜீவ!" சொரூபமாகவே தோற்றும்!.

ஸ்வய அனுபவம் - 2/108

276. **பட்டுப்பூச்சி:-** தன்னுடைய பசை (பாச) வினையால், நான்! என்னால்!! என்னுடையதை!!! விடாத்தன்மையினால் தன்னைத் தானே, பிணைத்துக் கொண்டு; தனக்குத்தானே, ஜனன மரணத்தை உண்டு பண்ணிக் கொள்வது, பட்டுப்பூச்சியாகும்!

ஸ்வய அனுபவம் - 2/117

277. **சிலந்திப்பூச்சி:-** இப்பூச்சியானது தன்னுள் தோன்றும் பசை நூலால் கூடுகட்டி அச்சிலந்தி வலையில் அகப்படும் கொசுக்களை உண்டு பசியாறிக் கொண்டு; அப்பசை நூலை தாமே தமக்குள் ஈர்த்துக் கொண்டும் எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்!! எல்லாம் உனதே!!! என்ற சர்வார்ப்பணமே அப்பசை நூலை இல்லாமல் பண்ணும் நிலையாகும்! இது சிலந்தி பூச்சியாகும்!

ஸ்வய அனுபவம் - 2/118

278. **"மாயா"** என்றால், இல்லாததை, இருப்புடையது போல், காட்டுவது மாயாவாகும்!

ஸ்வய அனுபவம் - 2/133

279. **"அவித்தை"** என்றால், அப்படி தோற்றும், மாயாவில் **"மதி"** மயங்குவது, அவித்தையாகும்!

ஸ்வய அனுபவம் - 2/133

280. **"வித்தை"** என்றால், உண்மை இன்மையை, பிரித்தறிந்து, இன்மையை இல்லையென தள்ளிவிட்டு; உண்மையை, ஏற்றுக் கொள்ளும் **"அறிவு"** ஆகும்!

ஸ்வய அனுபவம் - 2/133

281. **“ஜடம்”** என்றால், அறிவற்ற! உணர்ச்சியற்ற! கல், மண், மலை போல் அசைவற்ற ஒன்றாகும்!

ஸ்வய அனுபவம் - 2/133

282. **“வினையோ?” “விதியோ?”** மனம் மயங்கிய நிலையில் தோற்றினால் அது ஜகத்தாகும். மனோ மயக்கம், இல்லாத நிலையில், விதியும் இல்லை! வினையும் இல்லை! அங்கு மனம், மஹத்தாகவே இருக்கும்! ஜகத்தும்! மஹத்தும்! மனோ பாவனையை பொருத்திருக்கிறது.

ஸ்வய அனுபவம் - 2/151

283. முடிந்த முடிவாக, நம் சாதனை எப்படி இருக்க வேண்டுமென்றால் **“அசையும்”** நிலையில் **ஸ்ரீபகவானாகவும்! “அசையா”** நிலையில் எல்லாம் **“ஒன்றே”** என்ற **“பர”** நிலையாகவும், அதுவே நாமாகவும், உணர்ந்தால் போதும்!

ஸ்வய அனுபவம் - 2/160

284. **தோஷ குணம்** பிறவியின் வித்தாகும், **ஏக குணம்** பதமுக்தியின் வித்தாகும்! **நிர்க்குணம்** பிறவா நிலையின் அஸ்திவாரம் ஆகும்! அதுவே நாம்! நாமே அது! என்ற உணர்வே ஜீவன் முக்தி ஆகும்!.

ஸ்வய அனுபவம் - 3/165

285. **ஸ்வய அனுபவ ஞானம்!:-** காலாதீத அந்த **ஒன்றை** காலம் கடந்த, அதீதமானதாகவும்; அது கற்பனைக்கு எட்டாததாகவும்; எந்த நூலும், அது ஆகாது! அது ஆக்க முடியாதென்றும்; அது அதி **“நுட்பமான அறிவு”**

சொரூபமென்றும்; அதை **ஒரே நோக்கத்தால்தான்,** உணர முடியுமேயன்றி, பல நோக்கோ இரு நோக்கோ இருந்தால் உணர முடியாதென்றும்; அறிவான, நுட்பத்தோடு கூடிய, நாம் அதுவே! அதுவே நாம்! என உணர்வதுவே, **ஸ்வய அனுபவ ஞானம்** ஆகும்!

ஸ்வய அனுபவம் - 3/176

௨௮6. **நிர் அதிசயம்** என்றால்? தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவு, இவைகளில் எக்கேள்வியும், பதிலும் இல்லாமல், அதிசய, ஆச்சர்யம், வியப்பு இல்லாமல் எல்லாம் ஒன்றே! என்ற பரிபூரண ஆனந்தம் ஆகும்!

ஸ்வய அனுபவம் - 3/207

௨௮7. **கேள்வி?:-** *தூல அவஸ்தைக்கு, மாற்று உபாயம் உண்டா?*

**பதில்:-** சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! தான், அதற்கு மாற்று உபாயம், இவ்விரண்டும்; புறமுக உணர்ச்சியை, காட்டினாலும்; அகமுக உணர்வைக் கொடுக்கும்! புற உணர்ச்சியை கெடுக்கும்!

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - 1/12

௨௮௮. **கேள்வி?:-** மரண அவஸ்தையிலும், இறை, குரு உணர்வுடன் இருக்க முடியுமா?

**பதில்:-** அவஸ்யம் இருக்க முடியும். இது ஜீவன் முக்தி என்ற, ஆன்மஞான சாதகர்களுக்கு, மட்டும் முடியும். அது **"மறைபொருளாய்!"** இருக்கும். எவரும் அறியவும் உணரவும் முடியாது!

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - 1/12

289. **கேள்வி?:-** இப்போதுள்ள, இறை, குரு நாம ஸ்மரணை, அப்போது கை கொடுக்குமா?

**பதில்:-** அவஸ்யம் கை கொடுக்கும். இங்கு உன் இறை குரு நாம ஸ்மரணையானது, எந்த எதிர்ப்பார்ப்பும் இல்லாமல் அதாவது வியாபாரம்! விளம்பரம்! ஆடம்பரம்! இல்லாமல்; எளிமையாகவும்! பிறரைக் கண்டு கொள்ளாமலும், முழு நம்பிக்கையுடனும்! திட வைராக்கியத்துடனும் இருந்தால்; அவஸ்யம் கை கொடுக்கும்!

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - 1/12

290. பர பாவனையால், தோஷ குண மனம், நசிக்கும்! தோஷ குண, மனம் நசித்தால், **பரம் பிரகாசிக்கும்!**

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - 1/55

291. தோஷ குண மனமானது, நாம, ரூபத்தில் விரிவடையும்! **நாம, ரூபம் மண் ஆனால்,** தோஷ குண மனம் நசிக்கும்!

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - 1/55

292. நாம ரூபத்தை, நான் எனதால், விரிவடைய செய்வது மனமாகும். **நான் எனதை, விட்டாலும்,** நாம ரூபம் நாசமாகி, மண்ணாகிவிடும்!

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - 1/55

293. நான் எனதால், ஜனன மரணம் உண்டாகிறது! நான் எனதை விட்டால், ஜீவன் முக்தியின் வழி பிறக்கும்!

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - 1/55

௨௯௪. **"ஹரயன்! ஹரி! ஹரன்!"** ஆகிய இம் மூவரும், நாம, ரூப, தொழில் கர்த்தாவாக, இல்லவே இல்லையென்றும். அம்மூவரும், **"பர"** சொரூப அம்ஸ, **"ஶ்ரீஸத்குரு"** வாகவே இருக்கிறார்கள் என்பதே ஸத்தியம்!

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - ।/௫௬

௨௯௫. மனம் நின்சகஜ சொரூபமானால், அதுவே மனம் மாண்ட (மஹத்தான) நிலையாகும்! மனம் மாண்ட நிலையே, ஜீவன் முக்தியாகும்! இதை மனது ஒருமையுடன் செய்வாயாக!

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - ।/௬௨

௨௯௬. குற்ற உணர்வு, பேதம், அழிந்தால் நாம் நாமாக, இருப்போம். அங்கு நமக்கு அன்னியமில்லை!

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - ।/௬௯

௨௯௭. லௌகீகத்திற்கு, **புண்ணிய பாபம்** உண்டு. தெய்வீகத்திற்கு, **ஸத்திய தர்மம்** உண்டு. பரமார்த்தீகத்திற்கு, **எந்த தர்மா தர்மங்களும்** இல்லவே இல்லை.

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - ।/௭௨

௨௯௮. சொல்லும் & பொருளும் என்றால், நாம, ரூபம் என குறிக்கும் என அறிக.

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - ।/௭௯

௨௯௯. சமுத்திரத்தில் எப்படி உப்பு தோன்றுவதில்லையோ; எப்படி சுவை மட்டும் தோற்றுமோ; அப்படி ஜீவன் முக்தி நிலையும் ஆகும்!

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - ௨/௮।

300. **அதிகம் பேசாதே:-** அதிகம் பேசுவதால் வாக்கு விரயம்! உன் சக்தி விரயம்! நீயும் கடைத்தேறுவதில்லை, அவனும் கடைத்தேறப் போவதில்லை!

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - 2/93

301. **அதிகம் படிக்காதே! அதிகம் கேட்காதே:-** மனம் ஓர் நிலைப்படாது. **"சந்தேகம்"** தீராது! சஞ்சலம் ஓயாது! அனுபவம் பெற முடியாது! ஆனால் ஓர் பண்டிதனாகவோ! வித்வானாகவோ! ஆகலாம்! ஜீவன் முக்தி பெற முடியாது! ஆனால் பேர், புகழ், பட்டம், பதவி பெறலாம்! அங்கு உன்னை இழந்து விடுவாய்.

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - 2/93

302. அறிவு அற்றோர்க்கு நாம, ரூப உலகம் தோன்றும்! அறிவு உற்றோர்க்கு பரமாகத் தோற்றும்!! அறிவற்ற நிலை, **"மனோ"** வடிவம்! அறிவுற்ற நிலை, **"அறிவு"** வடிவம்! இவ்விரண்டும், அற்ற நிலை, **"பேரறிவு"** ஆகும்!

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - 2/96

303. திரிகர்த்தாக்களும் எந்த வினாடியும் தியான பரர்களே! முப்பெரும் சக்திகளே சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் செய்கின்றது. ஆனால் அதன் பொறுப்பை திரிகர்த்தாக்களும் ஏற்கின்றனர்.

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - 2/103

304. **"பேரறிவு"** அனைத்திலும், சர்வவியாபியாய், செய்யாததாய், ஆனால் செய்விப்பதாய்; சர்வ சாட்சியும்;

தான் தானாய் சர்வவியாபியாய் இருக்கிறது! இதுவே ஞானியின் நிலையாகும்.

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - 2/105

305. மனோ மயக்கத்தினால் ஜன்மா வீணாகிறது! மனோ மயக்கத்தினால் வினைகள் பெருகுகிறது!! மனோ மயக்கமே காலன் ஆகும்!!!

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - 2/106

306. மந்திரம், தீக்ஷை, இவை சாமான்ய குருவுடையதே. **"அதுவே நீ! நீயே அது"** இது ஸ்ரீஸத்குருவுடையதே.

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - 2/107

307. **முக்தி என்பதே, மன முடிச்சு அவிழ்வதேயாகும்!** மன முடிச்சு அவிழாமல், முக்தி இல்லவே இல்லை! **தூலம் முக்தி அடைவதில்லை! மனமே முக்தி அடைகிறது!** தூலம் மண்ணே! மனமுடிச்சினால், திரும்ப திரும்ப, தூலம் எழத்தான் செய்யும். எழுந்தே ஆக வேண்டும். இம்மன முடிச்சு, தோஷ குணங்களாலே, விழுகிறது. (ஏற்படுகிறது) தோஷ குணம் என்பதே, அஹங்காரம் மமஹாரம் ஆகும்!

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - 2/126

308. **"நீயே"! ஸ்ரீபகவான் ஆகும் நிலை!:**

மண்! பொன்! பெண்! மயக்கத்திலே இருந்து; கண்கெட்ட மாடது போல் (மாடு போல்), கலங்கினேன் பூரணமே! என்ற, அனுபவ ஸ்ரீமஹான்களின், வாக்குப்படி, இம்மூன்றும், நாம, ரூப தோற்றம் ஆகும்! இம்மூன்றும் இவ்வுலகமும்

உனக்கு நாம, ரூபமாக **தோற்றும்** பரியந்தம் ஸ்ரீபகவானும் ஸத்தியமாய் உண்டு. மேலே கூறிய, அம்மூன்றும் பொம்மையாகவும் **"மண்ணாகவும்"** தோற்றிவிட்டால், ஸ்ரீபகவான் அங்கு இல்லையென்பதே; ஸத்தியம்! அங்கு **"நீயே"** ஸ்ரீபகவான் ஆகிவிட்டாய்; என்பதும் ஸத்தியமே!

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - 2/127, 128

309. **விஸ்வம்** ஆகும் நிலையும்; **விராட்** ஆகும் நிலையும்; விளக்கவொண்ணா; சொல்லவொண்ணா; எழுதவொண்ணா ஓர் பரவசநிலை ஆகும்.

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - 2/136

310. அகண்டான்ம பாவனை செய்து ஸ்வய அனுபவம் பெறும் போது, சமுத்திரத்தில் உப்பு தனியாக எப்படி தோற்றாதோ! சுவையாக எப்படி தோற்றுமோ! அப்படி நாமும் மற்றெந்த நாம ரூபமும் தோற்றாது. இருப்பது **ஏக ரஸ ஆனந்த நிலையாகும்!**

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - 2/138

311. **மாறும்** என்றால்:- தோஷ குணங்கள் வலிமைகுன்றி மாறி ஸத்வ குணம் ஆகும்!

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - 2/139

312. **மறையும்** என்றால்:- அந்த ஏக குணமும் நம்முள்ளேயே மறைந்துவிடும். சுவைத்துச்; சுவைத்து! **"அதுவே"** நீங்கள்! **"நீங்களே"** அது என! ஆகிவிட்டீர்கள்.

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - 2/139

௩௧௩. விரோதம்! குரோதம்! இவைகளால் பிறர் மீது வஞ்சம் தீர்க்கும்; கொடும் செய்கை! ஆகும்.

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - ௨/௧௫௦

௩௧௪. எதிர்! எரிந்த! வார்த்தை வராமல் இறை குரு உணர்வுடன் வார்த்தை வரும்போது நாம் ஓர் ஸ்பீக்கராக (ஒலி பெருக்கியாக) இருக்கும் நிலை ஸ்பஸ்டமாகவே உணர முடியும். அங்கு ஸ்ரீபகவான் கருணையை பிரத்தியக்ஷமாக உணர முடியும்.

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - ௨/௧௫௧

௩௧௫. **நான் இறந்து நாம் ஆகும் நிலை:-**
விட்டுக் கொடுப்பது என்பது குற்றத்தை நாம் ஏற்றுக் கொள்ளும் நிலையாகும். இதனால்:- அஹங்கார, அதிகார, ஆதிக்க, அபிமானம், சூடு, சுரணை, லஜ்ஜை, வெட்கம் ஆகிய இந்த எட்டும் நாசமாகும். அங்கு நாம் பொறுமையின் சிகரத்தில் ஆனந்தம் அடைவோம். இது நான் இறந்து நாம் ஆகும் நிலை.

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - ௨/௧௫௨

௩௧௬. **காண்பவனாக இரு. காட்சிப்பொருள் ஆகாதே!**
**காண்பவன்:-** ஆத்ம ஜோதி.
**காணும் பொருள்:-** நாம, ரூப, ஜக, ஜீவ தோற்றங்கள்.

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - ௨/௧௫௫

௩௧௭. உங்கள் உறவு, சுற்றம், நட்பு இவைகளை நல்ல நடிகை! நல்ல நடிகர்! நம் அனுபவ பாடம் நிமித்தம் வந்தவர்கள்

என அவர்களை மானசீகமாக வணங்கலாம்! இது இவ்வேழையின் அனுபவம்.

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - 2/145

318. உணர்ச்சிகள் அழிந்தால் உணர்வு மேலோங்கும்! உணர்வு அழிவதில்லை. ஆகவே உணர்வுகள் மறையும் போது உணர்ச்சிகள் மேலோங்கும்.

**உணர்ச்சிகள்:-** ஆத்திரம், படபடப்பு, துடி துடிப்பு! வெறி!
**உணர்வுகள்:-** அமைதியின் ஆனந்தம்!

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - 2/146

319. இன, ஜன, பேத, நாம, ரூப பதுமைகளின் தோற்றம். அதில் ஆண், பெண் பேதம் தோற்றாது. **காரணம்:-** அவர்கள் கர்மாவை முடித்துக் கொண்டிருக்கிறார்கள்! நீயோ கர்மாவை முடித்துவிட்டாய்! ஆகவே அங்கு அப்பொம்மைகளின் இருப்பும் இயக்கமும் பொருளற்றுப் போகும்.

"இருப்பது ஒன்றே!" "நடப்பது நலமே!" - 2/147

320. **நான்! என்னால்! எனதை விட்டால் மனோ ஜயம்:-** நம் அறியாமையான! அதாவது நம் அஞ்ஞானத்தாலான! அதாவது நம் கவனக் குறைவினாலான! அஹங்கார; மமஹாரத்தினால், மனோ விருத்தியும்! துவைத விருத்தியும்! உண்டானது. அஹங்கார, மமஹாரத்தை விட்ட, மறுக்ஷணம், துவைத விருத்தி மறையும்! நாம, ரூபம் மறையும்! **மனோ ஜயம்** உண்டாகும்!

மனோ ஜயம் - 1/7

321. **குற்றம் குறை! பேதம்! விருப்பு வெறுப்பு! விட்டால் மனோ ஜயம்:-** மூற்கவன சக்தியும்! தற்காப்பு சக்தியும்! விட்டால், மேலே கூறிய, மூன்றும் நாசமாகும்! அங்கு தற்கவனம், தாமே உண்டாகும்! இந்த தற்கவனத்தால் **மனோ ஜயம்** உண்டாகும்!

மனோ ஜயம் - 1/7

322. **ஆனந்த நடனம்** செய்கிறது:-

1. **மனோ நிலையின்** இன்பம் என்றும்; துன்பம் என்றும்; இவ்விரண்டும், ஒன்றே என்றும் உணர வேண்டும்.
2. **அறிவு நிலையில்**, ஆனந்தம் என்றும்; அது பேரானந்தம் என்றும்;
3. **பேரறிவு நிலையில்**, பிரம்மானந்தம் என்றும்; உணர வேண்டும்!

மனோ ஜயம் - 1/8

323. நிஷ்காம்ய கர்மாவினால்; நிஷ்காம்ய பக்தீ! நிஷ்காம்ய பக்தீயினால், ஜீவன் அழிப்பு! ஜீவ அழிப்பினால், ஜீவன் முக்தி!

மனோ ஜயம் - 1/12

324. கர்மாவை நான், என்னால், எனது என செய்தால், கர்மாவின் தோஷமும், அதனால் ஜனன மரணமும்; உண்டாகும். கர்மாவை நீ, உன்னால், உனது என செய்தால் கர்மாவின், தோஷம் நிவர்த்தியும், பிறவி நோயும் நீங்கும்!

மனோ ஜயம் - 1/12

325. **பிணம் சுடும் தடி:-** பிணத்தை சுடுகாட்டு புலையன் சுடும் போது ஓர் தடியை பயன்படுத்துவான். பிணம் வெந்து முடியும்போது அத்தடியையும் பிணத்தின் மேலே போட்டுவிடுவான். அதுவும் சாம்பல் ஆகிவிடும். மனமும் அதேபோல் வினை தூலத்தோடு முடிவுறும்!

மனோ ஜயம் - 1/18

326. **அஹங்காரம் மேல் ஓங்கும்போது, அன்பு பணியத்தான் செய்யும்.** அன்பின் பார்வையால் காலக்கிரமத்தில் அஹங்காரம் அழிந்து நாசமாகும்! அன்பின் நிலை **பணிவு!** அஹங்காரத்தின் நிலை **எழுச்சி! பின் வீழ்ச்சி!!**

மனோ ஜயம் - 1/32

327. எதிர்பார்ப்பே வியாபாரம். அவ்வியாபாரமே ஏமாற்றம். அந்த ஏமாற்றமே, மனத்தடுமாற்றம். அத்தடுமாற்றமே, வினையின் பெருக்கம். வினையின் பெருக்கமே, ஜனன மரணம்.

மனோ ஜயம் - 1/36

328. ஸ்ரீகுருதேவர் தம்மை காட்டினாரா? அல்லது ஸத்சிஷ்யன் கண்டானா? காலம் கனிந்தது! மனோ பக்குவமானது!! அதனால் மனத்திரை அகன்றது!!! ஸ்ரீகுருதேவர் எப்போதும் பிரத்தியக்ஷ சொரூபமாகும்.

மனோ ஜயம் - 1/37

329. நிறை நிலை பெற்றவரின் சைதன்யமானது (ஆத்ம ஒளியானது) **நம்பும் பக்குவ ஆன்மாவை கடைத்தேற்றுமேயல்லாது;** அவர் போதனை

கடைத்தேற்றாது என்பது ஸத்தியம். போதனை காலத்திற்கு உட்பட்டது. சாதனை காலாதீதமானது.

மனோ ஜயம் - 1/39

330. ஒன்று தோற்றுவது **அதிஷ்டானம்!** அந்த ஒன்று மற்றொன்றாய் தோற்றுவது **ஆரோபம்** ஆகும்!

மனோ ஜயம் - 1/40

331. ஒன்றை ஒன்று **தாங்குவதில்லை.** ஒன்றுடன் ஒன்று **இணைகிறது.** ஆகவே மேல்! கீழ்! பக்கம்! நடு! என பேதமான திசைகளோ! காலங்களோ! இல்லவே இல்லை! அப்படி சுட்டிக் காட்டுவது மனோமய பேதமாகும்!

மனோ ஜயம் - 1/41

332. **எல்லாம் மண்** என்றால்:- அங்கு பாரம் ஏது? விகாரம் ஏது? ஒன்றுக்கொன்று, உபாதை ஏது? திசைகள், காலங்கள்; வியாபாரம், சோதனை, வேதனை, சாதனை ஏது? ஏது? ஏது? ஆனால் தோற்றுகிறதே என்றால்; அனைத்தும் மனோ பேதம் ஆகுமேயன்றி, வேறொன்றுமில்லை. இது ஸத்தியம்!

மனோ ஜயம் - 1/43

333. **ஆனந்த வடிவம்** என்றால்:- அது சுவையின் அம்ஸமாகும். அதை சுவைப்பவர் உணர்வார். சுவைக்க இயலாதவர் உணரார். அது வரிக்கும், வாக்குக்கும் எட்டாததாகும்.

மனோ ஜயம் - 1/47

334. **அன்பு** என்றால்:- சைதன்யத்தின் அனுபவ சுவை ஆகும்.

மனோ ஜயம் - 1/48

335. **ஆசை** என்றால்:- நாம, ரூப, ஜக, ஜீவ தோற்ற மயக்கம் ஆகும்!

மனோ ஜயம் - 1/48

336. ஒன்றுமில்லை என்றோ, உண்டு; ஆனால், இல்லை; என்றோ சொல்லும் வாசகத்திற்கு பொருள்:- நாம, ரூபம் இல்லை என்றும்; அந்த ஒன்றாகிய ஸ்வயம் ஜோதி உண்டென்றும் பொருள்படும்!

மனோ ஜயம் - 1/49

337. போக்கு வரவும், கொடுக்கல் வாங்கலும், இல்லையானால்; மறுக்ஷணம்! அவனே அனைத்துமாய்! அனைத்தும் அவனாய்! அவனே நாமாய்! நாமே அவனாய்! நமக்கு அன்னியம் எதுவும் இல்லாத பேரானந்தமும் அடுத்து பிரம்மானந்தமும் பெறலாமே!

மனோ ஜயம் - 1/52

338. பிரமாணமாகச் சொல்கிறோம். ஓர் சாதகன் தன் எண்ணம்! சொல்! செயல்! இம்மூன்றிலும்; நான்! என்னால்! எனதை! விட்டு விட்டு! மாறாக எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உனதே! என ஆக்கினால் போதும். சாதனை முற்று பெறும்!

மனோ ஜயம் - 1/56

339. **கருணை** என்றால்?

1. அனைத்தையும் உனக்காகவே கொடுத்தான், அவன் உன்னிடம் எதையுமே கேட்கவில்லை.

௨. எம்பொருளாக எண்ணி விளையாடு. அதை உன் பொருளாக எண்ணாதே என்கிறான்.

௩. உன் பொருளாக எண்ணுவதால் மனோ அவஸ்தையும்; தூல சிரமங்களும் உனக்கு ஏன் வேண்டும் என்று பரிவோடு கேட்கிறான்.

௪. நீயோ அவனை மறந்துவிட்டாய். அவன் பொருளை எண்ணுகிறாய். இது நியாயமா?

மனோ ஜயம் - 1/57

௩௪0. ஒன்று இல்லாமல் மற்றொன்று, தோன்றாது! தோன்ற முடியாது! தோன்ற இயலாது. ஆகவே அதிஷ்டானமாகிய பர சொரூபத்திலிருந்து (மண்) ஆரோபமாகிய ஜக, ஜீவ, நாம, ரூபமாகிய பதுமைகள் தோன்றின என்பதே ஸத்தியம்!

மனோ ஜயம் - 1/61

௩௪1. யாம் பிரம்மம்! யாம் பிரம்மம்! யாமே எல்லாம்! என்ற இந்த தர்மத்தால்! மனம் மஹத்தாகும் என்பது, ஸத்தியம் பேசினால் தர்மம் நிலைபெறும்! என்பது இங்கு ஸத்தியமாகிறது! ஆகவே இது, யத்பாவம் தத் பவதி! என்பது உறுதி ஆகிறது.

மனோ ஜயம் - ௨/௮0

௩௪௨. அழியாதது கல்வி! அழிவது படிப்பு! கல்வி உள்நோக்கி செல்லும்! படிப்பு, பட்டம், பதவி, கௌரவம், அந்தஸ்து, புகழ், கீர்த்தி, பணப் போதை என்று மேல் நோக்கி சென்று ஓர் நாள் அறுந்து வீழ்ந்து சர்வநாசம் ஆகும்!

மனோ ஜயம் - ௨/௮௯

343. மண்ணாக இருந்தால் **"நாமா"** உண்டு! **ரூபம்** இல்லை! ரூபம் இல்லை என்றால்? உபயோகிக்கும், ரூபம் இல்லை! ஜலம் சேர்ந்தால், உபயோகிக்கும் ரூபம் உண்டு!

மனோ ஜயம் - 2/97

344. கர்மாவின் எண்ணத்தை, உண்டாக்குவது மனம்! அவ்வெண்ணத்தை, செயலாக்கும் கருவியே உடல்! ஆகவே, கர்மாவின், முழு பொறுப்பும் மனமே!

மனோ ஜயம் - 2/99

345. பார்ப்பது! கேட்பது! சுவைப்பது! நுகர்வது! தொடுவது! ஆகிய இந்த ஐந்திலும் பூரண நிறைவு தோன்றுவது சர்வார்ப்பணம் ஒன்றாலேயே முடியும். இது மாயாவும்! மனமும்! இணைந்து நிறைவு பெறுகிறது. ஆகவே இங்கு கர்மா நாசமாகிறது.

மனோ ஜயம் - 2/100

346. **மஹாமௌனம்** என்றால் மனம் பேசா நிலை என்றும்; நாம, ரூப, ஜக, ஜீவ ஈஸ்வராதிகள் முழுமையாக இல்லாமல் நாம் நாமான இடம் என்றும்; அகண்டான்ம பாவனையே நாம் ஆகி; அகண்டைக ரஸ ஸ்வரூபமாகவே இருத்தல் ஆகும்!

மனோ ஜயம் - 2/106

347. மாறி, மாறி வரும் நாம, ரூபம் அனைத்தும் நிலையில்லாததாகும். நிலையாயிருப்பது ஒன்றே ஒன்றுதான். அது மண்ணே! மண்ணுக்கு அன்னியமாய் எந்த நாம, ரூபமும் இல்லையென்பதே ஸத்தியம்.

மண்ணாகிய பரமே! பரமாகிய மண்ணே! அதுவே நாம் என்பதும் ஸத்தியமே.

மனோ ஜயம் - 2/111

348. **விளக்க! விளங்க! துலங்க!** என்றால் :-

1. **விளக்க:-** ஓர் பொருளை, இன்னதென, விளக்குவது!
2. **விளங்க:-** அப்படி விளக்கியதை, திரும்ப, திரும்ப கூறி விளங்கப் பண்ணுவது!
3. **துலங்க:-** அப்படி விளங்கப் பண்ணியதை பல உபசார வசனங்கள் சொல்லி, துலங்கப் (பிரகாசிக்கப்) பண்ணுவது.

மனோ ஜயம் - 2/113

349. இரண்டு என்பது ஸ்ரீபகவானையும் நம்மையும் இணைப்பதே இருமையென்பதாகும், ஆனால் மூன்று என்றும்; பல பலவென்றும் வரும்போது குண தோஷம் பின்னலிட்டு பிறவியை கொடுக்கும். **இரண்டு பேரானந்தம். மூன்று விஷயானந்தம்! ஒன்று பிரம்மானந்தம்!**

மனோ ஜயம் - 2/114

350. மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், மீன்கள், பூச்சிகள் மரங்கள் என எல்லாம் ஒன்றுபடுத்தி நாமாவை மட்டும் சொல்வதால் சூட்சும நாமா மட்டும் வெளிப்படுகிறது. அங்கு தூல உருவம் மறைந்து நாசமாகிறது! தூலம் மண் ஆவதால். அங்கு அது அதுவாகவே ஆக முடியும்.

மனோ ஜயம் - 2/115

351. ஒலியை கேட்கலாம். வரியை காணலாம். ஆனால் இவ்விரண்டும் உணர்த்துவது ஒன்றையே! ஒரு மண்ணாலான பொருள் இரு நிலைகளில் விளக்கம் பெறுகிறது. விளக்கமும் தருகிறது. இது மாயா மனதின் வேலையாகும்!

மனோ ஜயம் - 2/120

352. **மனைவி** என்றால்:- அது போஹப் பொருள் அல்ல! மோஹப் பொருளும் அல்ல! அடிமையின் பொருளும் அல்ல. மனைவி ஓர் சேவையின் அங்கம். இங்கு நாம், விட்டுக் கொடுத்தால், நமக்கும் விடுதலை உண்டு. இங்கு நாம் அவளை அடக்கினால், அவளுள்ளும்! நம்முள்ளும்! எங்கும் உள்ள ஸ்ரீபகவான் நம்மை பல நிலைகளிலும், அடக்கி விடுவான். இது இந்த ஏழையின் அனுபவம்.

மனோ ஜயம் - 3/129

353. **ஸ்ரீகுரு மாதாவிற்கு நல்ல கணவனாக சேவை செய்தல்:-** பல முறை, இதன் இல்லத்தரசிக்கு; துணி மணி துவைத்து, அலசி, உலர்த்தி, மடித்தும் கொடுத்திருக்கிறது.

மனோ ஜயம் - 3/129

354. நாம் சாப்பிட முடியாததை! அதை அவள், **விரும்பி சாப்பிடுவதை, வாங்கிக் கொடுத்து** அவள், உண்பதைக் கண்டு, ஆனந்தம் அடைவதுண்டு!

மனோ ஜயம் - 3/129

355. **அவள் விரும்பிய சினிமாவை**, அவள் திருப்திக்காக, **அவளுடன் சென்று அமர்ந்து பார்த்து**, அனுபவிப்பது

போல் பாவனையை காட்டி, இதனுடைய ஸத்ஸங்க காட்சிகளையும், வார்த்தைகளையும், அத்தியேட்டர் திரையிலேயே, கண்டு அனுபவித்ததும் உண்டு.

மனோ ஜயம் - 3/129

356. **இல்லத்தரசியின் கடும் சுடும் வார்த்தைகள்:-**
பலமுறை, வினையால் வரும் பாதிப்பு தாங்க முடியாமல் ஓர் அரைமணி நேரமாவது பலபல சூடான, கடும், சுடும், வார்த்தைகளை கொட்டும், அப்போது இதன் இல்லத்தரசி முன், அமைதியாக, எச்சலனமும் இன்றி! சஞ்சலம் இன்றி! எக்குண தோஷமும் இன்றி! மறுவார்த்தையோ! எதிர் வார்த்தையோ! மறுப்பு வார்த்தையோ! பேசாமல் அமைதியாக அமர்ந்து கேட்டு ஆனந்திக்கும்.

மனோ ஜயம் - 3/130

357. மானாபிமானம் அற்று தாமாகி நின்றவர்க்கே! சேனாதிபதி போல ஞானாதிபதி உண்டு! என்பது எம் நந்தன் வாக்கு. பொருள்:- மானாபிமானம் போனபின்னே! ஞானமானது சேனைத்தளபதி போல் உன்னை அரவணைக்கும்! இது ஸத்தியம்.

மனோ ஜயம் - 3/131

358. விட்டுக் கொடுப்பதனாலும், பொறுமையின் பணிவினாலும் தான் **மான, ஈனம்,** அழிந்து நாசமாகும்! நான் என்னால் என்ற அஹங்காரம் அழியாமல் **மான, ஈனம்,** அழியாது. மான, ஈனம் அழியாமல் மனோ நாசம் ஆகாது.

மனோ ஜயம் - 3/132

359. **நிச்சலதத்வம்** என்பது:- அசையாத! அசைக்காத ஒன்றே **தத்** என்ற பரமாத்மாவாக வந்து; அதுவே **த்வம்** என்ற ஜீவாத்மாவாக இருந்து விளையாடுகிறது, ஆகவே பரமாத்மாவே ஜீவாத்மா என்று அசைக்காத அசையாத ஸ்திரத்தன்மை பெறுவாய்.

மனோ ஜயம் - 3/146

360. **நிச்சலதத்வம்!** என்பது:-

1. **நிச்சலம்:-** அசைவற்ற நிலை!
2. **தத்:-** பரமாத்மா!
3. **த்வம்:-** ஜீவாத்மா! அசைவற்ற நிலையே பரமாத்மாவும்! ஜீவாத்மாவும்! ஐக்கியமாகும் நிலை.

மனோ ஜயம் - 3/149

361. வெறுப்பு உண்டானால், விருப்பும் வந்தே தீரும். விருப்பம் உண்டானால், வெறுப்பு வந்தே தீரும். ஆனால்? நிறைவு உண்டானால், எதன்மீதும் விருப்பும் வெறுப்பும் உண்டாகாமல் இது ஸ்ரீபகவான் கருணையென்று அன்பால் நிறைந்து! அறிவால் உணர்ந்து! அங்கு பூரண நிறைவுடன் ஓர் ஆனந்தம் உண்டாகும்.

மனோ ஜயம் - 3/151

362. **இறை கருணை** என்பது செயல் உற்றது. **பர கருணை** என்பது செயல் அற்றது. ஆகவே இறை கருணையே பர கருணை மூலமாக செயல்படும்! இறை கருணை ஏக குணமாகும். பர கருணை நிர்க்குணமாகும். ஆகவே ஏக

குணமே பர கருணை நிலையில் செயல்பட்டு அதுவே நிர்க்குணமாகிவிடும்.

மனோ ஜயம் - 3/155

363. இங்கு ஓர் உண்மை. நாமாகிய ஸ்ரீபகவான்! மனதால் பற்றப்பட்டது போல் நடிக்கிறான். அப்போதுதான் விளையாட்டு வெகு சுவாரஸ்யமாக இருக்கும். இம்மயக்கம் போகப் போக எம் குழந்தைகளுக்கு புரியும்! கூடிய சீக்கிரம் மயக்கம் நீங்கும். அப்போது நாம் யார்? என்பது உணர முடியும்.

மனோ ஜயம் - 3/162

364. **மனம், குணம் உள்ள நிலையில்** திரிகர்த்தாக்களும் தொழில் அதிபர்களே. **அறிவோடு உணரும் நிலையில்** திரிகர்த்தாக்களும் ஸ்ரீஸத்குரு ஆகின்றனர். **பேரறிவு ஆன நிலையில்** உணரும் போது அவர்களும் அதுவும் ஒன்றே! அந்த ஒன்றே யாம்! என பிரம்மானந்த மயமாகி இருக்கின்றோம்!

மனோ ஜயம் - 3/163

365. கண்ணா என யாம் அழைக்கிறோம், ஆனால் நீங்களும் சிவனே! முருகா! வினாயகா என அழைக்கலாமே. அது ஓர் சமுத்திரம். யாம் கண்ணா என்ற குடம் கொண்டு மோண்டு வைக்கிறோம். நீங்களும் உங்கள் பிரியமுள்ள குடத்தால் மோண்டு கொள்ளலாம்! அங்கு குடம் வெவ்வேறு! ஜலம் ஒன்றே!

மனோ ஜயம் - 3/170

366. கனவின் உபாதை எப்படி விழித்த உடன் இல்லையோ அப்படி அவ்வுபாதை எம் ஞான விழிப்பில் மறைந்துவிட்டது. அதே போல் கனவில் வந்து போன பொருள்களுக்கும் எந்த தடையமும் இல்லை. ஆகவே எந்த வினாடியும் யாம் யாமாகவே இருக்கிறோம். இந்த நாம, ரூப, உலகம் வந்ததோ, இருந்ததோ அது மறைந்ததோ, முக்காலமும் எக்காலமும் இல்லை.

மனோ ஜயம் - 3/188

367. நாம, ரூபம் படிப்படியாக மாறும். (கோர குண தோஷம் மறையும்) ஒலி அலைகள் அர்த்த அனர்த்தமற்ற நிலையில் இரைச்சலாக தோற்றும். பின் இனிமையாக தோற்றும் பின் எதுவும் தோற்றாது!

மனோ ஜயம் - 3/189

368. ஸ்வய ஞானானுபவ நூலை, பொருள் உணர்ந்து, பாடினாலோ! வாசித்தாலோ! அதன் கருத்துகளை **“சுவைத்தாலோ”** அவஸ்யம் பயன் பெறுவர். இதற்கு ஆலாபனையும், அரங்கேற்றமும், வேண்டாம். அதுவே அவனாகி, இருந்து செயல்படும்! இது ஸத்தியம்.

ஞான மாணிக்கம் - 11

369. **பேரானந்தம்! பிரம்மானந்தம்!**

1. பாடல்களின் உட்பொருள் **“உணர்ந்து”** சொல்பவரோ! படிப்பவரோ! (பாடுபவரோ) கேட்பவரோ! வாசிப்பவரோ! **“எவராயினும் சரி” “அதுவாகிய அவனும்!” “அவனாகிய அதுவும்!”** இணைந்து, செயல்படும் தன்மையினால், **“வினை”** உடலுக்கு

**"விதி"** தேவனாக அவனும்! **"மன"** மடமைக்கு **"அது"**வாகிய ஸ்ரீஸத்குருவும்! இணைந்து செயல்பட்டு **"அது"** ஆக்கி விடுவர்.

2. எல்லாம் ஒன்றே! என்ற **"பிரம்மார்ப்பணத்தினாலும்!"** அப்யாசம் செய். இவ்விரண்டும், ஒரே கருத்துடன் கூடியதாகும்! முந்தையதில், நாம, ரூபம், தோற்றாமல் தோற்றும்! பிந்தையதில், நாம ரூபம், சர்வ நாசம் ஆகும்! இந்நிலையில் **நாம, ரூபம் தோற்றினாலும், அது பேரானந்தம் ஆகும்! அங்கு நாம, ரூபம், நாசமான நிலையில் அது பிரம்மானந்தம் ஆகும்!.**

ஞான மாணிக்கம் - 13, 14

370. ஒன்றுபடுத்தும் நிலையில் **மனமாக இருந்தது.** பின் ஐக்கியப்படுத்தும் நிலையில்; அதே **மனம் அறிவாக மாறி விடுகிறது** என உணர வேண்டும்.

ஞான மாணிக்கம் - 18

371. **இருப்பது ஒன்றே! நடப்பது நலமே!**

1. **இருப்பது ஒன்று** என்றால் **"பரம்"** ஆகும்!

2. **நடப்பது நலம்** என்றால், அந்த ஒன்று செயலற்ற தன்மையினால், அது இருந்தும் இல்லாததே! ஆனால் அதுவே **"தாமே"** பரமாத்மாவாகவும்; ஜீவாத்மாவாகவும்; ஆன தன்மையினால், அங்கு ஜீவாத்மாவின் மனதை இல்லாமல் முடித்துக் கொண்டு, இரண்டும் ஒன்றுடன் ஒன்று விளையாடுகிறது. அது நலம் என பேசப்படுகிறது.

3. ஜீவாத்மாவும், பரமாத்மாவும், இணையும் போது மனம் நசிக்கிறது. இங்கு **ஜீவாத்மா மனம் இல்லாமல் அறிவாகிவிடுகிறது. பரமாத்மா மேலே சென்று பேரறிவு ஆகி விடுகிறது.** இந்நிலையில் இரண்டும் சேருவது நலம் என பேசப்படுகிறது.

4. மனம் இருந்தால் நலமும் சுகமும் இல்லவே இல்லை. அங்கு இன்ப துன்பம் உண்டு. நாம, ரூப, ஜகம் உண்டு. மனம் நசித்தால் அங்கு அறிவும்; பேரறிவும்! இணையும், அந்நிலைதான் இருப்பது ஒன்றாகும். நடப்பது நலமும் ஆகும்.

ஞான மாணிக்கம் - 20, 21

**372. ரஜோ கலிதோஷம்! பக்தீ! ஞானம்:-**

சக்தியை விரும்பினால் கோர குணங்களும் அஹங்காரம் அதிகாரம் உண்டு. பக்தியுடன் உருகினால் அன்பு, கருணை, ஸாந்தி உண்டு. முந்தையது ரஜோ கலிதோஷம்! பிந்தையது பக்தீ! ஞானம் சாத்தியமாகும் சாந்தி!

ஞான மாணிக்கம் - 31

373. **"சக்தியை"** விரும்பி கேட்டால், அவனிடம் துர்தேவதையான, பத்திரகாளியாகவும் போவாள். ஆவன செய்வாள். **"பக்தியுடன்"** உருகி அழைத்து, அன்பால் நிறைந்தால், கருணை கொண்டு, அன்னை பார்வதியாகவும், போவாள் அங்கு ஆவன செய்வாள்.

ஞான மாணிக்கம் - 31

374. ஒருவன் ஏவல் கர்மாவை ஓர் தேவதை மூலம் செய்தாலும் அக்கர்மாவின் பலன் அவனையே சாருமன்றி தேவதையை சாராது. இங்கு தேவதை ஓர் கருவி. ஏவுபவன் கர்மா சம்பந்த கர்த்தா ஆகிறான்.

ஞான மாணிக்கம் - 34

375. **அவனும்! யாமும்! ஒன்றான நிலை** என்பது:-
அவன் நிலையில் மாயா கார்யமாகும்! எம் நிலையில் மாயா முடிந்த பேரறிவு நிலையாகும். இவ்விரண்டும் இணையும் போது **ஜீவ பந்தம் இல்லாத; ஜீவ அழிப்பு!** இயல்பாகவே அமையும் என ஸ்ரீமஹான்களின் அனுபவம் இருக்கிறது!

ஞான மாணிக்கம் - 37

376. உங்கள் தூலங்களையும்! உங்கள் உடைமைகளையும், உரிமைகளையும் **(மன மடமைகளையும்)** எந்த வினாடி, பதுமைகளாகவும் **"மண்ணாகவும்!"** உணர்கிறீர்களோ, அந்த வினாடியே **"எம்மை"** உள்ளபடி உணர்வீர். அந்த வினாடியே **"உங்களை"**யும் உள்ளபடி உணர்வீர். இது ஸத்தியம்! இது ஸத்தியம்!! இது ஸத்தியம்!!!

ஞான மாணிக்கம் - 38

377. போக்கு வரவோ! அருள் பாலித்தலோ! விதி! மனம்! வினை! கண்டு செயல்படுதலோ! கடைத்தேற்றுதலோ! இயற்கைக்கு மாறாக! எதுவும் நடைபெறாது என்பதே ஸத்தியமாகும்.

ஞான மாணிக்கம் - 39

378. மனதின் திறமை, **ஜீவனுடையது!** அறிவின் திறமை; **ஸ்ரீபகவானுடையது!** பேரறிவின் திறமையல்ல ஐக்கியம்! ஓர் திட **ஞானியுடையதாகும்!**

ஞான மாணிக்கம் - 40

379. **ஸ்ரீபரமஹம்ஸர் வாக்கியம்:-** மனமற்ற அறிவு நிலையில் இருந்து கொண்டு, எம்முள் இருந்து ஒருவனை வெளியில் கொண்டு வருவோம். தெளி நிலை பெற்ற பின், வந்த ஒருவனை திரும்பவும் எம்முள்ளே ஐக்கியப்படுத்தி கொள்வோம்! இருந்தவன் ஜீவாத்மா! வந்தவன் பரமாத்மா!

ஞான மாணிக்கம் - 48

380. துவைதத்தை இரண்டுபடுத்தி பார்த்தால் விளக்கம் பெற முடியும். மூன்றாகவோ, பலவாகவோ பார்த்தால் விளக்கம் நாஸ்தி ஆகும்! அது மஹா பாபமாகும்.

ஞான மாணிக்கம் - 51

381. **ஸ்ரீபாத ஸ்வாமிகள், ஸ்ரீவிடோபாவுக்கு, உபதேசித்தது!** ஜீவாத்மா! பரமாத்மாவில்! பின்னப்படுத்தி பேதம் காண்பவன் எவனாயினும், அவன் ரௌரவாதி நரகத்தை அடைவான் என்றும் ஸ்ரீபாத ஸ்வாமிகள், ஸ்ரீவிடோபாவுக்கு, உபதேசித்ததாக ஸ்ரீமத் பக்த விஜயம் சொல்கிறது.

ஞான மாணிக்கம் - 51

382. **முருகன்** என்றால் அழகு என பொருள். முருகன் என்றென்றும் அவன் அன்பர்களுக்கு ஓர் குழந்தையே!

அறிவின் நிலையில் அவன் அனைவருக்கும் தந்தையே! இது இவ்வேழையின் அனுபவம்.

ஞான மாணிக்கம் - 54

383. **காவல் தெய்வங்கள்** கண்டிப்பும் தண்டிப்பும் ஏன் கொண்டிருக்கிறார்கள் என்றால் இங்கு நீதி விசாரணையில் மக்களை எப்படி திருத்துகிறார்களோ அப்படி காவல் தெய்வங்களும் திருத்துவதற்காகவே இருக்கிறது. இங்கு நீதியின் கண்ணை மறைக்கலாம். அங்கு நீதியின் (தெய்வ) பிடியில் தப்ப முடியாது. அது விடாது!

ஞான மாணிக்கம் - 55

384. **தேவதைகள்** என்றால்:- கண்டிப்பும் தண்டிப்பும் கொண்டு நீதி பரிபாலிக்கப்பட்டது என சொல்லலாம்.

ஞான மாணிக்கம் - 56

385. **துர்தேவதை** என்றால்:- பலி பூஜை செய்யும் துஷ்டர்களிடம் வசப்பட்டது போல் இருந்து கொண்டு திருத்தவும்! சம்பந்தப்பட்டவர்களை தண்டித்து சம்பந்தப்படாதவர்களால் பலி பூஜை செய்யும் துஷ்டர்களை சமயம் கண்டு தண்டிக்கவும் நீதியை காப்பவர்கள் ஆகும்.

ஞான மாணிக்கம் - 56

386. கலிதோஷ நிவர்த்தியின் நிமித்தம் அன்னை பார்வதியே! நீதி வழங்கும் நீதிபதியாக (பத்திரகாளியாக) வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டு விடுகிறது. யுகத்திற்குத்தக்கபடி

தங்களை தாங்களே மாற்றிக் கொள்ள வேண்டும். இதுவே நியதி.

ஞான மாணிக்கம் - 57

387. **"உயிர்"** வேறு! **"ஆத்மா"** வேறு! உயிர் **ஜீவ சம்பந்தம்** கொண்டது! ஆத்மா **பரம் சம்பந்தம்** கொண்டது என, உணர வேண்டும். **"சிவனையே! ஜீவனாக"** பாவனை பண்ணுவது, மன மடமையாகும்! சிவன் உள்ளே இல்லையேல், அது **"சவமே"** (பிரேதமே). **ஜீவனை! சிவனாக! உணர்வதே ஆத்ம ஞானம்!**

ஞான மாணிக்கம் - 62

388. எலும்பு இல்லாமல் ரத்தம் மாம்ஸம், கொழுப்பு! நரம்பு! இவைகள் எதில் நிலை பெறும்? அதே போல் பரம் இல்லாமல் மாயாவுக்கு இருப்பும் இல்லை. இயக்கமும் இல்லை. அதே போல் சிவன் இல்லாமல் சக்தியால் இருக்கவோ, இயங்கவோ முடியாது என்பதே ஸத்தியம்.

ஞான மாணிக்கம் - 63

389. நாம, ரூப, ஜக, ஜீவ, உறவு, சுற்றம், நட்பு, பொன், பொருள், போகம், இன்ப துன்ப வாழ்க்கை **"வேண்டும்"** என்றால் மாயா என்ற; அதாவது சக்தி என்ற; அதாவது அம்பாளை நம்பு! அவஸ்யம் பொன்னோடு! பொருளோடு! புகழோடு! **"நல்ல"** வாழ்வு கொடுப்பாள்! அது அவள் கிருபை!

ஞான மாணிக்கம் - 67

390. நாம, ரூப, ஜக, ஜீவ, உறவு, சுற்றம், நட்பு, பொன், பொருள், போகம் அனைத்தையும், **"மண்"** (சிவம்) என உணர்ந்தால் அவஸ்யம் வாழ்க்கை உனக்கில்லை. அது பர கருணை!

ஞான மாணிக்கம் - 67

391. **சதாசிவம்** என்றால்:- சர்வ சதாவும் இயல்பாகவே சிவம் என்ற பர நிலையில் ஒன்றி இருப்பதாகும்.

ஞான மாணிக்கம் - 84

392. **மஹேசன்** என்றால்:- மண் என்ற மஹத்திற்கு ஈசன்.

ஞான மாணிக்கம் - 84

393. **திரிகர்த்தாக்கள்** என்றால்:- நாம, ரூப ஜகத்திற்கு ஈசன் என கொள்ள வேண்டும்.

ஞான மாணிக்கம் - 84

394. **ஸ்ரீமத்ரிபு கீதையை** தமிழாக்கம் செய்த ஞானிக்கு கண் ஒளி மறைந்ததாக கூறும் இடைச் செருகலானது, கலியில் பக்திக்கு முதலிடம் கொடுக்க வேணுமென்ற அடிப்படையில் சேர்க்கப்பட்டதேயன்றி உண்மையல்ல. அத்வைதம் என்பது அந்த ஒன்றுக்கு அன்னியம் எதுவும் இருந்தால்லலவோ இக்கதைக்கு இடம் உண்டு.

ஞான மாணிக்கம் - 88

395. காலாதீதமான பர சொரூபமே, தான் தானே, விளையாடும் நிமித்தம்; தாமே செயலற்ற பரமாகவும்; தாமே செயலுற்ற ஸ்ரீபகவானாகவும்; விளையாடும் பதுமைகளாகிய, ஜீவ

சொரூபமாகவும்; ஆக்கிக் கொண்டு; (பர, தத், த்வம்) ஆனந்தம் பொங்க, விளையாடிக் கொண்டிருக்கிறது.

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 1/2

396. 1. உன் **அறிவே ஆன்மா!** உன் **ஆன்மாவே அறிவு!**

2. அந்த **அறிவு செயலற்ற நிலையில் ஸத் ஆகும்!**

3. **அந்த அறிவு செயலுற்ற நிலையில் ஸித் என்ற நிலையில்; ஈசன் என்ற ஸ்ரீபகவான் ஆகிறது.**

4. அந்த அறிவே, நடிப்பு என்ற, விளையாட்டின் நிலையில்; தாம் ஆனந்தமாக இருந்தாலும், மாயா மனதின் உறவினால், **இன்ப துன்ப! புண்ணிய பாபமாக; அனுபவிக்கும் நிலையில்; பந்த ஜீவனாக தோற்றுகிறது.**

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 1/3

397. மண்ணாக உணர்ந்தால் நாமா மட்டும் உண்டு. பாண்டமாக கண்டால் நாமமும், ரூபமும் உண்டு. மண்ணாக உணர்வது **அறிவு.** பாண்டமாக காண்பது **மாயா மனம்.**

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 1/5

398. பேதமான விகாரம்! விவகாரம் எல்லாம் மனதின் கற்பனையான வேறுபாடும்! மாறுபாடும்! ஆகுமேயன்றி ஜட சொரூப மண்ணுக்கு இல்லை. மண்ணையே பரமாக பாவனை செய்து மனோ சஞ்சலத்தை தொலைக்க வேண்டும்.

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 1/9

399. சர்வார்ப்பணத்தால், மனோ பாரத்தை குறைத்து! பிரம்மார்ப்பணத்தால், மனோ நாசம் செய்யாமல்! அது ஆத்ம ஞான **விசாரணை** ஆகாது என்பதே ஸத்தியம். இவ்வாத்ம ஞான விசாரணையே, மனோ நாசம் ஆகும். இந்த மனம் நாசம் ஆக வேண்டுமானால்! **பேச்சைக் குறை! விட்டுக்கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!**

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 1/12

400. **தோஷம்** என்றால்? கலி தோஷ கோர குணங்கள்.

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 1/14

401. **பாவனை** என்றால்? நாம, ரூப, ஜக ஜீவ, தோற்ற ஆவரண பாவனை!

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 1/14

402. கனவின் காட்சிப் பொருள்கள், நனவில் இல்லை! நனவின் காட்சிப் பொருள்கள், கனவில் இல்லை! ஆனால் இவ்விரண்டும், ஆழ்ந்த உறக்கத்தில் இல்லவே இல்லை. இம்மூன்றும் சாட்சியாகிய, (ஸ்ரீபகவானாகிய) எம் மாயாவினால் நடைபெறுகிறது. ஆகவே எமக்கு அயலாக, எவையும் இல்லை. இதை உணர! **பேச்சைக் குறை! விட்டுக்கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!**

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 1/15

403. ஓர் நண்டு என்ற ஒன்றை, திரும்ப திரும்ப, ஓர் பாத்திரத்தில், போட்டால் அது, அவஸ்யம் கால் ஓய்ந்து, பாத்திரத்தினுள், கிடந்தே ஆகும். ஆக வேண்டும். அதே போல் உன் மனமும்

உன் தடையற்ற அப்யாசத்தால், உன்னுள் நிலைத்து நின்றுவிடும். இது ஸத்தியம்.

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 1/18

404. சந்திரன் அசையாமல் இருந்தாலும்; அதன் பிம்பம் ஜலத்தில் விழும்போது, ஜல அசைவினால், சந்திரன் அசைவது போல் தோற்றும், அதே நிலைதான் மாயாவுடன் சேர்ந்த பரமும் மாயா அசைவதால் பரமும் அசைவது போல் தோற்றும்.

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 1/29

405. நாம் ஆத்மாவே! நாம் ஸ்ரீபகவானே! நாம் பரமாத்மாவே! நாம் பரப்பிரம்மமே! நாம் பரம்பொருளே! என ஐயம் **திரிபுற;** எவ்வித சலனமும் இன்றி; தெளி நிலையில் அனுபவம் கூடி ஆனந்தமாயிருப்பது **அறிவு!**

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 1/31

406. சர்வசதாவும் சஞ்சலமும்; சலிப்பும்; சந்தேகமும்; குற்றம் குறை உணர்வும்; பேத உணர்வும்; விருப்பு வெறுப்பும்; கலி தோஷ கோர குணங்களை, வலிய ஏற்றுக் கொண்டு அவதியுறுவது! **மனம்!**

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 1/32

407. அனைத்து ஜீவ கோடிகளிலும்; நாமே நிறைந்திருக்கிறோம் என்றும், ஈஸ்வராதிகளிடம் மயக்க மற்றும்; எந்த வல்லமைகளும் இல்லாமல்; சகலத்துக்கும் சர்வ சாட்சியாய்; ஆனந்த பரனாய் இருப்பது:- **பேரறிவு!**

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 1/33

508. மரம் இருக்கிறது. தூண் இருக்கிறது. மேஜை, நாற்காலி இருக்கிறது. விறகு இருக்கிறது. கரி இருக்கிறது. சாம்பல் இருக்கிறது. தூஸி இருக்கிறது. அணு இருக்கிறது. ஜீவ அணு இருக்கிறது. ஆத்மா இருக்கிறது. மரத்திலிருந்து ஆத்மா வரை! நாம ரூபம்தான்! மாறி மாறி வருகிறதே தவிர, இருக்கிறது என்ற, இருப்புத்தன்மை! மாறவும்! மறையவும்! இல்லை. **அந்த இருக்கிறது என்ற இருப்புத் தன்மையையே, ஸத் என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.**

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 1/56, 57

509. மரம் என ஒன்று, எத்தனை நாம ரூபம், மாறி மாறி எடுத்தாலும்; அவை அனைத்திற்கும் **ஆதாரம்** இருக்கிறது! இருக்கிறது! என்ற உணர்வானதே ஸத் ஆகும். ஆகவே நாம ரூபம் பொய்யே! இருக்கிறது என்பது மெய்யே!

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 1/58

510. நாம, ரூபம், ஸத் அல்ல. அதன் இருக்கிறது என்ற, இருப்புத்தன்மையே! **ஸத்தாகும்!** அது மற்றொன்றாய் மாறும்போது, உண்டான அசைவே, **ஸித்** ஆகும். அவ்வசைவினால், அறிவால் உணர்ந்த நிலையில் அது **ஆனந்தம்.** மனதால் கண்ட நிலையில், இன்ப துன்பம் ஆகும்.

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 1/59

511. ஸத்ஸங்கம் ஒன்றாலேயே ஞானானுபவமும்; ஜீவன் முக்தியும் பெற முடியும்; மற்றும் பாடம், படிப்பு, இவைகளால் ஜீவன்

முக்தி பெற முடியாது என்பது நம் ஸ்ரீஆதிசங்கரர் அவர்களுடைய அனுபவ சித்தாந்தம். ஸத்ஸங்கமே நித்ஸங்கமாகும். நித்ஸங்கம்; மோஹத்தை நாசம் செய்யும்! மோஹம் நாசமானால், மனம் மஹத்தாகும். மனம் மஹத்தானால், அதுவே ஜீவன் முக்தி ஆகும்!

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 1/54, 55

512. எண்ணத்தால், நாம, ரூப உலகம். எண்ணத்தால் நாம, ரூப உறவு, சுற்றம், நட்பு! சர்வார்ப்பணத்தால், நாம, ரூப, ஜக, ஜீவ தோற்ற வினை அழியும்; பிரம்மார்ப்பணத்தால், நாம, ரூப, ஜக, ஜீவ தோற்றம் மண்ணாக முடியும். அம்மண்ணே பரமாகவும்! பரமே நாமாகவும்! ஆக முடியும்.

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 1/56

513. **காரணம் இல்லாமல் காரியம் இல்லை:-** காரியம் இல்லாமல் காரணத்தால் எந்த பிரயோஜனமும் இல்லை. பரமே! காரணம்! மாயாவே! காரியம்! மாயா இல்லாமல் பரம் உண்டு. ஆனால் அப்பரத்தால் ஓர் பிரயோஜனமும் இல்லை! மாயா ஓர் காரியமாக இருந்தாலும் பரம் இல்லாமல் மாயாவும் இல்லை. இருந்தாலும் பிரயோஜனமும் இல்லை.

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 2/73

514. **பூ** என்று சொல்வது லௌகீக தர்மமாகும்! இது ஒழுக்கம். **பிஞ்சு** என்பது ஸத்திய தர்மம் ஆகும். பூ என்பது வாடி

கருதி உதிரும் தன்மையது. பிஞ்சு என்பது காய் ஆகி கனி ஆகும். ஸ்திரமானதாகும், ஆனால் பூ இல்லாமல் பிஞ்சு வராது என்பது ஸத்தியமே!

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 2/82

515. எம் ஸ்ரீரிபு! மஹாத்மாவின், ஓர் ஸத்திய வாசகம்; **உன்னில் உன்னையன்றி** உனக்கு அயலாக **எதுவும் இல்லை!** கவனம் தேவை!

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 2/88

516. **உருப்படாமல் போனவன் யார் எனில்?** திரும்பவும், ஓர் நாம, ரூபம், பெற முடியாமல், **மனம் கெட்டுப் போனவனே** உருப்படாமல் போனவன் ஆகும்.

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 2/93

517. **உருப்பட்டு போனவன் யார் எனில்?** சக்திகளையும், வல்லமைகளையும், சித்திகளையும் கற்று உலகம் நடு நடுங்க, பேரும் புகழும் வாங்கி நாம, ரூப, குணம், குறி கீர்த்தியோடு, **நாம, ரூபம் கெடாமல் இருப்பவன்,** உருப்பட்டு போனவன் ஆகும்.

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 2/95

518. **ஸ்ரீஸத்குருநாதனை காண்பது மிக, மிக, அரிதாகும்:-** சிஷ்யனின் பூர்வ புண்ணியம்! ஸ்ரீபகவான் கிருபை! இவனுடைய சிரத்தையும்! இணைந்தால்! பரமே கருணையுடன் ஸ்ரீஸத்குருவாய் அவஸ்யம் வரும். வந்தே ஆக வேண்டும்!

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 2/96

419. ஸாமான்ய குருவை எங்கும் காணலாம். கலிதோஷத்திற்காகவே அவர்கள் பணி இருப்பதால் அவர்களை காண முடியும். சக்தியும்! அபார ஆற்றலும்! ஸித்திகளையும்! அனாயசமாக செய்யக் கூடியவர் ஸாமான்ய குரு ஆவர்.

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 2/96

420. மனதை ஜயிக்க எவரும் விரும்புவதும் இல்லை. மனதின் இன்ப, துன்ப சுவையில் மயங்கிய தன்மையினால் அறிவின் ஆனந்தம் அனுபவிக்க தயங்குகின்றனர். இது கலி புருஷனின் மஹத்வம் ஆகும். எவனோ ஓர் தீரன் தான் அத்வைத சுவை அனுபவம் பெறுகிறான்.

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 2/99

421. விதிக்கப்பட்ட, **விதியை** மாற்றவோ! விலக்கவோ மறுக்கவோ! முடியாது. அதை முன் பின் தள்ளி வைத்து வேறொரு கர்மாவுடன் இதை பிணைத்து, அனுகூலமாக்க முடியும்! இங்கு கர்மாவும் முடியும்! வேறு கர்மாவும் தொடராது.

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 2/111

422. ஹே பார்த்தா! எவனொருவன், எம்மை உருகும் உள்ளத்துடனும்! பெருகும் கண்ணீருடனும்! ஏங்கித் தவித்து அழைக்கிறானோ, அவன் முன், எந்த தடையும் இன்றி, யாம் பிரத்தியக்ஷமாவோம்.

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 2/117

423. ஹே காண்டீபா! எம் சரணார விந்தங்களையே, முழுமையாக நம்பி! வேறொன்றையும் யாசியாதவனாய்,

**எல்லாம் நீயே!** என எவன் சரண் புகுகின்றானோ, அவனை யாம், கண்ணை காக்கும், இமையைப் போல், எந்த வினாடியும் காத்தருளுகின்றோம்.

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 2/117

424. ஹே தனஞ்சயா! எவனொருவன், தன்னையும் தன் உடைமைகளையும் **எல்லாம் உனதே!** என, சர்வார்ப்பணம் செய்த நிலையில், **நிர்க்கதியாக,** பூரணமாக நம்புகிறானோ, அவனுக்கு யாமே **நற்கதி** சத்கதியும் ஆவோம். அங்கு யாம் இருக்க பயம் ஏன்? என **அபயஸ்தம்** கொடுப்போம்.

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 2/117, 118

425. கயிறாக கண்டால், சர்ப்பம் தோற்றாது. சர்ப்பத்தை கண்டால், கயிறு தோற்றாது. அது போல், கருத்தை உணர்ந்தால், கடவுள் தோற்றுவான். ராகம், தாளம், பல்லவி என பாடலை உணர்ந்தால், பாடலும் வரியும் தான் தோற்றும். அங்கு ஸ்ரீபகவான் தோற்றமாட்டான். தோன்ற இயலாது.

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 2/120

426. பங்காளி சண்டை கூடாது! என்றும், விரோத குரோதம் பழி பாவம் கூடாது என்றும்; அறிவுறுத்துவது **மஹாபாரதம்** ஆகும். வஞ்சகம்! பொய்! சூழ்ச்சி கூடவே கூடாது; என போதிப்பதும் **மஹாபாரதம்** ஆகும்!

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 2/123

427. ஒரு சொல்! ஒரு வில்! ஒரு இல்லாஷ்! என ஸத்திய தர்மத்தை போதித்து, **காமம்** கூடவே கூடாது என போதித்து, **வாக்கே** எல்லாம் என போதிப்பது, **ஸ்ரீமத் ராமாயணம்** ஆகும்.

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 2/124

428. **ஸத்தியம் பேசு. தர்மம் செய். நாவை அடக்கு. கருணையோடு இரு,** என நான்கு ஸத்திய போதனைகளையும், விளக்கக் கூடியது, **ஸ்ரீமத் ராமாயண காவியம்** ஆகும்.

"சொல் அற, சும்மா; சுகமா, இரு!" - 2/125

429. எதிர் எதிராக தெரிவதெல்லாம் **விகாரம்** ஆகும். புதிர் புதிராக தோற்றுவது எல்லாம், **விவகாரம்** பிரச்சனை ஆகும்.

ஆத்ம ஞானம்! - 5

430. ஸ்ரீஸத்குருவின் மீது உனக்கு பரிபூரணமான, நம்பிக்கை இருந்தால்; அவஸ்யம் உன்னால் முடியும். யாம் சர்வாந்தர்யாமி!!! நம்பியவர்களை மட்டும்; எம் ஸத்திய வாக்குப்படி இட்டுச் செல்ல முடியும். அது **அதுவாகிய! அவன்!** கருணையாகும். அணுப்பிரமாணம் சந்தேகம் கொண்டாலும் உங்களால் முடியாது. **உங்கள் மனமே பகைவன். உங்கள் அறிவே நண்பன்.**

ஆத்ம ஞானம்! - 6, 7

431. கண்ணால் காண்பதையும், காதால் கேட்பதையும் உண்மையென நீ நம்பினால், உன் மனம் உன்னை

ஏமாற்றுகிறது என உணர்வாயாக. அங்கு இறை குரு உணர்வுடன் சற்று பொறுமையுடன்; காத்திருந்தால் மனதின் வழி அடைபட்டு விட்டதென உணர். அங்கு ஸ்ரீபகவானாகிய அறிவு பிரகாசிக்க ஆரம்பமாகி விட்டதென உணர். அங்கு முடிவு நலமாகவே முடியும்.

ஆத்ம ஞானம்! - 8, 9

432. இன்பமும் துன்பமும்; மனதின் எண்ணம் ஆகும். இது மனதின் சொரூபம் ஆகும். ஆனந்தம் என்பது உன் அறிவின் வடிவமாகும். ஆனந்தம் பெறுவது என்றால் பொறுமை! அமைதி! போதும் என்ற நிறைவு! தேவைகளையும்! ஆசைகளையும் குறைத்து எளிமையை ஏற்றல்! ஆனந்தம் உண்டாகும்.

ஆத்ம ஞானம்! - 10

433. **காமதகன ஒரே** மந்திரமாவது? **ஹரே ராம்!** என்ற ஒன்றேயாகும். ஹரே ராம்! என்ற ஒன்றே போதும். ஹரே ராம்! என்ற ஒன்றால் முடியும். இடையறாத ஜபம் தேவை!

ஆத்ம ஞானம்! - 11

434. இந்த ஆண் இன, மோஹ காம வெறியை, விளக்கை, பழம் என மயங்கி, பாய்ந்து, விழுந்து, கருகிப் போகும், விட்டில் பூச்சியை, ஒப்பிடலாம். ஹரே ராம் பேருணர்வினால், இவ்வழிவில் இருந்து மீளலாம்.

ஆத்ம ஞானம்! - 12

435. **ஆத்ம ஞானம்** என்றால்:- எல்லாம் **மண்ணே!** மண்ணே **எல்லாம்!** பரமே **மண்!** மண்ணே **பரம்!** பரமே **நாம்!**

நாமே **பரம்!** ஆகவே **இருப்பது ஒன்றே! நடப்பது நலமே!** என்ற பர பாவனையோடு! ஒன்றிக் கலப்பதுவே, ஆத்ம ஞானம் ஆகும்.

ஆத்ம ஞானம்! - 16

436. யோக மாயாவின் மூலம், ஓம் காரமாகும். அதுவே ராம் ஆகும். அதுவே மோஹத்தை உலர்த்தி பக்குவப்படுத்தி எரிக்கும் **ஹரே ராம்** என்ற ஞான யோகாக்கினியாகும். இது ஸம்ஸாரிகளுக்கு உரிய, அக்கினியாகும்.

ஆத்ம ஞானம்! - 17

437. **யோக மாயாவானது,** மஹத் சிருஷ்டியாகும். **லோக மாயாவானது,** ஜஹத் சிருஷ்டியாகும். **விஷ்ணு மாயா** என்பது, ஜக சிருஷ்டியில் மோஹம் கொண்டு மயங்கப் பண்ணும், மாயா மனம் ஆகும்.

ஆத்ம ஞானம்! - 18

438. இந்த குடும்பியும்! ஸம்ஸாரியும்! நாம் அல்ல; என்ற மெய்யுணர்வை, பெற வேண்டுமானால்; எந்த **வினாடியும்!** நாம் **ஆணும்** அல்ல! நாம் **பெண்ணும்** அல்ல! **நாம ரூப இனமும்!** நாம் அல்ல! காலாதீத பரமாகிய, மண்ணே நாம்! மண்ணாகிய பரமே நாம்! என்ற மெய்யுணர்வை பெறுவதுவே! **ஆத்ம ஞானம் ஆகும்!**

ஆத்ம ஞானம்! - 30

439. **ஆவரணம்** என்றால், பொன் ஆவரணங்கள், எனப் பொருள் அல்ல. கண்ணால் காணக்கூடிய, மனித இனம் உட்பட, நடப்பன! பறப்பன! ஊர்வன! நீந்துவன! அனைத்து கிருமி

கீடகங்களும்! மற்றும் தாவர வர்க்கங்களும் சேர்ந்த அனைத்து நாம ரூபங்களும்! ஆவரணங்கள் ஆகும்.

ஆத்ம ஞானம்! - 30

440. **காவல் தெய்வங்களில் பரிவார தெய்வம்** என்றால்:- ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு, படை பரிவாரங்களுடன் வந்து அவரவர் வினைக்குத் தக்கபடி காத்து அருளும் தெய்வம் எனக் கொள்ளலாம்.

ஆத்ம ஞானம்! - 34

441. **காவல் தெய்வங்களில் பரிஹார தெய்வம்** என்றால்:- பலி என்றும் பூஜையென்றும் நிலை கண்டு ஏற்றுக் கொண்டு அதற்குத் தக்கபடி வினையை அறிந்து கண் துடைப்பு போல் சில சில உபகாரங்களை செய்து ஆதரிக்கும் தெய்வம் என பொருள்படும்.

ஆத்ம ஞானம்! - 35

442. **குலதெய்வம்** என்றால்:- அறியாமையின் மாந்தர்களின் தேவையும்! ஆசையும்! பூர்த்தி ஆகும் நிலையில்; தம்முள் உள்ள ஆத்ம சக்தியே ஓர் சொரூபமாக கொண்டு வரப்பட்டதென்றும்; அதுவே குல தெய்வமானதென்றும் சொல்வர் நம் முன்னோர். இக்குல தெய்வமானது? தம் குலத்தை மட்டும் காக்கவும், மற்றும் எவைரையும் கண்டு கொள்ளாமலும்; (அவர்கள் பாதிப்பை உணராமல்) **பூஜைக்கு உரிய பலனை கொடுக்கும் நிலையிலும்;**

**பூஜை இல்லையானால் தாம் ஒதுங்கிக் கொள்ளும் நிலையிலும் அமைந்ததே குலதெய்வமாகும்.**

ஆத்ம ஞானம்! - ௩௬, ௩௭

௪௪௩. குல தெய்வங்கள், ஆலயங்களில், வழிபடும் தெய்வங்களாகவும்; **குடும்ப தெய்வம்** என்பது வீட்டில் வழிபடும் தெய்வமாகவும்; குலதெய்வம் பூஜையின் பலனை மட்டும் தரும். பூஜை செய்யவில்லையானால், அவர்களை மறந்து விடும், என்றும் சொல்வர். குடும்ப தெய்வமாகிய, **வீட்டின் தெய்வ பூஜை** செய்பவர்களை நிலை கண்டு காக்கும் என்றும்; பூஜை செய்யவில்லையாயின், அவர்கள் பூஜை செய்யும்வரை காத்திருக்கும், கருணை கொஞ்சம் உண்டு என ஸ்ரீமஹான்கள் சொல்வர். இதனிடம் கண்டிப்பு தண்டிப்பு இராது என அறிக.

ஆத்ம ஞானம்! - ௩௮, ௩௯

௪௪௪. **ஆத்ம ஞானம்!**

௧. நான்! ஆணுமல்ல! பெண்ணுமல்ல! தாயுமல்ல! தந்தையுமல்ல! கணவனுமல்ல! மனைவியுமல்ல! குழந்தையுமல்ல! சம்சாரி என்ற குடும்பியும் அல்ல! பந்த ஜீவனுமல்ல! குலம் கோத்ரம் எனதல்ல! குல குடும்ப தெய்வங்களும், எனக்கல்ல!! எந்த நாம, ரூப வஸ்துக்களும், நானுமல்ல! எனக்குமல்ல!!.

௨. **நாம, ரூப, ஜீவ!** ஜகத் தோற்றம்! தோற்றும் வரையில், எல்லாம் ஸ்ரீபகவானுடையதே! **அவன்** இயக்கமே! **அவன்** பொருளே!

3. நாம, ரூப, ஜக ஜீவ தோற்றமும்! அதன் இயக்கமும்! அதன் மயக்கமும்! எந்த க்ஷணம்; **எம்மை** விட்டு விலகி; நசிக்கிறதோ, அச் **க்ஷணமே** அவனே, (ஸ்ரீபகவானே) **யாம்!** யாமே **அவன். அதுவே** யாம்! **யாமே** அது! இப்படி ஸத்தியமாய் உணர்வதே, **ஆத்மஞானம்!**

ஆத்ம ஞானம்! - 39, 40

445. **நாம, ரூப!** தோற்றமும்! அதனால்; **சொந்தமும்!** அதனால் **பந்தமும்!** அதனால் **பாசமும்!** அதனால் **பற்றும்!** அதனால் புண்ணிய பாப, **வினையும்!** அதனால் **ஜனன மரணமும்!** உண்டாகும் என, ஸ்ரீமஹான்களின் அனுபவம் இருக்கிறது.

ஆத்ம ஞானம்! - 44

446. ஸ்ரீபகவான் நாமாவை சொல்லி எல்லாம் நீயே! எல்லாம் உனதே! எல்லாம் உன்னால்! எனச் செய்தால் அங்கு ஸ்ரீபகவான் முழு பொறுப்பையும், ஏற்றுக் கொள்கிறான். ஏற்றே ஆக வேண்டும். இப்படி சர்வார்ப்பணமாக செய்பவனுக்கு, புண்ணியம் பாபம்! இவ்விரண்டும் இல்லை. அங்கு பலன் கருதாத தர்மம் சாத்தியமாகும், அதனால் அவனுக்கு ஜீவன் முக்தி! அவஸ்யம் உண்டு.

ஆத்ம ஞானம்! - 52

447. நாம, ரூப தோற்ற கற்பனையும், அதைச் சார்ந்த குண தோஷங்களும் தான் இம் மாயமனதின் இருப்பும்! இயக்கமும்! ஆகும். **எல்லாம் மண்ணே** என உண்மையாக உணர்ந்துவிட்டால் நாம, ரூப தோற்றமும் இல்லை,

அவைகளை உண்டாக்கிய மனமும் இல்லை. அங்கு **இருப்பது ஒன்றே! நலமே!** இது ஸத்தியம்.

ஆத்ம ஞானம்! - 53

448. **ஸத்திய வாக்கை தர்மம் செய்!** என்பது:-
ஸ்ரீஸத்குரு வாக்காக உணரும் ஸத்தியத்தை! நாம் உணர்ந்து அனுபவிக்கும் போது சில **பக்குவ ஆன்மாவுக்காக உன் வாக்கில் எந்த முயற்சியும் இல்லாமல், அந்த ஒன்றே வெளிப்படுத்தும் என்று சொல்வதை விட, தாமே வெளிவரும்.** அதை பரகுரு கருணையென ஸ்ரீமஹான்கள் சொல்வர். **இது எல்லோர்க்கும் வெளி வருவதில்லை. ஸ்ரீஸத்குரு வாக்கிய சிரத்தையும்! ஸ்ரீஸத்குரு நம்பிக்கையும்! உள்ளவர்களிடமே இது வெளிப்பாடாகும்** என ஸ்ரீமஹான்கள் சொல்வர். இங்கு மனம் எண்ணிப் பேசினால் தோஷம் ஆகும்.

ஆத்ம ஞானம்! - 54, 55

449. தீர்த்தம்! மூர்த்தி! ஸ்தலம்! என முறையோடு செல்வது, ஸ்தல யாத்திரை ஆகும்! பனியே தாமாகவும்; தாமே பனியாகவும் (பனி = பனிகட்டி வடிவில்) அமைந்த ஸ்ரீமஹான்களின்; திவ்விய தரிஸனத்தை, நிதரிஸனமாகவே, அனைவரும், அவரவர், **நிலைக்குத்** தக்கவாறு தமக்குத் தாமே, அமைந்தது மலை யாத்திரை ஆகும்.

கங்கோத்ரி ஸத்ஸங்கம் - 2

450. **ஸ்தல யாத்திரை,** புண்ணியத்தை கொடுக்கும். **மலையாத்திரை,** தர்மத்தை தந்து பிறவா நிலைக்கு வழி வகுத்துக் கொடுக்கும். தீர்த்தங்களையும், தேவ தெய்வ தரிஸனங்களையும் விட ஸ்ரீமஹான்களின் தரிஸனமும், அவர்கள் ஆசியுமே, மிகச் சிறந்தது என ஸ்ரீமஹான்கள் சொல்வர். காரணம்:- ஆலயங்களில் உள்ள தேவ தெய்வங்கள் மந்திர சக்தியுடன் பிராணப் பிரதிஷ்டை செய்யப்பட்ட **திவ்விய மூர்த்திகள்!** ஆகும்!

கங்கோத்ரி ஸத்ஸங்கம் - 2

451. **நான்!** என இருந்தால் நம் வினை நம்மையே சாரும். **நாம்** என இருந்தால், அவ்வினை ஸ்ரீபகவானையே சாரும். ஸ்ரீபகவான் மாயாவாக இருப்பதால், அவ்வினை ஸ்ரீபகவானையும் சார முடியாமல், பஸ்பமாகி விடும் என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

கங்கோத்ரி ஸத்ஸங்கம் - 7

452. நாம, ரூப, ஜக, ஜீவ தோற்றங்களை அறியாமல் அவன் ஒருவனே ஸத்தியம் என உணர்ந்தால் போதும். நாம, ரூப, ஜக, ஜீவ மயக்கம் அடியோடு நாசமாகும். அங்கு அவன் பிரத்தியக்ஷமாவான்.

கங்கோத்ரி ஸத்ஸங்கம் - 9

453. **ஸ்ரீபகவான் நம்முடைய கற்பனை, வடிவமாக; இருந்தாலும்;** அந்த காலாதீத பரமானது நம் மனம் எந்த வடிவில் கற்பனை செய்தாலும் அந்த வடிவில் தாம் கருணை மழையென, காத்துக் கொண்டிருப்பதால் பரமே

ஸ்ரீபகவானாக வருகிறதென்று ஸத்தியமாக உணர வேண்டும்.

கங்கோத்ரி ஸத்ஸங்கம் - 15

454. ஸ்ரீபகவானை மாயா என தள்ளினால் உன் வினைகளை அழிக்க எவர் உளர் என உணர்வாயாக? நாம, ரூப, ஜக, ஜீவ தோற்றமும் அதைப் பற்றிய மனதையும் உன் ஸ்ரீஸத்குரு அவஸ்யம் அழிப்பார். உன் வினையை அவர் ஒன்றும் செய்ய முடியாது என்பது ஸத்தியம்.

கங்கோத்ரி ஸத்ஸங்கம் - 16

455. யோகம் பயிற்சி செய்து அஷ்ட ஸித்திகளும் கைவரப் பெற்றவர் ஸ்ரீபகவானை மதிக்க முடியாது. காரணம்:- ஸ்ரீபகவான் கிருபை பெறாமலும் அவர்களிடம் வரம் பெறாமலும் இவர்களுக்கு ஸித்திகள் உண்டாவதால் இவர்களுக்கு ஸ்ரீபகவான் தேவை இல்லாமல் போய்விடுகிறது.

கங்கோத்ரி ஸத்ஸங்கம் - 17

456. ஆகாயத்தைப் போல் சக்தி வாய்ந்தது வாயு ஆகும். அக்கினியை விட (தேவ தெய்வ சக்தியை விட) அதிக அபார சக்தியை உடையது வாயு ஆகும். எதையும் அசைக்கும் அதிக ஆற்றல் உடையது வாயு ஆகும். அந்த வாயுவின் அம்ஸமே யோகமும்; அந்த யோக (வாயுவின்) முதிர்ச்சியே அஷ்ட ஸித்தியாகும்.

கங்கோத்ரி ஸத்ஸங்கம் - 18

457. யோகியிடமும் ஸித்தர்களிடமும் அஹங்கார அதிகார ஆதிக்க, வெறி தான் உண்டே தவிர எந்த ஆசையும்!

எந்த அபிமானமும் இருக்க முடியாது. இருக்க இயலாது. அப்படி ஏதேனும் இருந்தால் இவர்கள் யோகமும்! அஷ்ட ஸித்திகளும்! பெற முடியாது! பெற இயலாது. இடைகலை! பிங்கலை! சுழிமுனை! என்று காற்றின் சுழற்சியிலேயே இவன் கவனம் முழுமையாக செலுத்தப்படுவதால், இவன் மனம் கருணை என்ற ஸ்ரீபகவான் நிலையை நாட மறந்து விடுகிறது, மறுத்து விடுகிறது, முடிவில் மறுத்து விடுகிறது.

கங்கோத்ரி ஸத்ஸங்கம் - 21, 22

458. கண்! காது! வாக்கு! இம்மூன்றையும் எவன் தம் வசம் ஆக்குகிறானோ அவனே அன்பின் சொரூபம். அவனையே ஸ்ரீபகவான் தம் வசம் ஈர்த்துக் கொண்டு தாமாக்கிக் கொள்வான். அவன் வாக்கு மௌனம் ஆகும். அதாவது, இறை, குரு, பர, கருணை, வாக்காக மாறும்.

கங்கோத்ரி ஸத்ஸங்கம் - 28

459. **ஸ்ரீஸத்குருவின் வாக்கிலும்; அவர் மீதும்; நம்பிக்கை இல்லாதவன்,** அவன் இருந்தும் வீணே ஆவான். அவன் மனித ஜன்மா எடுத்தும், சாமான்ய ஜீவனேயாவான். அவன் ஜனன மரணத்தை தாண்டவும் முடியாது. ஜீவன் முக்தி நிலை பெறவும் முடியாது.

கங்கோத்ரி ஸத்ஸங்கம் - 33

460. **பிரவாகம்** என்றால் நதி புறப்பட்டு வெளியில் ஓடி **கங்கா** என நாமம் பெறுவதாகும். **கோமுகம்** என்றால் அந்த

கங்கை பசு என்ற ஸ்ரீஅன்னையின், வாயில் இருந்து புறப்படும் இடம் ஆகும்.

கங்கோத்ரி ஸத்ஸங்கம் - 34

461. ஜலம் மேலேயிருந்து மழையாக பெய்யும்போது, அதை வருணன் என்ற **ஆண்மையிலும்!** அதே ஜலம் பூமியில் பிரவாகமாக ஓடும் போது மட்டும், அதை **கங்கா** என்ற **பெண்மையிலும்!** சாஸ்திரம் சொல்லும்.

கங்கோத்ரி ஸத்ஸங்கம் - 37

462. **தடுமாற்றமென்பது:-** மனதில் நிகழ்ச்சியும்! காட்சியும்! ஓர் எதிர்பார்ப்பு ஏற்படுமாகில் அதில் ஓர் மாற்றம் உண்டானால் அதில் ஏமாந்து போன மனமானது சந்தேகத்தில் தோன்றும் **சலிப்பினால்** தடுமாறுவது இயல்பே. **இருப்பது ஒன்றே! நடப்பது நலமே!** என்று தோஷ குணங்களுக்கு ஆளாகாமல் இருந்தால் தடுமாற்றம் உண்டாகாது!

கங்கோத்ரி ஸத்ஸங்கம் - 53

463. **நம்பும்** குழந்தைகளின் ஆகாமிய கர்மாவை ஏற்றுக் கொண்டு அதை உண்டு ஜீரணித்து விட்டோம், **எஞ்சிய**வர்களுக்கு அவரவரே பொறுப்பு. கொடுத்தால் தானே யாம் வாங்க முடியும்? கொடாதவர்களை யாம் என்ன செய்ய முடியும்??

கேதார ஸத்ஸங்கம் - 59

464. **தாயை நம்பும் குழந்தை** என்றால்:- ஸ்ரீஸத்குருவின் வாக்கை முழுமையாக ஏற்கும் குழந்தையாகும். **சஞ்சலம்,**

**சந்தேகம், தடுமாற்றம் உள்ள குழந்தைகளுக்கு பொருந்தாது.** அவர்கள் தன்னையே நம்பாதவர்களாகும். அவர்கள் எம்மை எப்படி நம்ப முடியும்??? (சந்தேகமே வடிவானவர்கள்).

கேதார ஸத்ஸங்கம் - 60

465. **ஸ்ரீஅகஸ்தியரைப் பற்றிய ஓர் உண்மை:-** சிவன் சக்தியுடன் இருக்கும் போது மட்டும் ஸ்ரீசிவபெருமான் ஆகும். அவரே தனியே தனித்திருக்கும் போது, யோக தண்டமும், கமண்டலமும் உடைய லோக குரு! ஸ்ரீஸத்குரு! ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியாகும். எம்பெருமான் ஸ்ரீஸத்குருவாய் இருக்கும் போது எல்லாம் ஸ்ரீஅகஸ்திய பிரான் அவரை விட்டு பிரிந்ததில்லை. பிரிய முடியாது என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

கேதார ஸத்ஸங்கம் - 77

466. நீங்கள் அனைவரும்! **எம்** பேரக்குழந்தைகள்! நீங்கள் அனைவரும்! எம் **பாபாவின்** அன்பு குழந்தைகள்! **அவனை** (அவன் ஸத்திய வாக்கை) நம்பும் அனைவரும்; (உங்களை யாம் நம்புகிறோம்) **குரு** ஆக்கார்! ஆனால் ஜீவன் முக்தராவர்.

கேதார ஸத்ஸங்கம் - 103

467. **நான்! எனதை!** நாசம் செய்யுங்கள்! அதனால் ஜீவ கர்த்தத்துவம், அழிந்து நாசம் ஆகும்.

கேதார ஸத்ஸங்கம் - 104

468. பணிவு & கனிவு! எளிமை & இனிமை! நம்பிக்கை & வைராக்கியம்! குற்றம் குறைகளை மறத்தல் மன்னித்தல்!

இவை அனைத்திற்கும் ஆதாரம் **பொறுமை!** ஆகும். இப்பொறுமை சாத்தியமாக, நாம, ரூபமுள்ள, ஓர் ஸ்ரீபகவானிடம், எம் பாபா சொல்லும், **சர்வார்ப்பணமே, மூல மந்திரம்** ஆகும்.

கேதார ஸத்ஸங்கம் - 104

469. இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என்பதே சுத்த அத்வைதம் ஆகும். இதுவே கலியுக மந்திரம் ஆகும். இந்த அத்வைதம், ஸ்திரப்படவும், ஸ்வய அனுபவம் ஆவதற்கும், இது வரை எந்த ஸ்ரீமஹானும், உணர்த்தாத மஹா ரகஸ்ய வாக்கியம்:- **எல்லாம் ஒன்றே! எல்லாம் மண்ணே! மண்ணே எல்லாம்! பரமாகிய மண்ணே! மண்ணாகிய பரமே! பரமாகிய நாமே! நாமாகிய பரமே! அதுவே நாம்! நாமே அது!!** இதுவே, தைலதாரை போல் நிச்சயிப்பீர்களாக.

கேதார ஸத்ஸங்கம் - 104

470. **குரு பூஜை** என்றால்:- ஸ்ரீஸத்குரு வாக்கியத்தை, காற்றில் பறக்க விட்டு விட்டு! ஸ்ரீஸத்குரு வாக்கியத்தை, செவிடன் காதில், ஊதிய சங்கைப்போல், இருந்து உதாசீனம் செய்து விட்டு, அன்று ஒரு நாள் மட்டும், ஜே! ஜே! ஜே! ஜே! என ஊர் உலகம் கொண்டாடும் நிலையில் செய்வது குருபூஜை ஆகாது! அது **குரு துரோகம்** ஆகும். ஸ்ரீஸத்குரு வாக்கியத்தை, தைல தாரை போல் சிந்தித்து சிந்தித்து **வாக்கிய சிரத்தையோடு** இருப்பதுவே **குருபூஜை ஆகும்.**

கேதார ஸத்ஸங்கம் - 114

471. **குருபூஜை** என்னும், வெளி உபசார பூஜையை, விட; ஶ்ரீஸத் குருவின் **வாக்கியார்த்த சிரத்தையே!** குருபூஜையும்! குரு சேவையும்! ஆகும்.

கேதார ஸத்ஸங்கம் - 115

472. நான்! எனதை! விட்ட நிலையில் வினை உடலின் சிரமம் குறையும், இதனால் ஜீவ கர்த்தத்துவம் நாசமானதால் கர்மாவை ஏற்கும் மனோ பாரமும் குறைவதை அனுபவத்தில் உணரலாம். இக்கலியில் வேறு எந்த மார்க்கமும் கை கொடுக்காது என்பதும் ஸத்தியமே.

அன்பின் குடிலில் நடந்த ஸத்ஸங்கம்!!! - 1/5

473. 1. குழந்தாய்! விருப்பும்! வெறுப்பும்! இல்லையானால் இது வேண்டும்! இது வேண்டாம்! என்ற, பேதம் தோன்ற மார்க்கம் இல்லை. இந்த விருப்பு வெறுப்பினால்! தோன்றும் பேத பாவனையானது, **குற்றம் குறையாக,** தோற்றினால்தான் லௌகீக **ரஸனையும்!** பிணைப்பும் ஏற்படும். தெய்வீகத்திற்கு ஓர் **திரையும்!** ஏற்பட வாய்ப்பு உண்டு.

2. எல்லாமே தெய்வீகமாகவும்! பரமார்த்தீகமாகவும்! மாறிவிட்டால், உலகம் என்ற **அர்த்தம்** அற்றுப் போகும் என்பது ஸத்தியமே!

அன்பின் குடிலில் நடந்த ஸத்ஸங்கம்!!! - 1/21, 22

474. **சலனம்** (சலிப்பு) அடைகின்ற **மனமே! நாம, ரூப!** ஜக, ஜீவ, தோற்றங்களாகின்றன; அல்லாமல், நாம ரூப, ஜக, ஜீவ, தோற்றம் இல்லவே இல்லை. **அறிவு** ஊன்றி,

உணர்ந்து பார்த்தால், **அசையும்** நிலையில், ஸ்ரீபகவானின் பொருள் ஆகவும், அவன் செயலாகவும் தோற்றும். **அசையா** நிலையில், பரசொரூபம் தோன்றாத் தோற்றமாக! மண் மயமாகவே தோற்றும்.

அன்பின் குடிலில் நடந்த ஸத்ஸங்கம்!!! - 1/24

475. ஓ எம் அருமை குழந்தைகளே! இதை கவனி; இருப்பதிலும்! கிடைப்பதிலும்! நடப்பதிலும்! போவதிலும்! வருவதிலும்! கொடுப்பதிலும்! வாங்குவதிலும்! இவை அனைத்தும் நம் வினையின்படி, **திட்டமிட்டபடி** முன்னேற்பாடாக! **பாரபக்ஷ** தோஷமில்லாமல்! அவரவர் **பற்றுவரவு** தீர்க்கப்படுகிறது! இதில் மனப் போராட்டத்திற்கு இடமே இல்லை; எனத் தெளிந்து! இது ஸ்ரீபகவானின் கருணையே எனத் துணிந்து! எல்லாம்! நலமே! எல்லாம் நலமே! என, அடங்கி இருந்தால், மனம்! மெள்ள! மெள்ள! மெள்ள! மெள்ள! பக்குவப்படும்.

அன்பின் குடிலில் நடந்த ஸத்ஸங்கம்!!! - 1/26

476. **போட்டி & பொறாமை!** கலிதோஷ குணங்களாகும். இங்கு ஒருவருக்கு ஒருவர், விட்டுக்கொடுத்தால், அது சாதனையின் **பொறுமையின்** சிகரமாய் அமையும். பொறுமை! எளிமை! இனிமை! பணிவு! **கனிவு!** இவைகளுக்கு; மிஞ்சிய எந்த சாதனையும் இல்லை.

அன்பின் குடிலில் நடந்த ஸத்ஸங்கம்!!! - 1/28

477. 1. **பரப்பிரத்தியக்ஷ நிலை** என்றால்:- பர சொரூப அம்ஸமாக வருவதாகும்.

௨. **பிரத்தியக்ஷ நிலை** என்றால்:- ஸ்வரூபிகளாக, அவர்கள் வேஷம் தாங்கி வருவதாகும் என, ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம்.

அன்பின் குடிலில் நடந்த ஸத்ஸங்கம்!!! - 1/௩1

௫78. 1. **பரசொரூப ஸ்திதி,** மஹத்துக்களாகவும்.

௨. **இறை சொரூப ஸ்திதி,** மஹாத்மாக்களாகவும்; ஸ்ரீமஹான்கள் பொருள் கொள்வர்.

அன்பின் குடிலில் நடந்த ஸத்ஸங்கம்!!! - 1/௩௨

௫7௯. ஸாஸ்திரத்தை தலை வணங்கி, பொறுமையுடனும், பணிவுடனும், ஏற்றுக் கொண்டால்? வேதம் தெரியாது. அது தெரியவும் வேண்டாம்.

அன்பின் குடிலில் நடந்த ஸத்ஸங்கம்!!! - 1/௩௫

௫80. **வேதத்தின் ரகஸ்யத்தை, உணர்வாய்.** இதன் ரகஸ்யம் **சர்வார்ப்பணம்** ஆகும். வேதத்தின் ரகஸ்யம்! ஸத்தியமாக உணரப்பட்டு விட்டால், வேதாந்தம், பாடம் படிப்பாக இராது. ஸ்வய அனுபவம் ஆகும். **அவ்வனுபவமானது, தோஷ குணம் நசித்த நிலை! ஆனந்தம் ஒன்றே நிலைத்த நிலை!** என்று ஸ்ரீமஹான்கள் வாயிலாக உணர்கிறோம். அறியவில்லை.

அன்பின் குடிலில் நடந்த ஸத்ஸங்கம்!!! - 1/௩5

௫81. குழந்தைகளே! **தத்(த்)துவம்** என்றாலே, தற்பத, லக்ஷியமாயிருக்கின்ற, பரமாத்மாவும்! த்வம்பத, லக்ஷியமாயிருக்கின்ற, ஜீவாத்மாவும்! **தொழிலால்**

பேதமன்றி! **இருப்பில்** எந்த பேதமும் இல்லை; என்பதே ஸத்தியம்.

அன்பின் குடிலில் நடந்த ஸத்ஸங்கம்!!! - 1/51

582. **பரமாத்மா** என்றால், ஸ்ரீபகவான் என்ற ஈசன்! இவன் மாயாவை உடையவன். அதாவது மாயாவை, தன் வசம் கொண்டவன். அத்தன்மையினால், ஈச கர்த்தத்துவத்தோடு, முத்தொழில் புரிபவன். இப்பரமாத்மாவானவன், இவன் பற்றியிருக்கும், மாயாவையும்! அம்மாயாவின் முத்தொழிலையும்! எந்த வினாடி விடுகிறானே! அந்த வினாடியே! இவன் பர சொரூபம் என்ற, காலாதீத பரம் பொருளாவான் என்பது ஸத்தியமே!

அன்பின் குடிலில் நடந்த ஸத்ஸங்கம்!!! - 1/51

583. **ஜீவாத்மா** என்றால், மனம் படைத்த மனிதன் ஆவான். இவன் மனதை தான் பற்ற முடியாமல், அம்மனதின் **பிடியில்!** அகப்பட்டவனாகும். இவன் **ஜீவ** கர்த்தத்துவத்தோடு **மனதால்** பிணைக்கப்பட்டு, **நான்! ஸம்ஸாரி** என்ற, அறியாமையின் மயக்கத்தில் இருக்கப்பட்டவன்.

அன்பின் குடிலில் நடந்த ஸத்ஸங்கம்!!! - 1/52

584. **தத்துவஞானம்** என்றால்:- நான் ஆணுமல்ல! பெண்ணுமல்ல! இனம்! மொழி! மதம்! நாடு! காலம்! இவை ஒன்றும்! **எம்முடையதல்ல! யாமும் அல்ல!** என்ற

திட உணர்வின்; வைராக்கியம் பெறுவதே, தத்துவஞானம் ஆகும்.

அன்பின் குடிலில் நடந்த ஸத்ஸங்கம்!!! - 1/௪௩

௪௮௫. ஒருவருக்கு ஒருவர் விட்டு கொடுப்பதால் வாக்கு அமுதமாகிறது. அத்தன்மையால் அதை சார்ந்த செயலும் அமைதியும்! திருப்தியும்! நிறைவும்! ஆனந்தமும்! இயல்பாக உண்டாகும். இதை மிஞ்சிய சுதந்திரம் எங்கும் இல்லை.

அன்பின் குடிலில் நடந்த ஸத்ஸங்கம்!!! - 1/6௨

௪௮௬. இரையைத் தேடுகிறான். இறைவனைத் தேடுவதில்லை. இறைவனைத் தேடி, பின் இரையை தேடினால், அவன் கிருபையால், கஷ்டம்! கவலை! துக்கம்! துயரம்! பயம்! இல்லாது ஒழியும்.

அன்பின் குடிலில் நடந்த ஸத்ஸங்கம்!!! - 1/71

௪௮௭. **பொறாமை:-** பொறுக்க இயலாமையே பொறாமையாகும். பிறருடைய நல்ல நிலையை கண்டு மனம் பொறுக்காமல் வெந்து வெந்து தான் சாவதும்! அவர்களை அழிக்க தயங்காமல் விரோத **குரோத** வஞ்சக செயல்களால் ஈடுபட்டு அவர்களை அழிக்க முடியாமல் தான் அழிந்து போவதே பொறாமை ஆகும்.

அன்பின் குடிலில் நடந்த ஸத்ஸங்கம்!!! - ௨/௮௯

௪௮௮. **போட்டி:-** ஒன்றுக்கொன்று நான் முந்தி! நீ முந்தி என முண்டியடித்துக் கொண்டு, ஒருவருக்கு ஒருவர் விட்டுக்

கொடுக்காமல் ஆர்வம் என்ற நிலையில் ஆணவம் பற்றிக் கொண்டு, இருவரும் பல பல நிலைகளில் மோதி வெற்றி காணும் நிலையில் வெறி பிடித்து ஆடி அலைக்கழிந்து அழிதலே போட்டி ஆகும்.

அன்பின் குடிலில் நடந்த ஸத்ஸங்கம்!!! - 2/90

589. நாம, ரூபம் இது இன்னார் இது இவை என பேதப்படுத்தி தூலமாக காண்பது மனம் ஆகும். நாம, ரூபம் தோற்றாமல் அனைத்தையும் பதுமையாகவும் இன பேதம் இல்லாமல் அதன் வினை! இயக்க மனம் மட்டும் உணரப்படுவது அறிவு ஆகும்.

அன்பின் குடிலில் நடந்த ஸத்ஸங்கம்!!! - 2/97

590. அறிவு சொரூபமாக, ஒருவன் இருக்கும் போது, அவன் உடலையும்! உடைமைகளையும்! ஸ்ரீபகவான் பார்த்துக் கொள்வான். பார்த்தே ஆக வேண்டும்! அதுவே விதி! அதுவே நியதி!

அன்பின் குடிலில் நடந்த ஸத்ஸங்கம்!!! - 2/128

591. பேரறிவு நிலை! மிக மிக மிக மிக கடினம். இந்த பேரறிவு நிலையில், ஓர் ஞானி இருக்கும் போது, அவன் உடலையும்! உடைமைகளையும்! பர கருணை நிலையில், யோக மாயா! கவனித்துக் கொள்ளும். கவனிக்க வேண்டும்! அதுவே விதி! அதுவே நியதி!

அன்பின் குடிலில் நடந்த ஸத்ஸங்கம்!!! - 2/128

592. பேரறிவில், ஓர் ஞானி பிரவேசித்தவுடன்; அவன் ஜீவன் முக்தியும்! அதே சமயம்! விதேக முக்தியும்! அடைந்தே

ஆக வேண்டும் என்பதே விதியும்! நியதியும் ஆகும்! என ஸ்ரீமஹான்கள் சொல்ல கேள்விப்படுகிறோம்.

அன்பின் குடிலில் நடந்த ஸத்ஸங்கம்!!! - ௨/௧௨௮

௫௯௩. ௧. **யோகத்தின் பலன்!** அஷ்டஸித்திகள் ஆகும்.

௨. **தியாகத்தின் பலன்!** ஜீவன் முக்தியாகும்.

அன்பின் குடிலில் நடந்த ஸத்ஸங்கம்!!! - ௨/௧௩௭

௫௯௪. பிரம்மன்! சிவன்! நாராயணன்! வினாயகன்! முருகன்! இந்த ஐவரும் ஞான அம்ஸமாகும். இதன் முக்கியம் என்னவென்றால்:- தோஷ குணங்கள் அழிந்து நாசமானால்தான் ஞானம் சாத்தியமாகும். தோஷ குணமும்! மனமும்! இருக்கும் வரை ஞானம் பிரகாசிக்காது என்பது ஸத்தியமே!

"ஞான அமுதமும்!!!" & "ஓர் ஸத்ஸங்கமும்!!!" - ௧/௫௪

௫௯௫. **இந்த கிருஷ்ணனோ! அந்த ராமனோ! அந்த ஐவரோ! ஒருவனேயன்றி பலர் இல்லை.** இருவரும் இல்லை. உங்கள் குண நிவர்த்திக்காகவே இவ்வாறு வரிசைக்கிரமமாக சொன்னோமேயன்றி மூர்த்தி பேதத்தால் அல்ல என்பதே ஸத்தியம். கொள்ளுவதும் தள்ளுவதும் **உங்கள் அறிவின் திறனாகும்.**

"ஞான அமுதமும்!!!" & "ஓர் ஸத்ஸங்கமும்!!!" - ௧/௫௫

௫௯௬. **உலகின் நிலையில் தவறான சொல்:-**

பரதேசிப்பயலே! தேவடியாள் மகனே! அடே! மடையா! இவைகள் கடும்! சுடும்! துன்பச் சொல்

என கருதப்படும். ஆனால் இதே வார்த்தையை உயர்வாக கருதும் நிலை.

1. **பரதேசிப்பயலே!** இவ்வுலகம் எம்முடையதல்ல. யாம் பரத்தையே, தேசமாக உடையோம்.
2. **தேவடியாள் மகனே!** தேவர்களுக்கு பணிவிடை செய்யும் பணிவான, பெண்ணின் மகன் என பொருள்படும்.
3. **அடே! மடையா!** கருணையென்ற கடலுக்கு திறந்துவிடும், மடையெனப் போன்றவனாகும். (கடல் மடை உடையவன் மடையன் எனப் பொருள்).

“ஞான அமுதமும்!!!” & “ஓர் ஸத்ஸங்கமும்!!!” - 1/63, 64

497. மானம்! அவமானம்! வெட்கம்! ரோஷம்! சூடு! சுரணை! இவைகள் அழிந்து ஒழிந்தால் ஞானத்திற்கு நாம் அதிபதி ஆகலாம். மேலே கூறியவைகளை விட்டால் இவ்வுலகம் உன்னை வேண்டாம் என தள்ளிவிடும். இவ்வுலகம் உன்னை வேண்டாம் என தள்ளிவிட்ட மறுக்ஷணம் ஸ்ரீபகவானின் அபயகரம் உன்னைப் பற்றி கொள்ளும்.

“ஞான அமுதமும்!!!” & “ஓர் ஸத்ஸங்கமும்!!!” - 1/67

498. அஹங்காரம்! மமஹாரம்! முழுமையாக அழிய வேண்டுமானால் முதலில் **மான, ஈனம்** நாசமாக வேண்டும். பின் உடைமை & உரிமை நாசமாக வேண்டும். அப்போதுதான் ஆத்ம அனுபவ ஞானம் பிரகாசிக்கும்.

“ஞான அமுதமும்!!!” & “ஓர் ஸத்ஸங்கமும்!!!” - 1/71

499. **சக்தி**களும்! **ஸித்தி**களும் **மாயா முன்** நிலைத்து நிற்க முடியாது, நிற்க கூடாது. நிற்க இயலாது. இதுவே பரகருணை என ஸ்ரீமஹான்களின் வாயிலாக அறிகிறோம்.

"ஞான அமுதமும்!!!" & "ஓர் ஸத்ஸங்கமும்!!!" - 1/78

500. **ஸின் முத்திரை** என்றால்:- பரம்பொருளே! பரமாத்மா என்றும்; பரமாத்மாவே! ஜீவாத்மா! என்றும் உபாதி பேதங்களை **நீக்கி** எல்லாம் ஒன்றே! அது சிவமே! அது யாமே! யாமே அது! என்ற பர ஜீவ ஐக்கியமாகும்.

"ஞான அமுதமும்!!!" & "ஓர் ஸத்ஸங்கமும்!!!" - 1/104

501. நடுவிரல்! மோதிர விரல்! சுட்டுவிரல்! இம்மூன்றும் மேல் நோக்கி பரத்தை சாரும் போது ஆள்காட்டி விரலாகிய ஜீவாத்மா வேறு கதி இல்லாமல் ஜீவ போர்வை நீக்கப்படுகிறான். ஜீவ போர்வை நீங்கிய மறு வினாடி ஜீவாத்மா! ஆத்மா என ஆகி; ஸ்ரீபரமாத்மா என்ற பெருவிரலுடன் கலந்து மயமாகி விடுகிறான். இதுவே ஸின் முத்திரை ஆகும். ஜீவன் முக்தியுமாகும்.

"ஞான அமுதமும்!!!" & "ஓர் ஸத்ஸங்கமும்!!!" - 1/105

502. **மனமே** மாயா! ஜகத்! நாம ரூபம்! உறவு; சுற்றம்; நட்பு; எல்லாம்; சொந்த பந்த பாசமும் மனமே! அம் மனம் அறிவு என ஆனால் ஸ்ரீபகவானாகும். அவ்வறிவே பேரறிவானால் மஹத்தாகும். அங்கு அதுவே நாம், நாமே அது என பிரம்மானந்தம் பெறலாம்.

"ஞான அமுதமும்!!!" & "ஓர் ஸத்ஸங்கமும்!!!" - 1/110

503. ஆத்மாவானது மாயாவை சம்பந்தம் கொண்டால் அது உலக ரக்ஷிப்பின் நிலையில் **ஸ்ரீபகவானாகும்.** அதே ஆத்மா மனதை மஹத்தாக்கி! மாயாவையும் தொடாமல் தனித்திருந்தால் அது பக்குவ ஆன்மாவாகி அனுபவ ஞானியாகி! அதுவே ஆத்ம ஞானியாகி! அதுவே திட ஞானி ஆகும் என அறிக.

அன்பர் தபால் - 4

504. தர்மம் என்ற சூரியனை அதர்மம் என்ற மேகம் காரிருள் போல் மறைக்கும் போது, எம்மை யாம் ஓர் சூட்சும வாயுவாக தோற்றுவித்துக் கொண்டு, அக்காரிருள் மேகத்தை கலைத்து என்றும் உள்ள சூரியனை பிரகாசிக்கப் பண்ணுவோம். பின் காற்றும் இல்லை. அது விரட்டிய மேகமும் இல்லை. ஆனால் யாம் அழியாத சூரியனாகவே இருக்கிறோம் என்பதே ஸத்தியம்.

அன்பர் தபால் - 8

505. **ஓர் சாதனையாளன், கடைத்தேற வேண்டுமானால்?** ஸாதுக்கள் **சேவையும்,** அவர்களின் **ஸன்மார்க்க** போதனையும்! அவஸ்யம் வேண்டும். அதுவே மன அமைதி! மன சாந்தி! மன ஓர்மை! என்ற **ஸாத்வீகத்தை!** கொடுக்கும்.

அன்பர் தபால் - 12

506. **ஸாத்வீக குணம்,** (பொறுமை! அன்பு! கருணை! பணிவு! கனிவு! எளிமை! இனிமை கொடுத்து) **மோஹம்** தவிர்க்கும். அதாவது, போட்டி பொறாமையால் வரும்,

பணம்! கௌரவம்! அந்தஸ்து! பட்டம்! பதவி! ஆடம்பரம்! இவைகளை நாசம் செய்து, மோஹாவேசத்தை நாசம் செய்யும்.

அன்பர் தபால் - 12

507. மன மோஹம் தீர்ந்து, நசித்து, கெட்டழிந்தால் மனம் அசைவற்று **ஏகாக்ரசித்தத்தில்** அதாவது, ஸ்ரீபகவன் நாமாவிலோ! குரு நாமாவிலோ! அசையாமல் நிற்கும். அங்கு சர்வார்ப்பணம் முதலில் கைகூடும்! பின் பிரம்மார்ப்பணம் கைகூடும்.

அன்பர் தபால் - 13

508. சர்வார்ப்பணத்தால் **வினை** நாசமாகும். பிரம்மார்ப்பணத்தால் **மனம்** நாசமாகும்! மனம் நாசமான, (மஹத்தான) மறுக்ஷணம் அதுவே **ஜீவன் முக்தி!**

அன்பர் தபால் - 13

509. ஓர் திட ஞானியானவன் அனைத்து தேவ தெய்வங்களுக்கும் ஆத்மா ஆவான். அனைத்து தேவ தெய்வங்களும் அவனுள் ஆன்மாவாக பிரகாசிக்கிறது. ஆகவே வாழ்த்தும் இல்லை. வாழ்த்துபவனும் இல்லை. வாழ்த்தைப் பெறுபவனும் இல்லை. இருப்பது ஒன்றே நடப்பது நலமே! என்பது தான் ஸத்தியம்.

அன்பர் தபால் - 17

510. 1. ஸத்யம் என்பது ஒன்றே!
   2. அது சற்று கீழ் இறங்கும்போது, சூட்சும ஸ்ரீபகவானாகிறது!

3. அதுவே மேலும் கீழ் இறங்கும் போது, தூல நாம, ரூப, ஜக ஜீவ தோற்றம் அனைத்தும் ஆகிறது, என உணர்ந்தால் போதும்.

அன்பர் தபால் - 19

511. பேரறிவின் முதிர்ச்சியில் இருக்கும் **ஓர் திட ஞானிக்கு!** எச்சிரமமும் இல்லை. அதுவாகவே இருப்பான். அவனுக்கு, விளக்கம் தேவை இல்லை, **அவனே அகண்டைக ரஸமாவான். அகண்டைக ரஸமே அவனாவான்.**

அன்பர் தபால் - 23

512. **அகண்ட ஏக ரஸம்:-** எங்குமாய்! ஏகமாய்! எல்லாமாய்! எதிலுமாய்! பறந்து; விரிந்து; ஊசி நாட்ட இடம் இல்லாமல் சர்வ வியாபகமாக இருப்பது பிரம்மானந்த சமுத்திரமே அது!

அன்பர் தபால் - 25

513. **அகண்ட ஐக்கிய ரஸம்:-** கோடான கோடி கோள்கள்! கோடான கோடி, சூர்ய சந்திராதி! கோடான கோடி பூ மண்டலங்கள்! அவற்றின் தாவர வர்க்கங்கள். அவை அனைத்திலும் உள்ள உயிரினங்கள்! ஆக மொத்தமாக **ஜட! கட! படாதிகள்!** (அசையாதன! அனைத்து ஜீவ சரீரங்கள்! தாவர ஜங்கமங்கள்) ஆகிய **எல்லா நாம ரூபங்களையும்!** இல்லாமல் பண்ணி! (உப்பு கட்டியையும்! பனிக்கட்டியையும்! இல்லாமல் பண்ணி) இது ஐக்கியமான

நிலை ஒரே ஜலமயமாக இருக்கும்; பிரம்மானந்த சமுத்திரமே அது!

அன்பர் தபால் - ௨௪

51௪. இன்ப துன்ப! **சுவை!** மனதின் கார்யமாகும். **ஆனந்தத்தின்** சுவை **அறிவின்** கார்யமாகும். நம்மனமே, அறிவாக மாறுமேயல்லாது, அறிவு தனிமையில் இல்லை. அதே மனம் அறிவாக, மாறிவிட்டால், பின் அது மனமாக மாறாது! மாற முடியாது! மாற இயலாது!

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 1/௩

515. சர்வார்ப்பணம் பண்ணும் நிலையில், நம் ஸ்ரீபகவானும் நமக்கு, அயலாக இல்லவே இல்லை. அவனும் நம்முள் நாமாகவே இருக்கிறான்! என்பதே ஸத்தியம்.

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 1/௪

516. ஸ்ரீபகவான் என்பவன், எந்த நாம, ரூபமும் இல்லாதவன். **கருணை** என்றால் ஸ்ரீபகவான்! **ஸ்ரீபகவான்** என்றால் கருணையே வடிவான **பொறுமையின்** சொரூபமாவான், நீ கொடுக்கும் நாம ரூபத்தை ஏற்பவன், இவனை ஏக குண சொரூபி! என்றும் சொல்லலாம்.

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 1/6

517. **சர்வார்ப்பணத்தால்:-**

1. தூல சிரமங்கள் குறையும்.
௨. ஏற்று வந்த வினை முடியும்.
௩. வேறு சொந்த, பந்த, பாச, வினை தொடராது.
௪. குணதோஷங்கள் படிப்படியாக அழியும்.

5. ஸத்வகுணம் ஒன்றே நிலைபெறும்.

6. **பிரம்மார்ப்பணத்தை!** ஏற்க தகுதி உடைய அறிவாக! உன் மனம் மாறிவிடும்.

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 1/7

518. **அறிவே! ஆத்மா!** ஆகும். அந்த ஆத்மாவாகிய, அறிவு மாயாவை, பற்றினால் ஸ்ரீபகவான்! ஆகும். அதே ஆத்மாவான, அறிவானது, **மனத்திரை**யால், மூடுண்டால், சாமான்ய **ஜீவன்** ஆகும். இதுவே நியதி.

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 1/9

519. நாம, ரூபம் அனைத்தும் எந்த வினாடி மண்ணாக உணர்ந்தாயோ! அந்த வினாடியே ஸ்ரீபகவானும் நாம, ரூபம், இழந்து உன்னோடு கலந்து மயமாவான்.

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 1/14

520. **சர்வார்ப்பணம்! செய்யும் நிலை!:-**

சர்வார்ப்பணம்! செய்ய, தடையற்ற **ஆனந்தமும்** பிரம்மார்ப்பணத்தை! ஏற்க சந்தேக, களங்க, கலக்க, பயம்! ஏற்படுமாயின்; முதலில் சர்வார்ப்பணம்! செய்வாயாக.

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 1/18

521. **சர்வார்ப்பணம்! தேவையற்ற நிலை!:-**

சர்வார்ப்பணம்! தேவையில்லையே! ஆத்மாவே நாமாக இருக்க; ஸ்ரீபகவானும் நாமாக இருக்க; எல்லாமே, நாமாக இருக்க; **சர்வார்ப்பணம்! வெறும் பொழுது போக்கே!**

என்ற **திட உணர்வு!** இருக்குமாயின் சர்வார்ப்பணம் வேண்டாம். பிரம்மார்ப்பணம்! **ஒன்றே** போதும் என நிறைவு கொள் (இது ஸ்வய சோதனையாகும்).

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 1/18

522. ஸித்தாகிய சித்தத்தின், நாம, ரூப, ஜக, ஜீவ செயல்களை ஓர் விளையாட்டாகக் கொண்டால் வினையம் என்னும் வினை இல்லை. வினையமாக கொண்டால் அது வினையாக நடைபெறும் முடிவுறும். இவ்வினைக்கும் அதன் இயக்கத்திற்கும் நம் மனமே காரணம். வேறு எவரும் காரணம் இல்லை.

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 1/22

523. மனம் **சலனமுடன்** இருந்தால், அம் மனமே நாம, ரூப, ஜக, ஜீவ ஈஸ்வராதிகளாக தோன்றும். அம் மனமே **சலனமில்லாது** இருந்தால்; அதுவே **பர சொரூப** ஸ்திதியாகும்.

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 1/32

524. **ஆடம்பரம் வேண்டுமா? அமைதி வேண்டுமா?**
ஆடம்பரத்தை தான் விரும்பும் இக்கலியுக மாந்தர். ஆடம்பரமான வாழ்க்கையை அமைத்துக் கொண்டு அமைதியை நோக்கி போகும் நிலை எப்படி ஆகும், என்றால் ஓர் முதலையின் மேல் ஏறி ஆற்றைக் கடப்பவன் நிலை எப்படியோ அப்படி முடியும்.

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 1/35

525. பஞ்சமாபாதகம் செய்தவன் வால்மீகி. அவன் நாவில் ராம நாமா நிலை பெறவில்லை. பின் அவன் ஏக்கமும் குருவின் கருணையும் இணைந்தது. அவனிடம் ராம நாமா பிரகாசித்தது. பக்திக்கே அந்நிலை என்றால் ஞானத்திற்கு கேட்கவா வேண்டும்? உன் முயற்சி! ஏக்கம்! துடிப்பு! உருக்கம்! இதை பணிவாலேயே பெற முடியும். குருவின் பணி கருணை மழை பொழிதல் ஆகும்.

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 1/36

526. **சாதகன், சாமான்யன் நிலை!**

1. ஓர் சாதகனுக்கு ஸ்ரீபகவான் நம்பிக்கையால் வினை விதி மாறவில்லை! மறையவில்லை. இதமாக மாறி அமைகிறது.

2. ஓர் சாமான்யன் என்றால்! நான்! எனது! என கர்த்தத்துவத்தை அவனே அவன் மனதால் ஏற்றுக் கொள்வதால் அவனே அவன் வினை விதிக்கு உடந்தையாகிறான் என உணர்க.

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 1/38

527. ஓர் உண்மை. அது **காம** காரியம் அல்ல அது **சிருஷ்டியின்** கார்யமாகும். சிருஷ்டியின் கார்யம் ஸ்ரீபகவானுடையது, அங்கு உன் எண்ணமே காம **பித்தனாக்கி** விடுகிறது. அங்கு உன் எண்ணத்தால் ஞான **பித்தனாக்கி** விடலாமே? முயற்சி உன்னுடையது பலம் எம்முடையது.

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 1/42

528. **அனுபவ ஞானம்** என்பது! லௌகீக தர்மம், **மனம்** சம்பந்தப்பட்டதாகும். தெய்வீக தர்மம், **அறிவு** சம்பந்தப்பட்டதாகும். இவ்விரண்டுமே, **கர்மா** சம்பந்தப்பட்டதாகும். முந்தையது **இரும்பு** ஊசி! பிந்தையது **பொன்** ஊசி! இவ்விரண்டும், கர்மாவின் பிணைப்பேயாகும். எந்த கர்மாவினாலும், ஆத்ம ஞானம் அடைய முடியாது! இவ்விரு கர்மாவையும், முறையோடு செய்து! முறையோடு விட்டு விட வேண்டும். இங்கு லௌகீக கர்மாவும்! தெய்வீக கர்மாவும்! கர்த்தத்துவத்தால் விளைவதாகும்.

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 1/47

529. **தூல விருத்தி! சாட்சி விருத்தி! அகண்ட விருத்தி:-**

1. **தூல விருத்தி:-** மன, குண, தோஷ, புண்ணிய பாப, ஜனன மரணம் ஆகும்.
2. **சாட்சி விருத்தி:-** ஏக குண சம்பந்தத்தால், பத முக்தி ஆகும்.
3. **அகண்ட விருத்தி:-** நிர்க்குண விஷேசத்தால். பர முக்தி என்னும், ஜீவன் முக்தியாகும். ஆகவே, முன் இரண்டை தள்ளு! பின் ஒன்றை கூட்டி, அனுபவம் பெறலாம்.

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 1/52

530. மன அசைவில்லாமல்; **மெய்** உணர்வுடன்! நிற்கும். நிலையே, ஜீவன் முக்தியாகும். இந்த நிலை பெற்றவர், எவரோ அவர் தான், பிறந்த பிறவியின் பயனை

அடைந்தவராவர், அவர் துன்படுறார்! துகண் (வினையை) **மருவார்!** (சாரார்). அவர் **ஏகபர!** வடிவாகவே இருப்பவராவர். அவருக்கு இனி இங்கு எந்த வேலையும் இல்லை.

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 1/57

531. ***தத்துவமாம்:-*** ஜீவ கர்த்தத்துவத்தையும்! ஈச கர்த்தத்துவத்தையும்! நாசம் செய்யும் நிமித்தமாகவே பரமாத்மாவையும்! ஜீவாத்மாவையும்! இணைத்து ஐக்கியப்படுத்தினால் போதும். மறு வினாடியே அஸிபதமாகிய பரம்பொருளாக முடியும்.

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 1/64

532. **ஈஸ்வராதிகள் அளவுக்கு உட்பட காரணம்:-** மாயா சம்பந்தம் ஆகும். **அவர்கள் மாயாவை விட்டுவிட்டால் அவர்களும் அகண்டம் ஆவார்கள்.** அதே போல் ஜீவாத்மாவாகிய நாம் மனதாலேயே அளவுக்கு உட்பட்டிருக்கிறோம். **அம் மனதை விட்ட மறுக்ஷணம் நாமும் அகண்டமே. இது ஸத்தியம்.**

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 2/79

533. **இருபத்தி நான்கு! தத்துவங்கள் அவைகளாவன:-** ஞானேந்திரியம் **5;** கர்மேந்திரியம் **5;** பஞ்ச பிராணன் **5;** பஞ்சகோசங்கள் **5;** அந்தக் கரணங்கள் **4;** ஆக மொத்தம், **24ஐயும் தத்துவார்த்தம்! தத்துவ அர்த்தம்** என சொல்லுவார்கள். இவை இருபத்தி நான்கையும், உணர்ந்து அறிந்தாலே; **தத்** பத! பரமாத்மாவையும்! **த்வம்** பத!

ஜீவாத்மாவையும்! இணைத்து ஸ்ரீஸத்குரு கிருபையால், ஜீவன் முக்தி! பெறலாம் என்பது, ஸ்ரீமஹான்களின் அனுபவமாகும்.

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 2/84

534. **ஞானேந்திரியம்:-** மெய்! வாய்! செவி! மூக்கு! கண்! என ஐந்தாகும். இவை முறையே, ஸ்பரிசம்! இதில் குறி அடங்கும். சுவை! கேட்டல்! நுகர்தல்! பார்வை! என ஐந்து ஆகும்.

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 2/86

535. **கர்மேந்திரியம்:-** கைகள்! கால்கள்! வாக்கு! மல! ஜல! துவாரங்கள் என ஐந்தாகும்.

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 2/86

536. **பஞ்சப்பிராணன்:-** பிராணன்! அபானன்! உதானன்! சமானன்! வியானன்! என்ற 5 வாயுக்களாகும். இது யோக தாரணையோடு, கூடியதாகும். இது நமக்குத் தேவையில்லை.

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 2/88

537. **பஞ்சகோசங்கள்:-**

1. அன்னமய கோசம்!
2. பிராணமய கோசம்!
3. மனோமய கோசம்!
4. விஞ்ஞானமய கோசம்!
5. ஆனந்தமய கோசம்! என ஐந்தாகும். இவ்வைந்தும், ஆன்ம சாதனைக்கு, தேவைதான். இவைகளை சற்று

சுருக்கமாக, கோடிட்டு காட்டுகிறோம். ஆனால் இவை எல்லாமே சர்வார்ப்பணத்தில் நிவர்த்தி ஆகும்.

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 2/88

538. **அந்தக் கரணங்கள்:-** மனம்! புத்தி! சித்தம்! அஹங்காரம்! என நான்காகும்.

சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்? - 2/93

539. **சர்வார்ப்பணம்:-**

1. கலி தோஷ கோர குணங்களை நாசம் பண்ணும்!
2. நாம ரூபங்களை செயல் இழக்க பண்ணும்!
3. சொந்த, பந்த, பாச, உறவுகளை நாசம் செய்யும்!
4. சாட்சி நிலையை கூட்டி வைக்கும்!
5. ஏக குணத்துடன் உன்னை இணைக்கும்!

பல கனிகள் - 1/1

540. **பிரம்மார்ப்பணம்:-**

1. நாம ரூபங்களை மண் ஆக்கும்!
2. அதிசய பந்துக்களினால் பசு! பதி! பாசங்களை நாசம் செய்யும்!
3. சர்வ சாட்சி நிலையை கூட்டி வைக்கும்! நிர்க்குணமாக்கும்!
4. ஜீவன் முக்தியில் நிலை பெறச்செய்யும். ஜீவ கர்த்தத்துவத்தையும்; ஈச கர்த்தத்துவத்தையும்; நாசம் செய்யும்!

5. **எல்லாம் ஒன்றே! அதுவே நாம்! நாமே அது!** என ஆக்கி விட்டு மறைந்துவிடும்!

பல கனிகள் - 1/1

5-1. வேதங்களை ஒன்றாக கொடுத்தவர்; ஸ்ரீபிரம்ம தேவனாகும். அது மூன் மூன்று யுகங்களிலும் ஒன்றாகவே இருந்தது. கலி யுகத்திற்கென்றே அவ்வேதங்களை பிரித்து தொகுத்து கொடுத்தவர் ஸ்ரீவேதவியாசர் ஆகும்.

பல கனிகள் - 1/3

5-2. கலியுக மக்கள் உய்வடைவதற்காகவே நான்கு வேதங்களாகவும்; அதன் அடிப்படையில் பிராமண! க்ஷத்திரிய! வைஸ்ய! சூஸ்திரர்! என்ற நான்கு வர்ணங்களையும்! உலக நன்மைக்காக பிரித்து வாழ வழி வகுத்து கொடுத்தவர் ஸ்ரீவியாசபிரான் ஆகும்.

பல கனிகள் - 1/4

5-3. ஒரு நிலையில் சொல்லும் போது வேதம் ஸ்ரீபகவானின் மூச்சு காற்று என்றும்; வேதாந்த நான்கு மஹா வாக்கியங்களும் ஆதி மஹாத்தான மஹாத்மாக்களின் ஸ்வய அனுபவம் என்றும் ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

பல கனிகள் - 1/6

5-4. **உண்மையின் உணர்வு** என்றால் மனக்கண்களை மூடி, அறிவுக்கண்ணை திறந்து! எல்லாம் ஒன்றே! அது பரமாகிய மண்ணே! மண்ணாகிய பரமே! பரமாகிய நாமே! என சும்மா சுகமாயிருப்பது! உண்மையின் உணர்வு ஆகும்.

பல கனிகள் - 1/24, 25

545. **அறிவுக் கண்! மனக்கண்கள்!** என்றால் காமனை கண்ணால் எரித்தார்! கண்களால் எரிக்கவில்லை! காரணம் என்ன? கண் என்றால், அது **"அறிவுக்கண்!"** கண்கள் என்றால், அது **"மனக்கண்கள்!"** ஆகும் என உணர வேண்டும். பேத திருஷ்டி மனக்கண்கள் ஆகும். அபேததிருஷ்டி! அறிவுக்கண் ஆகும்.

பல கனிகள் - 1/24, 25

546. **அனுபவ அறிவு:-**

1. கற்க வேண்டியதை கற்றல்; அதன்படி நடத்தல்.
2. கண்டிப்பு! தண்டிப்பு இல்லாமை.
3. குற்றம் குறை நீங்க கற்றலும்; நீக்கிக் கற்றலும்.
4. இறை குரு உணர்வின் முழு சரணாகதி.
5. பொறுமை! கருணை! பணிவு! கனிவு! ஏக்கம்! உருக்கம்! இவைகளை தம் அனுபவ நிலையில் சாதித்து போதித்தல் ஆகும்.

பல கனிகள் - 1/32

547. **"உள்"** உணர்ந்த **"பக்தியும்!"** **"உள்"** ஆழ்ந்த **"ஞானமும்!"** உள்ள பக்குவ ஆன்மா எவரோ, அவரை இக்கலி தோஷ கோர குணங்கள்! பற்ற முடியாது! பற்ற கூடாது!! பற்ற இயலாது!!! இந்த ஸ்ரீமஹான்களிடம், பாடம் படிப்பு இராது. உள் ஆழ்ந்த கல்வியும்! உயரிய ஒழுக்கமும்! அவஸ்யம் உண்டு.

பல கனிகள் - 1/42

548. மடாதிபதிகளும்; பீடாதிபதிகளும்; ஆஸ்ரம சந்நியாசிகளும்; மடத்துக்கும்! பீடத்திற்கும்! ஆஸ்ரமங்களுக்கும் "**தான்**" அதிபதியாக இருக்கிறார்களேயன்றி; **தனக்கு எவரும் அதிபதியாக** விரும்புவதும் இல்லை. **விரும்ப** இயலவும் இல்லை. காரணம்? கலியின் பிரவர்த்தியாகும்.

பல கனிகள் - 1/44, 45

549. மனித வடிவில் வருபவர்களை உறவு! சுற்றம்! நட்பு! கணவன்! மனைவி! குழந்தை என சொந்த! பந்த! பாச! **உறவாக** காணாதே. அங்கு உன் மனக்கண்கள் உன்னை ஏமாற்றுகிறது. என உணர்.

பல கனிகள் - 2/71

550. **ஸ்ரீபகவான் வாசகமாவது:-** அக்கோடி அன்பர்களுள் நீயும் ஒருவன் தான் எமக்கு **பேதம்** இல்லை. உன் உள்ளமே எம் ஆலயம். உன் உள்ளத்தை மட்டும் எமக்கு கொடுப்பாயாக. வேறு எதுவும் வேண்டவே வேண்டாம். கண்ணன்.

பல கனிகள் - 2/73

551. **ஜீவ அழிப்பு** என்றால்:- ஸ்ரீஸத்குரு மூலமாக நாம, ரூப உலக உண்மை இன்மையை தெரிந்து கொண்டு **மனதை அறிவாக்கி! அறிவை பேரறிவாக்கி! பேரறிவை அகண்டானந்தம்** என்ற சமுத்திரத்தில் கலக்கச்செய்து பிறவா நிலையாகிய ஜீவன் முக்தியை அடைவது ஜீவ அழிப்பாகும்.

பல கனிகள் - 2/72

552. **அத்வைத ஞானத்தில் மட்டும், தம் தூல குரு மறைந்தாலும், மற்றொரு தூலம் மூலமாக, அவர் வழிகாட்ட முடியும்.** இவர் வேறு! அவர் வேறல்ல! அப்படி ஓர் நிலை பட்டால்தான், எல்லாம் ஒன்றே! அது சிவமே! அது யாமே! யாமே அது! என்ற பரிபூரண பிரம்மானந்தம் பெற முடியும். இது ஸத்தியம்.

பல கனிகள் - 3/108

553. **ஆத்ம** வேட்கை! உடையவன் எவனோ, அவனே **ஸத்** சிஷ்யன் ஆகும். அதாவது, தன்னை அறியும் அறிவை! உணர வேண்டும்; அது ஆக வேண்டும் என்ற, தீவிர எண்ணம், உடையவன் எவனோ, அவனே ஸத்சிஷ்யன். மற்றும் 15 கலைகளில், எந்தக் கலை கற்றவனாயினும்; கற்க விரும்புவனாயினும்; அவன் சாமான்ய சிஷ்யனே.

பல கனிகள் - 3/109

554. **ஆத்மஞானம்** ஒன்றை! தேடி அலைந்து, பெற்றால்தான், இனி பிறவா நிலை!யை (ஜீவன் முக்தியை) அடைய முடியும். மற்றும் எந்த கலையும், **கொலையே!** தவிர (அழிவன! அழிப்பனவே! தவிர) அழியாதன அல்ல, (ஆத்ம ஞானத்தை) இதை **ஸ்ரீஸத்குரு!** ஒருவரால்தான், அருள முடியும். இது ஸத்தியம்.

பல கனிகள் - 3/110

555. இந்த ஆத்மஞானமானது, தேடுவதும் அல்ல தேடப்படுவதும் அல்ல. கொடுப்பது; வாங்குவதும் அல்ல. **அதுவாகவே** நாம் இருக்கிறோம். **நாமே அதுவென**

உணராதிருக்கிறோம். அவ்வுணர்வை கொடுப்பவரே, ஸ்ரீஸத்குரு! பெறுபவரே ஸத்சீடன்.

பல கனிகள் - 3/110

556. **ஸத்சிஷ்யனை கண்டு உணரும் நிலை?** பேர்! புகழ்! பட்டம்! பதவி! போட்டி! பொறாமை! ஆடம்பரம்! விளம்பரம்! வியாபாரம்! இல்லாத நிலையில் தாம் **அடங்கி** பிறரை எக்காரணம் கொண்டும் **அடக்கா!** பொறுமையின் & பணிவுடன் **இறை! குரு! பர!** உணர்வுடன் கூடியவர் எவரோ அவரே ஸத்சிஷ்யன் ஆவார்.

பல கனிகள் - 3/110, 111

557. **பணம் & பெண்!** இவைகளிடம் **அதிக மோஹம்!** கொண்டவன் எவனோ? அவன் ஸத்சீடன் ஆகான். இது ஸத்தியம்.

பல கனிகள் - 3/112

558. **ஓர் உண்மை:-** 1. சுகப்பிரம்மம் அம்ஸம், 2. வால்மீஹி அம்ஸம், 3. வேதவியாசர் அம்ஸம், 4. உத்தவர் அம்ஸம், 5. நாரதர் அம்ஸம், 6. வஸிஷ்டர் அம்ஸம், 7. பாண்டுரங்கன் அம்ஸம் என்றும்; ஸ்ரீமஹான்களையும்! ஸ்ரீபகவானையும் **அவதாரம்!** எடுத்ததாகக் கூறும் வரலாறுகள் எல்லாம் **அவர்களே! வந்தார்கள் என்றோ; வருவார்கள் என்றோ; பொருள் கொள்ளல் வேண்டாம்.** அவர்கள் அம்ஸம் என்றால் **குணம்** என பொருள் கொள்ளல் வேண்டும்.

பல கனிகள் - 3/113 *to* 119

559. **நாள் காட்டி** இது ஸாமான்ய குரு ஆகும். இவர் ஸாஸ்திரம் வேதம்! இவைகளை புகட்டி தர்ம நெறியை பரப்ப வேண்டும் என போதிக்கக் கூடியவர்.

பல கனிகள் - 3/125, 126

560. **வழி காட்டி** என்றால் **ஸத்திய தர்மத்தை** போதிக்கக் கூடியவர்.

பல கனிகள் - 3/125, 126

561. **கை காட்டி** என்றால் இவர் ஸத்திய தர்மத்தை போதிப்பவரல்ல **தம் சாதனை**யால் ஸ்தாபிப்பவராகும், என ஸ்ரீமஹான்களால் சொல்ல கேள்விப்படுகிறோம், கைகாட்டி ஒன்றே பர! இறை! குரு! சொரூபமாகும். இந்த நிலையே பட்ட கட்டை போன்றும்; குத்துக்கல் போன்றும். தாம் இருந்து உணர்ச்சிகளை கெடுத்து, **உணர்வை** (மேலோங்க செய்து;) கொடுத்து சாகாமல் சாகிறோம் என்ற **பர;தத்;த்வம்!** நிலையை கொடுப்பதாகும்.

பல கனிகள் - 3/126 - 128

562. 1. **ஸத் என்றால்,** அசைவற்ற இருப்புத்தன்மை! ஒன்றை மட்டும் உடையதாகும்.

2. அந்த ஸத்தே, **ஸித்தாக** மாறும்போது, **அசைக்கும்!** தன்மையை பெறுகிறது.

3. அந்த ஸித்தே **சித்தமாக!** வடிவெடுக்கும்போது, **அசையும்** தன்மையை, பெறுகிறதென்று உணர வேண்டும்.

4. ஆகவே, நாம, ரூப, ஜக, ஜீவ அசைவே **சித்தம்** ஆகும். நம்மை அதுவாகவே, உணர்ந்து ஸ்வய அனுபவம் பெறும்போது, சித்தம் இல்லவே இல்லை.

பல கனிகள் - 3/125

563. **ஞானேந்திரியம் ஐந்தும்! கர்மேந்திரியம் ஐந்தும்!** இணைந்ததே, முறையே **பொறிகள்!** என்றும்; **புலன்கள்!** என்றும்; சொல்வர்.

1. **பொறிகள்** என்றால், **வெளி** விஷயங்களை, எலிப் பொறி போன்று கவர்ந்து, உள் இழுக்கக் கூடியதாகும். கண்! காது! மூக்கு! நாக்கின் சுவை! சரீர ஸ்பரிசம்! ஆகிய இந்த ஐந்தும், வெளி விஷயங்களை, **கிரஹிக்கும்! ஞானேந்திரியம்** ஆகும்.
2. **புலன்கள்** என்றால், அப்படி வெளி விஷயங்களை உள் இழுத்து, செயல் படுத்துவதாகும். கை! கால்! நாக்கின் பேச்சு! மல & ஜல துவாரம், இரண்டும் மேலே கூறிய, ஞானேந்திரிய விஷயங்களை உள்ளே கிரஹித்து, **செயல்!** படுத்தும் நிலையில், அமைந்ததே **கர்மேந்திரியம்** ஆகும்.

பல கனிகள் - 3/128, 129

564. மனமானது கிரஹிக்கும் விஷயங்களை கைகள்! கால்கள்! மல! ஜல! துவாரம் இரண்டு! வாக்கு! ஆகிய இந்த ஐந்தினாலும் செய்து கர்மாவை பெருக்கிக் கொள்வதால் இவை ஐந்தும் **கர்மேந்திரியம்** ஆகும்.

பல கனிகள் - 3/130

565. **ஆய பல உயிர்கள்** என்றால்:- ஆராய்ந்து உயிர் இனமென தேர்ந்தெடுக்கப்பட்டன என்று பொருள்படும். மற்றோர் நிலையில் பேதம் இல்லாமல், அனைத்து உயிர் இனங்களும் என்று பொருள்படும்.

பல கனிகள் - 3/132

566. **ஸாமான்ய குருவுக்கு** நாம, ரூபம்! உண்டு. காரணம் அவர் லௌகீகத்தையும்! தெய்வீகத்தையும்! இணைத்து பிணைப்பவராகும். அங்கு பிறவி உண்டு.

பல கனிகள் - 3/133

567. **ஸ்ரீஸத்குருவு**க்கு நாம, ரூபம் இல்லை! இங்கு அவர் தூலம் முக்கியமல்ல. அவர் ஒலி & ஒளி சொரூபமானவராகும். அவர் வாக்கால் பர ஒலியை கொடுத்து அருட் (அறிவின்) பார்வையால் ஒளியை ஏற்றுபவராகும். ஆகவே **ஸ்ரீஸத்குரு பார்வையில் பட்ட ஒருவன் ஜீவன் முக்தனே என்பது பிரமாண உண்மையாகும்.**

பல கனிகள் - 3/134, 135

568. ஜீவனை மறைக்கும் மனதின் திரையை **சர்வார்ப்பணத்தால்** அழிக்கலாம். ஜீவனை மறைக்கும் மாயாவின் திரையை **பிரம்மார்பணத்தால்** அழிக்கலாம்.

பல கனிகள் - 3/160

569. **மாயாவின் திரை ஓடும்** என்றால்:- ஜக, ஜீவ ஈஸ்வராதிகளாக பார்த்தால் **மாயாவின் திரை** ஓடும்.

பல கனிகள் - 3/161

570. **மாயாவின் திரை அகலும்** என்றால்:- நாம, ரூப, ஜக, ஜீவ ஈஸ்வராதிகளை எல்லாம் **மண்ணே!** என உணர்ந்தால் அங்கு மாயாவின் திரை அகலும்.

பல கனிகள் - 3/161

571. **சர்வார்ப்பணத்தால்** தூல வினையும் அதன் குணதோஷங்களும் நாசமாகும்.

பல கனிகள் - 3/162

572. **பிரம்மார்ப்பணத்தால்** ஈஸ்வராதிகளின் மாயா மறைந்து எல்லாம் மண்ணே என உணர முடியும். வேறு எந்த மார்க்கமும் அத்வைத மார்க்கம் அல்ல.

பல கனிகள் - 3/162

573. **நான்! என்னை!** என்னால்! **எனது!** இவைகளை விடாதவன் எவனோ **அவனே கலிபுருஷன்!**

"கலி"மஹாத்மாவுடன் ஓர் ஸத்தான உரையாடல் - 5

574. எண்ணிலடங்கா சிரம் & கரம் கொண்டு நீ வந்தாலும், உன் திருவடி இரண்டு தானே? யாம் பற்றிக் கொள்ள அவ்விரு திருவடி போதும் கலிதேவா! **காலைப்** பிடித்தவனுக்கு **கால** பயம் இல்லை, **கலி** தோஷமும் இல்லை, **கடவுள்** ஆகலாம், **பர** சொரூபமும் (ஜீவன் முக்தியும்) பெறலாம்.

"கலி"மஹாத்மாவுடன் ஓர் ஸத்தான உரையாடல் - 16, 17

575. **பரிஹாரம்** என்பது ஒன்றுக்கொன்று வினைகளை எடுத்தும்; வினையை கொடுத்தும்; **பரிமாற்றம்**

செய்வதாகும். பரிஹாரம் வினையின் நிவர்த்தி அல்ல. நிவர்த்தி செய்ய முடியாது! செய்ய இயலாது! இதுவே கலியின் விதியின் நியதி.

"கலி"மஹாத்மாவுடன் ஓர் ஸத்தான உரையாடல் - 30

576. **மெய் அன்பர் யார்** என்றால்:-

எந்த துன்பத்திலும்! எந்த வேதனையிலும்! இது நம்முடைய **வினையே** என பணிவாக ஏற்றுக் கொண்டு சகித்துக்கொள்ளலும்; விட்டுக்கொடுத்து **நலமே** என ஏற்றுக் கொண்டு எல்லாம் நீயே! என சர்வார்ப்பணமுடன் எவன் இருக்கிறானோ அவனே மெய் அன்பர். ஏனையோர் மெய் அன்பரைப்போல் உள்ளவர்.

"கலி"மஹாத்மாவுடன் ஓர் ஸத்தான உரையாடல் - 31, 32

577. உன்னிடம் நான் இல்லை, உன் அன்பர்களிடமும் நான் இல்லை. பின் எப்படி உங்கள் அனைவரிடமும் நான் இருக்க முடியும் என்றான் கலிதேவன்.

"கலி"மஹாத்மாவுடன் ஓர் ஸத்தான உரையாடல் - 34

578. ஓ எம் கலிதேவனே! நான்! என்னால்! என்னுடையதை! முழுமையாக **நாசம்** செய்தவர்களும்; பொறுமையின் பணிவாக கனிவாக! இருப்பவர்களே எம்முடைய மெய் அன்பர்கள் ஆகும். ஏனையோர் மெய் அன்பர்களைப் போல் இருப்பவர்கள் என்று உணர்க.

"கலி"மஹாத்மாவுடன் ஓர் ஸத்தான உரையாடல் - 34, 35

579. பரிஹாரத்தால் **இஷ்டம்** நிறைவேறும். **கஷ்டம்** மாற்றி அமைக்கப்படும். இதை கஷ்டப்படுபவன் உடனே அறிய முடியாது. முடியாதபடி கலிதோஷம் உடனே மறைத்துவிடும்.

"கலி"மஹாத்மாவுடன் ஓர் ஸத்தான உரையாடல் - 36

580. ஒருவருக்கு ஒருவர் கொடுத்து வாழ வேண்டும் என்பது **ஸத்திய தர்மமாகும்.** ஒருவரை ஒருவர் கெடுத்து வாழ வேண்டும் என்பது **கலியுக தர்மமாகும்.**

"கலி"மஹாத்மாவுடன் ஓர் ஸத்தான உரையாடல் - 40

581. கலியுக தோஷத்தை கலியுக தர்மம் என ஏன் போட வேண்டும் என்பதே அனைவருடைய கேள்வி ஆகும்? இங்கு ஒன்றை கவனிக்கவும். தன்னை உள்ளபடி இன்னார் என அறிந்து கொண்ட அத்வைத ஸ்ரீமஹான்கள் விளக்கை ஏற்றி வைத்தவுடன் இருள் எப்படி ஓடிவிடுமோ; அதே நிலையில் ஸத்திய தர்மத்தை மட்டும் சுட்டிக் காட்டினால் போதும். கலிதோஷ இருள் நீங்கி; கலியுக தர்ம ஜோதியாய் பிரகாசிக்கும் என்று ஸ்ரீமஹான்கள் சொல்லக் கேள்வி.

"கலி"மஹாத்மாவுடன் ஓர் ஸத்தான உரையாடல் - 44, 45

582. ஓர் உண்மையை உணரவும். ஸத்திய தர்மத்தோடு எல்லாம் **அவனே!** பின் எல்லாம் **அதுவே!** என **உணர்வு** பூர்வமாக ஆகிவிட்டால்; கால தேவன் ஏது? கலிதேவன் ஏது? இயக்க நிலையில் அவனாகவும், இயக்கமற்ற நிலையில்

அதுவாகவும் ஆனால் தானே அங்கு பிரம்மம் ஸத்தியம் ஜகத் மித்யை என்பது ஸத்தியமாகும்?

"கலி"மஹாத்மாவுடன் ஓர் ஸத்தான உரையாடல் - 48, 49

583. ஓ எம் ஆத்மானந்த குழந்தைகளே! மனதின் பிடியில், அகப்பட்டவர்களுக்கு, **கலி!** உண்டுதான். மனதை ஜயித்தவர்களுக்கு, **கலியும்!** அவன் **தோஷ!** குணங்களும்; இல்லையென்பதே ஸத்தியம்.

"கலி"மஹாத்மாவுடன் ஓர் ஸத்தான உரையாடல் - 49

584. **காமியார்த்தம்:-** தேவதை உபாசனையில், நீயாக, இஷ்டப்பட்டு, பலவந்தமாக, ஏற்கும், வலிய கர்மா என ஒன்று.

"கலி"மஹாத்மாவுடன் ஓர் ஸத்தான உரையாடல் - 50

585. **காரியார்த்தம்:-** விதிக்கப்பட்ட, கர்மா என ஒன்று; இஷ்ட காமியம்! இஷ்டகாரியம்! என்றாலே அதன் பொருள் கஷ்டத்தை! **இஷ்டப்பட்டு** வாங்குகிறோம் என்ற, பொருள்படும். காரணம் இந்த ஜீவன்! நான்! எனது! என்பதை விடுவதில்லை. இஷ்டப்பட்டு அவைகளே விடமுடியாத் தன்மையால், கஷ்டம் இச்ஜீவனை விடுவதில்லை.

"கலி"மஹாத்மாவுடன் ஓர் ஸத்தான உரையாடல் - 50

586. **கஷ்டத்தை இஷ்டப்பட்டு வாங்குவது** என்றால்? **முன்! பின்!** அறியாமல் பேசுவதும்! செய்வதும்! தெரியாமல்! அஹங்கார! அதிகார! ஆதிக்கத்தால், செய்து அதில் ஓர் இன்பம் அடைகின்றனர் அதன் முடிவு கடும்

துன்பமாக முடியும். இதுவே கஷ்டத்தை இஷ்டப்பட்டு வாங்குவதாகும்.

"கலி"மஹாத்மாவுடன் ஓர் ஸத்தான உரையாடல் - 51

587. **பொறாமை** என்றால்? நம்மிடம் இல்லாதது அவனிடம் இருக்கிறதே என்றும்; என்னிலும் அவன் எப்படி உயரலாம் என்றும்; தன்னை உயர்த்தி! பிறரை தாழ்த்தி அந்த போட்டியினால் எழும் விரோத! குரோத! கனல் ஆகும்.

பொறுமையும்! பொறாமையும்!! பொங்கல் மலர்!!! - 3

588. **பிராமணன் யார்** என்றால்:-

1. பிரம்மத்தை உணர்ந்தவனே பிராமணன் ஆவான்.
2. நிஷ்டை என்றால் நீ இஷ்டப்பட்டு பெறும் ஓர் தபஸாகும். ஆகவே **பிரம்ம நிஷ்டானு சாதனம்.** செய்பவனே **பிராமணன் ஆகும்.** ஏனையோர் பிராமணனாகார்.
3. **பிராமணனை, பார்ப்பான்!** என்றும்;
4. **பார்ப்ப(ன)(வ)ன்!** என்றும்; கூறுவதுண்டு.
5. அதாவது சாட்சியாக பார்ப்பவன்! அதாவது,
6. ஸ்ரீபகவத் சாட்சி சைத்தன்யமாக இருப்பவன்! என்றும்; பொருள்படும். ஆகவே பார்ப்பனன் என்பது, **ஜாதி குலம், கோத்ரம்,** அல்ல. மேலே கூறிய, ஆறும் நிரம்பியவன் எவனோ, அவனே பிராமணன் என்றும் பார்ப்பவன் என்றும், ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

பொறுமையும்! பொறாமையும்!! பொங்கல் மலர்!!! - 4

589. **வீரம்** இருந்தால் **வீராவேசமும்!** அதனால் தோன்றும்; **கோபாவேசமும்!** அந்த இச்சையின் பலத்தால் **மோஹா வேசமும்!** உண்டாகும். இம்மூன்றும் இணைபிரியாத நண்பர்கள் ஆகும். இம்மூவரும் இருக்கும் இடத்தில் கண்டிப்பாக **விவேகம்** இருக்க முடியாது.

பொறுமையும்! பொறாமையும்!! பொங்கல் மலர்!!! - 5 to 8

590. **விவேகம்** என்பது **எதில் தோன்றும்** என்றால்?

விவேகம் தோன்றும் இடம்:- பொறுமை! கருணை! பணிவு! வாக்கில் கனிவு! செயலில் நிதானம்! **எல்லாம்** நலமே என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை! எதையும் ஏற்றுக் கொள்ளும் சகிப்புத் தன்மை! எதிலும் எங்கும் தீமையென காணாமையும்; உணராமையும் விவேகம் ஆகும்.

பொறுமையும்! பொறாமையும்!! பொங்கல் மலர்!!! - 7 & 8

591. **விராட்! ரூபம்** என்றால் ஒன்றே நெடிதுயர்ந்து விண்ணும்! மண்ணும் நிறைந்து நிற்பதாகும்.

பொறுமையும்! பொறாமையும்!! பொங்கல் மலர்!!! - 20

592. **விஸ்வம்!** என்றால் அனைத்து ஜீவ கோடிகளும் தம்முள் நிறைந்து! நாமே அவை அனைத்துமாகி சர்வ வியாபகமாய் நிறைந்திருக்கும் தன்மையாகும்.

பொறுமையும்! பொறாமையும்!! பொங்கல் மலர்!!! - 20 & 21

593. **மித்திரன்!** என்றால் சகோதரத்வம் என்றும் நண்பன் என்றும்; ஒற்றுமையின் ஐக்கியம்! என்றும் சொல்லலாம்.

பொறுமையும்! பொறாமையும்!! பொங்கல் மலர்!!! - 21

594. **விஸ்வாமித்திரன்** என்றால் பேதம் இல்லாமல் எல்லாம் ஒன்றான நிலையில் ஐக்கியமாக நம் மனம் **அறிவு** ஆன நிலை ஆகும். இது ஞானத்தில் முதிர்ச்சி ஆகும். இதுவே அதீதானந்த நிலையும் ஆகும்.

பொறுமையும்! பொறாமையும்!! பொங்கல் மலர்!!! - 22

595. **ரஜோ குணத்தை** ஸத்வ குணம் போராடி ஜயித்தது என்றால்? ரஜோ குணம் என்பது இருள். ஸத்வகுணம் என்பது ஒளி! ஆனால் இவை இரண்டையும் கார்மேகம் என்றும்; சூரியன் என்றும்; கொள்ளலாம். ஆகவே இங்கு பலத்த காற்று வீசினால்தான் கார்மேகம் கலைந்து ஓடிவிடும். அங்கு உடனே சூரியன் பிரகாசிப்பான். இங்கு பலத்த காற்று என்பது **சர்வார்ப்பணம்!** ஆகும் என உணர்க.

பொறுமையும்! பொறாமையும்!! பொங்கல் மலர்!!! - 38 & 39

596. **பிரம்மரிஷி! யார் ஸ்ரீவஷிஸ்டர் வாக்கு**:- ஓ எம் பிரம்ம ஞானியான, எம் அருமை விஸ்வாமித்திரரே! எந்த சாதகனிடம்! **உடலில்! பணிவும்! வாக்கில்! கனிவும்!!!! வாழ்க்கையில்! பொறுமையும்!** நிறைந்து, பொங்கி, ததும்பி, வழிகிறதோ? அவனிடம் சர்வார்ப்பணம் நிறைவு பெறும். அவனிடம் பிரம்மார்ப்பணம் உறுதி பெறும். அவன் **பிரம்ம ஞானியாக!** திகழ்வான். அவனே **பிரம்மரிஷி!** என போற்றப்படுவான். அவனுக்கு உலகியலில், கர்மா

முடிவுறுகிறது. அவன் தெய்வீகத்தில், சாட்சி நிலையையும் தாண்டி, **பர** நிலையில் சர்வ சாட்சி நிலையில், நிலைபெறுகிறான்.

பொறுமையும்! பொறாமையும்!! பொங்கல் மலர்!!! - 47

597. **பாபம் நீங்கும் நிலை ஸ்ரீவஷிஸ்டர் வாக்கு:-** ஒருவன் நான்! எனதை! விடாத நிலையில் அஹங்கார! அதிகார! ஆதிக்க! காம **வெறியனாக** இருந்தபோதும். மனம் திருந்தி! மனம் வருந்தி! மனம் உருகி! கரைந்து! கதறி! அழுது முறையிட்டு **இறை & குரு** சந்நிதியில் சரண் புகுவானாயின்; **அவன் பாபம்** அந்த வினாடியே நீங்க பெறுகிறான். இது ஸத்தியம்.

பொறுமையும்! பொறாமையும்!! பொங்கல் மலர்!!! - 48 *to* 50

598. **சர்வார்ப்பணத்தால்!** அவனை பற்ற வேண்டும். (வேறு எதாலும் முடியாது.) பின் **பிரம்மார்ப்பணத்தால்!!** அதுவே நாம் என, ஆக வேண்டும். (வேறு எந்த சாதனமும் இக்கலியில் இல்லை.)

சிவராத்திரி!!! மலர்!!! - 1/22

599. ஸ்ரீவிஸ்வாமித்திரர்! ஸ்ரீதுர்வாஸர்! போன்ற ஸ்ரீமஹான்கள் ஓர் **பதுமை**களாக பயன்படுத்தப்பட்டு; அப்பதுமைகள் மூலமாக ஸ்ரீசிவபெருமான் மிளிர்கிறார் என ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம்.

சிவராத்திரி!!! மலர்!!! - 1/37

600. **ஆத்மா** என்றால் **அறிவு** என்றும் பொருள்படும். ஆத்மா என்றால் **பிரம்மம்** என்றும் பொருள்படும். அறிவால் அதுவே

நாம்! நாமே அது! என உணரும் போது நாம் பிரம்ம மயமாகி விடுகின்றோம். இப்படி உணரும் போது கடவுள் என்ற நிலையில் உள் கடந்து! உள் கடந்து நம்முள் இருக்கும் அந்த சைதன்யத்தை நாம் என உணர்வதே கடவுளை உணரும் நிலையாகும்.

சிவராத்திரி!!! மலர்!!! - 1/53, 55

601. சர்வார்ப்பணத்தில் பூரண நிறைவு பெற்றுவிட்டால் ஸ்ரீபகவானின் **மாயா**! செயல் இழந்து விடுவதால் நாம, ரூபம் படிப்படியாக, படிப்படியாக மறையும்.

சிவராத்திரி!!! மலர்!!! - 1/59

602. **மனம் மஹாத்தான நிலை:-** நாம, ரூபம் மறையும்போது நாம, ரூபத்தையே பற்றி ஆடிய இந்த மனதிற்கு பிடிமானம் இல்லாமையினால் அம்மனமும் தன் தாயாகிய மாயாவுடன் சென்று மறையும். இதையே மனம் மஹாத்தான நிலையென சொல்வர்.

சிவராத்திரி!!! மலர்!!! - 1/60

603. **அறிவு தம்முள் தாம் மறைந்து கொள்ளும்** என்றால்:- அக்கினி ஓர் மறை பொருளே. எங்கும் உடனே தானாய் தோன்றாது. தோன்ற இயலாது. ஒன்றுடன் ஒன்று உரசினால் (இணைந்தால்) தான் தோன்றும். அதே போல் பொறுமையும்! பணிவும்! **இணையும்!** போதுதான் அறிவு பிரகாசிக்கும். அங்கு அதன் அம்ஸ **ஸ்ரீபகவானும்!** பிரத்யக்ஷமாவான். இது ஸத்தியம்.

சிவராத்திரி!!! மலர்!!! - 1/69, 70

604. இக்கலியுகத்தில் **ஸ்ரீபாகவத தர்மம்** மிகச் சிறந்ததாகக் கூறப்படுகிறது. அத்துடன் தீவிர முயற்சியும் இருந்தால் ஜீவன் முக்தி அவஸ்யம் உண்டு.

சிவராத்திரி!!! மலர்!!! - 1/75

605. **ஓர் முக்கியம்:-** 1. ஸத்குரு திருவடி துணை! 2. நம்பினார் கெடுவதில்லை! 3. தெய்வம் மனுஷ்யானாம்! 4. யத் பாவம் தத் பவதி! இந்த நான்கு ஸத்திய வாசகங்களும்; ஓர் ஆன்ம சாதகனுக்கு, போதுமானதாகும்.

சிவராத்திரி!!! மலர்!!! - 2/75A

606. **ஓர் உண்மை என்னவென்றால் நீ உன் அறிவின் உறுதி எண்ணத்தினால் ஸ்ரீபரம்பொருளுக்கு ஸ்ரீபகவான் வடிவம் கொடுக்கிறாய்.** அதுவும் ஏற்றுக் கொள்கிறது. அது கருணையோடு ஏற்றே ஆக வேண்டும். **ஆனால்** உன் மனோமய கற்பனையால் நாம, ரூப ஜகத்தை பற்றும்போது; நீயே புண்ணிய பாப வினையை தேடி அவ்வினைக்கேற்றபடி நீயே உனக்கு ஓர் தூலம் ஏற்றுக் கொள்கிறாய்.

சிவராத்திரி!!! மலர்!!! - 2/97, 98

607. **ஸ்ரீஸத்குருவை** காண்பது என்பது அவர் **பர!** சொரூபமாகவே இருந்தாலும், மனோ வடிவில் உள்ள உனக்கு நம்பிக்கை ஏற்படுவதற்காகவே அதுவே ஓர் தூல வடிவம் உன் போன்று தாங்கி வந்திருக்கிறதென்று உணர்வாயாக. ஆனால் ஸ்ரீஸத்குரு என்பவர் **ஒலி & ஒளி** வடிவம் என்பது ஸத்தியமே.

சிவராத்திரி!!! மலர்!!! - 2/99, 100

608. லோக மாயாவின் தன்மையையும்!, இயக்கத்தையும்!; அறிவால்! மட்டும் உணர முடியும். மனதால் உணர முடியாது. அதே போல் யோக மாயாவின் தன்மையையும், இயக்கத்தையும்; **பேரறிவு!** ஒன்றால் தான் உணர முடியும். அதை **அறிவால்** கூட உணர முடியாது என ஸ்வய அனுபவ ஞானிகள் வாயிலாக அறிகிறோம்.

சிவராத்திரி!!! மலர்!!! - 2/107, 108

609. **நீயே** என்றால் அது ஓர் நாம ரூபமுள்ள **ஸ்ரீபகவானை குறிக்கும்.**

சிவராத்திரி!!! மலர்!!! - 2/121

610. **ஒன்றே** என்றால்:- நாம, ரூப, குணம், குறி, கால, தேச, வர்த்தமான, மன, வாக்கு காயம் கடந்த **பர சொரூபத்தையே குறிக்கும்.**

சிவராத்திரி!!! மலர்!!! - 2/121

611. காண்பதையும்! கேட்பதையும்! அங்குள்ள வினை சம்பந்தம் தெரியாமல் முடிவெடுப்பது அவசர வேக அறியாமை என்ற கவனக் குறைவாகும். நிதானம் பொறுமையுடன் உன் வாக்கு வந்தால் அது உன்னையும் பாதிக்காது. அது பிறரையும் பாதிக்காது.

சிவராத்திரி!!! மலர்!!! - 2/145

612. கஷ்டம், கவலை, துக்கம், துயரம், லாப நஷ்டம், இவை அனைத்தும் வருவது உன் **வாக்கே!** காரணம் ஆகிறது. இப்போது உன் வாக்கு அடங்கினால் முன் செய்த

தீவினைக்கு நீ அடங்குதலே பரிஹாரம் ஆகும். வேறு சாதனை வேண்டாம்.

சிவராத்திரி!!! மலர்!!! - 2/146

613. **மனம் அறிவாகும் நிலை:-**

நாம, ரூபம் தோற்றினால் அங்கு மனம் வளர்கிறது என பொருள். நாம, ரூபம் எதுவானாலும் அனைத்தும் மண்தானே என உணர்ந்தால் அங்கு மனமே மறைந்து அறிவு பிரகாசிக்கிறதென்று உணர வேண்டும். இங்கு மனமே அறிவாகிறது.

சித்திரை! விசுவின் மலர்! - 1/2

614. நாம, ரூபத்தை தோற்றும் மனமானது அந்த நாம, ரூபங்களில் அஹங்கார, அதிகார, ஆதிக்கத்தால் உடைமையும், உரிமையும் கொண்டாடினால் அதுவே புண்ணிய பாபமாகவும், ஜனன மரணமாகவும் மாறி பிறவிச் சுழற்சியை அதி வேகமாக உண்டு பண்ணும்.

சித்திரை! விசுவின் மலர்! - 1/3

615. **அன்பே உருவானவன்;** பணிவு! பொறுமை! கனிவு! ஓர்மையுடன்! திகழ்வதால்; வேக தாபங்கள்; இல்லாத தன்மையினால், தேவையும், ஆசையும், இல்லாதவனாய்; போதும் என்ற, பரிபூரண! நிறைவுடையவனாய், **ஜீவன் முக்திக்கு, தகுதி உடையவனாகிறான்.**

சித்திரை! விசுவின் மலர்! - 1/3

616. **அறிவே தாம் ஆனவன்;** சர்வார்ப்பணத்தால்! கர்மாக்களை, துறந்தவனாய், சாட்சி நிலையையும்; பின்

சர்வ சாட்சி நிலையையும்; பெற்று **ஜீவன் முக்தியை அடைகிறான்.**

சித்திரை! விசுவின் மலர்! - 1/3

617. **பொறுமையே கவசமாக கொண்டவன்!**
சகித்தல்! விட்டுக்கொடுத்தல்! எல்லாம் நலமே என ஏற்றல்! இவைகளால்; பக்குவம் ஆகி இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என்ற பூரண நிறைவினால், **ஜீவன் முக்தனாகிறான்.**

சித்திரை! விசுவின் மலர்! - 1/3

618. **பணிவே பாதையாக கொண்டவன்;** எதிலும் முட்டாமல், மோதாமல், எகிறி குதிக்காமல், சாதனையில் சோதனைகளை எல்லாம், வளைந்து, நெளிந்து சென்று, **ஜீவன் முக்தனாகிறான்.**

சித்திரை! விசுவின் மலர்! - 1/35

619. **அறிவே ஆன்மா! ஆன்மாவே அறிவு!** ஆனால் இந்த ஆன்மா மாயாவோடு சம்பந்தம் கொண்டால் அது ஸ்ரீபகவான் ஆகும். அதே ஆன்மா மனதால் மூடப்பட்டால் அது மனிதன் என்ற ஜீவாத்மாவாக மாறிவிடும்.

சித்திரை! விசுவின் மலர்! - 1/35

620. **அத்வைத ஞானம்:-** ஒன்றுடன் ஒன்று இணைவதால் பெறும் நாம, ரூபம் எதுவானாலும் அவை மண்ணே என்றும்; மண்ணுக்கு அன்னியமாய் எதுவும் இல்லையென்ற உணர்வு பெற்றுவிட்டால் அதுவே அத்வைத ஞானம் ஆகும்.

சித்திரை! விசுவின் மலர்! - 1/36

621. **வாய் ஞானம்:-** என்பது வேத வேதாந்த படிப்பறிவினால் பாடம் ஒப்பிக்கும் பாண்டித்ய ஞானமாக விளக்கம் தரலாம்; பெறலாம்; **அதுவாக!** விளங்க முடியாது என்பதே ஸத்தியம்.

*சித்திரை! விசுவின் மலர்! - 1/50*

622. நடந்தவைகளை **மறக்க** வேண்டும். நடந்தவைகளை எண்ணினால் வினை பெருகும். நடக்கப் போகும் கற்பனை வேண்டாம். அப்படி கற்பனை செய்தால் விதி விளையாடும். நடப்பதை நலமாக எண்ணினால் நலம் பெறலாம்.

*சித்திரை! விசுவின் மலர்! - 1/59*

623. **பிரம்மச்சாரி** என்றால்:- யாம் ஸ்ரீபகவானின் குழந்தை! என்றும்; அடுத்து யாம் ஆத்மா என்றும்; அடுத்து யாம் பரமாத்மா என்றும்; யாம் பரப்பிரம்மம் என்றும்; **பர நிலையை!** எவன் ஆஸ்ரயித்து பாவித்து! (அனுபவ நிலையில்) இருக்கிறானோ அவனே பிரம்மச்சாரி.

*சித்திரை! விசுவின் மலர்! - 1/60*

624. கண்கள் திறந்தாலும்; மூடினாலும்! காதுகள் கேட்டாலும்; மறந்தாலும்! உண்டாலும்! உறங்கினாலும்! நின்றாலும்! நடந்தாலும்! கிடந்தாலும்! சென்றாலும்; வந்தாலும்! கொடுத்தாலும்; வாங்கினாலும்! எந்த நிகழ்ச்சிகளும்! அங்கு **நான்! என்னால்! எனது! இல்லை! கருவி கரணங்கள்!** செய்கின்றன. என்ற உறுதியில், நிலை

குலையாதிருப்பவனே, **திடப்பிரக்ஞன். அவனே பிரம்மச்சாரி.**

சித்திரை! விசுவின் மலர்! - 1/62

625. அங்கங்களை நோக்காதே. அவை! எவை! என உள் ஆழ்ந்து உணர்க. அவை அனைத்தும் **நாம, ரூப,** ஜக சிருஷ்டியின், ஆதாரம்! ஆகாரம்! ஆதரவு! என உணர்ந்து களங்கங்களை நீக்குக.

சித்திரை! விசுவின் மலர்! - 1/63

626. உன் எண்ணமே **பாபம்! பாதகம்!! பவித்ரம்!!!** இறை & குரு! உணர்வு இருந்தால் (சர்வார்ப்பணம்! பரிபூரணமாக இருந்தால்) களங்கமான, எண்ணம் வராது. **ச**ந்தேக பயம் தோற்றாது.

சித்திரை! விசுவின் மலர்! - 1/64

627. **நித்திய உபவாஸம்** என்றால்:- ஆகாரம் உண்ணாமல் பட்டினி கிடந்து அதை உபவாஸம் என்று சொல்வதை விட, ஸத்குருவின் உபதேச வார்த்தையை சிரத்தையுடன் ஏற்று அப்யாசம் செய்து ஶ்ரீபகவான் மூலம் அந்த ஒன்றை அடைவதுவே **நித்திய உபவாஸம்** ஆகும்.

சித்திரை! விசுவின் மலர்! - 2/68

628. **மனம்!** இருந்தால் **அழுதே!** ஆக வேண்டும். **அறிவு!** இருந்தால் **சிரித்தே** ஆக வேண்டும்.

சித்திரை! விசுவின் மலர்! - 2/77

629. **கோப, வேக, தாபத்தோடு!** வரும் வார்த்தையும்; செய்யும் செய்கையும்; நிலை தடுமாற்றத்தால் **நாம் யார்?** என்று உணராத நிலையில் வருவதாகும், அது அழிவேயாகும்.

சித்திரை! விசுவின் மலர்! - 2/92

630. நீ உன்னுள் அடங்கும் போது; அவனும் அவனுள் அடங்கியே ஆக வேண்டும். அப்படி அடங்கினால் தான் அங்கும் இங்கும்; எங்கும்; இருப்பவன்; **ஒருவனே!** என்பது ஸத்தியமாகும்.

சித்திரை! விசுவின் மலர்! - 2/93

631. இறை & குரு உணர்வு இல்லாமல் வாக்கு வந்தால்; அது நாம, ரூப சம்பந்தம் கொள்வதால் அஹங்கார அபிமான, ஆதிக்க, அதிகார வெறியுடன்! தான் வர முடியும்; வெறியுடன்! தான் வர இயலும்; அப்படி வரும் வாக்கே புண்ணிய, பாப சம்பந்த வினை விதையாகவே தொடர்வுறும். அதன் பொறுப்பு இச்ஜீவனுடையதே அங்கு இறை & குரு! பொறுப்பாக முடியாது.

சித்திரை! விசுவின் மலர்! - 2/94

632. உன் **வாக்கே, விதை!** ஆகும். உன் **உள்ளமே!** விதை நிலம் ஆகும். உன் **கண், காதே, உரம்! &** ஜலமும் ஆகும். உன் சரீர **இன்ப துன்பமே!** பலன் ஆகும். அப்பலனால் பெறும், புண்ணிய பாபமே! ஜனன மரணம் ஆகும்.

சித்திரை! விசுவின் மலர்! - 2/94

633. 1. கண் **காணலாம்!** ஆனால்; கண்டிக்காதே! தண்டிக்காதே!!

2. காது **கேட்கலாம்!** ஆனால்; **சந்தேகம்!** களங்கம்! கலக்க பயம் வேண்டாம்.

3. வாய் **பேசலாம்!** ஆனால்; உன் மனம், கொதிக்கவும் அதனால் பிறர் மனம் புண்படவும் வேண்டாம்.

சித்திரை! விசுவின் மலர்! - 2/99

634. ஓர் ஸ்ரீஸத்குருவின் நிலையை எவரும் காணவோ! உணரவோ! முடியாது என்பதே ஸத்தியம்.

1. அவர்! ஸாமான்யனும் ஆவார்.

2. சர்வலோக, சரண்யனும் ஆவார்.

3. ஜீவாத்மாவும் ஆவார்.

4. பரமாத்மாவும் ஆவார்.

சித்திரை! விசுவின் மலர்! - 2/103

635. **மாஸ்கோ!வில் 8வது தோற்றம்:- கலி!**யுகம் முடியும் தருணம்; அவர் **(ஸ்ரீதூளி பாபா) 8வது** தோற்றமாக, **மாஸ்கோ!**வில் தோன்றப் போவதாக, **ஆதி!** ஸ்ரீமஹான்கள்! திருவாக்காக **(பர ஒலியாக)** உணர்கிறோம்.

சித்திரை! விசுவின் மலர்! - 2/107

636. **சிப்பியில் வந்த வெள்ளி:-**

1. மண்ணாக இருக்கும் போது; அழகு; வசீகரம்; கவர்ச்சி; **மதிப்பு & மரியாதை** இல்லை. அம்மண்ணே

பொன்னாக மாறியதும்; அழகு, வசீகரம், கவர்ச்சி, மதிப்பு & மரியாதை வந்து விடுகிறது.

2. அதே போல் சிப்பியை காணும் நிலையில் அழகு, கவர்ச்சி, வசீகரம், மதிப்பு & மரியாதை இல்லை. ஆனால் சிப்பியில் விளைந்த முத்துக்கு! மேலே கூறிய நிலையில் மதிப்பு & மரியாதை உண்டு.

3. ஆகவே இங்கு உன் **ஸ்ரீஸத்குருவின் தூலம்! சிப்பி போன்றதாகும். அவர் வாக்கு முத்து ஆகும். ஆகவே முத்தை ஏற்றுக்கொள். சிப்பியை தள்ளிவிடு.**

சித்திரை! விசுவின் மலர்! - 2/144, 145

637. உன் ஸ்ரீஸத்குருவின் வாக்கை நம்பி உன் அறியாமையின் சொந்த, பந்த, பாசங்களை நாசம் செய்ய என்னென்ன துன்பம் அனுபவித்தாய்? அப்படிப்பட்ட உனக்கு உன் வல்வினைகளை உன் ஸ்ரீஸத்குரு ஏற்று ஜீரணிக்காவிட்டால் அவர் இங்கு உன் போன்று ஓர் தூலம் தாங்கி வந்ததில் அர்த்தம் இல்லாமல் போய்விடும். இதில் ஆச்சர்யம் ஒன்றும் இல்லை, உன்னை துடித்து வருத்த வினைகளை அவர் நடித்து காலி செய்துவிட்டார். அவ்வளவுதான்.

சித்திரை! விசுவின் மலர்! - 2/146, 147

638. ஸ்ரீகுருதேவர் மூலமாக ஸ்ரீபகவானின் லோக மாயா கர்மாவை பரிபாஹறப்படுத்தும். பர கருணை நிலையில் யோக மாயா அக்கர்மாக்களை பஸ்பம் ஆக்கியும்; வேறு கர்மா தொடராமலும் பாதுகாக்கும்.

சித்திரை! விசுவின் மலர்! - 2/156 A

639. ஸ்ரீஸத்குரு கிருபையினால் **நம்பும்!** அன்பர்களுக்கு மட்டும், இரு மாயாவும், இணைந்து செயல்படும். அப்படி செயல்படும்போது அம்மாயாவின் மனம் வெகு எளிதாக சுலபமாக மஹத்தாக மார்க்கம் உண்டு என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

சித்திரை! விசுவின் மலர்! - 2/156 B

640. **குருக்ஷேத்திர போர்** என்றால்? க்ஷேத்திரம் என்பது க்ஷேத்திரக்ஞன் என்ற ஆன்மாவை குறிக்கிறது. அதாவது நம் ஆன்மா, நம் சரீரம் என்ற அஞ்ஞான சிறையில் அடைபட்டிருக்கிறான் என்றும், அப்படி சிறைப்பட்ட **ஆத்மாவை! ஸ்ரீஸத்குரு!** அத்வைத ஞானப் பாடம் என்ற போர் வீரர்களால் அஞ்ஞானிகளை! விரட்டி அடித்து கொன்று நாசம் செய்கிறார் என பொருள்படும்.

சித்திரை! விசுவின் மலர்! - 2/164, 165

641. வாக்கே **விதை!** வாசல் ஆகும். அதன் பலன் புண்ணிய பாபமும்! அதன் வழியில் அமையும் ஜனன மரணமும் ஆகும். ஆகவே வாக்கில் கவனம் இருந்தால் தோஷம் இல்லை. வாக்கில் கவனம் இருந்தால் ஜீவன் முக்தி உண்டு.

சித்திரை! விசுவின் மலர்! - 2/178

642. பரமாணுக்களின் ஒட்டுமொத்த இணைந்து பிணைந்த நாம ரூபங்களே அனைத்து அண்ட, பிண்ட சராச்சரங்களும் ஆகும்.

நீ அடங்கு! உலகம் உன்னுள், அடங்கும்! - 2

643. **அண்டம்** என்பது:- கோடானகோடி கோள்களும் சூர்ய சந்திராதிகளும் ஆகிய ஜட சொரூபம் ஆகும்.

நீ அடங்கு! உலகம் உன்னுள் அடங்கும்! - 3

644. **பிண்டம்** என்பது:- அனைத்து உயிரினங்களின் சரீரம் ஆகும்.

நீ அடங்கு! உலகம் உன்னுள், அடங்கும்! - 3

645. **அது** இயக்கம் இல்லாததனால் இயக்கத்தின் நிமித்தம் மாயாவை பயன்படுத்திக் கொண்டு உலகின் நிலையில் மாயாவை உடைய ஸ்ரீபகவானாகவும்; உண்மையை அடைய மாயாவை தம்முள் அடக்கிய நிலையில்; **ஸ்ரீஸத்குரு!** ஆகவும்; இலங்குகிறது. துலங்குகிறது; விளங்குகிறது! அது செய்யும் வேலையின் நிமித்தம் **நாமா!** வேறுபடுகிறதேயன்றி; இருப்பின் நிலையில் ஒன்றே என மட்டும் உணர்ந்தால் போதும்.

நீ அடங்கு! உலகம் உன்னுள், அடங்கும்! - 10, 11

646. **அதுவே!** ஓர் ஞானியாய் வேஷம் தாங்கும்போது தாமே ஓர் ஸ்ரீஸத்குருவாக வேஷம் தாங்கி ஜீவ அழிப்பின் நிலையில் அறியாமையின் மனதை கெடுத்து ஜீவன் முக்தி பெறுகிறது.

நீ அடங்கு! உலகம் உன்னுள், அடங்கும்! - 20

647. அவனும்! நாமும்! **ஒன்று!** என ஆகிவிட்டால் கோர தோஷ குணங்கள் உன்னிடம் இராது. இருக்க இயலாது அக்கோர தோஷ குணம் இருந்தால் நீ! அவன்! என ஆகவில்லையென உணர்வாயாக.

நீ அடங்கு! உலகம் உன்னுள், அடங்கும்! - 28

648. வாழ்க்கையில் எளிமையும்! வாக்கில் இனிமை கொண்டால் அது வாழ்க்கை ஆகாது. அது ஓர் மாபெரும் **சாதனை!** ஆகும்.

நீ அடங்கு! உலகம் உன்னுள், அடங்கும்! - 31

649. **எளிமை** என்றால்; உன் வினையின்படி இருப்பதிலும்! கிடைப்பதிலும்! நடப்பதிலும்! இது இறை கருணையென சந்தேக கலக்க பயமில்லாமல், பேராசையில்லாமல் நிறைவோடு இருப்பது எளிமையாகும்.

நீ அடங்கு! உலகம் உன்னுள் அடங்கும்! - 32

650. **இனிமை** என்றால்; வாக்கில் **கடும்! சுடும்!** சொல் வராமல் அமைதி ஸாந்தியில் இறை & குரு (எல்லாம் நீயே!) வாக்கு வந்தால் அது இனிமையும் அமுதமும் ஆகும்.

நீ அடங்கு! உலகம் உன்னுள், அடங்கும்! - 33

651. **அடங்குதல்** இதன் பொருள்! சொல்லாலும்! செயலாலும்! உலகையும்; பிறரையும்! அடக்காமல் **தான்** தன்னுள் அடங்கி இருந்தால் இவன் **மனதை** ஜயித்தவனாகும்.

நீ அடங்கு! உலகம் உன்னுள், அடங்கும்! - 41

652. **அடக்குதல்!** இதன் பொருள்! சொல்லாலும்! செயலாலும் உலகையும்; பிறரையும்! அடக்கி; அதிகாரம்; ஆதிக்கம்; செலுத்துபவன் **மனம்** வசப்பட்ட தன்மையால் அந்த மனம் இவனை அடக்கி அழித்துவிடும்.

நீ அடங்கு! உலகம் உன்னுள், அடங்கும்! - 42

653. இறை குரு நம்பிக்கை பூரணமாக உள்ளவருக்கு அப்பயம் தேவை இல்லை. நீ அடங்கும் போது; அவனும் அடங்கியே

ஆக வேண்டும். அப்படி அவன் அடங்கவில்லையாயின் ஸ்ரீபகவான் இல்லையென்பதே ஸத்தியம்.

நீ அடங்கு! உலகம் உன்னுள், அடங்கும்! - 45

654. **கல்வி** என்பது:- பேதம் காணாமையும்! விருப்பு வெறுப்பு; களைதலும்; **குற்றம் குறை!** காணாமல் எண்ணத்தில் எல்லாம் **நீயே!** என்ற அமைதி பெறும் சாதனையே கல்வி ஆகும்.

நீ அடங்கு! உலகம் உன்னுள், அடங்கும்! - 46

655. மனதை ஸ்ரீபகவான் நாமாவால் அமைதி, சாந்தி செய்தவன் ஸ்ரீபகவான் கருணையால் போதும் என்ற நிறைவோடு ஸ்ரீபகவான் நடத்துவதில் வினையை தான் ஏற்காமல் சர்வார்ப்பணம் மூலமாக கணக்கை முடித்துக் கொண்டிருக்கிறான். இவனுக்கு **மனோ பாரம் இல்லை.**

நீ அடங்கு! உலகம் உன்னுள், அடங்கும்! - 48

656. **மனதை!** ஸ்ரீஸத்குரு கருணையினால், மஹத்தாக ஆக்கியவன் மண்ணும் பொன்னும் ஒன்றென உணர்ந்த தன்மையால்; மண்ணாகிய பர சொருபத்தில் ஒன்றி கலந்த தன்மையால் வினையும் மனமும் இல்லாமல் சும்மா சுகமா இருக்கிறான்.

நீ அடங்கு! உலகம் உன்னுள், அடங்கும்! - 49

657. காம, காஞ்சன ஆசையை விட்ட நிலையில் **அவனே!** ஸ்ரீபகவான் என ஆகி விடுகிறான். காரணம் எந்த தோஷ குணங்களும் அவனிடம் இருப்பதில்லை. இருக்க இயலாது.

நீ அடங்கு! உலகம் உன்னுள் அடங்கும்! - 50

658. **நிர்விகல்ப சமாதி:- விகல்பம்!** என்றாலே, நாம, ரூப பேதத்தால்; **விருப்பு & வெறுப்பு!** தோன்றும். அவ்விருப்பு வெறுப்பால், குற்றம் குறை தோன்றும். **பதில்:-** இம்மூன்றையும், வரிசைக்கிரமமாக, கெடுத்தலே, (இது **கடும்!** பயிற்சியும், முயற்சியும் ஆகும்). **குற்றமற்ற அமைதியாகும்!** இது நிர்விகல்ப சமாதியாகும். இதில் மனம்; அமைதி! பெறுகிறது. இது சர்வார்ப்பண நிலை ஆகும்!

நீ அடங்கு! உலகம் உன்னுள், அடங்கும்! - 52, 53

659. **சவிகல்ப சமாதி:-** விகல்பம் என்றாலே, குற்றம் குறை என முன்பே சொன்னோம். முன் கூறிய நிலையில், கடும் முயற்சி! பயிற்சியோடு! **நிறைவு!** பெறும்போது, சர்வார்ப்பணம் நிறைவு பெற்று, **நாம்!** ஸ்வய அனுபவமாகவே; **ஸ்ரீபகவத் சாக்ஷாத்காரம்!** முழுமையாக பெற்று விடுவோம். இங்கு ஸ்ரீபகவத் சொரூபம் முக்கியம் பெறுவதால், இங்கு **சிற்றின்பம்!** முழுமையாக அழிந்து **பேரானந்தம்!** பெறும் நிலையே, சவிகல்ப சமாதி ஆகும்.

நீ அடங்கு! உலகம் உன்னுள், அடங்கும்! - 53, 54

660. **சகஜ சமாதி:-** இங்கு ஸ்ரீஸத்குரு அருளும், பிரம்ம ஞானத்தால்! அதாவது, பிரம்மார்ப்பணத்தால்! முன் சொன்ன இரு நிலை சமாதிகளும், எப்பயிற்சியும்! முயற்சியும்! இல்லாமலேயே, **சகஜமாகவே!** (இயல்பாகவே) இது ஸாத்தியமாகும். இதை சகஜ சமாதி என வாக்கிய விளக்கமாக சொல்வார்கள். ஆனால் இது

**முழுமையாக பரப்பிரம்மானந்தம்!** பெற்று, **அது நாம்! நாமே அது!** என்ற **பூரணத்வம்,** பெறுவதாகும்.

நீ அடங்கு! உலகம் உன்னுள், அடங்கும்! - 54, 55

661. உலகம் ஓர் நாடக மேடை என்றும் அனைவரும் அவரவர் போட்ட வேஷத்திற்கு நடிக்கிறார்கள் என்றும் ஓர்மை பெற்றால் மட்டும் பேதம், விருப்பு வெறுப்பு, குற்றம் குறை நாசமாகும்.

நீ அடங்கு! உலகம் உன்னுள், அடங்கும்! - 53

662. எல்லாம் ஸ்ரீபகவான் பொருள், ஸ்ரீபகவான் செயல் என உறுதி நிச்சயம் பெறும்போது அவஸ்யம் நாம் ஸ்ரீபகவத் சாக்ஷாத்காரம் பெற்றுவிடுவோம். இந்நிலை பெற்றாலே போதும். பின்னால் எந்த முயற்சியும் பயிற்சியும் தேவை இல்லாமல் நாம் அதுவாகவே இருக்கிறோம் என்ற பூரணானந்தம்! பெற்றுவிடுவோம். இது ஸத்தியம்.

நீ அடங்கு! உலகம் உன்னுள், அடங்கும்! -54, 55

663. ஒளி! ஒலி! என இரண்டாகும். இதன் உண்மை என்னவென்றால்? ஒளியில் இருந்தே, ஒலி வந்தது என உணர்க. ஒளி என்றால் **அகண்டப்பேரொளி!** ஆகும். ஒலி என்றால் யோக மாயாவின்! ஸப்தார்த்தமான "ஓம்" என்ற பிரணவம் ஆகும்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 1/3

664. **ஒளியில் இருந்தே ஒலி வந்தது** என்றால்? ஒளியின் **அதிர்வே** ஒலி ஆகும். ஆகவே ஒளியே முதலில் வந்தது. பின் அதன் அதிர்வாகிய ஒலி **(பிரணவம்!)** வந்தது.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 1/7

665. **அறிவு!** மனப் போர்வையால், மூடுண்ட நிலையில், **மனித ஜீவன்!** ஆகிறது.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 1/20

666. **அறிவு** மாயாவை! ஏற்றுக் கொண்ட நிலையில், **ஸ்ரீபகவான்!** என்ற **ஈசன்!** ஆகிறது.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 1/20

667. **அதே அறிவு!** மனமும் மூடாமல்; மாயாவையும் பற்றாமல், சுதந்திரமாக இருக்கும் போது, **அதுவே ஆன்மா!** ஆகிறது.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 1/20

668. **மனம்** என்றால் எண்ணம்! அதாவது தோஷ கற்பனை! இந்த எண்ணங்களின், தோஷ கற்பனையே, புண்ணிய பாபம் ஆகும். அப்புண்ணிய பாபங்களே! தூல உடல் ஆகும். இப்படி புண்ணிய பாபம்! எனச் சொல்லும், தூல உடல்! **வினைக்கூடு!** ஆகும். இதில் என்ன விளங்குகிறது என்றால்? மன எண்ணம் இல்லாமல், வினை உடல் இல்லை. வினை உடல் இல்லாமல் மனமும் எண்ணமும் இல்லை.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 1/21

669. **ஸ்ரீபகவான்** என்றால், **அறிவு! அறிவு** என்றால் **ஆன்மா!** (அறிவானது) மாயா சம்பந்தம் கொண்டால், ஸ்ரீபகவான் ஆகும். அறிவானது, மாயா சம்பந்தம் இல்லாத நிலையில் அறிவே! ஆன்மா! என்பதும் ஸத்தியமாகும்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 1/23

670. இந்த மனமாகிய எண்ணம்! **இந்த மனித!** தோற்றத்தில்தான் உண்டு. வேறு எந்த தோற்றங்களிலும், இல்லை என்பதே ஸத்தியம். அனைத்து ஜீவ வர்க்கங்களிலும், மனம் இல்லை. அறிவாகிய, ஸ்ரீபகவானிடமும் மனம்! இல்லை. மனம்! படைத்ததனால் இவன் **மனிதன்!** என ஆனான் என்பதே ஸத்தியம். இம்மனிதனிடம் மட்டும் **மனமும்!** உண்டு. **அறிவும்!** உண்டு. மற்றும் அனைத்திலும் **மனம்!** இல்லை. மற்றும் அனைத்திலும் **அறிவு!** (ஸ்ரீபகவான்) **மட்டும்** உண்டு என்பதே ஸத்தியம்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 1/24

671. **அண்டம்** மனிதர்கள் வாழும் உலகம். **ரண்டம்:-** மற்றைய உயிரினங்கள் வாழும் உலகம். **பிரம்மாண்டம்:-** அளவிட முடியாத மிகப் பெரிய கோள் & உலகம்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 1/30

672. **அணுவே!** அறிவு! **அறிவே** ஆன்மா! **ஆன்மாவே!** ஸ்ரீபகவான்! **ஸ்ரீபகவானே! நாம்!** அப்படியானால், நாமே அணு! நாமே அறிவு நாமே ஆன்மா! நாமே ஸ்ரீபகவான்! அனைத்தும் நாமே! **நம்மை!** அல்லால், **எதுவும் & எவரும்!** இல்லவே இல்லை. இது ஸத்தியம்! ஸத்தியம்!! ஸத்தியம்!!!

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 1/44

673. **அணு ஆராய்ச்சி!** என்பது:- **கலி தோஷ** ஆராய்ச்சி ஆகும். தன்னை இன்னார் என, உணராமல்; நாம, ரூப,

குண தோஷங்களில், ஆட்படுத்தி தன்னை மறக்கடித்து, அஹங்காரம் வெளிப்படுவதாகும்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 1/46

674. **மனதை! நீ யார்?** என கேட்டு ஆராய்ந்தால், மனம் அழிந்து மஹத்தாகும். **அறிவை!** நீ யார்? என கேட்டால், மனதின், அஹங்காரம்! **ஆத்மாவை** திரையிட்டு மூடும்; (அஞ்ஞானம் சூழும்) என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு -1/46

675. ஞானிகளின் தோற்றம்! முன் மூன்று ஸத்திய யுகமாகும். அஞ்ஞானிகளாகிய விஞ்ஞானிகளை உண்டாக்கியது கலியுகமாகும்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு -1/46

676. **அறிவு!** என்பது:- யாமே எல்லாமாய்! அனைத்துமாய்! இருக்கிறோம் என்ற நிலை ஆனந்தம்! **அது அறிவு!**

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 1/54

677. **பேரறிவு!** என்பது:- யாமே! அதுவாகவே! இருக்கிறோம் என்ற நிலை பேரானந்தம். **இது பேரறிவு!** நிலையாகும்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 1/54

678. **பிரம்மானந்த சகஜ நிலை** என்பது:-

யாம்! யாமாகவே! இருக்கிறோம் என்பது வாக்கும்! வரியும் மௌனமாய்! அதுவே மௌனானந்தமாய் சும்மா! சுகமாகவே! இருக்கும் நிலை பேரறிவும் ஒடுங்கிய **பிரம்மானந்த சகஜ நிலையாகும்.**

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 1/55

679. **வினை ஒழிந்தால் தேகம் இல்லை!** என்றால்:-
மன எண்ணம் முழுமையாக அழிபட வேண்டும். அங்கு **ஜீவ கர்த்தத்துவம்** முழுமையாக அழிந்து **ஈச கர்த்தத்துவம்** முழு நிலை பெற வேண்டும்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 2/86

680. **தேகம் ஒழிந்தால் வினை உண்டு** என்றால்:-
இந்த பிராரப்த தூலம் வினை முடிந்து நாசமானது, ஆனால் ஆகாமியமும் பழம் பெரும் மூட்டையாகிய சஞ்சிதமும் வினை தூலத்தை கொடுத்தே தீரும்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 2/87

681. நாம, ரூபமே உன் மனதை விகாரப்படுத்தி; விவகாரம் (பிரச்சனை) பண்ணி வைக்கிறது. ஆகவே நாம, ரூபத்தை மட்டும் இல்லை! இல்லை! இல்லை! எனத் தள்ளினால் நீ அதுவாகவே இருப்பாய். இது ஸத்தியம்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 2/95

682. **சிருஷ்டியின் ஆதாரம்! பஞ்ச பூதங்கள்** (ஆகாயம்!, வாயு! அக்கினி! ஜலம்! பிருதிவி!) ஆகும். இப்பஞ்ச பூதங்களில், முதல் இரண்டும் (ஆகாயம் வாயுவும்) யோக மாயாவின்! அம்சம் கொண்டதாகும் என்றும்; பின் மூன்றும்! (அக்கினி! ஜலம்! பிருதிவி!) லோக மாயாவின்! அம்சம் கொண்டதாகும். என்றும்; ஸ்ரீமஹான்களால், சொல்லப்படுகிறது.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 2/97, 98

683. **சதாசிவம்! & மஹேசன்**! என **அண்ட!** சிருஷ்டி என்றும்; பிரம்மன்! நாராயணன்! சிவ பெருமான்! என்ற நிலையில், லோக மாயாவுடன், இணைந்து பிணைந்து ஆனது, **பிண்ட!** சிருஷ்டி என்றும்; கொள்ள வேண்டும். முந்தையது **ஜட!** சிருஷ்டி! பிந்தையது **ஜீவ!** சிருஷ்டி ஆகும்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 2/99

684. **வைத்தியம்:-** ஐயா! நாராயணா! எனக் கூறும் வாக்கானது, வைணவ **மத பேதமல்ல!** எந்த மூர்த்தியையும்! குறிப்பதல்ல. அதன் பொருள்! **மங்களம் பொங்குக!** என்றும். நலம் பெற்று வாழ்வாய்! என்றும், ஸ்ரீமஹான்கள் ஆசி அருளும், வாழ்த்துரையாகும்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 2/121

685. **ஸ்ரீஹரி** என்றால் அறிவு ஆகும். அதுவே ஆத்மா ஆகும். ஸ்ரீஹரி ஓம் என்றால், அது நாமாவே! காரணம் என்னவென்றால்? எந்த ஓர் வாக்கியத்திற்கும்! அல்லது நாமாவுக்கும்! ஓம் என்ற பிரணவம்! **முன்னால்!** போட்டால், அது மந்திரம் ஆகும். **பின்னால்!** போட்டால், அது மஹா வாக்கியம் ஆகும். ஓம் என்ற பிரணவமே! அனைத்திற்கும் **உயிர்!** ஆகும் என ஸ்ரீமஹான்கள் கூறுவர்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 2/122

686. வினை அழிய சர்வார்ப்பணம்! மனம் அழிய பிரம்மார்ப்பணம்! இங்கு எல்லாம் நீயே! இங்கு நாம

ரூபம் உண்டு! இங்கு எல்லாம் ஒன்றே! இங்கு நாம ரூபம் இல்லை! இதுவே ஜீவன் முக்தி!

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 2/123D

687. வாழ்வு வேண்டுமானால் **சாதனையை விட்டுவிடு.** சாதனை செய்ய வேண்டுமானால் **வாழ்வை துறந்தே** ஆக வேண்டும் என்பதே ஸ்ரீமஹான்களின் அனுபவ வாக்காகும்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 2/123L

688. **அகிலம்** என்றால்:- நாம ரூப உலகமாகும்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 3/124

689. **நிகிலம்** என்றால்:- நாம, ரூபம் எல்லாம் ஆகும். அதாவது நாம, ரூப, ஜக, ஜீவ பொன் பொருள் உறவு! சுற்றம்! நட்பு! ஆகிய இவை அனைத்தும் **நிகிலம்** எனப் பொருள்படும்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 3/124

690. **அகில** (ஜட) சிருஷ்டி ஈசன் சிருஷ்டியாகும் **நிகில** (அனைத்து நாம, ரூப பொருள்களும்) இம்மனித ஜீவனின் **மனோமய** சிருஷ்டியாகும். இந்த நிகில சிருஷ்டி என கூறும் அனைத்து நாம, ரூபங்களையும் தேவை & ஆசைகளை குறைத்து! குறைத்து எந்த வினாடி இந்த மனம் நிறுத்துகிறதோ அந்த வினாடியே ஜீவன் முக்தி நிச்சயம் பெறலாம்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 3/125, 126

691. **ஆய மனோ பேதம்:- கண்ணால்** கண்டும்! **காதால்** கேட்டும்! அனைத்து நாம ரூபங்களையும் விருப்பு

வெறுப்பாக கற்பனை பண்ணி பேதம் குற்றம் குறை காணலே ஆய மனோ பேதம் ஆகும்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 3/127

692. **ஆய ஜக ஐக்கியம்:-** எல்லா நாம ரூபங்களையும்! சர்வார்ப்பண நிலையில் ஸ்ரீபகவானுடையதாகவும்! ஸ்ரீபகவானாகவும்! முதலில் காண்பதும்; பின் அனுபவத்தினால் அனைத்து நாம, ரூபங்களையும்! முதலில் **மண்!** பதுமை & பாண்டம்! ஆக உணரும் நிலையும்; பின் எல்லாம் மண்ணே! மண்ணாகிய பரமே! பரமாகிய நாமே! என உணர்வது **ஆய ஜக ஐக்கியம்** ஆகும்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 3/128, 129

693. **கடமை! நடிப்பு!** என்றால்:- **கடமை** என்றால் செய்தே ஆக வேண்டும்! **நடிப்பு** என்றால் எல்லாம் பொய்யே என்பது உறுதியாகும்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 3/139

694. உலகம் உன்னை வெறுக்க வேண்டும். நீ உலகை வெறுக்காதே. மாறாக போதும் என நிறைவுகொள்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 3/140

695. **கடமை!** என்றால் உள்ளமும் உடலும் கனிந்து பணிவதே; பணிவிடை என்ற **சேவை** ஆகும். **மனிதனாக!** பிறந்த, உன் கடன் (கடமை) என்ன என்பதை, சற்று ஆழ்ந்து, கருத்தூன்றி, சிந்திப்பாயாக, நிஷ்காமிய பக்தீயும்! அன்பர்களின் சேவையும்! **கடமை!** ஆகும்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 3/144

696. வாழ்க்கை உன் கடமையல்ல. இறை பணியே உன் கடமையாகும். இது ஸத்தியம்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 3/150

697. ஸ்ரீபாகவத சேவையும்; தான தர்மங்களும்; இறை அன்பும்; அனைத்து உயிர்களையும் அவனாக கண்டு தோஷம், பேதம் நீக்கி அன்பு செலுத்தி பாசம் இல்லாத அன்பு செலுத்துவதும் கடமை ஆகும்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 3/153

698. **நடிப்பு** என்றால்:- நாம, ரூப சம்பந்த உறவு! சுற்றம்! பொன் பொருள்! மற்றும் அனைத்து ஸம்ஸார காரியங்களிலும் ஓர் வேஷம் தாங்கி வந்ததால் நடிக்கிறோம் என அதை ஓர் நாடக சினிமா நடிப்பாக எண்ணி சிரத்தையற்றிருப்பது நடிப்பு ஆகும்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 3/154

699. மனோ நிலையில், **வினை!** உடல்களாகும். அறிவு நிலையில் **மண்!** பொம்மைகளாகும். பேரறிவு நிலையில், எல்லாம் **மண்!** என ஆகும்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 3/159

700. **பசு!** என்றால் **பாசம்!** என ஏன் சொல்கிறார்கள் என்றால் அது நாம, ரூபம் சம்பந்தம் கொண்ட நிலையில் குண தோஷங்களுக்கு ஆளாவதால் அதை பாசம் என்றார்கள்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 3/163

701. **அன்பு** என்றால் சர்வார்ப்பண நிலையில் ஸ்ரீபகவன் நாம ஸ்மரணையோடு வேறு எந்த நாம ரூபத்தையும் எண்ணாமல் நிஷ்காம்யமாக சொல்லும்! செயலுமாகும்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 3/164

702. என்னுடையது என நாம, ரூபங்களை **சொந்தம்!** கொண்டாடும் போது; ஆகாமிய வினை பளு உன் உடலையும்! மனதையும்; பற்றிக் கொள்கிறது. அதனால் மனோ சிரமமும் தூல உபாதையும் உண்டாகிறது.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 3/165

703. 1. ஸ்ரீபிரம்மா! ஸ்ரீநாராயணன்! ஸ்ரீசிவபெருமான்! இம்மூவரும் வந்ததும் இல்லை! மறைந்ததும் இல்லை! இருப்பு மட்டும் உண்டு.

2. ஸ்ரீவினாயகன்! ஸ்ரீமுருகன்! வரவும்! இருப்பும்! உண்டு. ஆனால் மறைவு இல்லை.

3. ஸ்ரீராமனும்! ஸ்ரீகண்ணனும்! வரவு! இருப்பு! மறைவு! ஆகிய இம் மூன்றும் உண்டு.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 3/179

704. சாட்சி பாவனை ஸ்ரீபகவான்! சர்வ சாட்சி பாவனை உன் ஸ்ரீஸத்குரு! ஆகவே உன் ஸ்ரீஸத்குரு அனைத்துமாய்! அனைவருமாய்! இருந்து கொண்டு உண்டோ! உடுத்தியோ! கொடுத்தோ! வாங்கியோ! உன் வினைகளை! அவர் ஜீரணிக்க முடியும்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 3/187

705. ஸ்ரீபாதுகையை வைத்திருப்பவர்கள் ஸ்ரீபாதுகை தெரியும் நிலையில் கண்ணாடி பெட்டியின் உள்ளே ஓர் வஸ்திரம் போட்டு வைத்திருக்க வேண்டும். தினமும் ஒரு முறையாவது கற்பூர ஆரத்தி செய்ய வேண்டும். புஷ்பமோ! திருதுளசியோ பாதுகையின் மேல் போடாமல் (படாமல்) கண்ணாடி பெட்டியின் மேல் போடுவது மிகவும் நல்லது.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 3/196, 197

706. மனம்! புத்தி! சித்தம்! என்றால் அதன் பொருள் பழையன கழிதலும் புதியன உருவாக்குவதும் ஆகும். **அறிவாக!** இருந்தால் நாம, ரூபம் வலு இழக்கும். பின் பேரறிவினால் நாம, ரூபம் நாசமாகும். ஜீவன் முக்தி உண்டு.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 4/200

707. நாம, ரூபம்! தோற்றும் வரையில் ஸ்ரீபகவான், தோன்றமாட்டான், தோன்ற முடியாது. தோன்ற இயலாது. நாம, ரூபம் மறைந்த **மறு!** க்ஷணம் ஸ்ரீபகவான் தோன்றுவான்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 4/203

708. ஆடம்பரமான வாழ்க்கையை விரும்பினால் **அமைதி** நில்லாது, எளிமையான வாழ்வுடன் சாதனை செய்தால் அமைதியும்! ஆனந்தமும் நிலைபெறும். ஊர் உலகம் புகழ வாழ முடியாது. உள்ள நிறைவோடு வாழலாம்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 4/216

709. நாம, ரூப, ஜகம் எந்த வினாடி உன்னை கைவிடுகிறதோ **மறு** வினாடியே உன் உபாசனா மூர்த்தியாகிய ஸ்ரீபகவான்

எங்குமாய்! எல்லாமாய்! அனைத்துமாய்! ஏகமாய்! எல்லாம் அவனே என ஆவான். இது ஸத்தியம்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 5/217

710. உனக்கு உன் அவயங்களை (கண்! காது! வாய்! கை! கால்கள்! மொத்தத்தில் உடல்) ஏன் கொடுத்தான் தெரியுமா? **அவனை** பணியவும்; ஸத் கார்யம் செய்யவும்; அவன் அன்பர்களுக்கு **பணிவிடை!** செய்யவும்தான் கொடுத்தான்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 5/218

711. **பணிவிடை** என்றால்? **நீ பணி**ந்தால் அதன் **விடை** இயல்பாகவே உன்னை நாடி தேடி வரும் இது ஸத்தியம். மாறாக பொன்! பொருள்! போகும் தேட உனக்கு உடலை கொடுக்கவில்லை. இது ஸத்தியம்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 5/219

712. **அமுதவாக்கு:-** மௌனம் என்பது, வாய் பேசாமல் இருப்பது மௌனமாகாது. பேசாமல் எழுதிக்காட்டுவதும்! சைகை செய்வதுவும்! மௌனம் ஆகாது. மிக மிக குறைவாகவும்! இறை குரு உணர்வாகவும்! நாம் **அடங்கி!** பிறரை எக்காரணம் கொண்டும்; எந்நிலையிலும்; எவ்விடத்தும்; **அடக்காமல்!** இருப்பது மௌனம் ஆகும். **நீ** அடங்கினால் உலகம் உன்னுள் அடங்கும். இது ஸத்தியம். **நீ** அடக்கினால் உலகம் உன்னை அடக்கி அழித்துவிடும். இது உறுதி.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 5/235

713. **ஸ்ரீபகவானும்! ஸ்ரீஸத்குருவும்! ஒன்றே:-**

1. ஸ்ரீபகவானாக இயங்கும் போது லோக மாயாவினால் அவனுடைய புண்ணிய பாபத்தை வைத்து வினையை பரிபாகப்படுத்துவார்.

2. ஸ்ரீஸத்குருவாக இயங்கும் போது எவரும் அறியா நிலையில் யோக மாயாவின் துணை கொண்டு; **மனதிற்கு** பாடம் நடத்தி மனதை மஹத்தாக்குவார்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 4/239, 240

714. குடும்ப **ஞானி** தனதாக பாவனை செய்யான் ஸ்ரீபகவானுடைமையாக பாவனை செய்வான்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 4/246

715. **ஒரு சில பெண்**களுக்கு; **பூர்வ** ஸத்திய தர்மத்தால்; ஸ்ரீஸத்குரு தர்ஸனமும்! சேவையும்! வாக்கிய சிரத்தா சேவையும், பெற முடியும். அவர்களும் அவஸ்யம் ஜீவன் முக்தி பெற முடியும்.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 4/258

716. உன் எண்ணம்! சொல்! செயல்! இவைகளால் பிறரை அடக்க எண்ணினால் இவ்வுலகம் உன்னை **அடக்கி** அழித்து இல்லாமல் செய்துவிடும். அங்கு சந்தேகம்! களங்கம்! கலக்கம்! பயம்! இந்த நான்கும் உன்னை மூடிவிடும். கவனம் தேவை.

ஸ்ரீகுருபூர்ணிமா! பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு - 4/265

717. ஓர் வெள்ளை வஸ்திரத்தை போத்திப்படுத்த நிலையில் எங்கு செல்ல வேண்டும்! எவரிடம் பேச வேண்டும் என அறிவின் நிலையில் ஓர் ஸத்திய ஸங்கல்பம் செய்து **ஸ்ரீகுருநாதா!** என ஸ்மரித்தால் தூல சரீரம் போத்திய நிலையில் இங்கு தான் கிடக்கும். ஆனால் **அறிவின்!** சூட்சும எண்ண சரீரம் மறு வினாடியே அங்கு இருக்கும் இது யோக மாயாவின் ஆணையை லோகமாயா! சிறப்புடன் செய்கிறது என எம் இறை & குரு வாக்காக கேள்விப்படுகிறோம்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 1/19,20

718. 1. **இரண்டென்றான்:-** ஸ்ரீவிட்டல் & ஓர் பைத்தியம்.
2. **இரண்டும் ஒன்றென்றான்:-** விட்டல் ஒருவனே ஆனான்.
3. **உணர்வு தெரியவில்லை:-** இருந்தவனோ? போனவனோ? **ஒருவனே!** அன்றும்! இன்றும்!! என்றென்றும்! இருக்கிறான்! இருந்தான்! இருப்பான்! **அது எவனோ???** அதை **அவனே!** அறிவான். விட்டல் ஒருவனே ஆனான் என்றால்????? பைத்தியம் இறந்து, விட்டலனுள் ஆனான்! என பொருள் கொள்ள வேண்டும். அங்கு இருந்தவனோ? இங்கிருந்து போனவனோ?? ஒருவனே! என அறிய வேண்டும்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 1/22, 23

719. அனைத்து நாம ரூபத்தினுள்ளும்! அந்தர்யாமியாய் இருப்பது! **இயக்க நிலை ஸ்ரீபகவான்** என்றும்;

**இயக்கமற்ற நிலையில் பர சொரூபமென்றும்** திட உணர்வோடு கூடியது அறிவாகும்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 1/30

720. இப்பைத்தியம் அது & அவள்! (யோகமாயா! லோகமாயா!) கருணையினால் நம்பிக்கையின் வைராக்கியம்! உள்ள பக்குவ ஆன்மாக்களுக்கு அசரீரி ஒலியாகவும்! இதய ஒலியாகவும்! உணர்த்த முடியும்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 1/31

721. ஸத்ஸங்கம் நடைபெறும் இடங்களில் ஸ்பஷ்டமாக இத்தூலம் காணும் நிலையில் தோற்ற முடியும், அங்கு முன்னதாகவே பக்குவம் உள்ளவர்களை சேர்க்கவும்! பக்குவம் இல்லாதவர்களை கழிக்கவும்! **மாயா!** அக்காரியத்தை கவனித்துக் கொள்ளும்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 1/32

722. ஆத்மா = **ஸ்ரீபரம்பொருள்**, மனம் = **ஜீவன்**. மனம் தம் எண்ண போர்வையினால் ஆத்மாவை மூடிய தன்மையால் மனமே! ஜீவன் என ஆனது. ஆத்ம ஞான விசாரணையினால் மனோமய திரை போர்வை நாசமானது. ஆகவே அதை ஜீவன் முக்தி! என்று பேசப்படுகிறது. **ஆன்மாவுக்கு ஜீவன் முக்தி இல்லை. மனதிற்கே ஜீவன் முக்தி ஆகும்.**

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 1/43

723. மனம் மஹத்தானால் ஜீவன் முக்தி! ஆகவே இங்கு ஜீவன் முக்தி என்பது, மனதிற்கேயாகும். வினைகள்

நாசமானாலன்றி விதேக முக்தி இல்லை. வினை அழிதலே விதேக முக்தி ஆகும். இது சர்வார்ப்பணத்தால் தான் முடிவுறும்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 1/57

724. ஓர் உண்மை? அக்காலாதீத பர சொரூபம் தம்மைத்தாமே **ஜீவ!** அழிப்பின் நிலையில் (மனோமய ஜீவனை அழிக்கும் நிலையில்;) **பரகுருவாக** தாமே இறங்கி வரும் நிலையில். ஒவ்வொரு சதுர்யுகத்திலும் **8** முறை வருவதாக ஆதி ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம். அப்படி வருவதில் இம்முறை வந்திருப்பது அதன் நிலையில் **7**வது ஆகும். இன்னொருமுறை அவஸ்யம் வரும் என்றும்; அந்த இடம் **மாஸ்கோ** என்றும் அறிகிறோம். ஜீவன் முக்தியை அருள்பவர் **ஸ்ரீஸத்குரு!** ஆவார். ஆனால் அவர் **பர!**குரு ஆகார்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 2/57-59

725. **பரகுருவும், பரகருணையும்** ஒன்றாகும். இவர் ஸ்ரீஸத்குருவிலும் **அதீதம்** ஆனவர் என்று ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 2/60

726. **பரகுரு வேறு! பரமகுரு வேறு!** பர சொரூப அம்ஸம் முழுமையாக பெற்றவர் பர குரு. தூல வடிவமாக இருப்பவர் ஸ்ரீஸத்குரு. இந்த ஸ்ரீஸத்குருவின்! குரு ஸ்ரீபரமகுரு ஆகிறார்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 2/61

727. உன்னை ஓர் திவலை! பொறி! சிறிய மண்! என கூறுவதை கண்டு பேதம் தோற்றுவதாக எண்ணாதே. யாமே உன்னை விளையாட அனுப்பினோம். அங்கு மனதின் வசம் அகப்பட்ட தன்மையினால் எம்மை மறந்துவிட்டாய். மனதை (நான், எனதை) விடு. அங்கு நீயே யாம்! யாமே நீ ஆகலாம். இது உறுதி.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 2/62

728. **பரகுரு** தாம் வந்து, இருந்து, மறைந்த காலத்தின் தடயம் எதையும் விட்டுச் செல்வதில்லை அதாவது பட்டம், பதவி, பேர், புகழ், அந்தஸ்து இவைகளை தம் அனுபவ நிலையில் **எளிமை** என்ற அக்கினியால் நாசம் செய்து விடுகிறார்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 2/63

729. எம் கண்ணன் அவதாரமே **கலியுக!** காரண சொரூபமாக இருப்பதால் எத்தகைய தோஷ குணங்களும் எம்மைப் பற்றாமலிருக்க அவனே யாமாகி! யாமே அவனாக! இருக்கிறோம். உணர்ச்சி உடையோர் அறியார். உணர்வு உடையோர் அறிவர்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 2/66

730. ஸ்ரீசிவன்! ஸ்ரீமுருகன்! ஸ்ரீவினாயகன்! ஸ்ரீபெருமாள்! இவர்கள் ஸத்வகுண மூர்த்தியாக இருப்பதால்; கலி தோஷ குணங்களை சாட்சியாக பார்ப்பார்களே தவிர அழிக்கமாட்டார்கள். அழிக்க முடியாது.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 2/67

731. **நடப்பது & கடப்பது:-** நடந்தாலே **வழி** தொலையும். அதாவது கடக்க முடியும். கடந்தால் மட்டும்; நம் லக்ஷியத்தை அடைய முடியும். இதை **கத்தி** முனையெனச் சொல்ல காரணம்? சந்தேக! களங்க! கலக்க பயம்! உள்ளவர்களுக்காகும். தம் **ஸ்ரீஸத்குருவின்** வாக்கியார்த்தத்தில் சிரத்தா வைராக்கியம் உடையவர்கள் கடக்கவோ! நடக்கவோ! தேவையில்லை. அவர்கள் லக்ஷியமே தாமாகி இருக்கிறார்கள்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 2/72, 73

732. **சர்வார்ப்பண** நிலையில் **வினை நாசமாகாமல்; பிரம்மார்ப்பண** நிலையில் **மனோ நாசமாகாமல்;** வேறு எந்த சாதனையாலும்; **ஜீவன் முக்தி இல்லை.** பிறவா நிலை இல்லை. கால பயம் உண்டு.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 2/74

733. **நாம, ரூப,** பொன்! பொருள்! மற்றும் அனைத்தையும்! உறவு! சுற்றம்! நட்பு! இவைகளின் பாசப்பிணைப்புகளையும்! அனைத்தையும், நிர்மூலமாக! **சர்வார்ப்பண நிலையில்!** (எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உனதே!) சரணாகதியில் செய்வது சுத்தான்னம் புசிப்பதாகும். இதனால் கால பயம் இல்லை. காலனை நாம் உண்ணலாம்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 2/74

734. **யாம்! உங்களில்!** ஒருவனாகும். **யாம்!** உங்களுள்! ஒருவனாகும். எம்மை வெளியே காண வேண்டாம். எம்மை உங்கள் உள்ளே உணருங்கள்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 2/75

735. **யாம்:-** பரகுருவும் அல்ல. ஸ்ரீஸத்குருவும் அல்ல. ஸ்ரீபகவானும் அல்ல. ஸ்ரீமஹான்களும் அல்ல. எதற்குமே உதவாததான! ஆனால் உதவ அக்கறையான ஓர் **ஏணி & ஓடம்!** என உணர்ந்தால் போதும். யாம் பரண் ஏற்றுவோம், கரை ஏற்றுவோம்! பரண் ஏறோம், கரை ஏறோம். **அன்பர்கள் பாதம்** தாங்குதல் ஒன்றே போதும். ஆகவே தான் எம்மை உணர்ந்தவர்கள் ஓர் உதவாக்கரை! பரதேஸி! பைத்தியம் என்பர்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 2/76, 77

736. 1. **ஹிருதயுகம்:-** ஸத்தியயுகம்.

2. **திரேதாயுகம்:-** ஸத்திய, தர்மயுகம்.

3. **துவாபரயுகம்:-** ஸத்திய, தர்ம, கர்மயுகம்.

4. **கலியுகம்:-** கர்ம, தர்ம,! யுகம் என நான்காக, **ஆதி!** ஸ்ரீமஹான்கள் தம் ஸ்வய அனுபவத்தினால், வகுத்து வைத்தார்கள். இந்த நான்கு யுகங்களிலும்; ஸ்ரீமஹான்களின் வரவும்! இருப்பும்! போதனையின் சாதனையும்! மாறவும்; மறையவும், இல்லையென்றே சொல்வோம்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 2/90

737. ஹிருதயுக ஸ்ரீமஹான்கள்; பேரறிவு சொரூபமாகவே இருந்ததால்; ஸத்ஸங்க உரையாடலில் பர சொரூப ஸ்திதியை உடையவர்களாகவும் சும்மாவே சுகமாகவே இருப்பவர்களாகவும் இருந்தார்கள்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 2/91

738. சீதையின் தந்தை ராவணன் ஆகும். ஸ்ரீராமன் கையால் மரணம் பெற வேண்டும் என்ற நல்ல எண்ணத்தால் தான் தம் மகள் ஆன சீதையை தூக்கிச்சென்றான். பெண் ஆசை கொண்டு சீதையை கொண்டு செல்லவில்லை.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 2/95

739. தசரதன்! அறுபதாயிரம்! பெண்களை, மணம் செய்தான் என்பது, பொய் ஆகும். தசரதன்! இப்பொய் கதையை வைத்து, அவன் ஒரு லக்ஷம் வருஷம்! வாழ்ந்திருக்கிறான் என கூறுவது **மெய்!** ஆகும். அப்படியானால் (ஸ்ரீராமனின் வயது 80ஆயிரம் ஆகும்).

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 2/96

740. கைகேயியின் வரத்தால், ஸ்ரீராமன் காடு சென்றான் என்பது, பொய் ஆகும். ஸ்ரீராமன் **தபஸ்!** செய்யவே கானகம் போனான் என்பதும் தபஸ்விகளை தரிஸிக்கவே கானகம் சென்றான் என்பதும் **மெய்** ஆகும். 14 வருஷம் ஸ்ரீ காடு செல்லவில்லை. 14000 வருஷம் ஸ்ரீராமன் காடு சென்றான்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 2/96

741. ஸ்ரீராமன்! தம் ஸத்திய தர்மத்தை போதனை செய்து; அன்றைய ஜீவர்களை ரக்ஷித்தான். ஆனால் ஸ்ரீகிருஷ்ணன்! தம் வஞ்சகம்! சூழ்ச்சி! பொய்! நிலை கண்டு சாதனையால் ஜீவ அழிப்பு என்ற நிலையில் **பத!** முக்தி கொடுத்தான்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 2/105

742. இன, ஜனம் என்ற ஜாதி இல்லவே இல்லை. ஸத்திய தர்மத்தை! அனுஷ்டிக்கும் நிலையிலுள்ள நித்திய கர்மாவுக்கே ஆஸ்ரமம் என்ற பசு & பாசத்தன்மையை விலக்கும் அடிப்படையே இன & ஜனம் ஆகும்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 3/119

743. நாம, ரூப, சொந்த, பந்த, பாசப்பசை உலராமல் எரிக்க முடியாது. சர்வார்ப்பணத்தால் (ஸ்ரீபகவான் என்ற சூரியனால்) உலர்த்த முடியும். ஆனால் எரிக்க முடியாது. அப்படி சர்வார்ப்பணத்தால் பாசப்பசை நன்றாக உலரப்பட்டு விட்டால் ஸ்ரீகுருதேவர் அருளும் பிரம்மார்ப்பணம் என்ற ஞான அக்கினியால் உலர்ந்த பாசப்பசை எரிந்து சாம்பலாகும். இங்கு உன் குருவாக்கு லென்ஸ் ஆகும். லென்ஸ் சூரியனின் (ஸ்ரீபகவானின்) கதிர் இயக்கத்தை வாங்கியே எரிக்க முடியும்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 3/120, 121

744. **மல, ஜல உறுப்புகள் தோற்றியும் தோற்றாமலும் இருக்கும்** என்றால்:-

சிலருக்கு பிறந்த குழந்தைக்கு இருப்பதைப் போல் தோற்றும், சிலருக்கு அவை இருந்த தடயம் (தழும்பு)

மட்டும் தோற்றும், மற்றும் எதுவும் தோன்றாது. ஓர் முக்கியம் என்னவென்றால்? காம எண்ணம் வலுப்பெறும் போதும் ஒருவருக்கொருவர் அது பற்றியே பேசிப் பேசி புது புது விளக்கம் பெறும் நிலையிலும்; கண்கள் அவ்வுறுப்பின் காட்சியில் மயங்கி அதை காண வேணுமென்ற எண்ணம் பெருகும் போதும்; அவ்விரு உறுப்புகளும் 1. வலு அடைகிறது, 2. பருமன் ஆகிறது, 3. விரிவடைகிறது. 4. மறக்க முடியாத நிலையில் எண்ணம் வாட்டி வதைக்கும். இறை குரு உணர்வு அணுவும் குன்றாமல் இருந்தால் அந்த எண்ணமும் வருவதில்லை, அதுவும் இயல்பாகவே இருக்கும்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 4/159-161

745. **ஆத்ம ஞானியான கார்க்கி! ஸ்ரீமாதாஜீ கூறுவது:-** பெண்ணின் கண்மணிகளே! அஞ்சற்க! அயரற்க! நாம் பாப ஜன்மா இல்லை, நாம் புனித ஜன்மாவே! இது ஸத்தியம். நாம் ஒவ்வொருவரும் செய்யும் சாதனையாவது:- **ஸ்ரீபதி சேவை! ஸ்ரீபாகவத சேவை!** நிஷ்காமியமாக செய்தால் பரமே ஓர் ஸ்ரீஸத்குருவை காட்டும். அல்லது ஸ்ரீஸத்குருவாய் வரும். வந்தே ஆக வேண்டும். இல்லாவிடில் பரம் இல்லை. ஸ்ரீஸத்குருவின் சேவை நிலை கண்டு கிடைக்கும். அதை விசாரணை இல்லாமல் பணிவுடன் ஏற்கவும். அவர் வாக்கிய சிரத்தையே நம் லக்ஷியமாகும்.

அவர் வாக்கில் பத்தில் ஒன்றை கடைப்பிடி. பத்தும் இயல்பாய் முடியும். நீ ஜீவன் முக்தனே. இது ஸத்தியம்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 4/168 & 170

746. **இல்லற பெண்களுக்கு ஜீவன் முக்தி:-**
பெண்களும் ஓர் பக்குவ ஆன்மாவே. அதன் பாபத்தின் நிமித்தம் தூலம் பெண் வடிவமாக இருக்கிறது. அதனால் கலக்க பய துக்கம் வேண்டாம். **ஸ்ரீமாதா பிதா சேவை! ஸ்ரீபதி சேவை! ஸ்ரீபாகவத சேவை**யென; பலன் கருதா தர்மத்தை ஏற்றுக் கொண்டால் போதும். அதுவே ஓர் ஸ்ரீஸத்குருவாய் வரும். அல்லது ஓர் ஸ்ரீஸத்குருவை காட்டும் இது ஸத்தியம். அவஸ்யம் இல்லற பெண்களுக்கு கண்டிப்பாக ஜீவன் முக்தி உண்டு. இது ஸத்தியம்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 4/172, 173

747. **இதை உணர்:-** மனமே எண்ணம். எண்ணமே குண தோஷம். குண தோஷமே! புண்ணிய பாப வினை. புண்ணிய பாப வினையின் மொத்த வடிவமே உடல் என்பதே ஸத்தியம்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 4/173

748. **சாட்சி நிலை** என்பது, அறிவு சொரூபமாகும். அறிவு சொரூபம் என்பது, ஸ்ரீபகவான் நிலையாகும். ஸ்ரீபகவானின் நிலை, ஏக (ஸத்வ) குணமாகும். இங்கு எந்த, கோர தோஷ குணங்களும் இருக்காது! இருக்க இயலாது! இருக்கக் கூடாது! பிராரப்தம் என்பதே, தோஷ குணங்களினால் விளையும்! புண்ணிய பாப, வினையின்

தொகுப்பாகும். ஆகவே **சாட்சியின், அறிவின் நிலையில் பிராரப்தம் இல்லை** என்பதே ஸத்தியம்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - ௫/௧௭௫

௭௪௯. ஸ்ரீராமன் தம்மை, ஸ்ரீபகவான்! யாமல்ல என்றான். ஆனால் அவனை, நம்பியவர்களுக்கு, பரமபதம் கிடைத்தது. ஸ்ரீகிருஷ்ணன் தம்மை, ஸ்ரீபகவான் யாமே என்றான். அவனை நம்ப மறுத்தவர்கள்! ஜனன மரணத்தில் வீழ்ந்தனர். அவனை நம்பியவர்கள், நிலைகண்டு பத முக்தியும்! பர முக்தியும்! அடைந்தனர்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - ௫/186

750. ஸ்ரீஹயன்! ஸ்ரீஹரி! ஸ்ரீஹரன்! இவர்களைப் பற்றி வாக்கும்! வரியும்! இல்லையென்பதே ஸத்தியம். ஸ்ரீபிரம்மன்! ஸ்ரீநாராயணன்! ஸ்ரீசிவபெருமான்! கர்த்தாக்களாக இல்லவே இல்லை. ஆனால் ஸ்ரீஸத்குருவாக இருக்கிறார்கள். ஆகவே நாம, ரூப, ஜக, ஜீவ சொரூபத்திற்கு பிரயோஜனம் அற்றவர்கள்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - ௫/௧௯௧

751. **ஸ்ரீவிநாயகன்** ஓம் என்ற ஓம்ஹார பிரணவ சொரூபீ! அவர் ஜீவ ரக்ஷிப்புக்கு உகந்தவரல்ல! ஸ்ரீமுருகனே ஞானப்பழம்! ஸ்ரீமுருகன் இயக்கத்தில் குழந்தை. இருப்பில் ஞானக்கனி! ஆகவே ஸ்ரீமுருகனும் ஜீவ ரக்ஷிப்புக்கு உகந்தவனல்ல.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - ௫/௧௯௨

752. ஸ்ரீராமனோ ஸத்திய தர்மத்தோடு கூடியவன். அவன் குண தோஷங்களை கட்டுப்படுத்தமாட்டான். தெய்வீகத்திலிருந்து பரமார்த்தீகத்திற்கு வழி காட்டக்கூடியவனாகும். அவனும் கலி தோஷ குண அழிப்பிற்கும் ஜீவ ரக்ஷிப்புக்கும் பொறுப்பாக மாட்டான்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 4/193

753. கண்ணனாகிய ஸ்ரீகிருஷ்ணன்! ஒருவனே கலி தோஷ குண நிவர்த்திக்காகவே தோன்றியவனாகும். இங்கு மாயாவோ! பெண் தெய்வமோ! இருப்பு இல்லாதது. மற்றும் சிறு தெய்வமாகிய காவல் தெய்வங்களோ தோஷ குணங்களோடு கூடியது. அது ஜீவ ரக்ஷிப்புக்கு ஆகாது.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 4/194

754. தோஷ குண, நிவர்த்தியின் நிலையில், **ஸ்ரீகிருஷ்ணனை நம்பினால்! குண தோஷ, நிவர்த்தியும்! ஜீவ ரக்ஷிப்பும்! பெறலாம்.** அதே போல், உன் போன்ற திட **ஞானியை! நம்பினால்! கலி தோஷ, குண நிவர்த்தியும்! ஜீவ அழிப்பும்!** பெறலாம்; எம் அன்பான திருவடி! என கூறிய வண்ணம், அந்தர் தியானமானார்; எம் ஸ்ரீஅகஸ்தியர் பிரான்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 4/194

755. **சதாசிவம்** என்றால்:- மண்ணாக இருந்த நிலையில், அது **சதாசிவம்!.** சதாசிவம் என்றால் சர்வசதாவும், சிவமாகவே(பிரம்மமாகவே) இருக்கும் நிலையாகும்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 4/196

756. **ஸ்ரீமஹேசன்!** என்றால்:- ஓர் பெரிய பாறையெனச் சொன்னோமல்லவா? அப்பாறையே **ஸ்ரீமஹேசன்!** ஆகும். ஸ்ரீமஹேசன் என்றால், மஹத்தின் அதிபதியாகும். ஜகத்தின் அதிபதியல்ல. மஹத் என்றால், அண்ட, ரண்ட, பிரம்மாண்டம் என்ற **ஜட!** சொரூபம் அனைத்தும் மஹத்தாகும். (கோடான கோடி கோள்களும் சூர்ய சந்திராதிகளும் ஆகும்).

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - ௭/196

757. **ஜகத்** என்றால், 84 லக்ஷம், (மனித இனம் உட்பட) **ஜீவ!** சரீர இயக்கங்களும்; மற்றும் தாவர வர்க்கங்களும், **ஜகத்!** சொரூப ஜக சிருஷ்டியாகும்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - ௭/197

758. **யோக மாயா!** என்றால்:- முன் பாறையைப் போலவே! மேலும், மூன்று பாறைகளானது; அவ்வொன்றே! மணலாக இருந்த நிலையில், நிழல் இல்லை. அதுவே பாறைகளான நிலையில், நிழல் தோன்றியது. அந்த நிழலே **யோக மாயா!** ஆகும்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - ௭/197

759. **மஹா காரணம்** என்றால்:-

1. மூன்று பாறைகளும், முறையே **ஹயன்! ஹரி! ஹரன்!** என ஸ்ரீமஹான்களால், நாமம் வழங்கப்படுகிறது. மணலாக இருக்கும் நிலையில், **தோற்றம்** மட்டும் உண்டு.

2. அம்மண்ணே, பாறைகளாக மாறும் நிலையில், **தோற்றமும் & இருப்பும்** பெறுகிறது; என உணர வேண்டும்.

3. மண்ணாக இருக்கும் நிலையில், **எக்காரணமும்** அதன் **எக்காரியமும்!** இல்லையென்பதே ஸத்தியம்.

4. ஆனால் அம்மண்ணே, ஓர் பாறையாகவும்! பின் மூன்று பாறைகளாகவும்! ஆகி தோற்றமும் இருப்பும் ஆன தன்மையால், **மஹா காரணம்** என ஆகிறது.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 4/198

760\. 1. உண்மையின் உணர்வு நிலையில் உணர்ந்தால்! பரத்தின் சிருஷ்டி என்றோ; பரமே அனைத்துமாய் ஆனது என்றோ; பரத்தின் பிரபஞ்ச விளையாட்டு என்றோ; சொல்லக்கூடாது. சொல்ல இயலாது. **அது** (பரம்) சும்மாவே சுகமாகவே இருக்கிறது என்பதே ஸத்தியம்.

2. அப்படியானால் இந்த நாம, ரூப, ஜகம்! எப்படி? எதற்காக? வந்தது என கேட்டால்? பரத்தின் நிழல் **மாயாவும்** அம்மாயாவின் மகன் **மனமும்!** இணைந்து பிணைந்து விளையாடும் ஓர் விளையாட்டாகும். இது **அறிவு!** உடையவர்க்கு இல்லவே இல்லை.

3. இது **மனம்!** வசம் அகப்பட்டோர்க்கு மட்டும் மனதின் பிதற்றலுக்காக உண்டே தவிர; இந்த **மனம் நாம ரூப!** குண தோஷங்களை பற்றாமல் இருந்தால் பரமே நாமாகவும், நாமே பரமாகவும் இருப்போம்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 4/198

761. **காரணம்** என்றால்:- மூன்று பாறைகளும், யோக மாயாவினால் அதாவது உளி சுத்தியலினால்? மூன்று வடிவம்! பெறுகிறது. அம்மூன்றும், முறையே **ஸ்ரீபிரம்மன்! ஸ்ரீநாராயணன்! ஸ்ரீசிவபெருமான்!** என்ற நிலையில், தோற்றமும் இருப்புமாக **நாம, ரூபம்!** பெறுகிறது. இம்மூன்றும், விளையாட்டை ஆரம்பிக்கும் நிலையில், **காரணம்!** என ஆகிறார்கள்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 4/199

762. **மஹாகாரணம்!** என்றால்:- மஹத் ஜகத் சிருஷ்டியின் ஆதாரமான ஈஸ்வராதிகளுக்கு காரணம் ஆகிறது என பொருள் கொள்க.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 4/202

763. **காரணம்** என்றால்:- அண்டங்களும் பிண்டங்களும் (ஜீவ சரீரங்களும்), உண்டாவதற்கு காரணமாகின்ற ஈஸ்வராதிகளே காரணம் ஆகிறது.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 4/202

764. **காரியம்** என்றால்:- ஜீவ சிருஷ்டியில் நாம, ரூப, குண பேதமும்; அதனால் புண்ணிய பாபமும், அதனால் ஜனன மரணமும்; உண்டாவதற்கு கார்ய சொரூபமாகிய மனமே **கார்ய** சொரூபமாகும்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 4/203

765. **காரண கார்யம்** என்றால்:- மாயாவும்! மனமும்! இணைந்து நடத்தும் நாடக கூத்தே காரண காரியமாகும் என ஸ்ரீமஹான்களின் வாயிலாக அறிகிறோம்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 4/204

766. **யோக மாயாவை! உளி சுத்தியல் என ஏன் சொல்கிறார்கள்** என்றால்?

பரமாகிய பாறைக்கு வடிவம் கொடுக்க வேறு எதுவும் இல்லை. அப்பாறைகளும் செயலற்ற தன்மையினால் அதுவும் இயங்க முடியாது என்ற காரணத்தினால் உவமானமாக கொடுத்ததேயன்றி உண்மையில்லை.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/205

767. மனதைக் கண்டு பயம் வேண்டாம், சந்தேகம் வேண்டாம், கலக்கம் வேண்டாம், அயர்வு சோர்வு வேண்டாம். எல்லாம் **நீயே** என மனதை விடு. எல்லாம் **நீயே!** என அவனை தொடு. அங்கு மனம் இல்லாது ஒழியும்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/206

768. **நாம, ரூப,** பேதத்தால்; **மனோ** விகாரம். **நாம,** ரூபம் **மண்** என ஆனால் **மனோ நாசம்.** எல்லாம் மண்ணே! நாமும் மண்ணே! என உணர்ந்தால் அதுவே **ஜீவன் முக்தி.**

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/207

769. மனம் அறிவு ஆவதற்கு, **சர்வார்ப்பணம்!** ஒன்றை தவிர, இக்கலியில்! வேறு மார்க்கம் இல்லையென்பதே ஸத்தியம். சர்வார்ப்பணத்தால்தான்; இந்த மனதிற்கு இருப்பும்! இயக்கமும்! உடைமையும்! உரிமையும்! இல்லாது ஒழியுமேயன்றி, வேறு மார்க்கம், எதுவும் இல்லையென்பதே ஸத்தியம்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/207

770. பரமே **சதாசிவம்!** சதாசிவமே **மஹேசன்!** மஹேசனே **திரி**கர்த்தாக்கள்! திரிகர்த்தாக்களே! மனித இனம் உட்பட **அனைத்து** ஜீவ கோடிகளும்! இதில் **மனோ** மய பேதமே **நாம ரூபம்!** ஆகும். எல்லாம் **மண்!** என உணர்ந்துவிட்டால், எல்லா நாம, ரூபமும் ஒழிந்து நாம் **நாமாகவே!** இருப்போம், இருக்கிறோம். இது ஸத்தியம்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 4/207

771. **லௌகீகம்** என்றும்; **தெய்வீகம்** என்றும்; **பரமார்த்தீகம்** என்றும்; மூன்று நிலைகளை வரிசைக் கிரமமாக, சுட்டிக்காட்டி, இம்மூன்று படிகளையும், முறையாக தாண்டினால் தான் ஜீவன் முக்தி என்ற, பிறவா நிலை பெற முடியும் என்பது ஸ்ரீமஹான்களின் கருத்தாகும்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/209

772. ஸ்ரீஸத்குருதேவர் வெளிச்சத்தை மட்டும்! காட்டுவார் என்றும்; உண்மை! இன்மையை! கண்டு உணர்ந்து, ஏற்பதும்! தள்ளுவதும்! உன் அறிவின், செயலென்று உணர வேண்டும்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/213

773. ஸ்ரீஸத்குரு! அருளும் ஞானப் பாடம், அனுபவ பூர்வமாக, இருப்பதால், அதை சிரத்தையுடன்! ஏற்கும் மாணவனுக்கு, மட்டும், சந்தேக கலக்க பயம் தோற்றாது.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/214

774. சபலம்! சலனம்! சந்தேகம்! கொண்ட மாணவனுக்கு; சந்தேக, கலக்க, பயம் நீங்காது. நிறைய படிக்கும்,

படிப்பறிவும் ஸ்ரீபகவான் மீது, பூரண நம்பிக்கை இல்லாதவனுக்கும் காம, காஞ்சன ஆசைகளை, விடாதவனுக்கும்! தன் மீதே தன்னம்பிக்கை இல்லாதவனுக்கும், காட்சியிலும்! கேள்வியிலும்! தடுமாற்றம் உண்டாகி, கலக்க பயம் உண்டாகும்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/215, 216

775. ஸ்ரீஸத்குருவின்! வாக்கியத்தில், உறுதியாக பற்றும் நம்பிக்கையில்; உன் சந்தேக, கலக்க பயமற்ற வைராக்கியம் வேண்டும். இந்த **நம்பிக்கையில்! வைராக்கியமே!** ஸ்வய அனுபவத்தை கொடுக்கும்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/217

776. நாம, ரூப, ஜக, ஜீவ தோற்றம் மயக்கம் **ஒழிய!** சர்வார்ப்பணம் ஒன்றே! போதும். காம, காஞ்சன விஷய ஆசை ஒழிய! ஸ்ரீஸத்குரு கிருபையின் பிரம்மார்ப்பணத்தால் தான் முடியும்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/218

777. லௌகீகம் தெய்வீகமாக மாறினாலன்றி, அது பரமார்த்தீகம் ஆகாது. பரமார்த்தீகமே! சுத்தமான வேதாந்தம் ஆகும். இந்த வேதாந்தம்! அனுபவம் பெறாதவர்களுக்கு, ஜீவன் முக்தி இல்லை.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/219

778. **பயந்த** மனதை! விதி பயமுறுத்தும் வினை ஆர்ப்பரிக்கும். எல்லாம் நலமே என **துணிந்த** மனதை! விதியும் பணிந்து ஏற்கும் வினையும் தொடராது அழிந்து விடும். எப்படியோ

நடக்க வேண்டியது இப்படி நடந்தது ஸ்ரீபகவான் கருணையே என ஸாந்தியின் ஆனந்தம் பெறலாம்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/223, 224

779. நடந்ததை எண்ணி எண்ணி வருந்தினால் **நீ ஏமாளியே!** நடந்ததை எல்லாம் நலமே என எண்ணினால் **நீயே அறிவாளி!**

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/225, 226

780. சர்வார்ப்பணமான ஸ்ரீபகவத் சரணாகதியே! **மனோ** வியாதியை தீர்க்க முடியும். இதன் காரணம்:- முள்ளை முள்ளால், எடுப்பது போல் **ஸ்ரீபகவான்! அவன் மாயா! அதன் மனம்!** ஆகிய இம்மூன்றும் ஒன்றே. இதன் சாதனை பொறுமையே.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/237

781. ஈச கர்த்தத்துவம்! மேலோங்கும் போது, மனமானது, மாயாவில் ஒடுங்கிவிடுகிறது. செயலுற்ற மனம் செயலற்ற நிலை பெறும்போது; ஜீவ கர்த்தத்துவம்! இயல்பாகவே அழிந்து நாசமாகிவிடும்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/238

782. ஜீவ கர்த்தத்துவம்! நான்! என்னால்! எனது! என்பதே. ஈச கர்த்தத்துவம் நீயே! உன்னால்! உனது! என்பதே. ஈச கர்த்தத்துவம், மேலோங்கும் போது **தேவை & ஆசை!** இயல்பாகவே அழிந்து நாசமாகும். இதனால் தூல சிரமமும், மனோ பாரமும், குறையும். அந்நிலையில் அத்வைத ஜீவன் முக்தி வெகு சுலபமே.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/239

783. எல்லாம்! **நீயே**! எல்லாம்! **உன்னால்**! எல்லாம்! **உனதே!** என்றால்! ஈச கர்த்தத்துவம் மேலோங்கி இன்ப, துன்பம் கெட்டு; பேரானந்தம் சாத்தியமாகும். பின் அனுபவ முதிர்ச்சியினால் **எல்லாம்** ஒன்றே! அது சிவமே! அது யாமே! என நிறைவுபெற்றால், பிரம்மானந்தமும், ஜீவன் முக்தியும் பெறலாம்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/243

784. 1. நாம, ரூப, ஜக, ஜீவ தோற்றம் **இன்பம் & துன்பம்.**

2. ஏக குண ஸ்ரீபகவான் **பேரானந்தமயம்.**

3. எல்லாம் மண்ணாகிய பரமே! பரமாகிய நாமே! என சும்மாவே சுகமாவே இருப்பது **பிரம்மானந்த நிலையாகும்.**

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/244

785. ஒவ்வொரு க்ஷணமும்; ஒவ்வொரு தோல்வியும் உன் வெற்றிக்கு **அடிப்படி** என உறுதியாக உணர்வாயாக. தோல்வியை எண்ண வேண்டாம். நீ மிதித்து கீழே போன படிகளை எண்ண வேண்டாம். உன் அயராத உழைப்பு உன் நம்பிக்கையே ஆகும்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/248

786. **பிரளய அழிவு** பூமியிலும்! மற்றும் அனைத்து உலகம். அண்டங்கள் எல்லாவற்றிலும் மேலெழுந்த வாரியான **நாம, ரூப!** அனைத்து தோற்றங்களும், சர்வ நாசமாகிய, தடயம் தெரியாமல் அழிவதாகும்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/255

787. **மஹா பிரளய அழிவு!** என்பது அனைத்து பூமண்டலங்களும்! அண்ட கோள்களும்! சூர்ய சந்திராதி நக்ஷத்திர (அவைகளும் சூரியனே) கூட்டங்களும் தடயம் இல்லாமல் சர்வ நாசமாகி அழிந்து மறைந்து விடுவதாகும்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/256

788. **சிவ ரகஸ்யம்!** என்பது **பிரம்ம ரகஸ்யம்!** ஆகும். அதாவது, பிரம்மத்தின் இருப்பும்! அதுவே தாம் தானாய், மாயாவுடன் இணைந்து வரும் வரவும் ஆகும் என்றும், இதுவே **ஆதி வேதாந்த நூல்** எனவும் ஆதி மஹான்களால் சொல்லப்படுகிறது. திரிகர்த்தாக்களுக்கும், இதுவே **பிரம்ம!** ரகஸ்யம் ஆகும். சிவரகஸ்ய சொரூபமே! திரிகர்த்தாக்களாகும். சிவ ரகஸ்யம் இல்லாமல் திரிகர்த்தாக்களும் இல்லை, திரிகர்த்தாக்கள் இல்லாமல் **நாம, ரூப!** ஜக, ஜீவ சொரூப சிருஷ்டி இல்லையென்பதே ஸத்தியம்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/259

789. **யுகாந்திர பிரளயத்தில்:-**

1. திரிகர்த்தாக்களும் அவர்கள் யதாஸ்தானமாகிய முறையே ஹயன்! ஹரி! ஹரன்! என்ற பிம்பஸ்தானத்தில், ஒடுங்கி ஓய்வு பெறுகிறார்கள், பின்பு அடுத்த **யுக** சிருஷ்டியின் போது எப்படி ஒடுங்கினார்களோ! அப்படியே வெளிப்பாடாகி பின் மாயாவும்! அது தன் காரியங்களை இயல்பாகவே செய்யும். அங்கு அதன் மனமும் தன் காரசார விளையாட்டை தொடங்கும்.

2. **யுகாந்திர பிரளயத்தில் மஹேசனும் உண்டு; மஹத் சிருஷ்டியும் (அண்டங்கள் கோள்கள்) உண்டு. ஆனால் திரிகர்த்தாக்களும் அவர்கள் சிருஷ்டியாகிய, ஜகத் சிருஷ்டி மட்டும் (அனைத்து ஜீவ கோடிகளும்) மறையும். அதாவது ஜட சொரூபம் உண்டு. ஜீவ சொரூபம் இல்லை.**

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/259

790. **மஹாப்பிரளயம்!:-** மஹாப்பிரளய முடிவில் பஞ்ச பூதங்களும் இல்லாத நிலையில், சுத்த சூன்யம் என, அறியாதோர் சொல்வர். அனந்தகோடி கோடி கோடி, சூர்யப்பிரகாசமாய், அகண்டப் பேரொளியாய்! தான் தானாய் நாமே அதுவாக இருப்போம்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/260

791. **மஹேசன்!** இயக்கம் அற்ற தன்மையால்; **பர சொரூபமாக** கொள்ளலாம். திரிகர்த்தாக்களான **ஸ்ரீபிரம்மன்! ஸ்ரீநாராயணன்! ஸ்ரீசிவபெருமான்!** ஆகியோரை கர்த்தாக்களாக கொள்ள வேண்டாம். அம்மூவரையும்; **ஸ்ரீஸத்குருவாக! கொள்ளலாம்.**

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/274

792. ஸ்ரீகுருநாதருக்கும்! ஸ்ரீபகவானுக்கும்! **ஸ்திரத்** தன்மையுடன் ஸ்ரீபாத நமஸ்காரம்! செய்வது என்பது, மெய் அன்பர்களுக்கு! ஸ்ரீபாத நமஸ்காரம் செய்வதாகும்.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/275

௭௯௩. **ஸ்ரீமெய்**! அன்பர்கள்! வடிவில்தான் உன் உபாசனா மூர்த்தியும்! உன் ஸ்ரீஸத்குருநாதரும் உன்னை ஆட்படுத்துகிறார்கள் என ஸத்தியமாக உணர்வாயாக.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/௨௭௬

௭௯௪. யத்பாவம் தத்பவதி! என்ற நிலையில். உன் குரு பக்தியினால் நீ காணும் அனைவரையும் மெய் அன்பர்களாகவே ஆக்க முடியும். இது ஸத்தியம். நீ பணியும் போது; உன் மனம் அடங்குகிறது. பின் தானாகவே அறிவாகி விடுகிறது.

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/௨௭௭

௭௯௫. **ஸ்ரீவஷிஸ்டபிரான்! சொன்னதாவது:-** ஹே அன்பான திருவடி! ஓர் ரகஸ்யத்தை உணர்வாயாக. ஒவ்வொரு **ஜீவனும்!** கருவறை என்னும் **கர்ப்ப!** வாஸம் செய்யும்போது; அது பெண் இனமாக இருப்பதால்; சபலம்! சலனம்! சந்தேகம்! என்ற மூன்று வாஸனைகளும். அச்ஜீவனை தொடர்ந்து பிடிக்கிறது என உணர். அவை ஜன்ம ஜன்மாந்திரமாக தொடர்ந்து வலுவடைந்து விடுவதால் இம்மனித ஜன்மா! ஒன்றாலேயே (பாத நமஸ்காரத்தின்) **பணிவும் & பொறுமையும்!** சிரத்தையுடன் கடைப்பிடிப்பதால் சர்வ நாசம் ஆகிறதென்று உணர்வாயாக என்றார். இருப்பது ஒன்றே! நடப்பது நலமே!

ஸ்ரீஅகஸ்தியர் உரையாடலும்! ஹரித்துவார் ஸத்ஸங்கமும்!! - 5/௨௭௮

௭௯௬. சர்வார்ப்பணத்தால்! மனம் பரிபாகப்பட்டால்தான்; ஸ்ரீஸத்குரு! அருளும், பிரம்மார்ப்பணம்! பாவனையால்

மனோ நாசமும்; அத்வைதம் என்ற, ஜீவன் முக்தியும் பெற முடியும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 1/4

797. **எல்லாம் நீயே!** என்பது, நாம ரூபம் உள்ள, ஓர் ஸ்ரீபகவானை குறிப்பதால், **அது விஷிஸ்டாத்வைதம்** ஆகும். **எல்லாம் ஒன்றே** என்பது நாம, ரூப, குணம், குறி கடந்த நிலையில் பரத்தோடு! நம்மை இணைப்பதால் **அது அத்வைதம்** ஆகும் என உணர வேண்டும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 1/5

798. **எல்லாம் பரமாக உணரும் நிலை:-**

பழங்களை கடித்து சுவைத்தால்தான் மதுரமான சுவை தோற்றும். பழம் தோற்றிக் கொண்டே இருந்தால், மதுரமான சுவை தோற்றாது. பழத்தின் நாம, ரூபம் எப்போது அழிகிறதோ அந்த வினாடியே, சுவை தோற்றும். அதே போல் **உன் மனதால் தோன்றிய நாம, ரூப, ஜக, ஜீவ தோற்றங்கள்! மறைந்த மறுவினாடி எல்லாம் பரமாக உணர முடியும்.**

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 1/28, 29

799. நாம, ரூப, ஜக, ஜீவ உறவு சுற்றம்! பொன் பொருள்! ஆகிய அனைத்தும் மனதால் தோன்றியதாகும். மனதால் தோன்றியதை மனதால்தான் விட முடியும் மற்றொன்றால் (தூலத்தால்) விட முடியாது.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 1/31

800. எந்த நாம, ரூபமும் தாமாகத் தோன்றவில்லை. தேவை & ஆசை! ஆசை & தேவை! இவைகளின் மூலமாக அஹங்கார & மமஹார! ஜீவ கர்த்தத்துவத்தால் தோன்றியதாகும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 1/34

801. உலக நிலையில் நாம, ரூப! சம்பந்த! மான, ஈனத்தை விட்டுவிட்டால் மறுக்ஷணம் உன் உபாசனா மூர்த்தி அபயஸ்தம் கொடுக்க காத்துக்கொண்டிருக்கிறான் என நம்புவாயாக. உன் நம்பிக்கையே! உன் ஸ்ரீபகவான்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 1/35

802. **ஸ்ரீபகவான் உன் முன் தூலமாக நிற்கிறான்** என்றால்:- நாம, ரூபத்தை கண்டால் எம்மை காண முடியாது. அனைத்து நாம, ரூபத்திலும் எம் இருப்பை உணர்ந்தால் நாம, ரூபம் தெரியாது. ஏதேனும் ஒன்றைத்தான் நீ காண முடியும். நாம ரூபத்தையும் எம்மையும் ஒரே காலத்தில் காண முடியாது என்பதே ஸத்தியம். ஸ்ரீபகவான் உன் முன் தூலமாக நிற்கிறான் என்றால்; அனைத்து நாம, ரூப வேஷங்களையும் தாங்கி, அதனதன் வினையின்படி, பாரபக்ஷ தோஷமில்லாமல் வினைகளை, நடித்து கழிக்கிறான் என உணர்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 1/38, 39

803. போக்குவரவை குறைத்தால் (நிறுத்த முடியாது, நிறுத்த கூடாது) கொடுக்கல் & வாங்கல் குறையும். அதனால் நீ

ஏற்று வந்த, வினை மட்டும் முடியும். வேறு எந்த வினையும், தொடராது. இது உறுதி.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 1/41

804. **வித்தை** என்றால்:- சினம் இறக்க கற்றாலும்; ஸித்தி எல்லாம் பெற்றாலும்; மனம் இறக்கக் கல்லார்க்கு வாயேன் (வாய்க்காது) பராபரமேயென, பராபரக்கன்னியில்! எம் ஸ்ரீதாயுமானவர்! சொன்னது போல் மனம் அடங்குதல் அல்ல. வித்தை என்பது, மனம் அழிந்து இறந்து நாசமாக வேண்டும். **மனம் நாசம் ஆகும் நிலையே மனம் மஹுத்தாகும்.** அதாவது **அறிவாகி! பரமாகி முக்தி! பெறுவதே வித்தையாகும்.**

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 1/ 48, 49

805. நாம் எண்ணியது! நடக்கவில்லையே. நாம் கேட்டது கிடைக்கவில்லையே என கர்மாவில் சிந்தனை வைத்தால் அது வியாபாரமே! அது மாற்றத்தால் தடுமாற்றமும் ஏமாற்றமும் ஆகி மனம் சோர்வடையும். நலமே என ஏற்றால், ஆனந்தம் நிறையும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 2/51

806. பக்தி நிலையில்! ஓர் ஸ்ரீபகவானை! நம்பியே ஆக வேண்டும். ஸ்ரீபகவத் நம்பிக்கை இல்லையென்றால், அவன் ரஜோ! தமஸ்! குணங்களில், ஆட்பட்டு இகத்திலும் தெய்வீகத்திலும், சரியான பாதை தெரியாமல், கஷ்ட ஜீவனாகிவிடுவான்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 2/53

807. **பர நிலையில்!** (அத்வைதத்தில்) ஸ்ரீஸத்குரு அருளும், உபதேச கருத்தில், நம்பிக்கையில், வைராக்கியம்! கொண்டால், அவஸ்யம் அவன், ஜீவன் முக்தனாவான். இல்லையெனில், ஜனன மரண பிணியாளன் ஆவான்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 2/54

808. **பேரறிவு** என்றால்; **யாம் பிரம்மம்!** என்ற பெயரளவில்; அதாவது அந்த நாமாவை உடையவனாக இருக்கும் வரையில், **பேரறிவே.** அவ்வுணர்வும் கெட்டு; **அதுவாக இருக்கிறோம்** என்ற **வாக்கும் கெட்டு, மஹாமௌன நிலைபெற்று, பரப்பிரம்மானந்த சகஜ நிலை பெற்றால் பேரறிவும் இல்லை.** சொல்ல முடியாது.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 2/55

809. **கர்மா நாசமாகும் நிலை!**

மனதின் கற்பனை நாம, ரூபத்தால் குணங்கள் இணைகிறது. அக்குணங்களால்; வினை பிணைகிறது. அதே மனம் அனைத்து, நாம ரூபங்களும் மண்தானே? மண்ணுக்கு அன்னியம் எதுவும் இல்லையென உணர்ந்தால், கர்மா நாசமாகும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 2/56

810. ஸ்ரீபகவானின் மாயா, கர்மாவை தாமே இயக்குகிறது என்பதை, **சாந்த சக்கு! துகாராம்! கபீர்! ஏகநாத்! நாமதேவர்! ஓர் பைத்தியம்!** போன்றவர்களிடம் மாயா எப்படி கார்யம் பார்த்தது என்பதே உதாரணம் ஆகும். உங்கள் நம்பிக்கையே மூலதனம் ஆகும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 2/57

811. பொறுமையும்! இறை & குரு உணர்வும் மேலோங்கும்போது, கர்மாவின் பாரம்! தோற்றுவதில்லை. கர்மாவில் எதிர்பார்ப்பு என்ற அழுத்தம், அணுப்பிரமாணம்! இருந்தாலும் பொறுமையும்! இறை குரு உணர்வும்! இராது.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 2/58

812. வினையிலிருந்து முழுமையாக, நீக்கம் பெற்றுவிட்டால் அதாவது வினை என்ற கர்மாவை! எனது என்ற பிடியை இந்த மனம் விட்டுவிட்டால் அதாவது, **மனதின் அறியாமையின் திரை நாசமானால் அந்த க்ஷணமே நீயே ஆத்ம ஞானம் என்ற, ஜீவன் முக்தனாகவே இருப்பாய்** இது ஸத்தியம். வேறு எந்த சாதனையாலும் புண்ணிய ஸத்திய தர்ம! கர்மாவினாலும் ஆத்ம ஞானம் அடைய முடியாது. **புண்ணிய! ஸத்திய! தர்ம! கர்மா நசித்த இடமே, ஆத்ம ஞானம்! என்ற ஜீவன் முக்தியாகும்.**

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 2/62, 63

813. **கர்மா முழுமையாக நசித்தாலன்றி, ஆத்ம ஞானம் இல்லை:- சர்வார்ப்பணம் ஒன்றால்,** மட்டும் **கர்மா பரிபாகப்படும். பிரம்மார்ப்பணம் ஒன்றால்** மட்டும் **கர்மா நாசமும்!** மனோ நாசமும் சாத்தியமாகும். இக்கலியில் வேறு எந்த மார்க்கத்திலும், ஆத்ம ஞானம் என்ற ஜீவன் முக்தி இல்லை.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 2/64

814. **ஸ்ரீஸத்குருவின் மூன்று சேவைகளும்** 100பேரில் ஒருவருக்குத்தான் கிடைக்க முடியும். ஏனையோருக்கு கிடைப்பது கடினம். ஸ்ரீஸத்குரு சேவை கிடைக்க வில்லயே என கலங்க வேண்டாம். இக்கலியில் ஸ்ரீஸத்குரு சேவை எப்படி உங்களை தேடி வருகிறது என்றால்! கருணையே வடிவான பரமானது! இறை கருணையாக, செயல்படும். எப்படி என்றால்?

1. உங்கள் ஸ்ரீஸத்குருவானவர்! உங்கள் அபிமான பொருள்களில் ஏதேனும் ஒன்றை! அவஸ்யம் ஏற்பார் ஏற்றே ஆக வேண்டும். அன்னபான! பொருளாகவும்! வேறு நாம, ரூப பொருளாகவும்! ஏதேனும் ஒன்றை, அவஸ்யம் ஏற்றே ஆக வேண்டும். அதுவே உங்கள் **ஸ்ரீஸத்குருவின் சர்வாங்க சேவை ஆகும்.**
2. உங்கள் நிலை கண்டு **பார்வையாலோ! ஸ்பரிசத்தாலோ! ஸத்பாவ சேவையை பூர்த்தி செய்வார்.** அதனால் ஜீவன் முக்தி அவஸ்யம் பெற முடியும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 2/68-70

815. ஸ்ரீஸத்குரு ஒருவரே வழிகாட்டி ஆகார். கை காட்டி ஆவார். நாள்காட்டி ஸ்ரீபகவான். ஆகவே தான் ஸ்ரீஸத்குரு! சேவை ஜீவன் முக்தியின் திறவுகோல்! எனவும், ஸ்ரீமஹான்களால் செல்லப்படுகிறது.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 2/74

816. **ஸ்ரீஸத்குரு சேவையில் மட்டும்! ஜீவன் முக்தி உண்டு.** மற்றும் எந்த சேவையிலும், ஜீவன் முக்தி! இல்லை. ஆனால் அச்சேவைகள், நிலை கண்டு, பலன் தரும்! ஆனால் அச்சேவைகள் ஜீவன் முக்திக்கு, வழி வகுத்துக்கொடுக்கும். வேலைக்கு பலன் இல்லை.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 2/75

817. **அவரை நம்பியவர்கள் யாவர் எனில்?** சந்தேகம்! களங்கம்! கலக்கம்! பயமின்றி! ஓர்மையுடன் எல்லாம் நீயே! என உன்னை முடித்துக் கொண்டால் எல்லாம் ஒன்றே! என அவர் கைகாட்டுவார். அக் கை காட்டுதலே, ஆசீர்வாதம் ஆகும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 2/77

818. உள்ளம் **பள்ளம்** என ஆனாலன்றி! உன் ஸ்ரீஸத்குருவின்! அதாவது ஸ்ரீமஹான்களின் **அருள் ஆசி!** பெறுவது வெகு, வெகு துர்லபம் ஆகும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 2/83

819. அருளாசி என்பது கொடுப்பதும் வாங்குவதும் **அ...ல்...ல!** உன் **உள்ளத்தின் உருக்கம் & ஏக்கம்! கண்ணீர்!** பெருக்கம் இவை மூன்றும் இணைந்தால் உன் நிலை பக்தியா? ஞானமா? என உணர்ந்து, இறை பர கருணையானது! அந்த ஒன்றே ஸ்ரீஸத்குரு நிலையிலும்; ஸ்ரீமஹாத்மாக்கள் நிலையிலும் அருளாசி வழங்கும் இது ஸத்தியம்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 2/84,85

௮௨0. ஸ்ரீஸத்குரு & திடஞானி! பரகுரு மற்றும் யோக சித்தர்களிடம்! மட்டும் ஒளிக்கதிர்களின் ஆசி பெற முடியும். இவர்களிடம் மட்டும் யோக மாயாவின் கார்யம் இருக்கிறது என உணர்க.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; ௨010 - ௨/௮௭

௮௨1. ஓர் ஸ்ரீஸத்குரு வாக்கில் லௌகீக வாழ்த்தொலி வராது என்பது ஸத்தியமே. ஆனாலும் அவ்வொலி ஓர் திட்டமிட்ட நிலையில் இறை பர கருணை நிலையில் வரவழைக்கும் நிலை இரு மாயாக்களின் சம்பந்தம் ஆகும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; ௨010 - ௨/௯௪

௮௨௨. ஓர் உண்மை பக்தன் ஸ்ரீபகவானோடு ஒன்றிய நிலையில் வாக்கில் வாழ்த்தொலி வந்தாலும்; அது அவனையும் பாதிக்காமல் விதியையும் முன் பின் மாற்றி அமைத்து எவரையும் பாதிக்காமல் சிறப்பாக செய்து முடிக்கும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; ௨010 - ௨/௯௫

௮௨௩. மனதை அழிக்காத நிலையில் ஒருவர்க்கு (பக்தனைப் போலும் ஞானியைப் போலும்) வாழ்த்தொலி வந்தால் அது வினை விதியை ஒத்து வரும். அவ்வொலியை கொடுப்பவருக்கு ஆகாமிய வினையால் அவரையும் பாதிக்கும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; ௨010 - ௨/௯௬

௮௨௪. **ஸ்ரீபகவானின் இருப்பும்!** இயக்கமும்! சிறப்பும்! ஓர் உண்மை பக்தனின் **ஸ்ரீபாத தூளியே ஆகும்.** ஆகவே

**ஸ்ரீபகவானுக்கு ரூபம் இல்லை** என்பதும், **நாமம் மட்டும் உண்டென்பதும் ஸத்தியமே.**

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 2/98

825. **ஸ்ரீபாத** நமஸ்காரம் உயர்ந்த பக்தீ நிலையிலும் உணர்ந்த ஞான நிலையிலும் அன்றும்! இன்றும்! என்றென்றும்! ஸ்ரீமஹான்களால் அனுஷ்டிக்கப்படுகிறது.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 2/99

826. சிவ ரகஸ்யம் என்ற நூல் செயலற்ற நிலையில் அனுபவம் கூட்டுவதற்கு, பர கருணையும்! இறை கருணையும்!! இணைந்தாலன்றி, ஸ்வய அனுபவம் கூடாது. இது ஸத்தியம்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 3/104

827. **பர கருணை** என்றால்? யோக மாயாவை! தம்முள் அடங்கிய நிலையில் உள்ள, ஸ்ரீஸத்குரு கிருபை! பரிபூரணமாக இருக்க வேண்டும். அது அவர் வாக்கிய சிரத்தையினாலும் தூல சிரத்தா சேவையினாலும் கிடைக்கும் என்பது ஸத்தியமே.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 3/105

828. **இறை கருணை** என்றால்? நாம ரூபமுள்ள ஓர் ஸ்ரீபகவானிடம்! ஸ்ரீஸத்குரு அருளும் நிலையில் சிரத்தையாக சர்வார்ப்பணம்! உறுதியாக இருந்தால் ஸ்ரீபகவானின் மாயாவும்! அதன் மனமும்! இணைந்து செயல்பட்டு, ஜீவன் முக்திக்கு வழி வகுக்கும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 3/106

௮௨௯. **பர கருணை!** யோக மாயாவுடனும்! **இறை கருணை** லோக மாயாவுடனும் இணைந்து செயல்படும் போது; ஓர் சாதகனுக்கு இக்கலியில், சுலபமாகவும்! சுபமாகவும்! இயல்பாகவும்! ஜீவன் முக்தி! பெற முடியும் என்பது ஸ்ரீமஹான்களின் அனுபவம் ஆகும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; ௨010 - ௩/107

௮௩0. **படிப்பவர்கள்** என்றால்:- அனைத்து மடல்களையும் சிரத்தையுடன் படிப்பவர்களாகவும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; ௨010 - ௩/10௮

௮௩1. **படித்தவர்கள்** என்றால்:- தான் படித்ததை பல இடங்களில், ஸத்ஸங்கம் மூலமாக, பரிந்துரை செய்பவர்களாகும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; ௨010 - ௩/10௮

௮௩௨. **படிப்பிக்கிறவர்கள்** என்றால்:- இவர்கள் குரு ஸ்தானத்தில்! இருப்பவர்களாயும்! பல வேதாந்த பாட கருத்துகளை சொல்லி இதன் நுட்பத்தையும், விளக்குபவர்களாயும், ஸ்வய ஞானானுபவ நூலுக்கே! முக்கியத்வம் கொடுப்பவர்களாயும் அமைந்தவர்களாகும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; ௨010 - ௩/10௯

௮௩௩. **ஸ்வய ஞானானுபவம்! பெற்றவர் யார்?** என்றால்? நான்! எனது! இறந்தவனாயும்! வியாபாரம்! விளம்பரம்! ஆடம்பரம்! இல்லாதவனாயும்! பொறுமையும், பணிவு என்ற அடக்கம் உடையவனாயும்! எளிமை! இனிமை! **ஓர்மை!** உள்ளவனாயும்! பேதமும்! பேதத்தால் விருப்பும் வெறுப்பும்!

இல்லாதவனாயும், முற்கவன சக்தி! இல்லாதவனாயும்! (குற்றம் குறையற்றவன்) ஸாந்தியும் ஆனந்தமும் நிறைந்தவனாயும் உள்ளவன்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 3/110, 111

834. பக்தீ நிலையில் ஓர் நாம, ரூபம்! உள்ள ஸ்ரீபகவானிடம்! சர்வார்ப்பணம் என்ற நிலையில், ஒருவன் பழகி அன்பு! கனிவு! பணிவு! பொறுமை! இறை நம்பிக்கை! யுடன் உலகியல், ஒழுக்கத்துடன் வாழ்ந்தால் இறை & பர கருணை! பெற்று ஆஸ்திகனாக திகழ்வான்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 3/118

835. **ஆதி ஸ்ரீமஹான்கள்! என்ன சொல்கிறார்கள் என்றால்?** படிப்பினால் மேல் நோக்கி போகாதே! கல்வி கற்பதனால் உள் ஆழ்ந்து செல் அனுபவம் பெறுவாய். **போதிக்காதே! சாதிப்பாயாக!** உன் சாதனையின் வைப்ரேஸன் (உன் ஆத்ம சக்தி) உனக்கு கவசமாக அமையும். உன் ஆத்ம சக்தியே! அதை நம்புகிறவர்களை கரை சேர்க்குமேயல்லாது, உன் போதனை! வாய் ஞானமாக முடிவுறும். அது அனுபவ ஞானமாக, நிறைவுறாது. இது ஸத்தியம்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 3/119, 120

836. 1. **அறிவு** என்பது தனித்த நிலையில், **ஆத்மா!** ஆகும், **மாயாவை ஏற்றால், ஸ்ரீபகவானாகும்.** மனம் அதை மூடினால் **மனிதன்** ஆகும்.

2. அதே அறிவு என்பது **அனைத்து ஜீவ கோடிகளிடமும் நிறைந்து சர்வ வியாபியாய் இருக்கும் போது, சர்வ சாட்சியாகிய அகண்டபாவனை ஆகும்.**

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 3/125

837. மனம் வருந்தி! வருந்தி! அழுவதனால், மனம் கசிந்து! கசிந்து! அழுவதனால், மனம் உருகி! உருகி! அழுவதனால் மனம் பாசப் பசைகள் உலர்ந்து எரியும் பக்குவம் பெறும், பின் பிரம்மார்ப்பணம் என்ற ஞானாக்கினியால் மனம் சாம்பலாகும். (மனம் மஹத்தாகும்).

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 3/132

838. பொருந்தியும்! வருந்தியும்! உள்ளம் உருகி; **சாதனை!** செய்ததால்; உன் மனம் அறிவாகி; பரிபூரணம் ஆகும் போது அவ்வறிவே **பேரறிவு** ஆகி விடுகிறது, என்பதை ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 3/133

839. **நான்! எனதை!** அடிப்படையாக கொண்டதே **ஜீவ** கர்த்தத்துவம் ஆகும். ஸ்வயம் பிரகாசமான ஆன்மாவை! மேலே கூறிய இரண்டினாலும் **மனத்திரை!** மூடிய நிலையில் அவ்வாத்மாவை ஜீவன் என ஆக்கியது. இத்திரை எந்த வினாடி அழிந்து நாசமாகிறதோ அந்த வினாடியே ஆன்மா ஆன்மாவாகவே பிரகாசிக்கும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 3/134, 135

840. நாம, ரூபங்களை கண்டால், ஸ்ரீபகவானை! காணவும்! உணரவும் முடியாது. ஸ்ரீபகவானின் உள் இருப்பை உணர்ந்தால் நாம, ரூபம் சர்வ நாசமாகும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 3/141

841. ஸ்ரீபகவான் உன்னுள் நீயாகவே இருக்கிறான். எல்லாம் அவன் உடைமையாகவும்; அவன் இயக்கம் ஆகவுமே இருக்கிறது. இது ஸத்தியமே, ஆனால் உன் கள்ள மனம் நம்ப மறுக்கிறது. உன் நல்ல மனம் (அறிவு) அவஸ்யம் நம்பியே தீரும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 3/143

842. மனோ அறியாமையின் ஜீவ கர்த்தத்துவம் (நாம, ரூப, இருப்பு உடைமை & உரிமை! இயக்கம்) ஒன்றே ஜீவன் நான் என முன் நிற்கிறதேயன்றி உண்மையில் ஜீவன் இல்லவே இல்லை. **மனமே ஜீவன்! ஜீவனே மனம்!** என உணர்க.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 3/144

843. **நாம, ரூபம்!** தோற்றும் வரை மனமும் உண்டு. ஜீவ மயக்கமும் உண்டு. ஜீவன் என்ற நாமமும் உண்டு. நாம, ரூபம் இயல்பாகவே மறைந்து எல்லாம் மண் மயமாகிவிட்டால் அதுவே ஜீவன் அல்ல அதுவே ஜீவன் முக்தி ஆகும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 3/145

844. அந்த ஒன்றே நாம்! நாமே அது! என்ற பேருணர்வை பெற்றுவிட்டால் அதுவே பேரறிவாகும் இதுவே **அத்வைதம்!** ஆகும் என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 3/148

845. அஹங்காரம்! அதிகாரம்! ஆதிக்கம்! அபிமானம்! போட்டி பொறாமை இவைகள் இணைந்தால் கரடு முரடான பாறைகள் சூழ்ந்த மேடான உள்ளம் ஆகும். அவைகளை ஸ்ரீபகவானின் சர்வார்ப்பணத்தால் தகர்த்து எறிந்துவிட்டால் அவ்வுள்ளம் பள்ளமாகிவிடும். இவனே ஸத்சிஷ்யன் ஆகும். இங்கு ஸ்ரீஸத்குருவின் **தூய** அன்பின் கருணை பிரவாகம் அவன் தேடாமலேயே அதுவே தேடி ஓடி வந்து அதை நிரப்பிவிடும். அவனே ஸத்சிஷ்யன்! அவரே ஸ்ரீஸத்குரு ஆவார்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 3/152, 153

846. ஸ்ரீஸத்குருவின் கருணை பிரவாகம் என்பது **பர!** கருணை ஆகும். அதை கண்டு! கேட்டு! ஓடி, தேடி, அடைய முடியாது. முன் சொன்ன நிலையில் உள்ளம் பள்ளம் ஆனால் அதுவே இயல்பாகவே தேடி, ஓடி, நாடி வந்து அடையும். உன் முயற்சி இல்லை. அதன் கருணை உண்டு.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 4/155

847. மனம் இறந்த நிலையில் உணர்ச்சி அற்ற, மறத்துப் போன இயல்பான நிலை சித்தியாகும் போது, ஸ்ரீஸத்குருவின் பிரம்மான்ம பாவனையானது நாம ரூபங்களை

பதுமையாகவும், மண் மயமாகவும் உணரும் நிலை பெறும்போது அது இறந்த நிலை ஆகிறது என உணர்க.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; ௨010 - ௫/163

௮௫௮. **ஓர் ரகஸ்யம் என்னவென்றால்?** ஸ்ரீமாதா பிதாவின்! அனுமதியுடன், ஒருவன் துறவற சாதனை செய்வானாயின்; அவன் அவஸ்யம் **முழு நிலை** பெறுவான். இது ஸத்தியம்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; ௨010 - ௫/178

௮௫௯. ஆஸ்ரமவாசிகள் ஓர் கட்டுக்குள் (இறை குரு உணர்வில்) அடங்கி இருந்தால்தான் அவர்கள் **பிரம்மச்சாரிகள் ஆவர்.** குடும்பிகளுடன் பேச்சு, செய்கை! இவைகளில் பந்தப்பட்டார்களானால், இவர்கள் **பிரம்மச்சாரி அல்ல! ஓர் ஸம்ஸாரியே!**

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; ௨010 - ௫/187

௮50. ஜீவன் என்று தனிமையில் ஒன்று இல்லை. மனமே! நாம ரூப தோற்றத்தில் உடைமை, உரிமை! பாராட்டி, ஜீவ போர்வையை ஆன்மாவில் போர்த்தி இருப்பதாக பாவனை செய்து கொண்டு மனமே ஜீவனாக நடிக்கிறது.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; ௨010 - ௫/௨00

௮5I. ஸ்ரீபகவானை காணவும் **விதி** உண்டா? இல்லவே இல்லை. தெய்வம் மனுஷ்யனாம் என்பதை உணர வேண்டும். ஜீவ வேஷம் போட்டு நம் ஸ்ரீபகவானே நம்முடன்! நாமாகவும்!

மற்றும் அனைவராகவும் இருக்கிறான் என்ற மெய்யுணர்வு வந்துவிட்டால் ஸ்ரீபகவான் பிரத்யக்ஷமாவான்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 5/௨0௯

852. **விருத்தி:-** ஒன்றை மிகைப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, தாம் ஆதாரமாக இருந்து கொண்டு, வரி & வாக்கு! வடிவில் விருத்தியாக்கி, புகழக் கூடியதாகும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 5/௨௨5

853. காணும் நிலை வேறு. உணரும் நிலை வேறு. காணும் நிலையில் உணர முடியாது. அதேபோல் உணரக் கூடியதை, காண முடியாது. காண்பது மனம். உணர்வது அறிவு. நாம ரூபம் அழிந்து நாசமானாலன்றி; அந்த ஒன்றை உணர முடியாது.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 5/௨௩௩

85௪. **ஹ்ருதயில் அறிவோடு** ஒன்றி அமைதி! சாந்தி! ஆனந்த நிலையில்; **நாம, ரூப,** ஜக உணர்ச்சி! எதுவும் இல்லாமல் ஸ்ரீபகவானே நாம்! நாமே ஸ்ரீபகவான்! என்று ஒன்றி கரைந்து கலந்த நிலையாகும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 5/௨௪7

855. ஸ்ரீகுரு காரியத்தை ஸ்ரீபகவான் செய்ய மாட்டான். செய்ய முடியாது. செய்ய இயலாது. குரு கார்யமாவது; ஜீவ அழிப்பு ஆகும். ஆகவே அதை ஸ்ரீபகவான் செய்யான் என உணர்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 6/௨5௪

856. ஸ்ரீபகவான் காரியம் ஸ்ரீகுரு செய்யமாட்டார். செய்ய இயலாது. செய்யக் கூடாது. காரணம்? ஸ்ரீபகவான் காரியம் ஜீவ ரக்ஷிப்பு ஆகும். நாம ரூபங்களை இல்லையென சர்வ நாசம் செய்பவரே, ஸ்ரீஸத்குரு ஆகும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 6/255

857. ஓர் ஸ்ரீஸத்குரு! இருப்பில் **ஆத்மா.** இயக்கத்தில் **ஸ்ரீபகவான்.** யதாஸ்தானம் காலாதீத **பர!** ஸ்வரூபமாகும் என உணர்க.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 6/262

858. பந்த ஜீவனின் சொந்த, பந்த, பாச பற்றின் பசைகளை! ஸ்ரீபகவான் என்ற சூரியனால் உலர்த்தாமல் ஸ்ரீஸத்குரு என்ற வென்ஸால் எரிக்க முடியாது என உணர்க.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 6/263

859. **44** அத்யாயங்கள் கொண்ட சுமார் **2000** பாடல்களையும்; **140** பாடல்களாக! நவமணிகளாக, பொறுக்கி எடுத்து **உமக்கு** இல்லை! இல்லை! **நமக்கென** கொடுத்த **ஸ்ரீவேதவியாச பகவானுக்கும்! ஸ்ரீகண்ண பரமாத்மாவுக்கும் ஸ்ரீரிபுமுனி மஹாத்மாவுக்கும்,** அனந்த கோடி பாத நமஸ்காரங்களை, தெரிவித்து கொள்கிறோம்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 6/278, 279

860. **சாதனை!** செய்யும் ஒவ்வொருவரும் நாம் இந்த நாம, ரூப ஜகத்தில் வாழ வரவில்லை, நாம, ரூப, ஜகத்தை நாசம் செய்யவே வந்தோம். அதுவே நம் **சாதனை!** என

சாதித்தால் ஜீவன் முக்தி அவஸ்யம் பெற முடியும். இது ஸத்தியம்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; உ010 - 6/உ80

861. பிரம்மம் தன்னை வெளிப்படுத்தி கொள்ளும்போது, தன்னை இருக்கிறோம் என்று பன்மையில் (இருமையில்) உரைக்கிறது என்றால்? ஓம் என்ற பிரணவத்தை தம்முள் அடக்கி இருக்கும் தன்மையால் தம்மை பன்மை நிலையில், இருக்கிறோம் என வெளிப்படுத்துகிறது.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; உ010 - 6/உ9௪

862. **சப்தப் பிரபஞ்சம்!** ஆரம்ப நிலை, பிரணவம் ஆகும். பின் தேவ தெய்வ நாமாவும்! வேத மந்திர ஒலியுமாகும். பின் இக்கலியில் நாம, ரூப, ஜக, ஜீவ சொந்த பந்த ஒலி ஆகிவிட்டது. அதனால் ஸப்தப்பிரபஞ்சம்! என்பது அர்த்தப் பிரபஞ்சமாகி பின் அனர்த்த பிரபஞ்சம் ஆகிவிட்டது என அறிக.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; உ010 - 6/உ95

863. **ஜீவ மயக்கம்:-** காண்பது! கேட்பது! சுவைப்பது! அது பற்றி பேசுவது! இவை நான்கும் மாயாவின் தோற்றத்திலிருந்து இம் மனமானது தனக்குத்தானே விரித்துக்கொண்ட **மரண** மாயா வலையாகும் என உணர்க.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; உ010 - 6/301

864. பிரம்மானந்த சமுத்திரமாகவே இருக்கும் ஓர் சகஜ ஞானி உலகமோ! ஜீவர்களோ குண சம்பந்தத்தால் அவனை நெருங்கும் போது; அவன் ஒதுங்குவானேயன்றி

அவைகளை ஒதுக்கான். காரணம்? அவனிடம் மனம் இல்லை. அவன் அறிவாகவே இருப்பதால் பேதமும் பேத உணர்ச்சிகளும் அவனிடம் இருக்காது. **மெய் உணர்வு** ஒன்றே அவனிடம் இருக்கும் என உணர்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 6/313, 314

865. ஓர் சகஜ ஞானியும்! நாம, ரூப, ஜக, ஜீவ தோற்றங்களுக்கு உதவமாட்டான். உதவ முடியாது! இயலாது. வந்து! இருந்து! மாறி! மறையும் **நாம, ரூபத்தை!** தன் அபேத திருஷ்டியினால் நாசம் செய்துவிட்டு அனைத்தையும்! தம்மோடு ஐக்கியப்படுத்தும் நிலையில் உதவ **அக்கறையாக!** இருப்பான் என்பது ஸ்ரீமஹான்களின் அனுபவமாகும்.

பத்ரி உரையாடல்! தை வருஷப் பிறப்பு ஜனவரி; 2010 - 6/315, 316




**எல்லாம் நீ!**




## Abode of Love
## You Are Everything!